# HISTORY OF TAMILNADU UPTO 1800 C.E
# UNIT-I
# சங்க காலம் - கால வரையறை
# (SANGAM - AGE)

தமிழ் நாட்டில், தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்ற மூன்று சங்கங்கள் இருந்து தமிழை வளர்த்து வந்தன என்று கூறப்படுகிறது. தலைச்சங்கம் தென் மதுரையிலும், இடைச் சங்கம் கபாடபுரத்திலும், கடைச்சங்கம் இன்றைய மதுரையிலும் நிறுவப்பட்டன. இக்காலங்களில் தமிழில் எண்ணற்ற இலக்கியங்கள் தோன்றி தமிழுக்குப் பெருமை சேர்த்தன. சங்கம் என்ற சொல்லுக்கு புலவர்களின் ஒருங்கிணைந்த அமைப்பு என்று பொருள்படும். இச்சொல் வடமொழியிலிருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. முதன் முதலாகச் சங்கம் என்ற சொல் தான் காணப்படுகிறது. சங்கம் என்ற சொல் பிற்காலத்தைச் சார்ந்ததாகவே இருக்க வேண்டும். சங்கங்களைப் பாண்டிய மன்னர்கள் போற்றி வளர்த்தனர். இச்சங்கங்கள் வளர்ச்சி பெற்றிருந்த காலத்தைத்தான் சங்க காலம் என்றழைக்கிறோம். சங்க காலம் எது என்று நிர்ணயம் செய்வதில் வரலாற்றாசிரியர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. இரண்டாயிரம் வருடங்கட்கு முற்பட்டதாகும் என்று கருத்து தெரிவிக்கிறார்.

VR.ராமசந்திர கட்சிதர், சங்க காலம் கிமு ஆறாம் நூற்றாண்டி துவங்கி, கிபி.ஐந்தாம் நூற்றாண்டு வரை ஏறத்தாழ ஆயிரம் ஆண்டும் வரை செயல்பட்டது என்று கருதுகிறார். K.R.சீனிவாச அய்யங்கள் மற்றும் சில அறிஞர்கள் இக்கருத்தினை ஏற்றுக் கொள்கிறார்.. ஆனால் KA நீலகண்ட சாஸ்திரியார், சங்கம் என்பது கிறிஸ்துவுக் பின் முதல் மூன்று நூற்றாண்டுகளில் நிலவியிருந்தது என்று கருதுகிறது இவ்வாறு சங்கம் செயல்பட்டு வந்த காலம் பற்றி அறிஞர்களிடை கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன.

### சங்க கால ஆரம்ப வரையறை

சங்க காலத்தின் ஆரம்பத்தினைப் பற்றியும், அதனுடை காலத்தினைப் பற்றியும் அறிந்து கொள்வதற்குக் கல்வெட்டுகள் உது செய்கின்றன.

1) தமிழ்நாட்டில் பல இடங்களில் காணப்படும் பிராமி கல்வெட்டுகளே தமிழகச் சான்றுகளில் மிகவும் பழமையானது ஆகும் அந்த கல்வெட்டுக்களின் காலம் கி.மு.2-ம் நூற்றாண்டு என மொழியில் வல்லுனர்கள் மூலமாகவும், கல்வெட்டு அமைப்புகளில் வளர்ச்சியினைக் கண்டுபிடிப்பவர்களின் மூலமாகவும் நிர்ணயம் செய்யப்படுகிறது. பிராமிக் கல்வெட்டுகளுக்கும் தொன்மையான

கல்வெட்டுகளோ, இலக்கியக் குறிப்புகளோ கிடைக்கப் பெறவில்லை எனவே சங்க காலத்தின் தொன்மைக் காலம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு என உறுதி செய்யப் படுகிறது. இந்தக்கால வரையறை மேலும் சில கல்வெட்டுக்களின் மூலம் தெளிவாக்கப்படுகிறது.

2) அசோகரின் கல்வெட்டுக்களின் காலம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு ஆகும். இக்கல்வெட்டுக்களில் தமிழகத்திலுள்ள சேர சோழ, பாண்டிய அரசுகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன எனவே தமிழ்ச்சங்கமும் அக்காலத்தில் இருந்திருக்கக் கூடும் என்று கருத முடிகிறது.

3) கலிங்க மன்னன் காலவேலன் - கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆட்சி புரிந்தவன் ஆவான். அவன் வெளியிட்ட ஹதிகும்பா கல்வெட்டு வரலாற்றுச் சிறப்பு மிக்கது ஆகும் அதன் காலம் கி.மு.155 ஆகும். இதில் 113 ஆண்டுகளுக்கு முன்ன அமைக்கப்பட்ட தமிழ் அரசுகளின் கூட்டமைப்பு பற்றியும், அதனை காரவேலன் வெற்றி கொண்டது பற்றிய செய்திகள் காணப்படுகின்றன

இதிலிருந்து, தமிழக அரசுகளின் தோற்றம் 113 ஆண்டுகளுக்கு முன்பாக இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. எனவே சங்க காலத்தின் ஆரம்ப காலம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு எனத் தீர்மானிக்கப்படுகிறது.

## சங்க காலத்தின் முடிவு கால வரையறை

சங்ககால முடிவு பற்றிய வரையறைகளை இலங்கை நாட்டின் இலக்கியமான மகாவம்சமும் மற்றும் சிலப்பதிகாரமும் விளக்குகின்றன. சிலப்பதிகாரத்தில் சேரன் செங்குட்டுவன் என்ற மன்னன் கண்ணகிக்கு எடுத்த விழாவின் போது, இலங்கை மன்னன் கயவாகு கலந்து கொண்டு சிறப்பித்தான் என்று குறிப்பிடுகிறது. இலங்கை நாட்டைச் சேர்ந்த மகாவம்சம் என்ற நூலும் கண்ணகிக்கு எடுக்கப்பட்ட விழாவில் கயவாகு கலந்து கொண்டான் என்று குறிப்பிடுகிறது. மகாவம்ச நூலினை ஒழுங்குபடுத்தியர்கள், கயவாகு என்ற மன்னன் கி.பி.180, 198-ம் ஆண்டுகளில் ஆட்சி புரிந்திருக்க வேண்டும் என்று கருத்து தெரிவிக்கின்றனர். ஆகவே சேரன் செங்குட்டுவனின் காலம் இரண்டாம் நூற்றாண்டின் கடைசிப்பகுதி என்று முடிவாகிறது. இதுவே கடைச் சங்கத்தின் காலம் என்றும் நிர்ணயித்துக் கொள்ளலாம்.

2) இதுதவிர எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்ற இலக்கியங்களில் குறிக்கப்படும் துறைமுகப்பட்டிணங்களான கொற்கை, முசிறி, புகார் ஆகியவற்றின் இருப்பிடங்கள் பற்றியும், ரோமானியப் பயணிகளான பிளினி, டாலமி போன்றோர்கள் குறிப்பிடுகின்றனர். அவர்களுடைய

காலம் கி.பி.இரண்டாம் நூற்றாண்டு ஆகும். எனவே சங்க காலத்தின் இறுதி வரையறையை கி.பி.இரண்டாம் நூற்றாண்டாகக் கருதலாம்.

3) சங்க கால இலக்கியங்களில் ஒன்றான பதிற்றுப்பத்து என்ற நூலில் உள்ள பதிகங்கள் ஒவ்வொரு சேர மன்னனைப் பற்றியும் குறிப்புகள் தந்துள்ளன. அந்தப் பதிகங்களில் தரப்பட்டுள்ள மன்னர்களைக் கீழ்க் கண்டவாறு முறைப்படுத்தலாம்.

1) உதயன் சேரல், 2) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், 3) பல்யானை செங்கெழுகுட்டுவன், 4) களங்காயக் கண்ணி நார்முடிச்சேரல், 5) செங்குட்டுவன், 6) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், 7) செல்வக்கடுங் கோவாழியாதன், 8) பெருஞ்சேரல் இரும்பொறை, 9) இளம்சேரல் இரும்பொறை.

மேற்கண்ட அரசர்களில் செங்குட்டுவனது காலம் க.பி.இரண்டாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு நான்கு அரசர்கள் ஆட்சி புரிந்திருக்கின்றனர். ஒவ்வொரு அரசனும் சராசரியாக 25 ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர் என்று எடுத்துக் கொண்டால், கி.பி.3-ம் நூற்றாண்டில் சேர மன்னர்களின் ஆட்சி முடிவடைகிறது. எனவே கி.பி.மூன்றாம் நூற்றாண்டோடு சங்க காலம் முடிவுறுகிறது என்று கூறலாம். இவ்வாறு சங்க காலத்தின் துவக்க காலம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு எனவும், அது முடிவுற்ற காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு எனவும் ஆதாரங்கள் மூலமாக நிர்ணயம் செய்யப்படுகிறது.

## சங்க காலம் - சான்றுகள்
### (SANGAM AGE - SOURCES)

சங்க காலத்தைப் பற்றிய அடிப்படைச் செய்திகளை அறிவதற்கு நமக்கு பல ஆதாரங்கள் கிடைத்துள்ளன. ஒரு நாட்டின் வரலாறு அந்த நாட்டில் கிடைக்கின்ற வரலாற்று ஆதாரங்களின் அடிப்படையிலேயே எழுதப்படுகின்றன. கி.பி.7-ம் நூற்றாண்டைச் சார்ந்த அப்பர் என்று அழைக்கப்பட்ட திருநாவுக்கரசர் தன்னுடைய பாடல்களில் சங்கம் பற்றிய செய்தியைக் குறிப்பிடுகிறார். இறையனார் அகப் பொருள் பாயிரம் என்ற நூல் சங்கத்தினைப் பற்றிய விரிவான செய்திகளைக் கொண்டிருக்கிறது. அதுதான் மூன்று சங்கங்கள் இருந்ததாகக் குறிப்பிடுகிறது. சங்க கால தமிழகத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்குக் கீழ்க்கண்ட ஆதாரங்கள் நமக்குப் பெரிதும் உதவுகின்றன.

**1) கல்வெட்டுச் சான்றுகள்**

**a) பிராமி கல்வெட்டுக்கள்**

இவைகள் தான் தமிழகத்தின் முதன்மைக் கல்வெட்டு ஆகும். இவை அறிவர் என அழைக்கப்படும் சமணத் துறவிகள் தங்கியிருந்த குகைகளில் காணப்படுகின்றன. இவைகளது காலம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு ஆகும்.

**b) அசோகரது கல்வெட்டுகள்**

அசோகர் காலத்து 2-ம் நம்பர் குகைக் கல்வெட்டுகள் தமிழகத்தில் ஐந்து தனி நாடுகள் இருந்ததாகக் குறிப்பிடுகிறது. அவை சோழர், பாண்டியர், சத்திய புத்திரர், கேரளபுத்திரர், தாமிரபரணி ஆகியவை ஆகும். இவைகளின் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு என்று உறுதி செய்யப் படுகிறது. இவை தவிர கலிங்கத்து காரவேலரின் கெம்பா கல்வெட்டு களிலிருந்தும் சங்க கால தமிழகத்தைப் பற்றிய என் செய்திகளை அறிய முடிகிறது.

**c)வேள்விக்குடி கல்வெட்டுகள்**

பராந்தக நெடுஞ்சடையனின் வேள்விக்குடி கல்வெட்டுகள் சங்க அரசன் பாண்டியன் முதுகுடும்பி பெருவழுதியிடமிருந்து சமாகப் பெறப்பட்ட பிரம்மதேய கிராமங்களைத் திரும்பவும் நஞ்சடையனால் பிற்காலத்தில் தானமாக வழங்கப்பட்டதை உறுதி செய்கிறது.

**d) திருக்கோவிலூர் கல்வெட்டு**

இக்கல்வெட்டு கபிலர் என்ற சங்ககாலப் புலவர் வடக்கிருந்து உயிர் விட்டதைப் பற்றிக் கூறுகிறது. மேலும் நடுகல் அல்லது வீரக்கல் என்பவை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் கிடைக்கிறது. அவைகளில் கிடைக்கும் செய்திகள் சங்க காலத்தில் காணப்படும் செய்திகளோடு ஒத்திருக்கின்றன.

**2) நாணயங்கள்**

சங்ககாலம் என்று வரையறுக்கக்கூடிய நாணயங்கள் எதுவும் கிடைக்கவில்லை. மதுரைக்கு அருகில் பல ரோமானிய நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவைகள் ரோமானிய அரசர் அகஸ்டஸ் சீசர் காலத்தில் வெளியிடப்பட்டவை. இதன் காரணமாக ரோமானியப் பேரரசிற்கும் தமிழகத்திற்குமிடையே நிலவிவந்த வாணிபத் தொடர்பு அறியப்படுகிறது.

**3) தொல்பொருள் சான்றுகள்**

பாண்டிச்சேரிக்கு அருகிலுள்ள அரிக்கமேடு கிராமத்தில் கிடைத்துள்ள தொல்பொருள் சான்றுகள் சங்க காலத்தில் தமிழர்களுக்கும், ரோமானியர்களுக்குமிடையே நடைபெற்று வந்த வாணிபத் தொடர்பை வலியுறுத்துகின்றன.

4) **இலக்கியச் சான்றுகள் (சங்க கால இலக்கியங்கள்)**

சங்க கால இலக்கியங்கள் மூலமாக பண்டைக்கால தமிழ் பயத்தைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. பொதுவாக சங்க தியங்கள் என்று பல நூல்கள் குறிப்பிடப்பட்டாலும், தொகை, பத்துப்பாட்டு ஆகிய இரண்டு மட்டுமே சங்க காலங்கள் என்று கூறப்படுகிறது. இவை இரண்டும் கிறிஸ்துவ "த்தின் முதல் மூன்று நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை என்று அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டு உள்ளன. எட்டுத் தொகையில் தனித்தனியே பின்வரும் எட்டு நூல்கள் அடங்கியுள்ளன.

1) **நற்றினை**

இந்த நூல் 400 பாடல்களைக் கொண்டது. இது சிற்றரசர்களான ஓமு, பாமு, அதிகன், நின்னன், மலையன், பாணன் ஆகியோரைப் பற்றிக் குறிப்பிடுகிறது. மேலும் தொண்டி, கொற்கை, மருதூர்பட்டினம், புனல்வாயில், இரப்பையூர், குடந்தை ஆகிய ஊர்களைப் பற்றிய குறிப்புகளும் காணப்படுகிறது. ஐந்து திணைகளில் வசிக்கும் மக்களின் உணவு, உடை, நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன.

2) **குறுந்தொகை**

குறுந்தொகையைத் தொகுத்தவர் பூரிக்கோ என்பவர் ஆவார். இது 402 வரிகளைக் கொண்டது ஆகும். இதில் சமணர்களின் சில பழக்க வழக்கங்கள் காணப்படுகின்றன.

3) **ஐங்குறுநூறு**

இதனைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் என்ற புலவர் ஆவார். இது ஐநூறு வரிகளைக் கொண்டது. ஐந்து நிலப் பாகுபாடுகளின் அடிப்படையில் ஒவ்வொரு நிலத்திற்கும் நூறு பாடல்கள் இடம் பெறுகிறது. பல பாண்டிய மன்னர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

4) **பதிற்றுப்பத்து**

சேர மன்னர்களைப் பற்றிய பல்வேறு புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பே பதிற்றுப்பத்து ஆகும். இதில் முதல் பாடலும் கடைசிப் பாடலும் காணப்படவில்லை. இவைகளில் சங்க கால சமூக பொருளாதார நிலை பற்றிய குறிப்புகளும், கொற்கை, தொண்டி போன்ற இடங்களைப் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன.

5) **பரிபாடல்**

திருமால், முருகன், கொற்றவை, வைகை நதி ஆகியவை பற்றிய பாடல்களின் தொகுப்பே பரிபாடல் ஆகும். சங்க கால சமய வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொள்ள இந்நூல் பெரிதும் உதவுகிறது.

**6) கலித்தொகை**

கலித்தொகை சங்க இலக்கியம் யாவற்றிலும் காலத்தால் பிற்பட்டது என்று கருதப்படுகிறது. இது 250 பாடல்களைச் கொண்டது. ஐந்து புலவர்கள் மூலம் பாடப்பட்டது. இது ஐந்து நிலங்களில் நடக்கக் கூடிய காதல் நிகழ்ச்சிகளைப் பற்றிக் படுகிறது. இதன் மூலம் சங்க காலத்தில் காணப்பட்ட அக வாழ்கையை அறிந்து கொள்ள முடிகிறது. கண்ணன் என்ற ஆரியக் வள் முதன் முதலாக இந்த இலக்கியத்தில் தான் குறிப்பிடப்படுகிறான்.

**7. அகநானூறு**

அகத்துறை பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டது. நானூறு பாண்டிய மன்னன் உக்கிரப் பெருவழுதியின் கீழ் இந்த ல் தொகுக்கப்பட்டது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஊன்ற ஐந்து வகையான நிலங்களின் தன்மையை விளக்குகிறது. மேலும், மௌரியர்களின் படையெடுப்பு, தொண்டை மண்டல இரையர்கள், சங்க காலத் தமிழரின் உள்ளாட்சி நிறுவனம், திருமணச் சங்குகள் போன்ற வரலாற்று உண்மைகளும் இடம் பெற்றுள்ளன.

**8) புறநானூறு**

சங்ககால அரசர்கள், சிற்றரசர்கள் பற்றிய செய்திகளைத் தருகிறது புறநானூறு. ஒவ்வொரு பாடலின் அடியிலும் பாடப்படும் மன்னரின் பெயரும் பாடும் புலவரின் பெயரும் உள்ளது. தமிழர்களின் போர்த்திறன், கொடைத்திறன் பற்றி அறியலாம். ஆரியர்களின் ஆதிக்கம் தமிழ் நாட்டில் எந்த அளவிற்கு வியாபித்திருந்தது என்பதை அறிய முடிகிறது.

**பத்துப்பாடு**

பத்துப்பாட்டில் தொகுக்கப்பட்ட பத்து நூல்களும் எட்டுத் தொகை நூல்கள் இயற்றப்பட்ட காலத்திலேயே பாடப்பட்டவை என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.

**1) திருமுருகாற்றுப்படை**

இதனைப் பாடியவர் நக்கீரர். இவர் முருகனின் திருவருளைப் பெற்று உயர்ந்தவர். முருகனிடமிருந்து தான் பெற்ற திருவருட் செல்வத்தை மற்றவர்களும் பெற்று பேரின்பம் அடையுமாறு அவர்களை ஆற்றுப் படுத்துவதாக அமைந்துள்ளது இந்தப் பாடல்கள்.

**2) பொருநராற்றுப்படை**

இதனைப் பாடியவர் முடத்தாம கண்ணியார். அரசன் அல்லது சளல் ஒருவனிடம் பரிசில்கள் பெற்று வந்து பொருநர், மற்றொரு "ருநனை தான் பெற்று வந்த வள்ளலிடம் சென்று பரிசில் மாறு வழிப்படுத்துகிறான். பொருநராற்றுப்படையில் கரிகால "மூன் பற்றிய பல செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன.

### 3) பெரும்பாணாற்றுப்படை

இதனைப் பாடியவர் நல்லூர் கடியலூர் உருத்திரங்கண்ணார் ஆவர். இதில் காஞ்சி மன்னன் தொண்டைமான், யாழின் வர்ணனை போன்ற செய்திகள் காணப்படுகின்றன.

### 4) சிறுபாணாற்றுப்படை

இதனைப் பாடியவர் நல்லூர் நத்தத்தனார். இவர் கடையேழு வள்ளல்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இப்பாடல்கள் சங்கப் பாடல்கள் பலவற்றிற்கு காலத்தால் பிற்பட்டது என்று தெரிகிறது. மொத்தம் 269 வரிகளைக் கொண்டது சிறுபாணாற்றுப் படை

### 5) முல்லைப் பாட்டு

இதனை இயற்றியவர் நிப்பூதனார். இது பெரும்பாலும் முல்லை நிலத்தின் தன்மையைப் பற்றியும், அதில் வாழும் மக்களின் வாழ்க்கையைப் பற்றியும் விவரிக்கிறது.

### 6) மதுரைக் காஞ்சி

மிகவும் அதிகமான வரிகளையுடைய நூல் இது. மதுரை மாநகர் பற்றியும், அதனைச் சுற்றி வாழும் மக்களின் வாழ்க்கைத் தரம் பற்றியும், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் போர் நடவடிக்கைகள் பற்றியும் இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 7) நெடுநெல்வாடை

இதன் ஆசிரியர் நக்கீரர் ஆவார். இது புறத்துறையைச் சார்ந்த மற்றுமொரு பாடல் ஆகும். நெடுநெல்வாடையில் பாட்டுடைத் தலைவன் பாண்டியன் நெடுஞ்செழியன் ஆவான். இவனும் நக்கீரரும் சம காலத்தவர் ஆவர்.

மேற்கண்ட ஆதாரங்கள் சங்க காலத் தமிழர்களின் எல்லா நிலைகளையும் அறிந்து கொள்ள உதவுகிறது. இந்த ஆதாரங்களை வைத்துக் கொண்டு சங்க காலத்தின் அரசியல், சமூகப், பொருளாதார வரலாறு பற்றி பல ஆசிரியர்களால் எழுதப்பட்டிருக்கிறது. K.A.நீலகண்ட சாஸ்திரி எழுதிய History of South India, K.K.பிள்ளை எழுதிய தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும், கனகசபை எழுதியுள்ள Tamil Sangam berfore 1800 years, N.சுப்பிரமணியம் எழுதியுள்ள Sangam Polity ஆகிய

நூல்கள் சங்க காலத்தைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் கொண்டுள்ளன.

# சங்க கால அரசியல் நிலை

## (POLITICAL CONDITION)

சங்க கால தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆண்டு வந்தனர். சேரர்கள் வஞ்சி நகரையும், சோழர்கள் புகாரையும், உறையூரையும், பாண்டியர்கள் மதுரையையும் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தார்கள். இவர்களது அரசு, ஆட்சி முறை, பொருளாதார நிலை பற்றி சங்க கால நூல்கள் மூலம் அறியலாம். இந்த மன்னர்கள் டாக்டர் M.G.S.நாராயணன் என்பவர் கூற்றுப்படி, ஒரு சாதாரணக் குழுவின் ராணுவத் தலைமையில் இருந்து ஒரு முறையான அரச சபையுள்ள அரசாங்க அதிகாரிகளைக் கொண்ட மன்னராக மாறினார்கள். சங்க கால அரசன் நாட்டின் தலைவனாகவும், அரசியலின் தலைவனாகவும் ஒரு தனியிடத்தைப் பெற்றிருந்தான்.

**அரசன்**

சங்க காலத்தின் அரசன் வாரிசுரிமைப்படி பதவி ஏற்றான். மன்னன் ஒருவன் இறந்தால் அவனது மூத்த மகனே பட்டத்திற்கு வந்தான். அரசன் வரம்பற்ற அதிகாரங்களைப் பெற்றிருந்தான். அவனே ஆட்சித் துறையின் மையமாக விளங்கினான். சமுதாயப் பணியில் அரசன் மேல்மட்டத்தில் இருந்தான். அவர் தர்ம விதிகளை முறையாகக் கடைப்பிடித்து மக்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தான். அரசனுடைய ஆணைகள் தண்டோரா மூலம் வெளியிடப்படும். அந்த ஆணைகளைத் திருத்தவோ அதனைக் கேள்வி கேட்கவோ எவருக்கும் உரிமையில்லை .

ஒவ்வொரு அரசனும் கடிமரம் என ஓர் மரத்தைப் போன்றினர். கடிமரம் அரச மரபைக் காக்கும் சக்தி பெற்றது. பகை அரசனின் கடிமரத்தை வெட்டி வீழ்த்துவது வீரம் நிறைந்த செயலாகக் கருதப்பட்டது. சங்க கால மன்னர்கள் தமிழ்ப் புலவர்களை தீவிரமாக ஆதரித்து அதன் மூலம் தமிழ் வளர்த்தனர். தமிழ்ப் புலவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். அவர்களுக்கு விலை மதிப்பற்ற பரிசில்கள் வழங்கினர். புலவர்களும் அரசர்களும் நல்ல ஆலோசனைகளை வழங்கினர்.

அரசர்கள் போரில் வெற்றியடைவதையே தன்மானமுள்ள செயலாகக் கருதினார்கள். வெறும் நிலங்களைக் கைப்பற்றுவது மட்டுமல்லாது கொள்ளையடிப்பதிலும், எதிரிகளின் வயல்கள்,

ஆநிரைகளைக் கவர்வதிலும் கவனம் செலுத்தினர். வெற்றியடைந்த அரசர்கள் தோல்வியடைந்த மன்னர்களின் முடிகளாலான ஏழு மாலைகளை அணிந்தனர். தோல்வியடைந்த மன்னர் வடக்கிருந்து உயிர் நீத்தல் வழக்கமும் இருந்தது. அரசனை கோரி, மன்னன், வேந்தன், கொற்றவன், இறைவன் என்று அழைத்தனர். அரசனுடைய சின்னங்கள் படைக்கலம், கொடி, குடை, முரசு, குதிரை, யானை, ரதம், மாலை முடி போன்றவைகளாகும். சங்ககால அரசாட்சி செங்கோலட்சியாகவே எப்போதும் விளங்கியது என்று கூறமுடியாது. சில மன்னர்கள் கொடுங் கோலாட்சியும் புரிந்து வந்துள்ளனர் என்று தெரிகிறது.

**அமைச்சர் குழு**

அரசன் அமைச்சர் குழுவின் உதவியுடன் ஆட்சி செய்து வந்தான். பொதுவாக அமைச்சர்களும் அலுவலர்களும் கற்றறிந்தவர்களாகவும் திறமை வாய்ந்தவர்களாகவும் திகழ்ந்தனர். சங்க காலத்தில் ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்ற குழுக்கள் இருந்தன. நாச்சினார்க்கினியர் கூற்றுப்படி ஐம்பெருங்குழுவில், புரோகிதர், படைத் தலைவர், நுதுவர், ஒற்றர், அமைச்சர் ஆகியோர் இருந்தனர். எண்பேராயம் என்பது காணத்தியலவர், கருமக்காரர் கனகசுற்றம் கடைக்காப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானை வீரர், இவுளிமறவர் ஆகியோரைக் கொண்டதாகும்.

இந்தக் குழுவினர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆனால் மக்களின் பொதுப் பிரதிநிதிகளாகச் செயல்பட்டனர். இக்குழுக்களுக்கு கூட்டுப் பொறுப்பும் கிடையாது.. ஆனால் அரசர்களுக்கு ஆலோசனை சொல்லும் முக்கியப் பணியினை ஆற்றி வந்தார்கள். அமைச்சர்கள் அரசியல் கலையில் தேர்ச்சி பெற்று விளங்கினர். மக்களின் நலனைக் கருத்தில் கொண்டே செயல்பட்டனர்.

**ஊராட்சி முறை**

சங்க கால ஆட்சி முறையில் மன்னர்களே நேரடியாக ஆட்சி புரிந்தாலும் ஊராட்சி முறை குண இயல்புகளையும் அது கொண்டிருந்தது. அனுபவமிக்க, வசதி படைத்த, செல்வாக்குமிக்க பொது அறிவு கொண்ட சிலர் தங்கள் கிராமக் காரியங்களைத் தாமே கவனித்துக் கொண்டனர். இந்த நடவடிக்கைகள்தான் சோழர் காலத்தில் ஓங்க வளர்ந்த ஊராட்சி முறைக்கு வழிகோலியாக இருந்தது. கிராமங்களே ஊராட்சி முறையின் முக்கியக் கூறாக விளங்கியது.

சிற்றூர்களில் கூடிய கூட்டத்திற்கு மன்றம், பொதியில், அம்பலம், அவை என்று பெயர். மன்றம் என்பது ஊர் நடுவிலுள்ள ஒரு சிறு மாளிகையும் அதன் நடுவிலுள்ள ஒரு பீடத்தையும் குறிப்பிடுவதாக

அமைந்துள்ளன. மன்றம் அல்லது பொதியில் நடைபெறும் கூட்டங்களில் ஊர் மக்களிடையே ஏற்பட்ட பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தனர். மேலும் ஊர்ப் பொதுக்காரியங்களையும், சமூக நலத்திட்டங்களையும் மன்றத்தார் செய்து வந்தனர். சங்ககால ஊர்களில் சிற்றூர், பேரூர், முதூர் போன்ற வகைகள் இருந்தன.

## நகராட்சி முறை

சங்க காலத்தில் நகராட்சி முறையும் செயல்பட்டு வந்தது. நகரங்களில் பட்டிணம், பாக்கம் என சில இருந்தன. கடலோரம் அமைந்த நகரம் பட்டிணம் எனவும், பட்டிணங்களின் ஒரு பகுதி பாக்கம் எனவும் அழைக்கப்பட்டது. சங்க காலத்தில் புகார், கொற்கை, மதுரை, வஞ்சி, கரூர், முசிறி, காஞ்சி போன்ற பல முக்கிய நகரங்கள் இருந்தன. இந்த நகரங்கள் சீராக ஆளப்பட்டு வந்தன. ஊர்காவலர் என்றழைக்கப்பட்ட பாதுகாவலரால் நகரங்கள் பாதுகாக்கப்பட்டன. காவலுக்கு நாய்கள் பயன் படுத்தப்பட்டன. தலைநகர்கள் பொதுவாக மன்னரது இருப்பிடங்களாக இருந்து வந்தன. பொதுவாக மன்னரது இருப்பிடங்களாக இருந்து வந்தன. தலைநகர் மிகக் கவனமாகப் பாதுகாக்கப்பட்டு வந்தது.

## சட்டமும் நீதியும்

சங்க காலத்தில் அரசனே நீதியின் உறைவிடமாக விளங்கினான். பாரபட்சமின்றி நீதி வழங்கினால் எதிர்காலத்தில் தன் வாழ்வில் மகிழ்ச்சியும் உலகில் இன்பமும் உண்டாகும் என்று மன்னன் நம்பினான். நீதி வழங்குவதற்கு அறங்கூறு அவயம் என்ற அமைப்பு இருந்ததாகத் தெரிகிறது. மிகக் கடுமையான குற்றங்கள் எனக் கருதப்படக் கூடியவைகள் பசுக்களைக் கொல்லுதல், கர்ப்பத்தைக் கலைத்தல், பிராமணர்களைக் கொல்லுதல் ஆகியவையாகும். சாட்சிகள், ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலே நீதி வழங்கப்பட்டது. குற்றங்களுக்கு, சிரச்சேதம், உறுப்புகளைத் துண்டித்தல் போன்ற கடுமையான தண்டனைகள் வழங்கப் பட்டன. கிராமங்களில் வழக்குகளை விசாரிப்பதற்கு கிராம நீதி மன்றங்கள் செயல்பட்டு வந்ததாகத் தெரிகிறது. மன்னரின் பிறந்த நாள், பெரிய ஆலயம் கட்டும் நேரம், போர் வெற்றி விழா போன்ற நேரங்களில் பொது மன்னிப்பு வழங்கும் பழக்கம் இருந்து வந்தது.

## இராணுவ அமைப்பும் போர் முறையும்

சங்க கால அரசியலில் போர் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்தது. பேராசிரியர் சூ.சுப்பிரமணியன் சங்க காலப் போருக்கான "ரணங்களை கீழ்க்கண்டவாறு தொகுக்கிறார். மனிதனால் தவிர்க்க முடியாதது அரச மரபினர்க்கிடையே ஏற்படும் பிரச்சனை, வெற்றி

பற்று நிலப்பகுதிகளை இணைக்க வேண்டுமென்ற ஆசை, மற்றவர்கள் செல்வம், புகழ், அந்தஸ்து கண்டு பொறாமைப்படுதல், மக்களின் போர்க்குணம், போர்க்களத்தில் இறந்தால் சொர்க்கத்தை அடையலாம் என்ற கருத்து, ஒரு அரசன் தனது மகளை வேறு ஒரு அரசனுக்கு மணமுடிக்க மறுத்தல், ராணுவ வெற்றியே மன்னருக்குப் பெருமை என்ற கருத்து, வீரக்கல் எடுக்கும் பழக்கம், அரசுகளுக்கிடையே நிரந்தர எல்லையில்லாமை ஆகிய காரணங்களாகும்.

சங்க காலத்தில் படை நான்கு பிரிவுகளைக் கொண்டிருந்தது. அவை தரைப்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை என்பனவாகும். குதிரைப்படை தான் முக்கியப் பிரிவாகும். இந்தப் படை மன்னராலும், மற்ற முக்கிய வீரர்களாலும் நடத்தி வரப்படும். யானைப்படை. அடுத்த முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது. வீரர்கள், வாள், வில், அம்பு, ஈட்டி, பகழி ஆகியவற்றைக் கொண்டு போரிட்டனர். வீரர்கள் புலித்தோலால் அணிந்த கவசம் அணிந்தனர். போரில் கேடயம் பயன்படுத்தப்பட்டது.

சங்க காலப் போர் முறை ஆநிரைக் கவர்தல் என்பதிலிருந்து துவங்குகிறது. சங்க காலப் போர் சில நல்ல முறைகளைக் கொண்டிருந்தது. பாதுகாப்பு அற்றவர்கள், அப்பாவி மக்கள், முதியவர்கள் ஆகியோருக்கு தீங்கு விளைவித்தல் கூடாது. போரில் புறமுதுகு காட்டுவது இழிவாகக் கருதப்பட்டது. சில சமயங்களில் புலவர்கள் போரைத் தவிர்க்கும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றியடைந்துள்ளனர். அவர்களில் கபிலர், கோவூர்க்கிழார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

சங்க காலப் படைகளின் போர்த்தன்மை பற்றி தொல்காப்பியம் விரிவாகக் கூறுகிறது. அது ஐந்து வகையான போர்த்தன்மைகளைக் குறிப்பிடுகிறது. அவை வெட்சி, வாகை, வாஞ்சி, உழிஞை, தும்பை ஆகியவையாகும். வெட்சி எனப்படுவது ஒரு மன்னன் ஆநிரைக் காத்தல் பொருட்டு மேற்கொள்ளப்படும் போர் ஆகும். சங்க காலத்தில் ஆநிரை கவர்தலும், அதனைக் காப்பதன் பொருட்டும் நடந்த போர்கள் அன்றாட நிகழ்ச்சிகளாகக் கருதப்பட்டது என்று டாக்டர் எம்.சிஎஸ்.நாராயணன் குறிப்பிடுகிறார்.

வாகை எனப்படுவது வெற்றி பெற்ற மன்னர்கள் வாகை மலர் அணிவது ஆகும். இதுவும் போரின் ஒரு அம்சமாகும். வஞ்சி எனப்படுவது போர்கள் நடவடிக்கைகளால் தன்னைக் காத்துக் கொள்பவன் அஞ்சி மலரினை அணிந்து கொள்வான். போரின் போது எதிரிகளைப் போர்க் களத்தில் தாக்காத எதிரியின் கோட்டையினை வளைத்து போர் செய்யும் முறை உழிஞை எனப்படும். கோட்டையில் அடைபட்டுக் கிடப்பவர்கள் தங்களைத் தகுந்த முறையில்

பாதுகாத்துக்கொண்டு முற்றுகை செய்தவர்களை விரட்டியடித்த பின் ஆரவாரிக்கும் ச்சி தும்பை எனப்படும். இவ்வாறு சங்க காலத்தில் போர் முறை இருந்து வந்தது

**நிதி நிலைமை**

சங்க கால அரசுக்கு முக்கிய வருமானம் நிலவரியாகும். சியாக நிலத்தின் விளைச்சலில் ஆறில் ஒரு பங்கு விக்கப்பட்டது. வரியைப் பெரும்பாலும் தானியமாகவே மக்கள் இனர். இவை தவிர தண்ணீ ர் வரியும் சுங்க வரியும் க்கப்பட்டது. சுங்க வரி வாரியார் என்பவர் மூலம் கலிக்கப்பட்டது. பட்டினப்பாலையில் சுங்க அதிகாரிகள் புகார் சில்கடலிலிருந்து வரும் அந்நியக் கப்பல்களைச் சோதித்து அனுப்பி, பலிலுள்ள பொருட்களின் மீது வரி விதித்ததை விளக்குகிறது. தெனால் சுங்க வரி மூலம் அரசுக்கு வருவாய் கிடைத்ததை அறியலாம்.

இவை தவிர சங்க கால அரசனுக்கு மற்ற வகைகளிலும் வருவாய் கிடைத்தது. திருடர்களிடமிருந்து மீட்கப்பட்ட சொத்துக்கள், சுங்கவரி, நிலங்களைத் தானம் கொடுக்கும் போது ஒரு குறிப்பிட்ட தொகை செலுத்துவது, எதிரிகளை வெல்வதின் மூலம் கிடைக்கும் பொருட்கள், பரிசுகள், வாரிசு இல்லாமல் விட்டுச் சென்ற சொத்துக்கள், வாணிபம் மூலம் கிடைக்கும் பணம், சட்டங்களை மீறுபவர்கள் மீது விதிக்கப்படும் அபராதம் ஆகியவைகள் மூலம் அரசனுக்கு வருமானம் கிடைத்ததாக நச்சினார்க்கினியர் கூறுகிறார்.

சங்க காலத்தில் பண்டமாற்று முறையும் பழக்கத்திலிருந்தது. தமிழர்களும் ரோமானியர்களும் பண்டமாற்று முறையில் வாணிபம் செய்தனர். வெள்ளி, பொன் நாணயங்கள் புழக்கத்திலிருந்தன. மலர்களை வைத்து எண்கள் அடையாளம் காட்டப்பட்டன. கழஞ்சி என்பது தங்கத்தை நிறுக்கக்கூடிய ஒரு எடையாகும்.

இவ்வாறு சங்க கால அரசியல் அமைப்பு ஒரு முடியாட்சியாகவே திகழ்ந்தது. மன்னனே சகல அதிகாரங்களையும் வகித்து வந்தான். கிராம நிர்வாக அமைப்புகள் ஓரளவு இயங்கி வந்தன. தனிப்பட்ட ஒரு குழுவின் ராணுவத் தலைமையிலிருந்து மாறுபட்ட லைக்குச் சென்ற ஒரு அரசியலாக விளங்கியது. மன்னருக்கு வீரமே தானமாக விளங்கியது. அமெரிக்கப் பேராசிரியரான பர்ட்டன்ஸ்டெயின் என்பவர் சங்க கால அரசினை வீர அரசு என்று விக்கிறார். மற்ற பல்லவ சோழ அரசுகளுக்கு இந்த வீர அரச் என்ற டமொழியினை உபயோகிக்க மறுக்கிறார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# சங்க காலப் பொருளாதார நிலை

## (ECONOMIC CONDITION)

சங்க காலத்தில் பொருளாதார வாழ்க்கை தன்னிறைவுடைய தாகவும் எளிமையாகவும் இருந்தது. மிகவும் செல்வாக்கானதும், வறுமை என்பதுமான குறிப்புகள் காணப்படவில்லை. வறுமை என்பது பணத்தை அடிப்படையாக மட்டும் வைத்து நிர்ணயிக்க வில்லை. சங்ககாலப் பொருளாதாரத்தின் அடிப்படையே விவசாயம் ஆகும். பிற கைத் தொழில்கள் விவசாயத்தினை அடிப்படையாகவும், அதற்கு உதவி செய்யும் வகையிலும் அமைந்திருந்தது. சங்க காலப் பொருளாதார நிலை அயல் நாட்டுடனும் தொடர்பு கொள்வதற்கு வழிவகுத்தது.

**விவசாயம்**

சங்க காலத்தில் விவசாயம் முதன்மைத் தன்மை பெற்றிருந்தது. சங்க இலக்கியத்தில் இதற்கு அளவற்ற சிறப்பு கொடுக்கப்பட்டுள்ளது. விவசாயம் செய்யும் நிலங்கள் பொருளாதார நடடவடிக்கைகளுக்கு காரணமாக அமைந்திருந்தன. காவிரி, பெண்ணை , பாலாறு, வைகை, தாமிரபரணி போன்ற ஆறுகள் தமிழகத்தில் சங்க காலத்தினை வளமுடையதாக ஆக்கின. உழவு நிலங்கள் மிகவும் செழிப்பாக இருந்ததால் உணவுப் பண்டங்களின் விளைச்சல் வரம்பின்றிக் காணப் பட்டது. நெல் முதன்மையான பயிராகும். அதற்கடுத்தபடியாக வரகு, திணை பயிரிடப்பட்டன. புதுநெல், செந்நெல் தோரை போன்ற பலவிதமான நெல் ரகங்கள் பயிராயின. இவை தவிர கழைக்கரும்பு, தென்னை , வாழை, மஞ்சள், இஞ்சி, பருத்தி ஆகியவையும் பயிர் செய்யப் பட்டன. நிலத்தை உழுவதும், எருவிடுவதும், நாற்று நடுவதும், தண்ணீ ர் விடுவதும், களையெடுப்பதும், பயிரைக் காவல் காப்பதும் உழவுப் பணிகளாகும்.

**உழவர்கள்**

விவசாயத் தொழில் செய்தவர்கள் நிலத்தை உழுது பயிரிட்டதால் அவர்கள் உழவர்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் வேளாளர்கள் எனவும் அழைக்கப்பட்டனர். ஆண் பெண் இருவரும் உழவுத் தொழில் புரிந்தனர். காடுகளை அழித்து நிலங்களாக்கும் பழக்கம் சங்க காலத்தில் தொடர்ந்து நடைபெற்ற ஒரு செயலாகும். நஞ்சை, புஞ்சை போன்ற நிலங்களில் பயிர்கள் விதைக்கப்பட்டன. கட்டுமான அணைகள் மூலம் நிலங்களுக்கு நீர் பங்கீடு செய்யப்பட்டது. ஏரிகளைப் பாதுகாப்பற்கும், நீரினை ஒழுங்காகப் பங்கிடவும், கிராம நிறுவனங்கள் சில நபர்களை நியமித்திருந்தன. கலப்பை, ஏர் போன்றவை சங்க காலத்தில் உபயோகிக்கப்பட்டு வந்த கருவிகளாகும்.

**கால்நடை**

சங்க காலத்தில் விவசாயத்திற்கு இணையாக கால்நடை வர்ப்புத் தொழில் கருதப்பட்டு வந்தது. கால்நடை வளர்ப்பவர்கள் இடையர், இடைமகன், பொதுவர் என்று அழைக்கப்பட்டனர். எல்லை நிலம் இடையர்களுக்கும், கால்நடை மேய்க்கும் மக்கள் வசிக்கும் இடமாகவும் இருந்து வந்தது. சில இடங்களில் அவர்கள் தனியாக வசித்து வந்தனர். அதற்கு ஆய்குடி என்று பெயர்.

**வாணிபம்**

உழவுத் தொழிலைப் போன்றே பண்டைத் தமிழர் வாணிபத்திலும் ஈடுபட்டிருந்தனர். மக்களுள் பெரும்பாலோர் வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர். சிலர் தலைமுறை தலைமுறையாக செய்து வந்த தொழிலை மாற்றி, வாணிபத்தில் ஈடுபட்டனர். முக்கியமாகப் பல புலவர்கள் வாணிபம் செய்ய ஆரம்பித்தனர். மதுரைப் பண்ட வாணிகன் இளந்தேவனார் மது அறுவை வணிகர் இளவேட்டனார், கணியன் பூங்குன்றனார், தங்கால் பொற்கொல்லன், வெண்ணாகனார் மதுரைக் கொல்லன் புல்லன் ஆகிய புலவர்களின் பெயரிலிருந்தே அவர்கள் ெெசய்த தொழில்கள் தெரிய வருகிறது. சங்க காலத்தில் நடைபெற்று வந்த வாணிபங்களில் சிறப்பானவை உடை வாணிபம், ஓலை வாணிபம், கூல வாணிபம், பொன் வாணிபம்

**உற்பத்திப் பொருட்கள்**

சங்க காலத்தில் வாழ்க்கை நலன்களுக்கான பல பண்டங்களும் ஏற்றுமதி செய்யப்பட்ட பல பொருட்களும் தமிழகத்தில் உற்பத்தியாயின. பூச்சரங்கள், சந்தனம், பச்சைக் கற்பூரம் போன்ற நறுமணப் பொருட்களும், நெல், புல்லரிசி, வரகு, தினை, சாமை இறுங்கு, தோரை, மூங்கிலரிசி போன்ற உணவுப் பொருட்களும் உற்பத்தியாயின. வெண்கலச் செப்புக் கலங்கள், செயற்கை பூங்கொத்துக்கள் ஆகியவைகளும் உற்பத்தி செய்யப் பட்டன. இலைகள் அனைத்தும் வணிகர்களால் விற்கப்பட்டன. மேலும் உப்பு விற்கும் உமணரும், வெற்றிலை வணிகரும், ஆட்டு வணிகரும், மீன் விற்கும் பரதவரும், தச்சர், ஓவியர், சிற்பிகள், கதைப்பாவை செய்வோர், தோலுறை தைப்போர் முதலியோரும் காணப்பட்டனர்.

**பண்டமாற்று முறை**

பொதுவாக பண்டங்கள் உற்பத்தியான இடத்திலேயே விற்கப் உன. மேலும் பண்டங்களை கழுதையின் மீது ஏற்றி ஊர் ஊராகச் சென்றும் விற்கப்படுவதுண்டு. வணிகர்கள் கூட்டம் கூட்டமாகவே பல ஊர்களுக்குச் சென்று விற்பனை செய்வர். இக்குழுக்களுக்கு வாணிகச் சாத்துக்கள் என்று பெயர். வாணிகர்கள் எடை அளவைக் குறைக்காமல்

நேர்மையான வாணிகம் செய்தனர் என்று நாம் பட்டினப்பாலை மூலம் அறியும் போது ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா? வாணிகத்தில் பலவகையான அளவைகள் உபயோகப்படுத்தப்பட்டன. எடுத்தல் அளவை சிலவற்றுக்கு கழங்கு, கழற்சிக்காய் என்று பெயர். பெரும்பாலும் பண்டமாற்று முறையிலேயே வாணிபம் நடைபெற்று வந்தது. தேன், நெய், கிழங்கு ஆகிய பண்டங்கள் மீனுக்கு மாற்றப்பட்டன. கரும்பும் அவலும் மான் கறிக்கும் கள்ளுக்கும் மாற்றப்பட்டன. நெய்யை விற்று எருமை வாங்கினர். உப்புக்கு நெல் மாற்றப்பட்டது.

### தொழில் செய்யும் மக்களின் வாழ்க்கை நிலை

பல தொழில்களைச் செய்யும் மக்கள் ஒன்று சேர்ந்து வாழ்ந்து வந்தனர். தொழில் முறையில் உயர்வு தாழ்வு என்ற வேறுபாடு அக்காலத்தில் தமிழரிடையே காணப்படவில்லை. நாட்டின் வளர்ச்சிக்கும், மக்களின் நல்வாழ்க்கைக்கும், தொழிலாளர்களின் உழைப்பு இன்றியமையாதது என்ற உணர்வு அவர்களிடம் காணப்பட்டது.

### அயல் நாட்டு வாணிபம்

சங்க காலத் தமிழர்கள் மேற்கே கிரீஸ், ரோம், எகிப்து முதல் கிழக்கே சீனா வரை கடல் வியாபாரம் செய்து வந்தார்கள். பாபிலோனியா, மெசபடோமியா, பாலஸ்தீனம் ஆகியவற்றுடன் வாணிபத் தொடர்பு வைத்திருந்தனர். ஏலம், இலவங்கம், மிளகு, இஞ்சி, பொன், வெள்ளி, தந்தம், குரங்குகள், இரத்தினக்கற்கள், மஸ்லீன் துணி ஆகிய பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. அயல் நாட்டு வாணிபத்தில் தங்க நாணயங்கள் வழங்கி வந்தன. காணம் என்ற பொற்காசு சங்க காலத்தில் வழங்கி வந்தது. சேர நாட்டுக் கடற்கரையில் அமைந்திருந்த துறைமுகங்களில் பல கிரேக்கக் கப்பல்கள் வந்து தங்கின. உள்நாட்டு வாணிபம் செழிப்பாக இருந்ததால் தான் சங்க காலத் தமிழர் அயல் நாடுகளில் வெற்றிகரமாக வாணிபம் செய்ய முடிந்தது.

இவ்வாறு சங்க காலப் பொருளாதார நிலை பயிர்த் தொழில் மற்றும் வாணிபத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது. மக்கள் இவைகளில் ஈடுபட்டு, சம்பாதித்து இன்பமாக வாழ்க்கை வாழ்ந்து வந்தனர்.

## சங்க காலச் சமுதாய நிலை

## (SOCIAL CONDITION)

சங்க காலத்தில் தமிழரின் நாகரிகமும் முழு மலர்ச்சியடைந்து இருந்தது. தமிழர்களின் வாழ்வு, தமிழர் பேசிய மொழி, தமிழர் வாழ்ந்த நிலம் ஆகிய இம்மூன்றுக்கும் இயல்பான நெருங்கிய தொடர்பு உண்டு என்ற உண்மை தமிழரின் நாகரிகத்தின் அடிப்படைத் தத்துவமாக அமைந்துள்ளது. சங்க காலச் சமுதாய நிலையைப் பற்றி சங்க இலக்கியங்கள் விரிவாகக் கூறியுள்ளன. சங்க காலச் சமுதாயம் நிலங்களின் அடிப்படையில் பாகுபாடு செய்யப்பட்டிருந்தது. தாம் வாழும் நிலத்தின் இயல்புக்கு ஏற்றவாறு மக்களின் வாழ்க்கை முறையும், பண்பாடும் அமையும் என்பது பண்டையத் தமிழரின் சிறந்த கொள்கையாகும். ஆனாலும் ஆரியர்களின் ஆதிக்கம் சங்க காலச் சமுதாயத்தின் மேல்மட்டத்து மக்களைப் பாதித்திருந்தது. ஆகவே சங்க காலச் சமூக அமைப்பானது அதனது ஆரம்ப காலக் கூறுகளையும், குழுக்களால் ஆன முறையினையும், ஆரியர்களால் சேதப்படுத்தப்பட்ட வாழ்க்கை முறையினையும் கலந்து கொண்டதாக இருந்தது. நில அடிப்பயிைல் சமூகப் பாகுபாடுகள்

சங்க காலச் சமுதாயம் நிலத்தின் இயற்கை அமைப்புகளின் அடிப்படையில் ஐந்து வகையாகப் பாகுபாடு செய்யப்பட்டிருந்தது. இந்த இயற்கை அமைப்புகளோடு ஏற்பட்ட சமூகம் ஒவ்வொரு நிலத்திற்கும் தகுந்த வித்தியாசமான குண இயல்புகளைக் கொண்டிருந்தது.

a)குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த பகுதியுமாகும். இங்கு வாழ்ந்து வந்த மக்கள் குறவர்கள் அல்லது வேட்டுவர்கள் என்றழைக்கப் பட்டனர். இவர்களின் தொழில் வேட்டையாடுதல். இவர்களின் கடவுள் முருகன் ஆவார்.

b)முல்லை என்பது காடும் காடு சார்ந்த பகுதியுமாகும். இங்கு வாழ்ந்தவர் கோவலர் அல்லது ஆயர் எனப்பட்டனர். ஆநிரைகளை மேய்த்தல், பால் பொருட்களை விற்பனை செய்தல் இவர்களது தகயத் தொழில் ஆகும். முல்லைக்குக் கடவுள் மாயோன் ஆவார்.

c)மருதம் என்பது வயலும் வயல் சார்ந்த பகுதியுமாகும். இந்த எல் வாழ்ந்தவர்கள் வேளாளர் என்றழைக்கப்பட்டனர். ளை உழுது விவசாயம் செய்தல் இவர்களின் தொழில். இந்திரன் ளது கடவுள் ஆவார்.

d)மருதம் நிலத்தில் வாழ்ந்த நிலங்களை உழுது இவர்களது கடவுள் ஆவர்

e)நெய்தல் என்பது கடலும் கடல் சார்ந்த பகுதியுமாகும். இங்கு வாழ்ந்த மக்கள் பரதவர் அல்லது மீனவர் என்றழைக்கப்பட்டனர். மீன் பிடித்தல், உப்பு தயாரித்தல் இவர்களது முக்கியத் தொழில், நெய்தலுக்கு கடவுள் வருணன் ஆவார்.

f)பாலை என்பது குறிஞ்சியும் முல்லையும் தங்கள் நல் இயல்புகளை இழந்து கோடை வெயிலில் மரஞ்செடிகள் காய்ந்து, நீர் நிலைகள் வறண்டு காணப்படும் பகுதியாகும். இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் மறவர் ஆவர். இவர்களது தெய்வம் கொற்றவை அல்லது காளி ஆகும்.

**சமூகப் பிரிவுகள் (Social Divisions)**

சங்க கால சமூகப் பிரிவுகள் தொழிலின் அடிப்படையிலும், நிலத்தின் அடிப்படையிலும் இயங்கி வந்தன. அவை மேலோர் கீழோர் என்ற பாகுபாடு இன்றி இயங்கி வந்தது. பேராசிரியர் அனுமந்தன் கூற்றுப்படி பலதரப்பட்ட மக்கள் பல சமூகச் சூழ்நிலையில் இயங்கி வந்தனர். ஆனால் அவர்கள் தனித்தனி பிரிவுகளாக இயங்கவில்லை . தொழிலின் அடிப்படையில் பிரிந்திருந்த மக்கள் தமிழகப் பண்பாடு என்ற ரீதியில் ஒன்றுபட்டு ஒருவருக்கொருவர் நல்லுறவுடன் விளங்கினர்.

சங்ககாலச் சமூக அமைப்பு அறிவர், அரசர், வணிகர், வேளாளர் ஆகிய முக்கியப் பிரிவுகளைக் கொண்டிருந்தது. மக்கள் செய்த தொழிலுக்கேற்ப பல குலங்கள் தோன்றியிருந்தன. அவை இடையர், உமணர், உழவர், கடம்பர், கம்மியர், குயவர், குறும்பர், கூத்தர், கொல்லர், தச்சர், துடியர், பரதவர், பறையர், பாணர், பொருநர், வணிகர், வேடர் போன்றவையாகும். இந்த ஒவ்வொரு குலமும் தமிழ் சமுதாயத்தில் விலக்க முடியாத ஓர் உறுப்பாகவே செயல்பட்டு வந்தது.

**பிராமணர்கள் அல்லது பார்ப்பனர்கள்**

சங்க காலத்தில் சமண புத்த குருமார்களைத் தொடர்ந்து ஆரியர்கள், பிராமணர்கள், வைசியர்கள் தமிழகத்தில் நுழைந்திருக்க வேண்டும். பிராமணர்கள் தமிழக அரசர்கட்கு அமைச்சர்களாகவும், தூதுவர்களாகவும் பணியாற்றத் துவங்கினர். அவர்களது திறமை, அறிவியல், வானவியல், விவசாயம் ஆகிய துறைகளில் வியாபித்திருந்தது. எனவே அரசர்கள் பிராமணர்களை ஆதரித்தனர். இதனால் தமிழகத்தில் பிராமணர்கள் அதிக அளவில் குடியேறினர்.

சங்க காலத்தில் பிராமணியம் முழுமையாகச் செயல்படமுடியா விட்டாலும் பிராமணர்கள் என்ற பிரிவினர் சங்க கால மக்களில் ஒரு பிரிவினராக இருந்தனர். பிராமணர்களின் முக்கியக் கடமைகளைப் பற்றி தொல்காப்பியம் விரிவாகக் குறிப்பிடுகிறது. கல்வி கற்றல், பயிற்று நகல், யாகம் நடத்துகின்றவர்கட்கு உதவுதல், நன்கொடை வழங்குதல்,

கொடைகளைப் பெற்றுக் கொள்ளுதல் ஆகியவைகள் மாமணர்களின் கடமைகள் என்று கூறுகிறது. அந்தணர்கள் அரச

கரையில் புரோகிதர் களாகவும், சோதிடவியல் நிபுணர்களாகவும் மிக்கப்பட்டனர். அவர்கள் கிராமங்களில் தனியாக வசித்து வந்தனர். அவர்கள் வசித்து வந்த குடியிருப்புகளுக்கு பார்பனசேரி என்று பெயர்.

பிராமணர்கள் பல கோத்திரங்களைக் கொண்டிருந்தனர். அவர்களில் பலர் கபிலரைப் போன்று புலவர்களாகவும் இருந்தனர். பண்டைய தமிழகத்துப் பார்பனர்கள் தம்மைத் தமிழராகவே நினைத்து, தமிழ் பயின்று, தமிழ்ச் சமுதாயத்தில் தம்மையும் இன்றியமையாத ஓர் உறுப்பாக அமையுமாறு நடந்து கொண்டனர்.

**சேரிகள்**

ஊரின் சில பகுதிகள் சேரிகள் என்று அழைக்கப்பட்டன. சேரிகளில் பரதவர்கள், குறவர்கள், மறவர்கள், குடும்பர்கள், பறையர்கள் போன்றோர் வாழ்ந்து வந்தனர். தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்ந்த பகுதிகளுக்குத்தான் சேரி என்ற பெயர் வழங்கி வந்ததாகச் சொல்ல முடியாது. ஏனெனில் பறைச்சேரி என்பது இருந்தது போால பார்பனசேரி, இடைச்சேரி என்றெல்லாம் இருந்தன. சாதிப் பெயர்கள் ஊர் அமைப்பில் அப்போதே இடம் பெற்று விட்டன. தாழ்த்தப்பட்ட மக்கள் தீண்டத்தகாதவர் என்ற நிலை சங்க காலத்தில் இல்லை. குறும்பர்கள், பாணர்கள், பறையர்கள், சங்ககால சமுதாயத்தில் ஒரு மதிக்கத்தக்க நிலையிலிருந்தனர்.

**மக்களின் இல்லற வாழ்க்கை**

சங்க காலத் தமிழர் இல்லற வாழ்க்கையைப் பெரிதும் பாராட்டி வந்தனர். ஒருவனும் ஒருத்தியும் இணைந்து வாழ்வாங்கு வாழ்வது தமிழரின் கொள்கையாக இருந்தது. இல்லறமே நல்லறம் என்று போற்றப் பட்டது. பல சங்க இலக்கியங்கள் மக்களின் இல்லற வாழ்க்கையை விவரிக்கின்றன. மணப்பருவம் அடைந்த காதலர்கள் தாங்களாகவே அல்லது பிறரால் சேர்க்கப்பட்டோ கண்வன் னைவியாவர். காதலர்கள் ஒருவரை ஒருவர் நேரில் கண்டு பேசி பளத்தைப் பறிகொடுத்து விட்டால் மீண்டும் அவர்கள் வேறு ரையும் காதலிப்பதில்லை என்பது குறிப்பிடத் தக்கது. தங்கள் காதல் வியடைய இடையூறுகள் ஏற்பட்டால் இரண்டு பேரும் ஊரை - ஓடிவிடும் பழக்கம் சங்க காலத்திலும் காணப்பட்டது.

தான் காதலித்த பெண்ணை திருமணம் செய்ய முடியாத காதலன் சில சமயம் மடலேறுதலும் உண்டு. பனங்கருக்கினால் குதிரை ஒன்று செய்து அதன் மீது காதலன் அமர்ந்து தன் காதலியின் உருவம் வரைந்த கொடி ஒன்றை கையில் ஏந்திக் கொள்வான். இந்தக் குதிரை உருவத்தை தெருத் தெருவாக இழுந்து வருவார்கள். அப்போது அந்த பணங்கருக்கு காதலனின் உடம்பில் காயங்களை ஏற்படுத்தி இரத்தப்

பெருக்கை ஏற்படுத்தும். இதனைக் கண்டு சகிக்க முடியாத காதலியின் பெற்றோர் தங்கள் பெண்ணை அவனுக்கே மணமுடித்துக் கொடுப்பர். இதுவே மடலேறுதல் ஆகும். இதனை தொல்காப்பியம் விவரிக்கிறது.

திருமணம் ஒரு நல்ல நாளில் நடைபெறும். பொதுவாக விடியற் காலங்களிலேயே திருமணங்கள் நடைபெற்றன. திருமணம் தொடங்கும் முன் கடவுள் வழிபாடு நடைபெறும். மணமகள் கசங்காத புத்தாடை உடலெங்கும் போர்த்தியிருப்பாள். வெண்மையான நூலில் வாகையிலை யினையும், அருகம்புல் கிழங்கினையும். கோர்த்த மாலையை அணிந்திருப்பாள். மணமகன் மணமகளுக்குத் தாலி கட்டியதாக சங்கத் தமிழில் சான்றுகள் இல்லை. சங்க காலத்தில் திருமண வாழ்க்கை கற்பு என்று அழைக்கப்படுகிறது. பெண்ணின் கற்பு பெரிதும் போற்றப்பட்டது. பண்டைத் தமிழர் மக்கட்பேற்றை பெரிதும் பாராட்டினர். மக்கட் செல்வத்தைப் பற்றி, அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பிள்ளைகட்கு இளமையில் கற்பித்து அறிவுடையவர் ஆக்கினார்கள்:

**சங்க கால மகளிர் நிலைமை: (Women)**

சங்க காலத்தில் ஆண் பெண் இரு பிரிவினரிடையே சட்ட சமூகப் பிரிவினைகள் ஏதுமில்லை . சங்க கால மகளிருக்கு வரையறைகள் எதுவும் விதிக்கப்படவில்லை. இல்லறத்தில் நின்று இல்வாழ்க்கையின் கடமைகளையாற்றும் உரிமை கணவனுடன் சேர்ந்து வாழும் பெண்களுக்குத்தான் உண்டு. பெண்களிடம் காணப்பட்டதாகப் புலவர்கள் குறிப்பிடும் நற்குணங்கள் அக்கால மகளிரின் சிறந்த பண்பாடுகளை எடுத்துக்காட்டுகிறது.

சங்க கால மகளிர் கடமை ஈடுபாட்டுடனும், தாராள மனப் பான்மையுடனும், கற்பில் சிறந்தவர்களாகவும் இருந்தார்கள். அதிதீவிரமான கற்பு சங்க காலப் பெண்களிடம் பழக்கப்பட்டு இருந்தது. அதுவே ஒரு சிறந்த குடும்பப் பெண்ணாக இருப்பதற்குரிய அறிகுறியாக எடுத்துக் கொள்ளப்பட்டது. முதின் மகளிர் எனக் குறிப்பிடக்கூடிய வீரப் பரம்பரையினைச் சார்ந்த மக்கள் இருந்தனர். இப்பெண்கள் போரில் நேரடியாகப் பங்கு கொள்ளவில்லை என்றாலும், போரில் கலந்து கொள்பவர்களை ஆதரிக்கும் விதம் அவர்களின் வீர நிலையை எடுத்துக் காட்டுகிறது. பெண்கள் போர்ப் பாசறையில் தம் கணவருடன் தங்கக் கூடாது என்ற மரபு இருந்து வந்தது.

சில புறநானூற்றுப் பாடல்கள் பெண்களின் வீர நிலை பற்றி தெரிவிக்கிறது. ஒக்கூர் மசாத்தியர் என்ற பெண் புலவர் ஒரு தாய் தன்னுடைய கணவனையும், தமையனையும் போரில் இழந்த பின்பு பால்மணம் மாறாத தனது சிறுவயது மகனை பகைவரின் போர் முரசு

கேட்டவுடன் கையில் வேலினைக் கொடுத்து போருக்கு அனுப்பி வைத்த மனநிலையைக் குறித்து பாடியுள்ளார்.

கல்வி கற்கவும், பொருளீட்டவும், மன்னனுக்காக தூது செல்லவும் கணவன் பிரியும் போது மனைவி அவனுடன் செல்லும் பழக்கமும் இல்லை. இப்படி ஏற்படும் பிரிவு மூன்றாண்டுக்கு மேல் நீடிக்கக் கூடாது என்பது மரபு. சங்க கால மகளிர் அரசனுக்கு காவல் பணி புரிந்தனர். இவர்களுக்கு உரிடை மகளிர் என்று பெயர். மேலும் பல பெண்கள் கல்வியறிவு பெற்று பெரும் புலமையுடன் விளங்கினர். காக்கைப் பாடினியார் என்ற பெண் புலவர் காக்கைப்பாடினியம், சிறு காக்கைப் பாடினியம் என்ற நூல்களை எழுதியுள்ளார். மேலும் முடத்தாம கண்ணியார், நன்முல்லையார், பொன்முடியார், ஔவையார் போன்ற பெண்பாற் புலவர்களும் இருந்தனர். சங்க கால மகளிர் சமயப் பற்றுள்ளவர்கள். அவர்கள் சிவன், மாயோன், முருகன் போன்ற கடவுள்களை வணங்கினர்.

கணவனை இழந்த பெண்கள் விதவைகள் என்றழைக்கப் பட்டனர். அவர்களின் வாழ்க்கை சங்க காலத்தில் மிகவும் வருந்தத்தக்க நிலையில் இருந்தது. ஆரியர்களின் உறவினால் கணவனை இழந்த பெண்கள் உடன்கட்டை ஏறும் பழக்கம் காணப்பட்டது. விதவைகள் கலிகால மகளிர் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் தலைமுடியை மழித்துக் கொண்டனர். வெறுந்தரையில் படுத்துறங்கினர். தண்ணீர் சோறே சாப்பிட்டனர். நெய் உண்பதில்லை. இதற்கு கைம்மை நோன்பு என்று பெயர்.

சங்க கால சமுதாயத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாடு இருந்தாலும் நடைமுறையில் பரத்தையருடன் உறவு கொள்ளும் பழக்கம் இருந்து வந்தது. பரத்தையர், பொருட்பெண்டிர், வரைவின் மகளிர், காமக்கிழத்தியர் என்று பலவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. கணவன் பரத்தையரை விரும்பி மனைவியை விட்டுப் பிரிவதும், கணவனின் இந்த அடங்கா ஒழுக்கத்தைக் கண்டு மனைவியானவள் மனம் புழுங்குவதும் சங்க இலக்கியங்களில் காணலாம். ஒரு ஊர் முழுவதும் குடியமர்த்தக்கூடிய எண்ணிக்கையில் மதுரையில் பரத்தையர் இருந்ததாக கலிபாட்டு தெரிவிக்கிறது.

பரத்தையரில் இரு பிரிவினர் உண்டு. அவை சேரிப் பரத்தை, கடல் பரத்தை ஆகும். சேரிப்பரத்தை என்பவள் பல ஆடவர்களுடன் உறவு கொள்ளும் தன்மை கொண்டவள். கடல் பரத்தை என்பவள் சில குறிப்பிட்ட நபர்களுடன் மட்டுமே உறவு கொள்ளும் தன்மை உடையவளாக இருந்தாள். இவர்கள் இருவரில் கடல்பரத்தை மகளிர், சேரிப்பரத்தை மகளிரைவிட சமூக அந்தஸ்து அதிகமுடையவர்களாக

இருந்தனர். பரத்தையர் பொதுவாக நடனம், இசை ஆகியவற்றில் திறமை மிக்கவர்களாக இருந்தனர்.

ஆகவே பரத்தையர் ஒழுக்கம் சங்க காலத்தில் வாழ்ந்த ஆடவரிடம் ஒரு கறையாகவே காணப்படுகிறது. பரத்தையரிடம் உறவு பூண்டு ஒழுகின தன் கணவனை பெண்கள் பொறுமையுடன் வாழ்க்கையில் ஏற்றுக் கொண்டு, கணவன் செய்த பிழையை மறந்தும் மன்னித்தும் வாழ்ந்து வந்தனர் என்று அறிகிறோம்.

## களப்பிரர்கள்

## (KALABHRAS)

தமிழக வரலாற்றில் சங்க கால சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் வாரிசுகள் இறந்த பின்பு தமிழகத்தின் அரசு முறை தமிழ் பண்புகளுக்கு ஒவ்வாத ஒரு பரம்பரையினரிடம் சுமார் மூன்று நூற்றாண்டுகள் சிக்கித் தவித்தது. கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரையிலான அந்தக் காலத்தை தமிழகத்தின் இருண்ட காலம் என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். இக்காலத்தில் தமிழகத்தை ஆட்சி செய்தவர்கள் களப்பிரர் என்று அழைக்கப்பட்டனர்.

களப்பிரர்கள் யார்? அவர்கள் எங்கிருந்து, எப்போது தமிழகத்தில் நுழைந்தார்கள் என்பதைத் தெளிவாக அறிய முடியவில்லை . அவர்கள் திருவேங்கிடம் முதல் குமரிமுனை வரையிலான நிலப்பரப்பினை ஆட்சி செய்தார்கள். கி.பி.ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டியர்களாலும், பல்லவர்களாலும் களப்பிரர் தோற்கடிக்கப்பட்டனர். இவர்களது ஆட்சிக் காலம் கி.பி.250 முதல் கி.பி.575 வரை இருந்தது. தமிழ் வேந்தர்களின் வீழ்ச்சிக்காலம் சமண சமயத்தின் உயிர்ச்சிக்காலம், வடமொழி ஆதிக்கத்தின் உச்சகாலம் ஆகும்.

### சான்றுகள் (Sources)

களப்பிரர்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கு இலக்கியங் களும், கல்வெட்டுக்களும் பெரிதும் உதவுகின்றன. அவை வருமாறு:

### 1) இலக்கிய ஆதாரங்கள்

a)தமிழ் நாவலர் சரிதையில் களப்பிரரைப் பற்றி 154-15) வரையிலான நான்கு பாடல்கள் குறிப்பிடப்படுகின்றன. யாப்பெருங் கலகம் என்ற இலக்கண நூலின் விருத்தியுரை நந்தி மலையில் ஆட்சி புரிந்து வந்த அச்சுதக் களப்பாளன் என்ற களப்பிர அரசனைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இந்த அரசன் சோழ நாட்டில் இருந்து கொண்டே தமிழகம் முழுவதும் ஆட்சி புரிந்தான் என்று அறிய முடிகிறது. மேலும் இந்த

விருத்தியுரையில் சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தரும் களப்பிரருக்கு அடிபணிந்த செய்தி உறுதிப்படுத்தப்படுகிறது.

b)பெரிய புராணத்தில் வரும் கூற்றுவநாயனார் களப்பிர மரபைச் சேர்ந்தவர் என்று சொல்லப்படுகிறது. அறுபத்தி மூன்று நாயன்மார்களில் ஒருவரான இந்த கூற்றுவநாயனாரைப் பற்றி நம்பியாண்டார் நம்பி களப்பாளன் என்று குறிப்பிடுகிறார்.

c)கி.பி.ஐந்தாம் நூற்றாண்டில் பூம்புகாரில் வாழ்ந்து வந்த புத்தகத்தர் என்ற தமிழ் பௌத்தர் பாலி மொழியில் விநயவிநிச்சயம் என்ற நூலை எழுதினார். இந்த நூலில் சோழ நாட்டை ஆட்சி புரிந்து வந்த அச்சுத விக்கிராந்தன் என்ற களப்பிர மன்னரைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அந்த நூலில் அந்த மன்னன் களபகுலநந்தன் என்று போற்றப்படுகிறார். இவை தவிர அகநானூறு, கல்லாடம் ஆகிய நூல்களிலும் களப்பிரரைப் பற்றிய குறிப்பு உள்ளது.

**2) செப்பேடு மற்றும் கல்வெட்டு ஆதாரங்கள்**

a)களப்பிரரைப் பற்றிக் குறிப்பிடும் செப்பேட்டு சாசனங்களில் முதன்மையானவை வேள்விக்குடி செப்பேடுகள் ஆகும். பாண்டியன் பராந்தக நெடுஞ்சடயனின் இந்த வேள்விக்குடி செப்பேடு கடுங்கோன் என்ற பாண்டிய நாட்டு வீரன் களப்பிரரை வென்று பாண்டியர் ஆட்சியை புத்துயிர் பெறச் செய்த செய்தியை விரித்துரைக்கின்றன. களப்பிரரை வென்றவன் மாக்கடுங்கோன் என்று குறிப்பிட்டு இச்செய்தியை உறுதி செய்கின்றன.

b)முதலாம் பரமேஸ்வர மன்னரின் கூரம் செப்பேடு களப்பிரரை பல்லவர்கள் வென்ற செய்திகளைக் கூறுகின்றன. சிம்ம விஷ்ணு களப்பிரரிடமிருந்து சோழ நாட்டை மீட்டான் என்று வேலூர்பாளையம் செப்பேடும் பள்ளங்கோவில் செப்பேடும் கூறுகின்றன. இரண்டாம் விக்கிரமாதித்தன் என்ற சாளுக்கிய வேந்தனின் நேரூர் நன்கொடைப் பட்டயம் களப்பிரரைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

c)காஞ்சி வைகுண்டப் பெருமாள் கல்வெட்டில் நந்திவர்ம பல்லவ மன்னரது முடிசூட்டு விழாவிற்கு முத்தரயன் என்பவன் வந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இந்த முத்தரையர்களே களப்பிரர்கள் என்பது அறிஞர்கள் கருத்து ஆகும்.

d)செந்தலைத்தூண் கல்வெட்டில் காணப்படும் பெரும் பிடுகு முத்தரயன் கள்வர் கள்வன் எனப்படுவதால் அவன் களப்பிரருடன் இணைத்துப் பேசப்படுகிறான். திருப்புகழூர் கல்வெட்டு நெற்குன்றம் கிளார் என்ற களப்பாள அரசனைப் பற்றித் தெரிவிக்கிறது. மேலும் கொற்ற மங்கலம் செப்பேடுகள், வினயாதித்தனது ஹரிஹரர் சாசனம் ஆகியவைகளும் களப்பிரரைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

மேற்கூறப்பட்ட செப்பேடுகளில் களப்பிரர்களைப் பற்றிய விரிவான செய்திகள் கூறப்படவில்லை. களப்பிரர்களால் வெளியிடப் பட்ட கல்வெட்டுகளோ, செப்பேடுகளோ, நாணயங்களோ இதுவரை ஒன்று கூடக் கிடைக்கவில்லையாதலால், மேற்கூறப்பட்டுள்ள ஆதாரங்களையே நாம் அடிப்படையாகக் கொள்ள வேண்டியுள்ளது.

**களப்பிரர்களின் காலம்**

களப்பிரர்கள் யார்? அவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்பதில் வரலாற்றறிஞர்களிடையே பலத்த கருத்து வேறுபாடுகள் நிலவி வருகிறது. அவர்கள் கூறும் கருத்துக்கள் பற்றி விரிவாகக் காணலாம்.

**a)டி.ஏ.கோபிநாதராவின் கருத்து**

காஞ்சி வைகுண்டப் பெருமாள் கல்வெட்டை அடிப்படையாகக் கொண்டு களப்பிரர்கள் என்பவர்கள் முத்தரையர்கள் ஆவார்கள் என்கிறார் டி.ஏ.கோபிநாதராவ். இந்தக் கல்வெட்டில் நந்திவர்ம பல்லவ மன்னனின் முடிசூட்டு விழாவில் கலந்து கொண்டசுவரன் மாறனாகிய இரண்டாம் பெரும்பிடுகு முத்தரயன் என்பவன் குறிப்பிடுகிறான். இவன் கள்வர் காவலன் என்று செந்தலைக் கல்வெட்டில் சிறப்பித்துக் கூறப்ப்ட்டுள்ளான். கள்வர் என்ற சொல்லே களப்பிரர் என்று வடமொழியில் திரிந்துள்ளது. எனவே களப்பிரர் என்பவர் முத்தரையரே என்று கருதினார் கோபிநாதராவ்.

**b)மு.இராகவ ஐயங்காரின் கருத்து**

முத்தரையரும், களப்பிரரும் ஒருவரே என்ற கோபிநாதராவின் கருத்தை மறுக்கிறார் இராகவ ஐயங்கார். இவர் களப்பிரர் என்போர் வெள்ளாள களப்பாளரே என்று வாதிடுகிறார். சிவஞானபோதத்தின் ஆசிரியரான மெய்கண்டாரின் தந்தை அச்சுதக்களப்பாளர்

ஆனால் அண்மையில் கிடைத்துள்ள தளவாய்புரச் செப்பேட்டில் கற்றறிந்தோர் திறல் பரவக் களப்பாழரைக் களைகட்ட மாற்றிரடோள் மாக்கடுங்கோன் என்று குறிக்கப்பட்டுள்ளது. இதனால் களப்பிரர் என்னும் கலியரசன் என்று சின்னமனூர் செப்பேடு குறிப்பிடுவதும், களப்பாளர் என்று தளவாய்புரச் செப்பேடு குறிப்பிடுவதும் ஒருவரையே என்பது புலனாகிறது. இதனால் களப்பாளரும், களப்பிரரும் வேறானவர்கள் என்ற சதாசிவ பண்டாரத்தாரின் கூற்று வலிமை இழக்கிறது.

**c)டி.வி.மகாலிங்கம் .**

பேராசிரியர் டி.வி.மகாலிங்கம் என்பவர் பண்டைக்கால தென்னிந்திய வரலாற்றில் காஞ்சிபுரம் என்ற தனது நூலில் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த ஒளியரே களப்பிரர் என்று கூறுகிறார். இதற்கு

ஆதாரமாக வேள்விக்குடி செப்பேட்டைச் சுட்டிக் காட்டுகிறார். ஆனால் இந்தக் கருத்தை ந.சுப்பிரமணியன் மறுக்கிறார். தமிழகத்தின் தென்கிழக்குப் பகுதியைச் சேர்ந்த ஒலிநாடு ஒளியருக்குரியது என்று தொல்காப்பியம் கூறுகிறது. எனவே வேங்கடப் பகுதியிலிருந்து வந்த களப்பிரர்களுக்கும், ஒளியர்களுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்கிறார் ந.சுப்பிரமணியன்.

**d)பிற கருத்துக்கள்**

டாக்டர் பன்னீர்செல்வம் என்பவர் களப்பிரர்கள் வேங்கடலைச் சாரல் பகுதியினை ஆண்டு வந்த ஒரு அரச குடியினராக இருந்திருக்க வேண்டும் என்று கருதுகிறார். களப்பிரரும், முத்தரையரும் ஒருவரே என்ற கருத்தையும் இவர் ஏற்றுக் கொள்கிறார். களப்பிரர் தமிழரே என்ற கருத்தை க.ப.அறவாணன் வலியுறுத்துகிறார். களப்பிர் என்பவர்கள் மைசூரின் தெற்குப் பகுதியிலும் தமிழகத்தின் வட எல்லையுமான பகுதிகளில் வாழ்ந்து வந்தவர்கள் என்றும், அவர்கள் வேளிர் மரபினைச் சேர்ந்தவர்கள் என்றும் திரு.நடனகாசிநாதன் கருதுகிறார்.

சில ஆய்வாளர்கள் களப்பிரர்கள் சாதவாகன வழியினர் என்று கருதுகிறார்கள். தக்காண நாட்டினை ஆண்டு வந்த சாதவாகன மன்னரான சதகர்னியின் வீழ்ச்சிக்குப் பின் அவனது கிளையினரே தமிழகத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்திருக்கக் கூடும் என்றும், அவர்களே களப்பிரர் என்றும் சிலர் கருதுகின்றனர். தமிழ் நாட்டிலிருந்த குறும்பர் என்ற சிற்றரசர்கள் தம்முள் ஒன்றுபட்டு முடிமன்னரை வென்று தமிழகத்தில் தமது ஆட்சியை நிறுவினரென்றும், அவர்களே களப்பிரர் என்றும் சிலர் கருதுகின்றனர்.

இப்படி பல கருத்துக்கள் கூறப்பட்டாலும், இறுதியில் களப்பிரர்கள் இன்ைைறய கோலார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கன்றும், அவர்கள் தீவிர சமணர்கள் என்றும், அவர்கள் வடவேங்கடப் பகுதியிலிருந்த தொண்டை மண்டலம், சோழ நாடு வழியாகப் பாண்டி காட்டினுள் புகுந்தனர் என்றும் தெரிகிறது. இவர்கள் அங்கு நிலவி வந்த நிலையற்ற அரசியலைப் பயன்படுத்திக் கொண்டு ஆட்சியைப் பிடித்து பின்னர் தமிழகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டனர் என்பதே வராய்ச்சியாளர்களின் இறுதியான கருத்து ஆகும்.

**களப்பிரர் என்ற சொல்**

களப்பிரரின் பூர்வீகம் கன்னட நாடு ஆகும். கன்னடக் கல்வெட்டுகளில், களவரநாடு, களவாப்பு, களபோரா போன்ற பெயர்கள் காணப்படுகின்றன. களவரநாட்டைச் சேர்ந்தவர்கள் களவர் என்று அழைக்கப்பட்டனர். காளத்தி மலைப்பகுதியில் வாழ்ந்து வந்த மக்களும்

களவர் என்றே அழைக்கப்பட்டனர். இந்தக் களவர் என்ற சொல் வடமொழியில் களப்ரா என்று மாற்றம் பெற்றது. இது தமிழில் களப்பிரர் எனப்பட்டது. களவர் என்பது தமிழ் இலக்கியங்களில் கள்வர் என்றாகி பின்பு களப்பிரர் என்று பெயர் பெற்றிருக்க வேண்டும்.

## களப்பிரர் அரச குடியினரே என்ற கருத்து

களப்பிரர் அரச குடியினரா இல்லையா என்பது பற்றி வரலாற்றாய் வாளர்களிடையே கருத்து வேறுபாடு நிலவி வருகிறது. இவர்கள் அரச குலத்தினரே என்று கிருஷ்ண சாஸ்திரியும் அரச குடியினர் அல்ல என்று டாக்டர் ராசமாணிக்கனாரும் கருதுகின்றனர். ஆனாலும் கீழ்க்கண்ட பல சான்றுகளின் அடிப்படையில் களப்பிரர் அரச குடியினரே என்பதை அறிய முடிகிறது.

a)ஹோஸ்கட்டில் காணப்படும் வீரக்கல் ஒன்றில் களவரநாடு என்ற சொல் காணப்படுகிறது. இதனால் களப்பிரர் தங்களுக்கென ஒரு நாட்டினைப் பெற்றிருந்தனர் என்பது தெரிய வருகிறது. எனவே தவாகள் அரச குலத்தினர்தான் என்பதில் ஐயமில்லை .

b)கதம்பகுல வேந்தனான காகுஸ்தன் (கி.பி.425-450) என்பவர் போரா என்ற பழங்குடியின் பகைவன் என்று கல்வெட்டில் குறிக்கப்

டுள்ளான். ஒரு வேந்தனது பகைவன் வேந்தனாகவே இருக்க முடியும். எனவே களப்பிரர் அரச குடியினரே ஆவர்.

c)களப்பு நாட்டை ஆண்டு வந்த திண்டீகன் என்பவர் மேலைக் வேந்தனான மகதிராயனுக்குப் பின் கங்க அரசினையும் தனதாக்கிக் ண்டார் என்ற செய்தி கொங்கு தேச ராஜாக்கள் என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் களவர்கள் நந்திமலைப் பகுதிக்குத் தலைவர்களாக இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

மேற்கூறியவற்றிலிருந்து களப்பிரர்கள் தென் கன்னடப் பகுதியினைத் தாயகமாகக் கொண்ட ஒரு மலை வாழ் அரச குடிமக்கள் என்பது தெரிய வருகிறது.

## தமிழகத்தில் களப்பிரர் ஆட்சி நிறுவப்படுதல்

தங்கள் பூர்வீக நாட்டிலிருந்து கடம்பர்களால் துரத்தப்பட்ட புல்லியின் வழியினரான களப்பிரர் வடவேங்கடப் பகுதியிலிருந்து புறப்பட்டனர். தமிழகத்தில் நுழைய வேண்டும் என்றால் களப்பிரர் தொண்டை மண்டலம் வழியாகவே நுழைய முடியும். அங்கு பல்லவர்கள் ஆட்சி செய்து வந்தனர். ஆரம்பத்தில் தொண்டை மண்டலத்தில் களப்பிரர் ஊடுருவல் செய்ய முயன்று தோல்வியைத்

தழுவினர். முதன் முதலாக பப்பதேவன் என்ற பல்லவ வேந்தன் இவர்களை எதிர்த்துப் போரிட்டு விரட்டியடித்தான். அடுத்து சிவஸ் கந்தவர்மன் காலத்திலும் களப்பிரர் பல்லவ நாட்டில் நுழைய முடியவில்லை .

ஆனால் ஆந்திர அரசர்களின் வீழ்ச்சியாலும், பல்லவ அரசர்களின் அதிகார உயர்வாலும், சமுத்திர குப்தனின் படை எழுச்சியாலும் தொண்டை நாட்டில் குழப்பம் நிலவியது. இந்தக் குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு கி.பி.3-ம், 4-ம் நூற்றாண்டளவில் தொண்டை மண்டலத்தைக் களப்பிரர் கைப்பற்றினர். தொண்டை நாட்டில் உள்ள களந்தை என்னுமிடத்தில் கூற்றுவன் என்ற பெயரைக் கொண்ட அரசன் ஒருவன் ஆட்சி புரிந்தான் எனவும், அவனே திருத்தொண்டத் தொகையில் குறிக்கப்பட்டுள்ள கூற்றுவ நாயனார் என்று பெரிய புராணம் கூறுகிறது.

தொண்டை மண்டலத்தில் ஊடுருவல் செய்த களப்பிரர்கள் பின்னர் அங்கிருந்து தெற்கு நோக்கி வந்து சோழ நாட்டிற்குள் புகுந்தனர். அப்போது சோழ நாட்டில் நிலையான ஆட்சி இல்லை. உள்நாட்டுக் குழப்பமும், வாரிசுத் தகராறும் நிலவியது. வலிமைமிக்க மன்னர் யாரும் இல்லை. இப்படிப்பட்ட சோகமான சூழ்நிலையில்தான் களப்பிரர் புகுந்து ஆட்சியைக் கைப்பற்றினர். நிலையான ஆட்சியை அமைத்தனர். மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்தனர்.

**அச்சுதக் களப்பாளன்**

சோழ நாட்டில் ஆட்சி புரிந்த களப்பிர மன்னர்களுள் அச்சு விக்ராந்தன் என்ற களப்பிர மன்னன் மிகவும் புகழ் பெற்றவனாக விளங்கினான். இவனது ஆட்சிக் காலம் கி.பி.நான்காம் நூற்றாண்டு ஆகும். இவனது அவைக்களத்தில் புத்ததத்தர் என்ற புத்த மதத் துறவி நான் எழுதிய அபிதம்மாவதாரம் என்ற நூலை அரங்கேற்றினார்.

தமிழகத்தில் ஆட்சி புரிந்த களப்பிர மன்னர்களுள் சோழ நாட்டில் ஆட்சி புரிந்த அச்சுதனின் பெயரே நமக்குத் தெரிகிறது. மற்ற பகுதிகளில் ஆட்சி புரிந்த களப்பிர மன்னர்களின் பெயர்களோ, அவர்களின் ஆட்சிச் சிறப்போ நமக்குக் கிடைக்கவில்லை. இந்த அச்சுதக் களப்பாளனின் தலைநகர் புகார் ஆகும். இங்கிருந்து கொண்டு கான் தமிழக மூவேந்தரையும் வெற்றி கொண்டு தனது மேலாண்மையை நிலவச் செய்தான். தமிழகம் முழுவதும் அவன் காலடியில் கிடந்தது. அவன் ஏகபோக சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தான். தமிழக மூவேந்தர்களின் சின்னங்களாகிய புலி, வில், கயல் ஆகிய

மூன்றையுமே தனது அரச சின்னங்களாக வைத்துக் கொண்டான். அவைகளை தனது கொடியிலும் பொறித்துக் கொண்டான்.

இந்தச் செய்திகளை யாப்பெருங்கல விருத்தியுரையில் விளக்கத்தனார் இயற்றிய விளக்கத்தார் கூத்து என்ற நூலிலிருந்து மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்ட பாடல் ஒன்றிலிருந்து அறிந்து கொள்ளலாம். மேலும் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டில் பூம்புகாரில் வாழ்ந்து வந்த புத்த தத்ததேரர் என்ற தமிழ் பௌத்தர் தாம் எழுதிய விநய விநிச்சயம் என்ற பாலி மொழியில் எழுதிய நூலில் இந்த அச்சுத விக்கிராந்தனைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

சேர, சோழ, பாண்டியரை வென்ற அச்சுதக் களப்பாளன் சிதம்பரத்தில் அவர்களைச் சிறையிலிட்டு அவர்களது காலில் விலங்கு பூட்டினான் என்றும், அப்போது அந்த மூவேந்தர்களும் களப்பாளனைப் புகழ்ந்து பாடினார் என்றும் கூறப்படுகிறது. அப்படி அவர்கள் பாடிய பாடல்கள் யாப்பெருங்கலம் விருத்தியுரையில் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இந்தப் பாடல்கள் மூலம் அச்சுதனின் ஆட்சி சிறப்பாக அமைந்திருந்தது என்று நாம் அறிந்து கொள்ளலாம்.

அச்சுதனின் ஆட்சி புலவர் பலரால் பாராட்டப்பட்டது. இவன் ஒரு வேற்றரசன் என்பதால் மக்களுக்கும், தமிழ் மொழிக்கும் கேடு விளைவித்தான் என்று கூறுவது முறையாகாது. இந்த அச்சுதக் களப்பாளன் காலத்தில் புத்த மதமே உயர் நிலையில் இருந்தது. இதனால் ஆரம்பத்தில் களப்பிரர் பௌத்த மதத்தினையும், பிற்பகுதியில் சமயத்தையும் ஆதரித்தனர் என்று கூறலாம்.

**களப்பிரரின் வீழ்ச்சி**

எண்ணற்ற அரச பெருங்குடியினரை வென்று தமிழகத்தின் பெரும் பகுதியினை ஏறத்தாழ இரண்டரை நூற்றாண்டுகள் ஆட்சி செய்தார்கள் களப்பிரர்கள். இவ்வளவு நீண்ட கால ஆட்சிக் காலத்தில் வைதீக சமயத்தையும், பிரமணீயத்தையும் எதிர்த்தார்கள். இந்த அந்நிய ஆட்சிக்கு எதிராகப் பல புரட்சிகள் ஏற்பட்டாலும் அவை அனைத்தையும் களப்பிரர் தங்கள் படை வலிமையால் ஒடுக்கினர்.

ஆண்டாண்டு காலமாக பாண்டிய நாட்டை ஆண்டு வந்த பாண்டிய மரபின் வழியினராக விளங்கியவர் கடுங்கோன் ஆவார். இவர் அந்நிய ஆட்சியில் பாண்டிய மரபினர் அடங்கி ஒடுங்கிக் கிடப்பதைக் கண்டு வீறுகொண்டு எழுந்தார். களப்பிரர் ஆட்சிக்கெதிராக மறவர்களை ஒன்று திரட்டினார். அனைவருக்கும் படைப்பயிற்சி அளித்தார். அந்தப் படைக்குத் தலைமை தாங்கி தானே புரட்சிக் கொடியை உயர்த்தினார். கடுமையான போருக்குப் பிறகு கடுங்கோனின் படை பல வெற்றிகளைப் பெற்றது. களப்பிரர்கள் பாண்டி நாட்டை

விட்டு விரட்டப்பட்டனர். அடிமையிருள் அகன்றது. பாண்டியர் ஆட்சி பிறந்தது. இதனை வேள்விக் குடி செப்பேடுகள் களப்ரன் என்னும் கலியரசனை வென்றடக்கிய வேந்தன் என்று குறிப்பிடுகின்றன. இந்தச் செய்தியை தளவாய்புரச் செப்பேடுகளும் உறுதி செய்கின்றன.

பாண்டிய நாட்டை களப்பிரரிடமிருந்து கடுங்கோன் மீட்டுக் கொண்ட அதே காலத்தில் தொண்டை மண்டலத்தைக் காஞ்சிமா நகரிலிருந்து ஆட்சி செய்து வந்த பல்லவ மன்னன் சோழ நாட்டைக் களப்பிரரிடமிருந்து மீட்டுக் கொண்டான் என்று பல்லவர் செப்பேடுகள் தெரிவிக்கின்றன. வேலூர்ப்பாளையம் செப்பேடுகள் சிம்ம விஷ்ணுவை (கி.பி.575-615) களப்பிரரை முறியடித்த பெருவீரன் என்று குறிப்பிடுகிறது. இதே செய்தியை பள்ளன்கோவில் செப்பேடுகளும் தெரிவிக்கின்றன.

**மதிப்பீடு**

படையெடுப்பாளர்களாகத் தமிழகத்தில் நுழைந்து கி.பி.300 முதல் கி.பி.575 வரை தங்கள் மேலாண்மையை ஏற்படுத்தியிருந்தனர் களப்பிரர். பேரரசர்களாகத் திகழ்ந்த களப்பிரர் தங்கள் மேலாண்மையை இழந்த பின்பு முத்தரையர்கள் என்ற பெயரில் குறுநில மன்னர்களாக சில காலம் தமிழகத்தின் சில பகுதிகளில் ஆட்சி செய்து வந்தனர். பின்னர் சேர, சோழ, பாண்டிய மன்னர்களிடம் படைத் தலைவர்களாகவும், செல்வாக்கு பெற்ற அரசியல் தலைவர்களாகவும் படை வீரர்களாகவும் பணிபுரிந்தனர். இவர்களுள் சிலர் முத்தமிழ் வித்தகர்களாகவும், தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கும் புரவலர்களாகவும் விளங்கினர். முத்துராஜழுகுகள், அம்பலக் காரர்கள் போன்ற பல்வேறு * பெயர்களைக் கொண்டு நம்மிடையே வாழ்ந்து வரும் இவர்கள் களப்பிரரின் வழிவந்தவர்களே ஆவர். இவர்கள் தமிழ்ச் சமுதாயத்துடனும், பண்பாட்டுடனும் இணைந்து விட்டனர்.

இவ்வாறு களப்பிரர் தமிழர் வாழ்வுடன் இணைந்து தமிழகப் பகுதிகளிலேயே நிலைத்து வாழ்ந்து வருவது தமிழகத்தின் தனித்த உயர்ந்த பண்பாட்டுச் சிறப்பினை வெளிப்படுத்துவதாக உள்ளது. தமிழக அரசியல் சமுதாய வரலாற்றில் களப்பிரர்களின் படையெழுச்சி ஒரு திருப்பு முனையாகவே அமைந்துள்ளது.

# UNIT-II

## பல்லவர்கள் - தோற்றம்

**(PALLAVAS - ORIGIN)**

கி.பி.மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரை தமிழ்நாடு களப்பிரர்கள் ஆட்சிக்கு உட்பட்டு அழகு இழந்து இருளில்

மூழ்கிக் கிடந்தது. கி.பி.ஆறாம் நூற்றாண்டில் வடக்கே காஞ்சிப் பல்லவர் களும், தெற்கே மதுரைப் பாண்டியர்களும் மீண்டும் உண்மையான தமிழ் ஆட்சியை ஏற்படுத்தினர். காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு கி.பி.900 வரை வலிமையான அரசாட்சியைத் தந்த பல்லவ வம்சம், எங்கு எவ்வாறு தோன்றியது என்பதில் வரலாற்று அறிஞர்களிடையே முரண்பட்ட கருத்துக்கள் நிலவி வருகின்றன.

**சான்றுகள்**

பல்லவர்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கு இலக்கியங்களும், கல்வெட்டுகளும் உதவி செய்கின்றன.

**1) இலக்கியச் சான்றுகள்**

பல்லவர்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கு தமிழ் இலக்கியங் களும், சமஸ்கிருத மொழி நூல்களும், வெளிநாட்டுக் குறிப்புகளும் பெரிதும் உதவுகின்றன.

**a)தேவாரம்**

இது ஒரு சமய நூலாகும். அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய வரும் சேர்ந்து பாடிய பக்திப் பாடல்களின் தொகுப்பாகும். இந்த வாரப் பாடல்களிலிருந்து பல்லவர் நாட்டில் சமண சமயம் இருந்தது தெரிய வருகிறது. பல்லவ மன்னர் முதலாம் மகேந்திரவர்மன் முதலில் சமணராக இருந்தார். அப்பர் அடிகளின் தொடர்பின் காரணமாகவே சைவராக மாறினார். ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்த சுந்தரர் திருத்தொண்ட தொகையில் மூன்றாம் நந்திவர்மனைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்

**b)பெரிய புராணம்**

இதுவும் சைவசமய இலக்கியமாகவே கருதப்படுகிறது. இந்த நூலில் பல்லவர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகிறது. இந்த நூலை எழுதியவர் சேக்கிழார் ஆவார். இந்த நூலில் சேக்கிழார் குறிப்பிடும் சில நாயன்மார்கள் பல்லவ அரசர்கள் ஆவர். உதாரணமாக மூன்றாம் சிம்மவர்மன் என்ற ஐயடிகள் காடவர் கோனும், மூன்றாம் நந்திவர்மன் என்ற கழற்சிங்கனும் பல்லவ அரச நாயன்மார்கள் ஆவர். சிறுத்தொண்டர் என்று போற்றப்பட்ட பரஞ்சோதியார் பல்லவ படைத்தலைவராக பணி புரிந்தவர் ஆவார். மேலும் பெரிய புராணத்தில் பல்லவர் காலத்தில் ஆட்சி செய்த பல சிற்றரசர்கள் பற்றிய குறிப்புகளும் உள்ளன.

**c)நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம்**

இது ஒரு வைணவ நூலாகும். இதை எழுதியவர் ஆழ்வார்களில் ஒருவரான திருமங்கை ஆழ்வார், இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் வாழ்ந்தவர் ஆவார். இந்த நூலில் பல்லவ மன்னர் நந்திவர்மன் நேரடியாகப் பங்கு கொண்ட நென்மேனிப் போரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மேலும் பல்லவர் படை, பல்லவர் பயன்படுத்திய போர்க் கருவிகள், இசைக் கருவிகள் பற்றிய குறிப்புகளும் நாலாயிரத் திவ்வியபிரபந்தத்தில் காணப்படுகின்றன.

**d)லோகவிபாகா**

இது ஒரு சமண நூலாகும். இதனை எழுதியவர் சர்வந்தி என்பவர் ஆவார். இந்த நூல் பல்லவ அரசர் சிம்மவர்மனின் ஆட்சித் தொடக்கத்தின் காலக் கணிப்பை வரைவதற்குப் பயன்படுகிறது.

**e)நந்திக் கலம்பகம்**

இந்த நூலை எழுதியவர் பெயர் கிடைக்கவில்லை. இந்த நூல் மூன்றாம் நந்திவர்மனின் வீரச் செயல்கள் பற்றிக் குறிப்பிடுகிறது. இவனே தொள்ளாறு எறிந்த நந்தி போத்தரையன் என்று புகழப்படுகிறான். இந்த மன்னரின் ஆட்சிப் பரப்பு தலைநகர் மற்றும் அவரால் ஆதரிக்கப்பட்ட புலவர்கள் ஆகியவை பற்றிய செய்திகளை இந்த நூல் தருகிறது.

பாரத வெண்பா என்ற மற்றொரு தமிழ் நூலும் மூன்றாம் ந்திவர்மன் பங்கு கொண்ட தொள்ளாற்றுப் போரைப் பற்றிய செய்திகளைத் தருகிறது.

**f)சமஸ்கிருத நூல்கள்**

அவந்தி சுந்தர கதாசாரா என்ற நூலில் காஞ்சி மன்னர்' சிம்ம விஷ்ணு புலவர் பாரவி என்பவருக்கு நன்கொடை அளித்த செய்தியைத் தெரிவிக்கிறது. மேலும் இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ள சாளுக்கிய, கங்கை மன்னர்களைப் பயன்படுத்தி பல்லவ மன்னர் சிம்ம விஷ்ணுவின் காலத்தைக் கணிக்கலாம். அப்பர் காலத்தில் ஆட்சி புரிந்தவர் முதலாம் மகேந்திரவர்மன் ஆவார். இவர் மத்தவிலாச பிரஹசனா என்ற சமஸ்கிருத நாடக நூலை எழுதினார். இந்த நூலில் காஞ்சியில் வாழ்ந்து வந்த சமணர்கள், கபாலிகர்கள், பௌத்தர்கள், பாசுபதர் ஆகியோர் பற்றிய குறிப்புகளை நாம் அறிய முடிகிறது. பகவத் அஜிகியாம் என்ற நூலையும் முதலாம் மகேந்திரவர்மன் எழுதியுள்ளார்.

இவ்வாறு மேற்கண்ட இலக்கிய சான்றுகள் மூலம் பல்லவ அரசர்களைப் பற்றியும் அவர்கள் காலத்திய நிகழ்ச்சிகளைப் பற்றியும் நாம் அறிய முடிகிறது.

**II)கல்வெட்டுகள்**

கல்வெட்டுகளும், பட்டயங்களும் பல்லவர்களைப் பற்றி அறிய உதவுகின்றன. ஆர்.கோபாலன் என்பவர் பல்லவர் காலக் கல்வெட்டுகளை பிராகிருத கல்வெட்டுகள், சமஸ்கிருத கல்வெட்டுகள், சமஸ்கிருதமும், தமிழும் கலந்த கல்வெட்டுகள் என்று மூன்று பிரிவாகப் பிரிக்கிறார். பெரும்பான்மையான கல்வெட்டுகள் பல்லவ மன்னர்கள் அளித்த அன்பளிப்பு, பரிசுக்கொடை, சமய அறத்துறை மானியம் ஆகியவற்றைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. கோவில்களுக்கு மன்னர் அளித்த நன்கொடைகள் பற்றியும் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளன.

சிம்மவர்மனின் மஞ்சிகல்லு கல்வெட்டுகள் கி.பி.நான்காம் அற்றாண்டைச் சேர்ந்தவையாகும். அடுத்து இளவசரன் சிவஸ்கந்தவர் மனால் அவரது தந்தையின் பத்தாவது ஆண்டில் அளிக்கப்பட்ட பயத வோலு நன்கொடைப் பட்டயங்கள் பல்லவர் காலத்திய பல பதிகளைத் தெரிவிக்கின்றன. சிவஸ்கந்தவர்மன் அரசனாகப் யேற்ற பிறகு அவரது எட்டாம் ஆட்சியாண்டில் கிராகத கல்லி ப்புத் தகடுகள் வெளியிடப்பட்டது. இவை தவிர பிரிட்டிஷ் பாருட்காட்சியில் உள்ள ராணி சாருதேவியின் செப்புத் தகடுகள் தகருத மொழியில் உள்ளன. இந்தத் தகடுகளில் விஜயஸ்கந்தவர்மன், விஜயபுத்தவர்மன், புத்தான்குரன் ஆகிய பெயர்கள் காணப்படுகின்றன.

பிராக்கிருத மொழிப் பட்டயங்களைத் தவிர சமுத்திரகுப்தர் வெளியிட்ட அலகாபாத் கல்வெட்டும் பல்லவர்களைப் பற்றி அறியப் பயன்படுகிறது. இக்கல்வெட்டில் விஷ்ணுகோபரின் பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டுகள் மூலம் பல்லவ மன்னர்களின் பெயர் களையும் அவர்கள் புரிந்த வீரச் செயல்களையும் அறிய முடிகிறது.

## பல்லவரின் தோற்றம்

பல்லவர்களின் தோற்றம் பற்றிய பல கருத்துக்கள் ஆராய்ச்சியாளர் களால் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அவர்களுக்குள் உடன்பாடான கருத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை. பல்லவர்களின் தோற்றம் பற்றிய வெவ்வேறான கருத்துக்களை இனி காணலாம்.

## பல்லவர்கள் மத்திய ஆசியாவிலிருந்து வந்தவர்கள்

பல்லவர்கள் வம்சம் மத்திய ஆசியாவிலிருந்து தோன்றி இருக்கலாம் என்ற கருத்தை வரலாற்றறிஞரான லெவிஸ்ரைஸ், லூவேதுப்ராய், வெங்கையா மற்றும் வெங்கிட சுப்பையா போன்றோர் வலியுறுத்துகின்றனர். லெவிஸ்ரைஸ் என்பவர் பல்லவர்களும் யவனர்களும் மத்திய ஆசியாவைச் சார்ந்தவர்கள் என்பதற்குத் தெளிவான புராணச் சான்றுகளைத் தருகிறார். பாரசீக வேதத்திற்கும்

பிராக்கிருத மொழிக்கும் ஒற்றுமை இருப்பதாக அவர் கருதுகிறார். பாரசீகப் பார்த்தியாரின் பஹ்லவர் என்ற சொல்லே மருவி பல்லவர் என வந்துள்ளது என்று துப்ராய் கூறுகிறார். பேராசிரியர் வெங்கையா அவர்கள் பல்லவர்களின் செப்புப் பட்டயங்களும், பாரசீக மொழியின் தன்மையும் இறுக்கமாக ஈர்ப்பதாகக் கருதுகிறார்.

**பல்லவர்களின் தாயகம் வட இந்தியா**

முற்காலப் பல்லவர்கள் தமிழகத்திற்கு வெளியே சில நூற்றாண்டுகள் வாழ்ந்திருப்பதால் அவர்கள் வட இந்தியாவில் அல்லது மத்திய இந்தியாவில் வாழ்ந்த வாக்காடக மரபினர்களாக இருக்கலாம் என்று டாக்டர் ஜெயசுவால் கருதுகிறார். ஏனெனில் பல்லவர்களும் வாக்காடர்களும் பாரத் வாஜகோத்திரப் பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இருபிரிவினருமே பிராமண குலத்தவர்கள். இந்த இரண்டு பிரிவினரும் சாதவாகனப் பேரரசு அழிந்தவுடன் அப்பேரரசின் வெவ்வேறு பகுதிகளில் தொடர்ந்து இருந்து வந்தார்கள். இதன் அடிப்படையிலேயே ஜெயசுவால் தனது கருத்தைக் கூறுகிறார்.

**பல்லவர்கள் ஆந்திராவைச் சேர்ந்தவர்கள்**

பல்லவர்கள் ஆந்திராவைச் சார்ந்தவர்கள் என்று K.A.நீலகண்ட சாஸ்திரி, R.கோபாலன், C.மீனாட்சி, மகாலிங்கம் ஆகியோர் கருதுகின்றனர். கிழங்கு ஆந்திராவில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி காரணமாக பல்லவர்கள் தங்கள் தாயகத்தை விட்டு நீங்கி தொண்டை மண்டலத்தை அடைந்தார்கள். அங்கு அவர்கள் புதிதாக அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினார்கள் என்று கருதுகிறார்கள்.

**பல்லவர்கள் நாக வம்சத்தினரே!**

பேராசிரியர் M.சீனிவாச அய்யங்கார், பல்லவர்கள் பண்டைய நாகர் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதுகிறார். நாக நாட்டைச் சேர்ந்த மணிபல்லவத் தீவை தாயகமாகக் கொண்டவர்கள் பல்லவர்கள். இதனை இலங்கை பேராசிரியர் ராஜநாயகமும் ஆதரித்துப் பேசுகிறார்.

**பல்லவர்கள் புலிந்தர் அல்லது குறும்பர்கள்**

பேராசிரியர் R.சத்திய நாதய்யர், பல்லவர்கள் புலிந்தர்களே என்கிறார். மாமன்னர் அசோகரது கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படும் புலிந்தர்கள் பல்லவர்களே ஆவர். புலிந்தர் என்ற சொல்லிலிருந்தே பல்லவர் என்ற சொல் மருவி வந்தது. பல்லவ நாட்டில் புலியூர், புலியூர்க் கோட்டம் போன்ற பிரிவுகள் இருந்ததால் அவை புலிந்தர்களுடன் தொடர்பு உள்ளவைகளாகத் தெரிகின்றன. பல்லவர்

என்ற அடைமொழிச் சொல்லின் திரிபே குறும்பர் என்றும் கூறப்படுகிறது.

**பல்லவர்களின் தாயகம் தமிழகமே!**

பல்லவர்கள் தமிழர்கள் தான் என்று பேராசிரியர்கள் K.ராஜய்யன், N.சுப்பிரமணியன் ஆகியோர் தெளிவாகக் குறிப்பிடுகின்றனர். இதற்கு இவர்கள் தரும் விளக்கம் வருமாறு:

பல்லவர்கள் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த தமிழர்களே ஆவர். பெரும்பாணாற்றுப்படை என்ற சங்க இலக்கியத்தின் பாட்டுடைத் தலைவனான, தொண்டைமான் இளந்திரையன் காலனுடைய மகன் வழிப் பேரனான கிள்ளிவளவனுக்கும் நாகநாட்டு இளவரசியான பீலிவளைக்கும் பிறந்தவன். அவனே சிப் பல்லவர்களின் முதல் மன்னன் என்ற கருத்து தெளிவாக துவப்பட்டு விட்டது. மேலும் கி.பி.மூன்றாம் நூற்றாண்டின் கத்தில் புகாரிலிருந்த உறையூரை சோழர்கள் தமதாக்கிக் ணடனர் என்று பேராசிரியர் N.சுப்பிரமணியன் தெளிவாகக்கூறுகிறார்.

மேற்கண்ட பல்வேறு பேராசிரியர்களின் கருத்துக்களைப் பார்க்கும் போது, பல்லவர்கள் சங்க கால மூவேந்தர்களின் வழித் தோன்றல்களே என்பது புலப்படும். ஆனால் பல்லவ வம்சம் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவாகப் பிரிந்து ஆந்திரப் பகுதிகளிலும், நாக நாட்டிலும், இந்தோனேஷியா போன்ற கிழக்காசிய நாடுகளிலும் வாழ்ந்து வந்தார்கள் என்பது மறுக்க முடியாத வரலாறு உண்மை . இறுதியாக பல்லவ அரச குலம் தமிழக குலமே என்ற கருத்து நிலை பெறுகிறது

## முதலாம் மகேந்திரவர்மன்
**(கி.பி.600-630)**
**(MAHENDRA VARMAN I)**

பிற்காலப் பல்லவர்களின் ஆட்சி சிம்ம விஷ்ணுவின் காலத்திலிருந்து தொடங்குகிறது. இவருடைய காலத்திலிருந்து பல்லவ அரசர்களின் பெயர்கள் தெளிவாகக் கிடைக்கிறது. இவரைப் பற்றி அவந்தி சுந்தர கதை, மத்தவிலாசப் பிரகசனம் ஆகிய நூல்களிலிருந்தும், வேலூர்ப் பாளையம் செப்பேடு மற்றும் கஞ்சனூர் பட்டயத்திலிருந்தும் அறிய முடிகிறது. இவர் பல்லவ மரபின் தூண் போல விளங்கினார். சேர, சோழ, பாண்டியரை வென்று தமிழகத்தில் பல்லவ ஆட்சியை நிலை நாட்டினார். சிம்ம விஷ்ணு களப்பிரர்களிடமிருந்து காஞ்சியைக் கைப்பற்றினார். இவருடைய

ஆட்சியின் எல்லை காஞ்சியிலிருந்து கும்பகோணம் வரைப் பரவியிருந்தது. இவர் தீவிர வைணவனாக விளங்கினார்.

சிம்மவிஷ்ணுவுக்குப் பின் அவர் மகனான முதலாம் மகேந்திர வர்மன் அரியணையேறினார். இவர் மிகவும் திறமைவாய்ந்த அரசர். சத்துரு மல்லன், மத்தவிலாசன், குணபரன், விசித்திரசித்தன், கலகப்பிரியா போன்ற பல்வேறு விருதுகளைத் தனக்குச் சூட்டிக் கொண்டார். சிறந்த கட்டிடக்கலை வல்லுநராகவும், கவிஞராகவும் விளங்கினார். இவருடைய காலம் பல துறைகளிலும் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது. சமயம், கலை, இலக்கியம், போர், நிர்வாகம் ஆகிய துறைகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது.

**சாளுக்கியருடன் போர்**

இவருடைய காலத்தில் பல்லவ சாளுக்கியப் போர்கள் நடைபெற்றன. அப்போது வாதாபியைத் தலைநகராகக் கொண்டு விளங்கிய மேலைச் சாளுக்கியப் பேரரசை ஆண்டு வந்தவன் இரண்டாம் புலிகேசி. இரண்டாம் புலிகேசி மகேந்திரவர்மனைத் தோற்கடித்தான் என்றும், மகேந்திரவர்மன் ஓர் கோட்டைக்குள் போய் ஒளிந்து கொண்டார் என்றும் புலிகேசியின் அய்கோல் கல்வெட்டு கூறுகிறது. வெற்றி பெற்ற புலிகேசி காவிரி வரை சென்று திரும்பி வரும் போது மகேந்திரனின் படைகள் சாளுக்கியரை காஞ்சிக்கு அருகிலுள்ள புள்ளலூர் என்னுமிடத்தில் அழித்தது என்று கசக்குடி செப்பேடுகள் கூறுகின்றன. இவ்வாறு பல்லவ-சாளுக்கியப் போர் நடைபெற்றது.

**சமயம்**

மகேந்திரவர்மன் முதலில் சமண சமயத்தைப் பின்பற்றினார். பின்னர் சைவத்திற்கு மாற்றப்பட்டார். தீவிர சைவனாக மாறிய மகேந்திரவர்மன் சமண சமயத்தை வெறுத்தார். சமணப் புள்ளிகளை அழித்து அங்கே சைவக் கோவில்களைக் கட்டினார். சிவலிங்கத்தை வழிபட்டார். சிவனுக்குப் பல கோயில்களைக் கட்டினார். மகேந்திர வாடியில் மகேந்திர விஷ்ணுகிரகம் என்ற விஷ்ணு கோவிலை அமைத்தார்.

**கட்டிடக் கலை**

தமிழகக் கட்டிடக்கலை வரலாற்றில் முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் ஒரு புது திருப்பம் ஏற்பட்டது. மகேந்திரவர்மனுக்கு முன்பு இருந்த மன்னர்கள் காலத்தில் கற்கோவில்கள் இல்லை. இருந்த கோவில்களும் அழியும் பொருட்களான செங்கல், சுண்ணாம்பு, மரம், உலோகம் முதலியவைகளால் கட்டப்பட்டன. ஆனால் மகேந்திரவர்மன்

காலத்தால் அழிக்கமுடியாத கற்கள் மூலம் கோயில்கட்டும் புதிய பாணியினை ஆரம்பித்து வைத்தார்.

மகேந்திரவர்மனின் கோவில்களைக் கண்டவுடன் எளிதில் இவை மகேந்திரன் கட்டியவை என்று கூறிவிடலாம். இக்கோவில்கள் அனைத்தும் மலைச் சரிவுகளில் குடைந்து அமைக்கப்பட்டவை. இவை மலை உச்சியிலும் இருக்காது. அடிவாரத்திலும் இருக்காது. மலையின் நடுப்பகுதியிலே இருக்கும். இப்படிக் குடைந்து அமைக்கப்பட்ட கோவில்கள் குகைக் கோவில்கள் என்று அழைக்கப்பட்டன. மகேந்திர வர்மனின் குகைக் கோவில்களில் தூண்கள் மேல் பக்கமும், கீழ் பக்கமும், சதுரமாக இருக்கும். அந்த சதுரத்தில் தாமரை மலர்கள் வரையப் பட்டிருக்கும். தூணின் பக்கங்களில் மகேந்திரவர்மனின் பட்டப் பெயர்கள் செதுக்கப்பட்டிருக்கும். கோவில் சுவர்களில் சித்திர வேலை காணப்படும். அத்துடன் புராணக் கதைகளைக் குறிக்கும் அழகிய சிலைகள் செதுக்கப்பட்டிருக்கும். இவரது கோவில்கள் பலவற்றில் மகேந்திரன் காலத்துக் கல்வெட்டுகள் இருக்கும்.

மாமண்டூர், மகேந்திரவாடி, சிங்கவரம், நாமக்கல் ஆகிய இடங்களில் குடையப்பட்டவை பெருமாள் கோவில்கள் ஆகும் சீயமங்கலம், பல்லாவரம், வல்லம், தளவானூர், திருக்கழுக்குன்றம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் குடையப்பட்டவை சிவன் கோயில்கள் ஆகும். மண்டப்பட்டில் மும்மூர்த்தி கோயிலும், சித்தன்ன வாசலில் சமணர் கோவிலும் குடையப்பட்டன. இவைகளில் சில முக்கிய கோவில்களைக் கீழே காணலாம்.

### a)பல்லாவரம் குகைக்கோவில்

சென்னைக்கு அருகே உள்ள பல்லாவரம் என்ற ஊரில் ஜமீன் பல்லாவரம் என்ற பகுதியில் உள்ள குன்றில் மகேந்திரவர்மனின் குகைக் கோயில் உள்ளது. இது 24 அடி நீளம், 12 அடி அகலம் உள்ளது. ஐந்து கற்றூண்களை உடையது. ஐந்து உள் அறைகள் உள்ளன. குகைக்கோவில் முழுவதும் சுண்ணாம்பு அடிக்கப்பட்டுள்ளது. மேல் விட்டத்தில் கல்வெட்டுகள் உள்ளன. அக்கல்வெட்டுகளில் மகேந்திரனின் விருதுப் பெயர்கள் வடமொழியிலும், தெலுங்கிலும் உள்ள ன.

### b)வல்லம் குகைக் கோவில்கள்

செங்கல்பட்டுக்குக் கிழக்கே இரண்டு மைல் தூரத்திலுள்ள வல்லத்தில் சிறிய குன்று உள்ளது. அதில் மூன்று குகைக் கோவில்கள் உள்ளன. இதிலுள்ள ஒரு பெரிய குகைக் கோவிலில் உள்ள தூண்களில் தமிழ் கல்வெட்டு காணப்படுகிறது. அக்கோவிலின் உள் அறையில் வட்ட வடிவிலான லிங்கம் ஒன்று உள்ளது. உள்ளறையின் இரு

பக்கங்களிலும் நேரே பார்த்தபடி வாயிற் காவலர்கள் நிற்கின்றனர். இக்கோவில் வசந்தேசுவரம் என்ற பெயர் பெற்றுள்ளது.

**c)தளவானூர் குகைக்கோவில்**

இங்கே மகேந்திரவர்மன் குடைவித்த சத்துரு மல்லேஸ்வராலயம் என்ற பெயர் கொண்ட கோவில் உள்ளது. கோவிலின் உள்ளறையில் லிங்கம் உள்ளது. தூண்கள் மீது ஒருவகைத் தோரணம் செதுக்கப் பட்டுள்ளது. அது திருவாசி எனப்படும். அது இருபக்கங்களிலுமுள்ள மகர மீன்களின் வாய்களிலிருந்து கிளம்பி நடுவில் உள்ள ஒரு சிறிய மேடையில் கலக்கிறது. அந்த மேடையில் இசைவாணர்கள் அமைந்துள்ளனர். திருவாசியில் இரண்டு வளைவுகள் உள்ளன. எனவே அது இரட்டைத் திருவாசி எனப்படும்.

**d)மண்டகப்பட்டு குகைக் கோவில்**

இந்தக் குகைக் கோவிலிலுள்ள கல்வெட்டில்தான் கல், மரம், உலோகம், சுண்ணாம்பு இல்லாமல் பல்லவன் கோவில் அமைத்தான் என்ற குறிப்பு உள்ளது. இக்குகைக் கோவிலில் மூன்று அறைகள் உள்ளன. அவை பிரமன், திருமால், சிவன் என்ற மூவருக்கும் உரியன. காவலர் தடிகளில் பாம்புகள் சுற்றி வளைத்து கொண்டிருப்பதாகச் செய்துள்ளவை கவனிக்கத்தக்கவை ஆகும்.

**e)திருச்சி மலைக்கோவில்**

திருச்சிராப்பள்ளிக் குன்றின் நடுவே குடைந்து அமைக்கப்பட்ட சிவன் கோவில் சிறந்த வேலைப்பாடு கொண்டதாகும். இதன் மேற்புறச் சுவரில் கண்ணையும் கருத்தையும் கவரும் பல சிற்பங்கள் செதுக்கப் பட்டுள்ளன. அவைகளில் நடுநயமாக விளங்கும் கங்காதரன் மிகச் சிறப்பு அம்சங்களைக் கொண்டது. கங்கை அணிந்த சிவருெமானே நேரில் நிற்பது போன்று தோற்றம் அளிக்கிறது. இச்சிலை சிவபிரானின் சடையிலிருந்து விழும் கங்கையை வலக்கையில் தாங்கியும், பூணுலாகப் போட்டுள்ள பாம்பின் தலையை மற்றொரு கையாலும் பிடித்தும், கண்மணி மலையை இடக்கை ஒன்றில் பிடித்தும், மற்றொரு இடக்கையை இடுப்பில் வைத்தும் நிற்கின்ற காட்சி காண்பவரைப் பரவசப்படுத்துவதாகும். இதுபோன்ற பல சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த இக்கோவிலைக் கண்டு வியப்படையாதவர் யாரும் இல்லை.

இப்படிப் பல குகைக் கோவில்களை எழுப்பியதுடன் நிற்காமல் பல நகரங்களையும் உருவாக்கினார் மகேந்திரவர்மன். மகேந்திரவாடி என்ற நகரம் மிகச் சிறப்பானது. இங்குள்ள ஏரி மகேந்திரன் அமைத்ததாகும்.

## ஓவியக்கலை

மகேந்திரவர்மனின் ஆட்சிக் காலம் இசை, நடனம், சிற்பம், ஓவியம், நாடகம் ஆகியவற்றில் சிறப்புற்று விளங்கியது. புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள சித்தன்னவாசல் குகைக்கோயில் இவர் காலத்தைச் சேர்ந்தது. அதில் உள்ள காரைச் சுவர்க்கோலங்கள் (Farcoes) கி.பி.7-ம் நூற்றாண்டின் தமிழ்நாட்டின் ஓவியக் கலையை உலகிற்கு உணர்த்துவதாக அமைந்துள்ளன. இங்குள்ள ஓவியங்களைக் கண்டு வியப்படையாதவரே இல்லை எனலாம். இந்த ஓவியங்கள் அழகின் இருப்பிடமாகவும், ஓவியக் கலையின் உறைவிடமாகவும் உள்ளது.

சித்தன்னவாசல் குகைக் கோவிலிலுள்ள தூண்கள் மீதும், மேற்கூரை மீதும் மகேந்திரன் அழகுமிக்க ஓவியங்களைத் தீட்டச் செய்தான். முன் மண்டபத் தூண்கள் இரண்டிலும் நாட்டியமாடும் மகளிர் உருவங்கள் அழகாக உள்ளன. அந்த அழகிகளின் தலை அழகிய வேலைப்பாடுகள் கொண்டு காணப்படுகிறது. நடுவில் பிரிக்கப்பட்டி தலை மீது முடியப் பட்டுள்ளது. அந்த முடிப்புகள் மலர் கொத்துக்களால் அணி செய்யப் பட்டுள்ளன. காதணிகள் பல பாதிக்கப்பட்ட வளையங்களாக உள்ளன. கையில் கடகங்களும் வளையல்களும் காணப்படுகின்றன. விரல்களில் மோதிரம் அணியப்பட்டுள்ளது. இந்த நடன அழகிகளை அடிகள்மார் என்றும் அப்சரப் பெண்மணிகள் என்றும் சிலர் கருதுகின்றனர்.

ஒரு தூணின் உட்புறத்தில் ஓர் அரசனின் தலையும் அவர் மனைவியின் தலையும் வரையப்பட்டுள்ளது. அரசனின் கழுத்தில் மணிமாலைகளும் காதுகளில் குண்டலங்களும் உள்ளன. தலையில் மணி மகுடம் உள்ளது. சில அறிஞர்கள் இந்த உருவத்தை மகேந்திரவர்மன் என்றே கருதுகின்றனர். இதுதவிர முன் மண்டபத்தில் மேற்கூரை முழுவதிலும் அழகுமிக்க ஓவியங்கள் காணப்படுகின்றன. ஒரு தாமரைக் குளம், அதில் தாமரை மலர்கள், தாமரை இலைகள் அவைகளுக்கு நடுவே மீன்கள், அன்னங்கள், யானைகள் இவற்றுடன் கையில் தாமரை மலர்களைத் தாங்கியுள்ள சமணர் இருவர் ஆகிய ஓவியங்கள் காணப்படு கின்றன. இந்த ஓவியங்களில் குளத்து இயற்கை மலர்களைப் போலவே உள்ளன. மற்றவை உயிர் உள்ளவை போலவே தெரிகின்றன. இப்படி கற்பாறைகள் மீது வரையப்பட்ட இந்த அழகிய ஓவியங்கள் பல்லவரின் ஒவியக்கலையின் புகழைப் பறைசாற்றுகின்றன.

## இசை

மகேந்திரவர்மன் ஒரு இசை வல்லுநர். பல்லாவரம் குகைக் கோயில் கல்வெட்டில் தன்னைச் சங்கீரண சாதி என்று கூறியுள்ளார். இவர் ஐந்து தாள வகைகளான சதுரஸ்ரம், திஹரம், மிஸ்ரம், கண்டம் சங்கீரணம் ஆகியவற்றில் சங்கீரணம் என்பதனைப் புதிதாக அமைத்தவன் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். இவரது குடுமியான் மலைக் கல்வெட்டு ஒன்று சித்தம் நமசிவாய என்று தொடங்கி பலவகைப் பண்களையும் தாளவகைகளையும் விளக்குகிறது. இந்தக் கல்வெட்டு இசை மாணவர் நன்மைக்காகப் பண்களை வகுத்துது தந்த உருத்திராச்சாரியார் என்பவரின் மாணவனான அரசன கட்டளைப்படி வெட்டப்பட்டது என்பதே அக்கல்வெட்டின் சாரம் மகேந்திரவர்மன் இசையில் வல்லவனாக இருத்தல் வேண்டும் என்பதே ஆராய்ச்சியாளர் களின் கருத்து.

**இலக்கியம்**

மகேந்திரவர்மன் வடமொழியில் சிறந்த புலமையுடையவன். அவன் வடமொழியில் எழுதிய மத்தவிலாசப் பிரகசனம் என்ற நூலே தெற்குச் சான்று. இந்த நூலில் மகேந்திரவர்மன் காலத்தில் புத்த மதம், காபலிகம், பாசுபதம் ஆகிய மதங்கள் இருந்த நிலை விளக்கப்பட்டுள்ளது. காஞ்சியிலுள்ள புத்த பள்ளிகளைப் பற்றி விவரிக்கிறது. இந்த நூலை சைவ மதத்தில் சேர்ந்த பின்னர் மகேந்திரவர்மன் எழுதியுள்ளார்.

இவ்வாறு சத்ருமல்லன், அவநபாஜன், குணபரன், மத்தவிலாசன் ஆகிய விருதுப் பெயர்களைக் கொண்ட மகேந்திரவர்மனின் ஆட்சிக் காலம் பல வகையிலும் சிறப்புப் பெற்று விளங்கியது.

# முதலாம் நரசிம்மவர்மன்
# (கி.பி.630-668)
# (NARASIMHA VARMANI)

முதலாம் மகேந்திரவர்மனுக்குப் பிறகு அவருடைய மகன் முதலாம் நரசிம்மவர்மன் பட்டத்துக்கு வந்தார். பல்லவ மன்னர்களுள் மிகவும் சிறப்பு வாய்ந்த அரசர் இவர். மாமல்லன், வாதாபி கொண்டான், இரணஜயன், நயனன்குரு ஆகிய பல சிறப்புப் பட்டங்களைச் சூட்டிக் கொண்டார். பல வெற்றிகளைப் பெற்றார்.

தன்னுடைய தந்தையைப் போலவே கட்டிடக்கலை வளர்ச்சிக்குப் பேராதரவு அளித்தார்.

**பல்லவ சாளுக்கியப் போர்**

நரசிம்மவர்மன் காலத்தில், வாதாபிச் சாளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசி, புள்ளலூர்ப் போர்க்களத்தில் தான் பெற்ற தோல்விக்குப் பழி வாங்க மீண்டும் காஞ்சி மீது படையெடுத்து வந்தான். நரசிம்மவர்மன் பரஞ்சோதி என்பவரின் தலைமையில் பெரும்படை ஒன்றைத் திரட்டினார். பரியலாம், சூரமாரம் ஆகிய இடங்களில் நடைபெற்ற போரில் நரசிம்மவர்மன் வெற்றியடைந்தார். இறுதியாக காஞ்சிக்கு 35 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மணிமங்கலம் என்னுமிடத்தில் நடைபெற்ற கடும் போரில் தோல்வியுற்ற சாளுக்கியப்படை வாதாபி நோக்கி பின்வாங்கி ஓடியது. ஆனால் அப்படை யை விடாது விரட்டி சாளுக்கிய நாட்டிற்குள் நுழைந்தது பல்லவப் படை வாதாபி நகர் கைப்பற்றப்பட்டுத் தீக்கிரையானது. இரண்டாம் புலிகேசி போர்க் களத்திலேயே இறந்தார். இவ்வாறு தன் தந்தைக்கு முதலில் தோல்வியினால் ஏற்பட்ட களங்கத்தை நீக்கினார். வாதாபி கொண்டான் என்ற விருதுப் பெயரைச் சூட்டிக் கொண்டார்

**இலங்கை படையெடுப்பு**

மானவர்மன் என்ற சிங்கள இளவரசனுக்கு, அரசுரிமை பெற்றுக் கொடுப்பதாக கி.பி.631-ல் நரசிம்மவர்மன் ஒரு பெரிய கப்பற் படையைத் திரட்டி இலங்கை மீது படையெடுத்தார். போரில் வெற்றி பெற்று இலங்கையின் அரசுரிமையை மானவர்மனுக்கு வழங்கினார். சிங்கள இலக்கியமான மகாவம்சத்தில் இச்செய்திகள் கிடைக்கிறது.

**பாண்டியருடன் போர்**

நரசிம்மவர்மன் காலத்தில் பாண்டிய நாட்டை அரிகேசரி பராங்குசன் என்ற பாண்டிய மன்னன் ஆண்டு வந்தான். நரசிம்மவர்மன் வாதாபிக்கு படையெடுத்துச் சென்ற நேரத்தில் அரிகேசரி பல்லவர்களின் படையை சங்கரமங்கை என்ற இடத்தில் தோற்கடித்ததாக சின்னமனூர்ப் பட்டயம் கூறுகிறது. இதனைக் கேள்விப்பட்ட நரசிம்மவர்மன் வாதாபிப் படையெடுப்பை தளபதி பரஞ்சோதியிடம் ஒப்படைத்துவிட்டு தானே நேரில் வந்து பாண்டியர் படையைத் தோற்கடித்து விரட்டினார்.

**யுவான் சுவாங்கின் வருகை**

சீன யாத்திரிகன் யுவான்சுவாங் கி.பி.642ல் காஞ்சி நகருக்கு வந்தார். இவர் குறிப்புகளிலிருந்து பல்லவ அரசைப் பற்றிய பல செய்திகள் நமக்குக் கிடைக்கிறது. காஞ்சிபுரத்தின் அமைப்பைப் பற்றி விரிவாகக் கூறியுள்ளார். காஞ்சியைச் சுற்றியுள்ள நாட்டை திராவிடம் என்று குறிப்பிட்டுள்ளார். பல்லவ நாட்டு மக்களின் குண இயல்புகளையும் அவர்களின் சமயப் பற்றையும் கூறுகிறார்.

## கலையும் கட்டிடக் கலையும்

முதலாம் நரசிம்மவர்மன் தனது தந்தையைப் போலவே கோவில் களையும் சிற்பங்களையும் அமைத்து அழியாப் புகழ் பெற்றான். இவன் அமைத்த குகைக் கோவில்களும், மகாபலிபுரம் சிற்பங்களும் வரலாற்றில் இவனுக்கு அழியாப் புகழைத் தேடித் தந்துள்ளன. இவை பல்லவர்களின் கட்டிடக் கலை மற்றும் சிற்பக் கலையின் பெருமையை உணர்த்துகின்றன.

### 1) குகைக் கோவில்கள்

நரசிம்மவர்மன் தனது தந்தை மகேந்திரவர்மனைப் பின்பற்றிக் குகைக் கோவில்களை அமைத்தார். இவர் அமைத்த குகைக் கோயில்களில் பல சிறப்பு அம்சங்களைக் காணலாம். கோவில்களில் ஓவிய வேலை மிகுதியாக இருக்கும். குகைக் கோவிலின் முன் மண்டபச் சுவர்களில் அழகுமிக்க சிலைகளும், அணி அணியாக அன்னப் பறவைகளும், சிறுமணிக் கோவைகளும் பொறிக்கப்பட்டிருக்கும். மகேந்திரன் அமைத்த கோவில் தூண்கள் சதுரமாகவும், கனமாகவும் இருக்கும். ஆனால் நரசிம்மவர்மன் அமைத்த கோயில் தூண்களின் பொதிகைகள் உருண்டு காடிகள் வெட்டி இருக்கும். பொதிகைக்குக் கீழ்த்தூணின் அடியில் சுமார் இரண்டு முழ அகலமும் இரண்டு முழ உயரமும் கொண்டு திறந்த வாயுடன் இருக்கும் சிங்கங்கள் தூண்களை தம் தலைமீது தாங்கியிருத்தல் போன்ற வேலைப்பாடு காணப்படும்.

மகேந்திரவர்மன் அமைத்த இவ்வகைக் கோவில்கள் பல உண்டு. நாமக்கல் மலையடியில் இருக்கின்ற நரசிங்கப் பெருமாள் குகைக் கோவில், திருச்சிராப்பள்ளி மலையடியில் தென்மேற்கு மலையிலுள்ள குகைக்கோயில், திருவெள்ளறையில் முடியாமல் பாதியிலேயே உள்ள பெரிய குகைக்கோவில், திருமய்யத்தில் உள்ள வைணவக் குகைக்கோவில் ஆகியவை நரசிம்மன் அமைத்தவையாகும்.

### 2) மகாபலிபுர சிற்ப ஓவியக்கலைகள்

மகாபலிபுரத்தில் மகேந்திரவர்மன் தொடங்கிவிட்ட வேலையை நரசிம்மவர்மன் தொடர்ந்து நடத்திப் பெரும் புகழ் பெற்றார். வாதாபியை வெற்றிகண்ட பின் அங்கு காணப்பட்ட குகைக் கோவில்களைப் போன்ற அழகுமிக்க, வேலைப்பாடுகளைக் கொண்ட, காண்போர் கண்ணையும் கருத்தையும் கவரக்கூடிய சிற்பங்களை அமைத்தார். மகாபலிபுரத்தில் மூன்று வகையான வேலைப்பாடுகளைக் காணலாம். அவை a) குகைக் கோயில்கள், b) ஒற்றைக்கல் கோவில்கள், c) கற்சிற்பங்கள்.

### a)குகைக் கோவில்கள்

மகாபலிபுரத்தில் மகிடாசுர மண்டபம், வராக மண்டபம், திருமூர்த்தி மண்டபம் என்று அழைக்கப்படுபவை உண்மையில் நரசிம்மன் அமைத்த குகைக்கோவில்களேயாகும். இந்தக் குகைக் கோயில்களில் காணப்படும் சிற்பங்கள் மிகச் சிறந்த சிற்பிகளால் செதுக்கப்பட்டிருக்க வேண்டும். வாதாபி குகை கோவில் சுவர்களில் காணப்படும் புராணச் செய்திகளைக் குறிக்கும் ஓவியங்கள் பல மகாபலிபுரத்திலும் காணப் படுகிறது. மகிடாசுர மண்டபச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ள சிற்ப வேலை பல்லவர்களுக்கே உரியது எனலாம். எங்கும் அக்காலத்தில் இதுபோல் காணப்படவில்லை. ஆயின், மகிடாசுரனை வெல்லும் காட்சியே அது துர்கை தன் ஊர்தியான சிங்கத்தின் மீது அமர்ந்து எருமைத் தலை கொண்ட அசுரன் மீது அம்புகளைப் பொழிகின்றாள். அவளைச் சுற்றிலும் அவள் படைகள் இருக்கின்றன. அசுரனைச் சுற்றி அவன் படைகள் உள்ளன. இந்தக் காட்சி காண்பதற்கு அருமையாகவும், சிற்ப வேலைப்பாட்டில் பல்லவருக்குரிய சிறப்புத் தன்மையையும் காட்டுகிறது.

### b)ஒற்றைக் கோவில்கள்

மகேந்திரன் குகைக் கோவில்களை அமைத்தார். அவரைப் பின்பற்றிய நரசிம்மவர்மன் தன் பெயரை நிலைநாட்ட ஒரே கல்லை கோவிலாக அமைக்கும் புதிய வேலையில் இறங்கி பெரு வெற்றி பெற்றான். மகாபலிபுரத்தில் இப்படிப்பட்ட ஒற்றைக்கல் கோவில்கள் ஐந்து வரிசையாக அமைந்திருப்பதால் மக்கள் அதனை பாண்டவர் தேர்கள் என்று பெயரிட்டனர். ஆனால் இந்த ஐந்தும் வேறுவேறு அமைப்புடையவை.

தருமராசன் தேர் என்பது ஒரு சிவன் கோவில். இது மூன்று தட்டுகளைக் கொண்ட மேற்பாகத்தை உடையது. இதன் அடிப்பகுதியில் சோமாஸ் கந்தர்சிலை செதுக்கப்பட்டுள்ளது. அடுத்து பீமசேனன்தேர். இது, காஞ்சியிலுள்ள கோவில் அமைப்பை ஒத்துள்ளது. பௌத்த சமயக் கலை வளர்ச்சியை இது தெரியப்படுத்துகிறது. மூன்றாவதான அர்ச்சுனன் தேர் ஓர் சிவன் கோவில் ஆகும். இது புத்தப்பள்ளி

அமைப்பை உடையது. இது 11 சதுர அடி உள்ளது. இதன் விமானம் நான்கு நிலைகளை உடையது. நான்காவது திரௌபதி தேர். இது மிகவும் சிறப்பாக அமைந்த கோவில் ஆகும். இது தமிழ் நாட்டில் ஊர்த் தேவதைகளுக்கு அமைக்கப் பட்டிருக்கும் கோவிலைப் போன்று உள்ளது. இதில் உள்ள துர்க்கை சிலையில் அமைந்துள்ள வேலைப்பாடு பல்லவர் சிற்பத்திறனை வெளிப் படுத்துகிறது. இங்குள்ள கல்யானை, கற்சிங்கம், நந்தி போன்றவை காணத்தக்கவை. கடைசியாக சதாதேவன் தேர் பண்டைய பௌத்தர் சைத்தியத்தை ஒத்து காணப்படுகிறது.

**cc)கற்சிற்பங்கள்**

தனிக் கற்பாறைகளின் மீது புராணக் கதைகளை சிற்பமாக செதுக்கி விளக்கும் முறையில் நரசிம்மவர்மன் பெயர் பெற்றவர். இவைகளில் மிகச் சிறப்பானவை கோவர்த்தன மலையை கண்ணன் ஏந்தியுள்ள காட்சியும் கங்கைக்கரைக் காட்சியும் ஆகும். கோவர்த்தன மலையைப் பிடித்துள்ள கண்ணனும், பலராமனும் தெய்வத்தன்மையுடன் காணப்படுகின்றனர். அவர்களைச் சுற்றி சிறிய உருவங்களில் பலர் நிற்கிறார்கள். இவைகளுக்கு நடுவில் இடையர்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் காட்சி போற்றுதற்குரியது. கங்கைக் கரைக் காட்சியை அர்ச்சுணன் தவம் என்றும் கூறுவர். இந்தச் சிற்பம் ஏறக்குறைய 28.8 செ.மீ அகலமும், 12.9 செ.மீ உயரமும் உள்ள செங்குத்தான பாறையில் செதுக்கப்பட்டுள்ளது. இந்தப் பெரும்பாறையின் நடுப்பகுதி பிளவுபட்டு நீர்வீழ்ச்சி போல் காணப்படுகிறது. இந்தப் பிளவிற்கு இருபக்கங்களிலும் தேவ மகளிர், நாக கன்னியர், தண்ணீர் குடம் சுமந்து செல்லும் பிராமணர், ஒரு முனிவர், யானைகள், குரங்குகள் முதலிய உருவங்கள் செதுக்கப் பட்டுள்ளன. இக்காட்சிகள் அனைத்தும் இமயமலை அடிவாரத்தில் கங்கைக்கரை காட்சிகளை ஒத்துள்ளன. இச்சிற்பங்களைச் செதுக்கிய பல்லவ சிற்பிகளை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. இவ்வாறு முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில் பல்லவர் கால கட்டிடக் கலை, சிற்பக்கலை பெருவளர்ச்சியடைந்து காணப்பட்டது.

**இலக்கியம்**

பல்லவ மன்னர்கள் இலக்கிய வளர்ச்சிக்கும் ஆதரவளித்தார்கள். சமஸ்கிருத மொழியிலும், தமிழிலும் இலக்கியங்கள் எழுதப்பட்டன. ஏராளமான பக்திப் பாடல்கள் எழுதப்பட்டன. பௌத்த சமண நூல்களும் வெளியிடப்பட்டன. பல்லவ மன்னார்கள் சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நின்றார்கள். இவர்கள் வெளியிட்ட சில பட்டயங்கள் இலக்கிய நடையுடன் அமைந்துள்ளன. பல்லவர்கள் காலத்தில் மன்னரின் வெற்றிகள் மற்றும் குடும்ப வரலாறு ஆகியவற்றைத் தாமிரப் பட்டயங்களில் எழுதும் முறை இருந்தது.

இதற்கு பிரசஸ்திகள் என்று பெயர். தமிழில் இது மெய்க்கீர்த்திகள் எனப்படும். கசக்குடி பட்டயம், தண்டன் தோட்டப் பட்டயம், வேலூர்ப்பாளையம் பட்டயம், கூரம் பட்டயம் ஆகியவற்றில் கானப்படும் குறிப்புகள் உயர்ந்த இலக்கிய நடையில் உள்ளன.

பல்லவ மன்னர் மகேந்திரவர்மன் சமஸ்கிருத மொழியில் மத்தவிலாசப் பிரகசனம், பாகவதாஜூதம் போன்ற நாடக நூல்களை எழுதினார் சிம்ம விஷ்ணுவின் அவைப் புலவரான பாரவி சிரதார்ஜுனியம் என்ற நூலை எழுதினார். இவரது பேரன் தண்டின் இரண்டாம் நரசிம்மன் அவையில் புலவராக இருந்தார். இவர் காவியதர்சம், அவந்தி சுந்தரிகதா, தசகுமார சரிதம் ஆகிய மூன்று நூல்களை எழுதினார். பொதுவாக காளிதாசர், பாரவி, வராகமிகிரர் ஆகியோர் இயற்றிய நூல்களுக்கு மக்களின் பேராதரவு பல்லவர் காலத்தில் தான் கிடைத்தது. காஞ்சி நகரில் இருந்த புகழ் பெற்ற கடிகை சமஸ்கிருத மொழிக்கு ஊக்கம் அளித்து அது தழைத்தோங்க காரணமாக இருந்தது.

பல்லவர்களின் ஆட்சிக் காலத்தின் தொடக்கத்தில் தமிழ் புறக்கணிக்கப்பட்டது. மன்னர்களின் ஆதரவு இன்றியே சில தமிழ்ப் புலவர்கள் தமிழுக்காக தொண்டு செய்தனர். அப்பர், சம்பந்தர், சுந்தரர் முதலிய நாயன்மார்கள் பல்லவர் காலத்தில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் எளிய தமிழில் தமிழ் பாடல்களை இயற்றினார்கள். இந்தப் பாடல்கள் தான் தேவாரம் என்ற ஏழுதிருமுறைகளாகத் தொகுக்கப்பட்டது. திருமங்கை ஆழ்வார், தொண்டரடிப்பொடி ஆழ்வார் போன்றோர்கள் பாடல்களை நாதமுனி என்பவர் தொகுத்து நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்ற நூலாக வெளியிட்டார். வேதங்களுக்குச் சமமாக இந்த நூல் கருதப்படுகிறது.

பல்லவர் காலத்தில் தமிழில் அதிகமான இலக்கண நூல்களும் படைக்கப்பட்டன. இக்காலத்தில் எழுதப்பட்ட முத்தொள்ளாயிரம் என்ற ஆசிரியர் பெயர் தெரியாத நூலில் நாட்டின் அமைப்பு, படைகளின் சிறப்பு ஆகியவை பற்றிய செய்திகள் உள்ளன. திருமூலர் அருளிய திருமந்திரம், பேயம்மையார் பாடிய பதிகங்கள், சமயக் குறவர்களின் திருமுறைகள், ஐயடிகள் இயற்றிய சேத்திர வெண்பா , திருத்தொண்ட தொகை, சேரமான் பெருமாள் படைத்த அந்தாதி, ஞானஉலா போன்றவை குறிப்பிடத் தக்கவையாகும். நந்திக் கலம்பகம் என்ற நூல் பல்லவர் காலத்தில் இருந்த ஒரு தமிழ்க் காவியமாகும். இதனை எழுதியவர் யார் என்று தெரியவில்லை. இந்த நூல் மூன்றாம் நந்திவர்மனின் சிறப்புக்களைக் கூறுகிறது. கலம்பக வகை இலக்கியத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ளது. மூன்றாம் நந்திவர்மன் பலத்தில் பெருந்தேவனார் என்பவர் இயற்றிய பாரத வெண்பா, பாரதப்

பாரில் பல்லவரும் பங்கு கொண்டனர் என்ற கற்பனைச் செய்தியைத் தெரிவிக்கிறது.இவ்வாறு பல்லவர் காலத்தில் சமஸ்கிருத இலக்கியமும், தன் இலக்கியமும் வளர்ச்சியடைந்தன.

**விஞ்ஞானம்**

பல்லவர் காலத்தில் மக்களிடம் விஞ்ஞான அறி வளர்ந்திருந்தது. இந்த உலகம் எவ்வாறு தோன்றியது என்பதைப் பற்றி அறிந்திருந்தார்கள். ஆரம்பத்தில் ஒரே பொருளாக இருந்த உலகம் எவ்வாறு ஆகாயம், நீர், காற்று, நெருப்பு, பூமி என்று ஐந்து பொருள்களாக மாறியது என்று விஞ்ஞான முறையில் விளக்கம் அளித்தனர். இந்த அளவிற்கு மக்களிடம் பூமியைப் பற்றிய அறிவு காணப்பட்டது. மேலும் இந்த உலகமானது உருண்டை வடிவம் கொண்டது என்றும் அறிந்திருந்தனர். ஆகாயத்தில் தோன்றும் மின்னல், இடி ஆகியவை எவ்வாறு நிகழ்கிறது என்று அறிந்திருந்தனர். மின்னலுக்குப் பிறகே இடியொலி கேட்கும் என்று தெரிந்திருந்தனர்.

பல்லவர் காலத்திய மக்கள் நீரின் குணங்களை அறிந்திருந்தனர். நீரைச் சூடாக்கும் போது அது ஆவியாகி விடும் என்றும், அப்படி வெளிவரும் நீராவிக்கு நிழல் உண்டு என்றும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. மனித உடலில் கரு வளரும் விதம் பற்றியும் அது வளர்ச்சி யடையும் ஒவ்வொரு நிலை பற்றியும் தெளிவாக அறிந்து வைத்திருந்தனர். இவை தவிர மனிதனுக்கு ஏற்படும் ஐம்பத்தெட்டு வகையான நோய்கள் பற்றியும் முக்கியமாக இருமல் நோய், மூளை நோய் பற்றி அறிந்திருந்தனர். பல்லவர் கால மக்கள் சோதிடத்திலும் நம்பிக்கை வைத்திருந்தனர். அவர்கள் கிரகங்களின் பெயர்ச்சி பற்றியும் அதனால் ஏற்படும் நன்மை தீமைகளையும் உணர்ந்திருந்தார்கள். இவ்வாறு பல்லவர் காலத்தில் ஓரளவு விஞ்ஞானம் வளர்ச்சியடைந்திருந்தது.

**இசை**

பல்லவர் காலத்தில் இசைக் கலையும் போற்றி பாதுகாக்கப் பட்டது. பல்லவர் கால இசையைப் பற்றிய குறிப்புகள் மகேந்திரவர்மன் எழுதிய மத்தவிலாசப் பிரகசனம் என்ற நூலில் காணப்படுகிறது மேலும் புதுக்கோட்டையிலுள்ள குடுமியான் மலைக் கல்வெட்டு இசையைப் பற்றிய விரிவான குறிப்புகளைத் தருகின்றது டி.ஏ.கோபிநாதராவ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட திருமய கல்வெட்டும் இது தொடர்பான முக்கியச் செய்திகளைத் தெரிவிக்கிறது

இசை பல்லவர் கால மக்களின் சமூக வாழ்க்கையில் முக்கி இடத்தைப் பெற்றது. மாளிகையில் வாழ்ந்த மக்கள் முதல் மா மேய்க்கும் இடையர் வரை அனைவரிடமும் இசைத் திறமை காணபட்டது. ஆண்களை விட பெண்களுக்கு இசையில் ஆர்வம்

இருந்தது, காந்தாரம் என்ற இசையைப் பாடிய பெண்கள் காரிகையர்கள் என்றழைக்கப்பட்டனர். பாடலுடன் வீணை, யாழ் முதலியவை பயன்படுத்தப்பட்டன. குடுமியான் மலைக் கல்வெட்டில் பல ராகங்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகிறது. திருமயம் கல்வெட்டில் ரிஷபம், காந்தாரம், பஞ்சமம் போன்ற தாளங்களைப் பற்றிய குறிப்பு கிடைக்கிறது.

பல்லவ மன்னர்கள் இசைக்குப் பேராதரவு அளித்தனர். முதலாம் மகேந்திரவர்மன் ஒரு இசை மேதை ஆவார். இவர் வீணை வாசிப்பதில் வல்லவர். இதனால் பரிவாதினி என்ற விருதுப் பெயரைப் பெற்றிருந்தார். இவர் சங்கீரணம் என்ற புதிய தாளவகையைக் கண்டுபிடித்தார். இதனால் சங்கீரணசாதி என்ற புனைப் பெயர் பெற்றிருந்தார். இராஜசிம்மனுக்கு வாத்ய வித்யாதரன், ஆதோத்திய தும்புரு, வீணா நாரதன் போன்ற சிறப்புப் பெயர்கள் அமைந்தன. இந்தப் பெயர்கள் மூலம் அவர் வாத்யங்கள், தும்புரு, வீணை, முரசம், குழல், தாளம் ஆகியவற்றில் சிறப்பாக இசைக்கக் கூடியவர் என்று தெரிய வருகிறது. இவ்வாறு இசையில் திறமை படைத்த மன்னர்கள் இருந்தார்கள் என்றும் அவர்கள் இசை வல்லுநர்களை ஆதரித்தனர் என்றும் அறியலாம்.

பல்லவர்கள் காலத்தில் சமயமும் இசையைப் பரப்ப உதவியது. பல்லவ நாட்டில் வாழ்ந்த அப்பர், சம்பந்தர், சுந்தரர் போன்ற நாயன்மார்கள் இசைக்குப் பெருந் தொண்டாற்றினர். அவர்கள் இசையைக் கடவுளுடன் சம்பந்தப்படுத்தி அதைப் புனிதமானதாக மாற்றினார்கள். ஆரிய இசையையும் தமிழ் இசையையும் கலந்து பாடினார்கள். இவர்கள் தக்கராகம், பழந்தக்கராகம், சீகாமரம், கொல்லி, கொல்லிக்காவாணம், வியாழக்குறிச்சி போன்ற பலவகையான ராகங்களைப் பாடினர். பல்லவர் காலத்தில் யாழ், வீணை, குழல், கண்ணரி, கொக்கரி, தக்கை, முழவம், மொந்தை, மிருதங்கம், மத்தளம், நுந்துபி, குடமுளா, முரசம், உடுக்கை, துடி, கொடுகட்டி போன்ற இசைக் கருவிகள் இருந்தன. இவ்வாறு இசை பல்லவர் காலத்தில் வளர்ச்சியடைந்தது. பல்லவர் காலத்தில் சைவ சமயம் வளர்ச்சியடைய இசையும் ஒரு காரணமாக அமைந்தது.

**நடனம்**

பல்லவ மன்னர்கள் நடனக் கலைக்கு ஆதரவு அளித்தனர். பண்டாம் நந்திவர்மன், இராஜசிம்மன் ஆகியோர்கள் காலத்தில் நடனக் கலை வளர்ச்சியடைந்தது. பொதுவாக எழிபாட்டு நேரங்களிலும், கோவில் திருவிழாக்களிலும் நடனமாடப்பட்டது நடனம் அரண்மனை யுடனும், ஆலயத்துடனுமே தொடர்பு கொண்டதாகக் காணப்பட்டது.

பல்லவர் காலத்தில் ஆண்களும் பெண்களும் நடனக் கலையில் ஆர்வம் கொண்டனர்.

பொதுவாக நடனம் ஆலயத்தின் உட்புறத்தில் நடைபெற்றது. காஞ்சியிலுள்ள முக்தேசுவரர் ஆலயத்திலும், திருவோரியூர் ஆலயத்திலும் நடன மாதர்கள் இருந்தார்கள் என்று சான்றுகள் மூலம் அறியலாம். நடனத்தில் இரண்டு வகை இருந்தது. தமிழ் மரபுப்படி ஆடும் நடனம் கூத்து என்றும், பரதர் எழுதிய நாட்டிய சாஸ்திரப்படி ஆடுவது பரத நாட்டியம் என்றும் அழைக்கப்பட்டது. காந்தாரம் என்ற இசையுடன் நாட்டியமாடியப் பெண்கள் சேயிழையர்கள் என்று அழைக்கப்பட்டனர். மன்னர் மகேந்திரவர்மன் தனது அரச சபையில் ஒரு நாட்டியக் குழுவை வைத்திருந்தார். நடனக் குழுவில் ஆண்களும், பெண்களும் இடம் பெற்றிருந்தனர். நடனம் ஆடும் போது உடுக்கை, தாளம், தக்கை போன்ற இசைக் கருவிகளை வாசித்தனர்.

சமயமும் நடனக் கலையை வளர்த்தது. கோவில்களில் அடிகள்மார், மாணிக்கத்தார் மற்றும் கணிகையர் என்றெல்லாம் அழைக்கப் பட்ட நாட்டிய மாதர்கள் இருந்தனர். இராஜசிம்மன் உருவாக்கிய கைலாச நாதர் கோவிலில் சிவபெருமானின் பலவகைப்பட்ட தாண்டவங்கள் சிற்பங்களின் வடிவில் காட்டப்பட்டுள்ளன. வலது காலையும், வலது கையையும் வளைத்து இரு காலையும் இடது கையையும் தூக்கி நடனமாடுதல் தூக்கிய திருவடி நடனம் எனப்படும். இதனையும் சில சிற்பங்கள் வெளிப்படுத்துகின்றன. சிற்பங்களில் செதுக்கப்பட்ட நாட்டிய வகைகள் முத்திரைகள் என்றழைக்கப்பட்டன. பதாக முத்திரை யானைக்கை முத்திரை, சதுரக்கை முத்திரை, குஞ்சிதபாத முத்தில் போன்ற பல வகைப்பட்ட நடன வகைகள் சிற்பங்கள் வெளிப்படுத்தப்பட்டன. இவ்வாறு பல்லவர் காலத்தில் நடனம் சிறப்புநிலை அடைந்திருந்தது.

**ஓவியம்**

பல்லவர் காலத்தில் ஓவியக் கலை மிகவும் சிறந்து விளங்கிய இன்று நாம் காணுகின்ற ஓவியங்களில் மிகவும் பழமை வாய்ந்த பல்லவர் கால ஓவியங்களேயாகும். பல்லவர் ஓவியங்கள் மிகச் சிற வண்ணங்களால் தீட்டப்பட்டவையாகும். அந்த வண்ணங்கள் சிவப்பும், ஆரஞ்சு மட்டும் அழியாமல் உள்ளன. பல்லவர் ஓவியங்கள் காணப்படும் சிறப்புத் தன்மை சுற்றுக்கோடும், வண்ணங்களும் சிறப்பாக அமைந்திருப்ப தாகும். சிறு கீறலை அமைத்து முகத் தோற்றம், உடலுறுப்பின் அசைவு முதலியவற்றைக் காட்டுவதில் பல்லவர் கால ஓவியங்கள் சிறப்பானவையாகும்.

பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் சித்திரக்காரப்புலி என்ற விருதப் பெயர் பெற்றிருந்தார். மாமண்டூர் குடைவரைக் கோவிலிலுள்ள கல்வெட்டிலிருந்து இவன் ஓவியத்தைக் கற்றவனும், அதில் வல்லவனும் அதனை நடைமுறையில் தீட்டி வெற்றி பெற்றவனுமாவான் என்று அறிய முடிகிறது. இராஜசிம்மன் காலத்தில் கட்டப்பட்ட காஞ்சி கைலாசநாதர் கோவிலில் ஓவியங்கள் பல வண்ணங்களில் தீட்டப்பட்டுள்ளன. இங்கு உட்புறத்திலுள்ள மாடத்தில் பார்வதி சிவனின் களி நடனத்தைக் கண்டு ரசிக்கும் காட்சி அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது. -

கைலாசநாதர் கோவிலைச் சுற்றியுள்ள சிறு மண்டபங்களிலும் ராஜசிம்மனின் ஓவியங்கள் காணப்படுகின்றன. இதில் சோமஸ்கந்தர் ஓவியம் சிறப்புடையதாகும். இந்த ஓவியத்தில் சிவனும் உமையாளும் அமர்ந்திருக்க, கந்தன் குழந்தை உருவில் அவர்கள் அருகில் காட்சி யளிக்கிறான். சோமனாகிய சிவனும், கந்தனாகிய முருகனும் இணைந்து காணப்படும் முதல் ஓவியம் இதுவே ஆகும். சிவனுக்குப் பக்கத்தில் பூதகணங்களும், உமையாளுக்குப் பின்பக்கம் அழகிய பணிமகளும் நிற்கும் காட்சியும் வரையப்பட்டுள்ளது. இந்த ஓவியத்தில் உமையாளின் அகன்ற மார்பகங்களும், துடியிடையும், பிறவும் அழகுறத் தீட்டப்பட்டுள்ளன. இதனை வரைந்த ஓவியர் ஒரு பெண்ணின் உருவ இலக்கணத்தை இந்த உமையாளின் உருவத்தைத் தீட்டுவதில் கவனமாகக் கடைப்பிடித்துள்ளார். இந்த ஓவியத்தில் பயன்படுத்தப் பட்டுள்ள பல்வேறு வண்ணங்களும் அழிந்து காணப்பட்டாலும் செவ்வண்ணம் மட்டும் அழியாமல் உள்ளது. முருகன் தலையைச் சுற்றிலும் பூசப்பட்டுள்ள ஆரஞ்சு சிவப்பு வண்ணமும் அழியாமல் உள்ளது.

## பக்தி இயக்கம்
## (BHAKTI MOVEMENT)

பல்லவர்கள் வரலாற்றில் சமயத் துறையில் நிகழ்ந்த ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி பக்தி நெறி இயக்கம் ஆகும் களப்பிரர்கள் ஆட்சியினால் இந்து சமயத்தின் வளர்ச்சி மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. அதேநேரம் சமண சமயமும், பௌத்த சமயமும் அதிக செல்வாக்கு பெற்று வளர்ந்து வந்தன. எனவே இந்து சமயத்தைப் பாதுகாத்து வளர்ச்சியடையச் செய்ய தோன்றிய இயக்கமே பக்தி இயக்கம் ஆகும். இந்த இயக்கத்தின் வளர்ச்சிக்காக ஆழ்வார்களும் நாயன்மார்களும் பெருந்தொண்டாற்றினர். இவர்களது பெரும் முயற்சியால் இந்து மதம் புதுப்பொலிவு பெற்றது. புத்த, சமண மதங்கள் செல்வாக்கிழந்தன.

## பக்தி இயக்கத்தின் தத்துவங்கள்

சைவ சமய நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் தோன்றி மக்களிடையே பக்தி நெறியைப் பரப்பினர். இவர்கள் கடவுள் முன்னிலையில் தன்னையே அழித்துக் கொள்ளத்தூண்டும் உணர்ச்சி வெறியைப் பாராட்டவில்லை. கடவுளிடத்தில் கொள்ளும் அயராது அன்பு ஒன்றையே போதித்தனர். கடவுள் அன்புக்குக் கட்டுப்பட்டவர் என்றும் அவருடைய திருவருள் அவரிடத்தில் இடையறாது ஈடுபாடு கொண்டவர் களிடத்தில் தானாக வந்து சேரும் என்பதும், செல்வச் செருக்கு திருவருளுக்கு இறையூறாக இருப்பவை. என்பது சைவ சமயத்திற்கும், வைணவ சமயத்திற்கும் உள்ள பொதுவான கொள்கைகள் ஆகும்.

இந்த நாயன்மார்களும், ஆழ்வார்களும் துறவு பூண்டு தனியாக மலைகளில் வாழாமல் மக்களிடையே வாழ்ந்து வந்தார்கள். தங்கள் முன்பு எழுந்த இறையன்மை எளிய இனிய சொற்களால் விளக்கினார்கள். உலக இயல்புகளையும், இயற்கை எழிலையும் அவர்கள் மறக்கவோ மறுக்கவோ இல்லை. பேசுகின்ற சொல்லிலும் எண்ணுகின்ற எண்ணங்களிலும் கடவுள் கலந்துள்ளார் என்பதை வலியுறத்தி எண்ணம், செயல் ஆகியவற்றில் தூய்மை இருக்க வேண்டுமென்று போதித்தனர்.

சிவபெருமானை முழு முதல் தெய்வமாக வணங்கியவர்களே நாயன்மார்கள் எனப்பட்டனர். இக்காலத்தில் 65 நாயன்மார்கள் இருந்ததாக வரலாறு கூறுகிறது. அவர்களுள் திருநாவுக்கரசர், சுந்தரர் சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய நான்கு பேர்கள் முக்கியமா இவர்கள் அன்பே சிவம் என்ற கொள்கையை வலியுறுத்தினர். சாதா மக்களிடையே போதித்து இந்து சமயத்தை வளர்ச்சியடையச் செய்தனர்.

### 1) திருநாவுக்கரசர்

இவர் அப்பர் என்று அன்புடன் அழைக்கப்பட்டார். இவா திருவாரூரில் உள்ள முனைப்பாடி என்ற இடத்தில் ஒரு வெள்ளாளர் குடும்பத்தில் பிறந்தார். ஆரம்பத்தில் சமணராக இருந்தவர் தனது தங்கை திலகவதியின் தூண்டுதலால் சைவ சமயத்தில் பற்று கொண்டார். இவர் காலத்தில் ஆட்சி செய்து வந்த பல்லவ மன்னரான மகேந்திரவர்மனை சைவ மத்திற்கு மாற்றினார். இது சைவ மத வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும்.

திருநாவுக்கரசர் சிவனைப் புகழ்ந்து 311 பதிகங்கள் பாடினார். எவ்வுயிரிலும் சிவத்தையும் சக்தியையும் இணைத்துக் காண வேண்டும் என்ற தத்துவம் இவரிடம் விளக்கம் பெற்றன. கடவுளை இந்த நிறத்தையுடையவன், இப்படிப்பட்டவன் என்று எழுதிக் காட்ட முடியாது என்ற தத்துவத்தை விளக்கினார். தொண்டு செய்வதே மெய்யுணர்வுப் பாதை என்பது இவர் கருத்து. கி.பி.ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த இவர் தனது 81-ம் வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

### 2) திருஞான சம்பந்தர்

திருநாவுக்கரசருடன் இணைந்து சைவ நெறியைப் பரப்பியவர் திருஞானசம்பந்தர் ஆவார். இவர் தஞ்சாவூர் மாவட்டத்தில் சீர்காழியிலுள்ள ஒரு பிராமணர் குடும்பத்தில் பிறந்தார். இவர் திருத்தலங்கள் தோறும் சென்று பக்திப் பாடல்களைப் பாடினார். இவர் பாடிய பாடல்களில் மொத்தம் 16,000 பதிகங்களில் 384 பதிகங்களே நமக்குக் கிடைத்துள்ளன. இவர் பல இடங்களில் சமணர்களிடம் வாதிட்டு வெற்றியடைந்தார். இதன் மூலம் தமிழ்நாட்டில் சமண மதம் செல்வாக்கு இழந்தது.

இவர் பாண்டிய நாடு சென்று அப்போது ஆட்சி புரிந்து வந்த மாறவர்மன் அரிகேசரி (கி.பி.640-670) என்பவரை சைவ மதத்திற்கு மாற்றினார். இந்த மதமாற்றம் சைவ மதம் பாண்டிய நாட்டில் வளர்ச்சி அடையக் காணரமானது.

### 3) சுந்தரர்

இவர் தென் ஆற்காடு மாவட்டத்தில் திருநாலூர் என்ற ஊரில் ஒரு ஆதிசைவ பிராமணக் குலத்தில் தோன்றினார். இவரது திருமண நாள் அன்று வயது வந்த முதிர்ந்த அந்தணர் ஒருவர் சுந்தரர் குடும்பம் தனக்கு அடிமைப்பட்டது என்று கூறி சுந்தரரை அடிமையாக்கினார். சுந்தரர் பாடிய பதிகங்களில் தற்சமயம் நூறு மட்டுமே கிடைத்துள்ளது. இவர் பல்லவ மன்னர் இரண்டாம் நரசிம்மவர்மன் காலத்தில் வாழ்ந்தார். இவர் சாதி முறைகளுக்கெதிராகச் செயல்பட்டார். கேரளப் பகுதிகளிலுள்ள திருத்தலங்களுக்குச் சென்று வணங்கினார். இவரது பாடல்கள் எளிமையும் இனிமையும் உடையவை.

### 4) மாணிக்கவாசகர்

சைவ சமயக் குறவர்களுள் நான்காவதாக வைத்துப் போற்றப் படுபவர் மாணிக்கவாசகர் ஆவார். இவர் பாண்டி நாட்டிலுள்ள திருவாரூரில் பிறந்தவர். இவர் திருவாசகம், திருச்சிற்றம்பலக்கோவை

ஆகிய நூல்களை இயற்றினார். இவர் இயற்றிய திருவாசகம் புகழ் பெற்ற சைவத் திருமறையாகக் கருதப்படுகிறது. இந்த நூல் 51 பிரிவுகளையும், 656 பாடல்களையும் கொண்டது. திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது பழமொழி. கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாணிக்கவாசகர் சைவ மத வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றினார்.

**ஆழ்வார்கள்**

பல்லவர் காலத்தில் வைணவ சமயமும் சிறப்புற்று விளங்கியது. திருமாலை முழு முதல் கடவுளாக வணங்கியவர்கள் வைணவர்கள் எனப்பட்டனர். வைணவத் துறவிகளுக்கு ஆழ்வார்கள் என்று பெயர். ஆழ்வார்கள் பன்னிரெண்டு பேர் ஆவர். அவர்கள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமொழிசை ஆழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், குலசேகர ஆழ்வார், திருப்பானாழ்வார், திருமங்கை யாழ்வார், மதுரகவியாழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் ஆகியோர் ஆவர்.

இந்த ஆழ்வார்கள் நாமம் சூடியவர்கள். தமிழகத்தில் கி.பி.500 முதல் 800 வரையிலான காலத்தில் வாழ்ந்து வந்தனர். இந்த ஆழ்வார்கள் இறைவனிடத்தில் அயராத ஈடுபாடும், ஆன்மா உணர்வும் பெற்றிருந்தனர். மக்களிடையே வாழ்ந்து வந்து மக்களிடம் ஒழுக்கத்தைப் போதித்தனர். திருமால் கடவுள் மீது அன்பை வளர்த்து வைணவத்தை வளர்த்தனர். இவர்கள் சைவர்களைப் போலவே சமணர்களைக் கடுமையாகத் தாக்கினர். இந்த ஆழ்வார்கள் பாடிய பாடல்கள் எளிமையானவை. பக்தி நயமிக்கவை.

பன்னிரெண்டு ஆழ்வார்களும் பாடிய பாடல்களின் தொகுப்பிற்கு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்று பெயர். இதனைத் நாகுத்து வெளியிட்டவர் நாதமுனி என்பவராவார். இந்த நூல் தலாயிரம், பெரிய திருமொழி, இறைப்பா, திருமொழி என்ற நான்குதிகளை உடையதாகும். இவ்வாறு ஆழ்வார்கள் ஆற்றிய அயராத கொண்டினால் வைணவம் மேன்மையுற்றது.

**பக்தி இயக்கத்தின் விளைவுகள்**

1) நாயன்மார்களும் ஆழ்வார்களும் தங்கள் வாழ்க்கையை இறைவனுக்கு அர்ப்பணித்தனர். தங்கள் இனிமையான பாடல்களால் மக்களைக் கவர்ந்தனர். இறையருள் பற்றி திருத்தலங்களில் போதித்தனர்.

நாடெங்கும் சென்று மக்களிடையே போதித்து வந்ததால் இந்து மதம் தழைத்தோங்கியது. இந்து சமயக் கருத்துக்கள் சாதாரண மக்களைத்

தேடிச் சென்றடைந்தன. இறைவனைக் கூட்டாகச் சேர்ந்து வழிபடும் முறை தோன்றியது.

2) பக்திமார்க்கத்தினால் அக்கால மன்னர்கள் சமயப் பணிகளில் ஆர்வம் காட்டினர். கோவில்கள் பல இடிக்கப்பட்டன. முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை நரசிம்ம பல்லவர் கட்டிய கைலாசநாதர் கோவிலும், இரண்டாம் நந்திவர்மன் கட்டிய வைகுண்டப் பெருமாள் கோவிலும் ஆகும். கோவில்களுக்கு மானியங்கள் தாராளமாக வழங்கினர். இதனால் வழிபாடுகள் தடையில்லாமல் நடைபெற்றன. மக்களிடம் பக்தி நெறி வளர்ந்தது.

3) பக்தி இயக்கத்தின் விளைவாக சமண, புத்த மதங்கள் சரிந்து நாழவடைந்தன. காரணம் பக்தி மார்க்க அடியார்கள் தங்கள் எதிர் மயவாதிகளை தர்க்க நியாயத்தால் வென்றனர். பல இடங்களில் "போர்கள் நடைபெற்றன. இதில் பல சைவ, வைணவ அடியார்கள் " கொண்டு பிற மதத்தினரை வென்றனர். இதனால் பிற மதங்கள் காடம் மதிப்பிழந்தது. இந்து சமயம் எழுச்சியடைந்தது.

4) பக்தி நெறி இயக்கத்தின் விளைவாக சைவ சமயக் பாடுகளில் புதிய தத்துவங்கள் தோன்றின. திருமூலர் என்பவர் முக்கையை ஆராய்ந்து அதன் நுண் கருத்துக்களை நாலாயிரம் பங்களாக எழுதினர். சங்கராச்சாரியார் அத்வைத தங்களைப் பரப்பினார். இறைவன் எங்கும் நிறைந்திருக்கும் பாருள் என்றும், தனி மனித உயிர் அம்முதற் பொருளில் க கலந்து விடும் என்றும் கூறினார். ராமானுஜர் என்பவர் வைதத்தைப் போதித்தார். இவர் ஆத்மா மற்றும் பரமாத்மா சக்கம் அளித்தார். மத்வர் என்பவர் விஷ்ணு பக்தியை அடிப்படையாகக் கொண்ட துவைதம் என்ற தத்துவத்தைப் பரப்பினார். ஆன்மாவானது பிரம்மனின்று வேறுபட்டது என்றார்.

5) பக்தி மார்க்கத்தைப் பரப்பிய துறவிகள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் அருந்தொண்டாற்றினர். இக்காலத்தில் தோன்றிய சமய இலக்கியங்கள் சங்க கால இலக்கியங்களின் தன்மையிலிருந்து மாறுபட்டுக் காணப்பட்டன. இக்காலத்தில் இயல், இசை ஆகிய இரண்டும் வளர்ச்சியடைந்தது. இசைத்தமிழ் என்ற இனிய தமிழ் தோன்றியது. தேவாரம் இத்தகைய தமிழால் ஆனது. இசை உணர்வுமிக்க கலிப்பாவின் வகைகள், விருத்தப்பாக்கள், பிள்ளைத் தமிழ் அந்தாதி, உலா போன்ற இலக்கிய வகைகள் மலர்ந்தன.

இவ்வாறு பக்திநெறி இயக்கத்தின் விளைவாக சமய நெறிகள் மக்களின் வாழ்க்கையுடன் இரண்டரக் கலந்துவிட்டன. இந்து சமயம் மீண்டும் புத்துணர்ச்சி பெற்று மக்களிடையே வளர்ச்சியடைந்தது. மக்களின் வாழ்க்கையையும், அரசாங்க நடவடிக்கைகளும் சமய

சார்புடையதாகவே மாறிவிட்டன. இந்து சமய வரலாற்றில் இந்த பக்தி இயக்கம் முக்கிய இடம் வகிக்கிறது.

# UNIT III

## பிற்காலச் சோழர்கள் -

### (LATERCHCLAS)

தமிழக வரலாற்றில் கி.பி.850 முதல் 1279-ம் ஆண்டு வரை மேன்மை பெற்று விளங்கியது சோழப் பேரரசு ஆகும். சங்க காலத்தில் சோழ நாட்டை மேன்மையுடன் ஆட்சி செய்த கரிகாலனுடைய சந்ததியில் வந்த இந்த சோழ குலத்தவர்கள் களப்பிரர் படையெடுப்பிற்குப் பிறகும் பல்லவர் ஆட்சிக் காலத்திலும் தங்கள் சிறப்பை இழந்து குறுநில மன்னர்களாக சோழ நாட்டில் இருந்து வந்தனர். பல்லவர்களுடைய ஆட்சி முடிந்து அவர்கள் பெருமை மங்கிய பிறகு இந்தச் சோழர் குலத்தவர் மீண்டும் தலையெடுத்தனர். இவர்கள் பிற்காலச் சோழர் எனப்படுகின்றனர். இவர்களை தஞ்சாவூர் சோழர்கள், கங்கை கொண்ட சோழர்கள், சாளுக்கிய சோழர்கள் என - மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

இந்த சோழப் பேரரசு நிலை பெற்றிருந்த காலத்தில் சைவம், வைணவம் ஆகிய இரு உயர் சமயங்களும் நாடு முழுவதும் பரவின. சமய வளர்ச்சியுடன் மத்திய, மாகாண, கிராம ஆட்சி முறைகளும் மேன்மையடைந்தன. வாணிபமும் கலையும் வளர்ச்சியடைந்தன. வங்கக் கடலுக்கு கிழக்கே உள்ள தீவுகளிலும், தீபகற்பங்களிலும் தமிழர்களின் அதிகாரம் பரவியது. - வரலாற்று ஆதாரங்கள்

. பிற்காலச் சோழர்களின் வரலாற்றை எழுதப் போதுமான ஆதாரங்ககள் கிடைத்துள்ளன. கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங்கள், இலக்கியங்கள் ஆகியவை மூலம் பிற்காலச் சோழரின் வரலாற்றை அறிந்து கொள்ளலாம்.

**a) கல்வெட்டுகள்**

சோழர் கால கல்வெட்டுகளும் சாசனங்களும் இதுவரை ஆயிரக் கணக்கில் கிடைத்துள்ளன. இவை சோழ வரலாற்றை அறிய உதவும் * வரலாற்றுக் குறிப்புகளாக அமைந்துள்ளன. இவை பெரும்பாலும் தமிழ் மொழியிலும், சில வடமொழியிலும் எழுதப்பட்டுள்ளன. சோழ மன்னர்களின் குடிவழிப் பட்டியல், அவர்கள் ஆட்சி புரிந்த ஆண்டுகள் முதலியவற்றை வரையறை செய்வதற்கு இந்தக் கல்வெட்டுகள் உதவுகின்றன. சோழர் கால சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலை பற்றி அறிந்து கொள்வதற்கும் இவை மிகவும் உதவியாக உள்ளன. பலவகை வரிகள், அரசாங்க உத்தரவுகள், ஊர்ச்சபை அமைப்பு முறை, பலதரப்பட்ட சமூகத்தினரிடையே ஏற்பட்ட உடன்படிக்கைகள். தீர்ப்புகள் போன்றவை பற்றிய செய்திகள் கல்வெட்டுகள் மூலம் கிடைத்துள்ளன. 1, தஞ்சைபெருவுடையார் கோவிலில் உள்ள ராஜராஜ சோழனின் 61 கல்வெட்டுகள் சோழர் காலத்தில் சைவ சமயம் இருந்த நிலை பற்றி விளக்குகிறது. முதலாம் பராந்தக சோழரின் உத்திரமேரூர் கல்வெட்டு பிரமதேய ஊராட்சி முறை பற்றி விளக்குகின்றன. உக்கல், திருச்சேய்ஒலூர் கல்வெட்டுகளும் ஊராட்சி முறையின் வளர்ச்சி பற்றி விளக்குகின்றன. பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டின் மூலம், இரண்டாம் ராஜராஜன் நோய்வாய்ப்பட்ட போது அமைச்சர்களால் இரண்டாம் ராஜாதி ராஜன் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தி நமக்குக் கிடைக்கிறது. முதலாம் ராஜராஜன் காலத்தின் ஆரம்பத்திலிருந்து கல்வெட்டுகளின் ஆரம்பத்தில் மெய்கீர்த்தி என்ற பகுதி சேர்க்கப்பட்டது. அரசர்களின் புகழைக் கூறும் இந்த மெய்க்கீர்த்திகள் மூலம் காலத்தைக் கணக்கிட முடிகிறது.

சோழர்களின் வரலாற்றை அறிய சேர, பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகளும் துணை செய்கின்றன. இராஷ்டிரக்கூட மன்னர் மூன்றாம். கிருஷ்ணரின் சாசனங்கள், சாளுக்கியர் மற்றும் ஹொய்சாள மன்னரின் சாசனங்களும் சோழப் பேரரசு பற்றிய செய்திகளைத் தருகின்றன.

### b) செப்பேடுகள்

பொதுவாக செப்பேடுகள் மன்னர்களாலேயே வெளியிடப் பட்டன. இரண்டாம் பராந்தகன் வெளியிட்ட அன்பில் செப்பேடுகள் அன்பில் ஊரைச் சேர்ந்த அநிருத்தணன் என்ற அந்தணர் குல அதிகாரிக்கு ஒரு

கிராமத்தையே முற்றூட்டாக வழங்கியதைப் பற்றிக் குறிப்பிடுகிறது. திருவாலங்காட்டுச் செப்பேடுகள் ராஜராஜ சோழனின் மகனான முதலாம் ராஜேந்திர சோழன் மேற்கொண்ட கங்கைப் படையெழுச்சி பற்றிக் கூறுகின்றன. பிற்காலத்தில் தமிழகம் வந்த டச்சுக்காரர்கள் ராஜராஜன் கால செப்பேடுகளை எடுத்துச் சென்று ஹாலந்திலுள்ள லெய்டன் நகர அருங்காட்சியகத்தில் வைத்துள்ளார்கள். இதனை லெய்டன் செப்பேடுகள் என்று குறிப்பிடுகிறோம். ராஜராஜசோழன் நாகப்பட்டினத்திலுள்ள புத்த கோயிலுக்கு ஆனைமங்கலம் என்ற மாரை முற்றாட்டாக வழங்கிய சமயப் பொறை பற்றிய செய்தி லெய்டன் செப்பேடுகளில் தான் காணப்படுகிறது. இவ்வாறு செப்பேடுகளும் சோழர் வரலாற்றைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன.

இவை தவிர சோழர்கள் கட்டிய கோவில்களும், மண்டபங்களும் சோழ வரலாற்றுக் கருவூலங்களாக உள்ளன. இவை சோழப் பேரரசர் களின் கலை உணர்வையும், கற்பனைத் திறனையும் வெளிப்படுத்துகின்றன.

**c) நாணயங்கள்**

சோழ மன்னர்கள் வெளியிட்ட பொன், வெள்ளி, செம்பு நாணயங்களும், சோழர் வரலாற்றை அறிய உதவுகின்றன. சோழர் காலத்தில் நிலவிய வாணிப வளர்ச்சியின் காரணமாகவும், செல்வச் செழிப்புடன் விளங்கிய மக்கள் அதிகமாக வாழ்ந்த காரணத்தினாலும் உள்நாட்டு வாணிபத்தில் நாணயங்களின் சேவை இன்றியமையாததாகக் காணப்பட்டது. ராஜராஜன்மாடை, மதுராந்தகத் தேவர் மாடை, குலோத்துங்கன் நாணயங்கள் போன்றவை வழக்கிலிருந்தன. ஆனால் அவை இப்போது கிடைக்கவில்லை. ஈழக்காசு, கருங்காசு, பொற்காசு, செப்புக்காசு ஆகியவை நமக்குக் கிடைத்துள்ளன. உத்தம சோழனுடைய நாணயம் தான் சோழர் காலத்தைச் சேர்ந்த முதலாவது நாணயமாக நமக்குக் கிடைத்துள்ளது.

ராஜராஜன் காலத்திய நாணயத்தில் அரசன் உடையோடு காணப்படும் ஓர் ஆண் உருவம் இடது கையில் திரிசூலத்தையும், வலது கையில் தாமரையையும் கொண்டு நிற்கிறது. இதில் திரிசூலம் போர்த் திறனையும், தாமரை செல்வச் சிறப்பையும் காட்டுகிறது என்று கருதலாம். ' இந்த நாணயத்தின் பின்புறத்தில் ராஜராஜன் கம்பீரமாக நிற்கிறான். குழல் உளதும் கண்ணன் உருவம் சோழரின்

நாணயங்களில் காணப்படுவதிலிருந்து சைவ சமயத்தைச் சார்ந்த சோழ மன்னர்களின் ஆட்சியில் நிலவிய சமயப் பொறையை நம் அறிந்து கொள்ளலாம். சோழ நாணயங்களில் பெருமளவில் தேவநாகரி எழுத்து உள்ளது. அவைகளில் மன்னர்களின் இயற்பெயரோ, ஆட்சி ஆண்டுகளோ குறிக்கப்படவில்லை. இதனால் தான் நாம் வரலாற்றுச் செய்திகளைக் கோர்வைப்படுத்த முடியவில்லை. குலோத்துங்கன் நாணயத்தில் திமிழோடு கூடிய நந்தியும் அதற்கு மேலே அர்த்தசந்திரன் ஒரு பக்கத்திலும், மறுபக்கத்தில் அரசன் தனது ராஜ உடையோடும் காணப்படுகிறார்கள். 1946-ல் கிழக்கு கோதாவரிப் பகுதியின் தவனேஸ்வரத்தில் 78 சோழ நாணயங்கள் கண்டுபிடிக்கப் பட்டன. இந்த நாணயங்கள் மூலம் நாம் சோழ வரலாற்றைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது.

d) **இலக்கியங்கள்**

இலக்கியங்களும் சோழ வரலாற்றை அறிய உதவுகிறது. ஒட்டக்கூத்தர் எழுதிய தக்கயாகப்பரணி, கம்பனின் கம்பராமாயணம் ஆகிய இலக்கியங்களில் சோழ மன்னர்கள், மக்கள் பற்றிய சில குறிப்புகள் உள்ளன. ஜெயம்கொண்டாரின் கலிங்கத்துப்பரணியில் சோழர் குல வரலாற்றை உருவாக்கிய கரிகாலன் போன்ற மன்னர்களைப் பற்றிய குறிப்புகள் ஆங்காங்கே வருகின்றன. ஒட்டக்கூத்தர் எழுதிய விக்கிரமச் சோழனுலா, குலோத்துங்க சோழனுலா, ராஜராஜ சோழனுலா ஆகிய மூன்று நூல்கள் மூலம் சோழர் காலத்தில் நிலவிய செல்வச் செழிப்பு, மன்னர்களின் மாண்பு, மக்களின் வாழ்க்கை, புலவர்களின் கலை வாழ்வு, சைவ நெறியின் மேம்பாடு போன்றவைகளை அறிய முடிகிறது.

- மேலும் விக்கிரமசிங்க சோழ சரித்திரம், திவ்விய சூரி சரித்திரம், தமிழ் நாவலர் சரிதை, கொங்கு தேச ராஜாக்கள், சூரிய சித்தாந்தம், புத்த மித்திரரின் வீர சோழியம், ஒட்டடக்கூத்தர் எழுதிய தண்டியலங்காரம், நாதமுனி எழுதிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், அமிதசாகரர் எழுதிய யாப்பெருங்கலக்காரிகை, ஒட்டக் கூத்தரின் குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ் போன்ற இலக்கியங்கள் மூலம் சோழர் காலத்தைப் பற்றிய செய்திகளை அறிந்து கொள்ள முடிகிறது. ஹொய்சாள அரசர் ஒருவர் எழுதிய கத்யகர்னாமிருதம் என்ற நூல் ஹொய்சாளர்களும் பாண்டியர்களும் சோழ நாட்டின் மீது

படையெடுத்த நிகழ்ச்சி பற்றித் தெரிவிக்கிறது.

**e) மெய்க்கீர்த்திகள்**

சோழர் காலத்தைப் பற்றிய முக்கியமான செய்திகளை சோழ மன்னர்களின் மெய்க்கீர்த்திகளிலிருந்து அறிந்து கொள்கிறோம். மெய்க்கீர்த்தி எழுதும் வழக்கத்தை ஆரம்பித்து வைத்தவர் ராஜராக சோழன் ஆவார். சோழ மன்னர்களின் இந்த மெய் (உடல்) கீர்த்தி (புகழ் அவர்களது உலகியல் சாதனைகளின் புகழுரையாகும். தங்கள் காலத்திலேயே நிகழ்ச்சிகளை மெய்க்கீர்த்தியில் குறித்து வைக்க அனுமதி வழங்கியது சோழர்களின் வரலாற்று உணர்வைத் தெரிவிக்கிறது. சோழர் வரலாற்றைக் கோர்வையாக்கிப் பார்க்கப் பெரிதும் உதவுகிறது. சங்க கால நூலான பதிற்றுப்பத்தில் உள்ள பதிகங்களைப் பின்பற்றியே இந்த மெய்க்கீர்த்திகள் இயற்றப்பட்டன..

ராஜராஜ சோழனுடைய மெய்க்கீர்த்தி 'திருமகள் போல பெருநிறைச் செல்வி' என்று ஆரம்பிக்கிறது. குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தி 'புகழ் மாது விளங்க செயல் மாது விரும்ப' என்று தொடங்குகிறது. வீர ராஜேந்திர சோழனின் காலத்தில் பரவிஜயப் பேரரசுக்கு சோழர் படை சென்றதை அவனது மெய்க்கீர்த்தி மூலம் அறிந்து கொள்ளலாம். மேலும் சோழ மன்னர்கள் ராஜ கேசரி, பரகேசரி போன்ற பட்டங்களைப் புனைந்து கொண்டதையும் மெய்க்கீர்த்தி மூலமே நாம் அறிய முடிகிறது. ஒவ்வொரு சோழ மன்னர்களின் ஆட்சிக் காலச் சிறப்பிற்குரிய தனித்தன்மையை இந்த 'மெய்க்கீர்த்திகள் எடுத்துக் கூறுகின்றன.

**f) வெளிநாட்டுக் குறிப்புகள்**

வெளிநாட்டுக் குறிப்புகள் மூலமும் சோழர்களைப் பற்றி அறிய முடிகிறது. ஈழ நாட்டின் புத்த சமய குருக்களால் தொகுக்கப்பட்ட மகாவம்சம் என்ற நூல் கரிகால சோழனின் ஈழப் படையெடுப்பைப் பற்றிக் கூறுகிறது. மேலும் விஜயாலய சோழனின் ஆதிக்கப் போர்களினால் நாட்டுரிமையை இழந்து நின்ற ஈழ மன்னர்களின் துன்பங்கள் இந்த நூலில் விவரிக்கப்பட்டுள்ளது. பல்லவர் காலத்தில் காஞ்சிபுரத்திற்கு வந்த யுவான்சுவாங் தெற்கே சோழர்கள் ஆட்சிசெய்து கொண்டிருந்ததைக் குறிப்பிடுகிறார். சௌ-ஜி.ஹீவா என்ற சீன யாத்ரீகர் சோழ மன்னர் அரண்மனையில் மூவாயிரம் பெண்கள் பணியாளர்களாக இருந்தனர் என்று குறிப்பிடுகிறார்.

அபுசாயித் (Abu-zaid) என்ற முஸ்லீம் வரலாற்றாசிரியர் சோழ நாட்டில் காணப்பட்ட கப்பல் திறன் பற்றி வர்ணித்துள்ளார். ஸ்பெயின் நாட்டிலுள்ள டுடேலா என்ற இடத்தைச் சார்ந்த பெஞ்சமின் என்பவர் - சோழ நாட்டினரின் கடல் வாணிபம் பற்றி சிறப்பித்துக் கூறுகிறார். சுமத்திரா தீவில் பாசறை அமைத்து சோழ நாட்டு வாணிபர்கள் , வாணிபம் செய்ததை கி.பி.1010-ம் வருடத்தைச் சேர்ந்த லோபே-டுவோ என்ற இடத்திலுள்ள கல்வெட்டு தெரிவிக்கிறது. மேலும் 1312-ல் தமிழ் நாட்டுக்கு வந்த மார்க்கோபோலோ என்ற வெனிஸ் நகர அரசின் வர்த்தகன் பாண்டிய நாடு, சோழ நாடுகளில் நிலவிய கடல் வாணிபம் பற்றிக் குறிப்பிடுகிறார். இவ்வாறு வெளிநாட்டுக் குறிப்புகள் மூலம் சோழ நாட்டின் ஆதிக்கப் போர்கள், வாணிப வளர்ச்சி மற்றும் பல செய்திகளை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

இனி சோழ மன்னர்களைப் பற்றி விரிவாகக் காணலாம்.

**விஜயாலய சோழன் : 850-881**

பிற்காலச் சோழப் பேரரசுக்கு அடிகோலியவர் விஜயாலய சோழன் ஆவார். அத்துடன் கி.பி.850 முதல் 1014 வரை ஆட்சி புரிந்த தஞ்சாவூர் சோழர்களில் முதலாவது மன்னர் ஆவார். இவ்விஜயாலயன் பல்லவ மன்னர்களுக்கு அடங்கி சிற்றரசனாக வாழ்ந்த குமாராங்குசன் என்பவரின் மகனாக இருக்கலாம் என்று வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். விஜயாலயன் சங்க காலத்திய சோழ மன்னர் மரபில் தோன்றியவர் என்ற அன்பில், திருவாலங்காடு, ஆனைமங்கலம், கன்னியாகுமரி செப்பேடுகள் கூறுகின்றன.

இவர் தஞ்சையைக் கைப்பற்றுவதற்கு முன்னர் பழையாறை நகரில் இருந்து கொண்டு அதனைச் சுற்றியிருந்த நிலப் பரப்பினை ஆட்சி செய்து கொண்டிருந்தார். அப்போது தஞ்சையையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் சாத்தன்பழியிலி என்ற முத்தரையர் ஆட்சி செய்து வந்தார். கி.பி.850-ல் விஜயாலய சோழன் சாத்தன்பழியிலி முத்தரையரை தோற்கடித்து தஞ்சை மாநகரைக் கைப்பற்றிக் கொண்டார். தஞ்சையை தலைநகராகக் கொண்ட பரகேசரி என்ற பட்டம் புணைந்து கொண்டார். தஞ்சை கொண்ட கோப்பரகேசரிவர்மர் என்று இவரை ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது.

தன்னுடைய வெற்றியின் சின்னமாக தஞ்சை நகரில் கொற்றவை என்ற காளிதேவி அல்லது நிசம்சூதனிக்கு ஒரு கோவில் எடுத்து வழிபட்டதாக திருவாலங்காட்டு செப்பேடுகள் தெரிவிக்கின்றன. தஞ்சை நகரின் மலைக்கோட்டை வாயிலில் உள்ள கோடியம்மன் கோவிலாக அது இருக்கக் கூடும் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். தன் மேனி முழுவதும் தொண்ணூற்றாறு புண் கொண்ட புரவலன் என்று தமிழிலக்கியங்களில் விஜயாலயன் போற்றப்படுகிறார்.

**திருப்புறம்பியப் போர் : கி.பி.880**

இரண்டாம் வரகுணன் என்ற பாண்டிய மன்னர் தம் தந்தையின் ஆட்சியில் இழந்த சோழ நாட்டை மீண்டும் பெறுவதற்கும் முத்தரையரிடமிருந்து விஜயாலயன் கைப்பற்றிய நிலப்பகுதியைப் பெறுவதற்கும் பல்லவ மன்னன் அபராஜியவர்மனைத் தோற்கடிக்கவும் திட்டம் தீட்டிப் போரிடத் தொடங்கினார். அபராஜிதவர்மன் கங்க மன்னர் முதலாம் பிரிதிவிபதி, விஜயாலயன் மகன் முதலாம் ஆதித்த சோழன் ஆகியோரின் ஆதரவைப் பெற்றான். போர் கி.பி.880-ல் திருப்புறம்பியம் என்ற இடத்தில் நடைபெற்றது. போரில் அபராஜிதவர்மன் வெற்றி பெற்றார். விஜயாலய சோழருக்கு சோழ நாட்டை அளித்துவிட்டு தலைநகரம் திரும்பினார் அபராஜிதவர்மன்.

இப்போரினால் பாண்டியர் வலிமையும், பல்லவர் வலிமையும் குன்றியது. பல்லவர் விரைவிலேயே வீழ்ச்சியடைந்தனர். இந்நிலையில் தமிழகத்தின் வடபகுதியில் சோழரது ஆதிக்கம் வேகமாகப் பரவுவதற்கு இப்போர் வழிவகுத்தது. இப்போரின் வெற்றிக்கு அறிகுறியாக ஆதித்த சோழன் தன் தந்தையின் பெயரால் விஜயாலய சோழீச்வரம் என்ற சிவன் கோவிலை எடுப்பித்ததாகத் தெரிகிறது. விஜயாலயச் சோழா தான் இறப்பதற்கு பத்தாண்டுகளுக்கு முன்பே ஆதித்த சோழருக்கு இளவரசுப் பட்டம் கட்டி நிர்வாகத்தில் பயிற்றுவித்தார். கி.பி.881-ல் விஜயாலயர் மரணம் அடைந்தார்.

**முதலாம் ஆதித்த சோழர் : 881-907**

விஜயாலய சோழன் இறந்த பிறகு சோழ அரசனாக பட்டம் சூட்டிக் கொண்டார் அவரது மகன் முதலாம் ஆதித்த சோழர். இவருக்கு கோதண்டராமர் என்ற மற்றொரு பெயரும் உண்டு. இராஜகேசரி என்ற பட்டம் சூட்டிக் கொண்டார். பல்லவருக்கு அடங்கி திரை செலுத்தி குறுநில மன்னராக இருக்க விரும்பாமல் திருப்புறம்பியப் போருக்குப்

பிறகு தொண்டை மண்டலம் முழுவதையும் கைப்பற்றி தன் ஆட்சியைப் பரவச் செய்தார். அபராஜித பல்லவன் யானை மீது அமர்ந்து போர் செய்த போது, ஆதித்த சோழன் அவனைக் கொன்று வெற்றி பெற்றார் என்று கன்னியாகுமரி செப்பேடுகள் கூறுகின்றன. அபராஜித பல்லவனுக்குப் பிறகு சோழ மண்டலமும், தொண்டை மண்டலமும் ஆதித்தன் ஆட்சிக்கு உட்பட்டன. தொண்டை நாடு பரவின ராஜகேசரி வர்மன் என்று ஒரு கல்வெட்டு இவரைப் புகழ்கிறது.

இதன் பிறகு கொங்கு நாட்டை வென்றார் ஆதித்த சோழர். - இச்செய்தியை கொங்குதேச ராஜாக்கள் சரிதம் என்ற நூல் தெரிவிக்கிறது. கொங்கு மண்டலத்திலிருந்து கொண்டு வந்த பொன்னைக் கொண்டு தில்லைசிற்றம்பலத்தின் முகட்டிற்கு பொன் வேய்ந்தான் ஆதித்த சோழர்.

இதன்பிறகு முதலாம் ஆதித்த சோழர் காவிரியின் இரு கரைகளிலும் பல சிவாலயங்களைக் கட்டினார் என்று அன்பில் செப்பேடுகள் தெரிவிக்கின்றன. திருப்புறம்பியத்தில் கருங்கல்லால் ஒரு ஆலயத்தை எழுப்பினார். இது ஆதித்தேஸ்வரம் என்று அழைக்கப்பட்டது. திருவெறும்பியூரில் உள்ள கோவிலும் இவர் காலத்தில் கட்டப்பட்ட தாகும்.

இம்மன்னரது பெயரில் இராஜகேசரி சதுர்வேதி மங்கலம் என்ற 'ஊர் இருந்தது. அது இன்று ராஜகிரி என்று அழைக்கப்படுகிறது. ஆதித்த சோழருக்கு இளங்கோப்பிச்சி, திருபுவனமாதேவி என்ற இரு மனைவியர் இருந்தனர். இவரது மகனான பராந்தக சோழரின் தாய் இவர்களில் யார் என்பது தெரியவில்லை. காளத்திக்கு அருகில் உள்ள தொண்டைமான் ஆற்றூரில் ஆதித்த சோழர் கி.பி.907-ல் இறந்தார். இவர் மரணத்தின் போது சோழப் பேரரசு, சோழ மண்டலத்தையும், தொண்டை மண்டலத்தையும் கொங்கு நாட்டையும் உள்ளடக்கிய பேரரசாகத் திருக்காளத்தி வரை பரவியிருந்தது. -

**முதலாம் பராந்தகன் (கி.பி.907-953)**

முதலாம் ஆதித்த சோழன் இறந்தவுடன் அவர் மகனான முதலாம் பராந்தக சோழன் தஞ்சை மாநகரில் சோழ ராஜ்யத்திற்கு மன்னராக முடிசூட்டிக் கொண்டார். இவர் பரகேசரி என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டார். சோழ ராஜ்யத்தைப் பரப்பவும், வலிமைப்படுத்தவும் முயற்சிகளை மேற்கொண்டார்.

**1) பாண்டிய நாட்டின் மீது படையெடுப்பு**

910-ம் ஆண்டு முதலாம் பராந்தகன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தார். அப்போது ஆண்ட பாண்டிய மன்னரின் பெயர் மூன்றாம் ராஜசிம்ம பாண்டியன் என்பதாகும். இவர் தனக்கு ஆதரவாக இலங்கை அரசன் ஐந்தாம் காசிபன் என்பவரை வரவழைத்தார். ஆனால் பாண்டிய நாட்டுப் படைகளையும், ஈழப்படையையும் வென்னூர் என்ற இடத்தில் முதலாம் பராந்தகன் தோற்கடித்தார். மதுரை மாநகரைக் கைப்பற்றினார். இதனால் மதுரை கொண்ட கோப்பரகேசரி வர்மன் என்று புகழப்பட்டார்.

**2) இலங்கை படையெடுப்பு**

தோற்கடிக்கப்பட்ட ராஜசிம்ம பாண்டியன் சிங்களத்திற்கு ஓடி விட்டான். அப்போது அங்கு அரசனாக இருந்த நான்காம் தப்புலன் என்பவரிடம் தனக்குக் கிடைத்த சுந்தரமுடியையும் பிற அரசு சின்னங்களையும் அடைக்கலமாகக் கொடுத்து விட்டு சேர நாட்டிற்கு சென்று விட்டான், இதனை அறிந்த பராந்தகன் அவற்றைக் கைப்பற்றுவதற்காக ஈழ நாட்டிற்கு பெரும்படை ஒன்றை அனுப்பினார். போரில் ஈழநாட்டு அரசன் தோற்கடிக்கப்பட்டாலும் 'அரச முடியையும், பிற சின்னங்களையும் எடுத்து வரமுடியவில்லை

**3) வாணி மன்னர்கள் தோற்கடிக்கப்படுதல்**

மேலும் பாலாற்றுக்கு வடக்கே சித்தூர் ஜில்லா வரையில் அமைந்திருந்த நிலப்பரப்பாகிய வாணகப்பாடி நாட்டை ஆண்டு கொண்டிருந்த இரண்டு வாணர் குல வேந்தர்களான இரண்டாம் விஜயாதித்தன், இரண்டாம் விக்கிரமாதித்தன் ஆகியோரை வல்லம் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் தோற்கடித்தார் முதல் பராந்தகச் சோழன். வைதுங்க மன்னரையும் இவர் போரில் வென்றார்.

**4) வைதும்பர்கள் தோற்கடிக்கப்படுதல்**

பராந்தகன் வைதும்பர் என்ற தெலுங்கு மன்னரின் எதிர்ப்பை முறியடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. வைதும்பர்கள் ரேநாண்டு என்ற நாட்டை ஆண்டு வந்தார்கள். பராந்தக சோழனின் கடுந்தாக்குதலைத் தாங்க முடியாதவனாய் வைதும்ப அரசனும் இராஷ்டிரக்கூடர்களிடம் சரணடைந்தான். 5) தக்கோலப் போர்

பராந்தக சோழனின் பேரரசு வெகு விரைவில் வளர்ந்து வந்து

விரிவடைந்து விட்டது. ஆனால் இவரிடம் தோற்று ஓடிய மன்னர்கள் பராந்தகன் மீது பழிவாங்கத் துடித்தனர். இராஷ்டிரக்கூடர்கள், கீழைச் சாளுக்கியர்கள், வாணர்கள், வைதும்பர்கள் ஆகியோர் நெஞ்சில் வஞ்சம் தோன்றியது. மேலைக் கங்கர்களும் பராந்தகனுக்குத் தொல்லை கொடுக்க ஆரம்பித்தனர்.

இவ்வாறு சோழ நாட்டின் மீது புரண்டு வீசப்போகும் பகைப் புயலை நன்றாக அறிந்து கொண்ட பராந்தகன் முன்னதாகவே தற்காப்பு நடவடிக்கைகளில் இறங்க முற்பட்டார். தனது மகன் இராஜாதித்தனின் தலைமையில் ஒரு பெரும் படையைத் தயார் நிலைப்படுத்தினார். இப்படை திருநாவலூரில் 'நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இராஷ்டிரக்கூட மன்னர் மூன்றாம் கிருஷ்ணதேவன் கங்க மன்னரின் ஆதரவுடன் தனது படைகளை தக்கோலம் என்ற இடத்தில் நிறுத்தி வைத்தார். தக்கோலம் என்ற ஊர் வடஆற்காடு மாவட்டத்தில் அரக்கோணத்திலிருந்து பத்து கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இந்த ஊருக்கு திருவூறல் என்ற பெயரும் உண்டு.

போர் தக்கோலம் என்ற ஊரில் கடுமையாக நடைபெற்றது. சோழப் படைகள் தங்கள் வீரத்தையும் ஆற்றலையும் வெளிப்படுத்தின. ஆனால் போரின் போது இராஷ்டிரக்கூடத் தளபதி பூதுகன் என்பவன் இராஜாதித்தியரைக் கத்தியால் குத்திக் கொன்றான். இராஜாதித்தியன் உயிரிழக்கவே சோழ வீரர்கள் நிலைகுலைந்தனர். போரின் முடிவில் இராஷ்டிரக்கூடர்கள் வெற்றியடைந்தனர். தக்கோலப் போரில் இராஜாதித்தியன் வீர சொர்க்கம் அடைந்ததாக திருவாலங்காட்டுச் செப்பேடும், லெய்டன் செப்பேடும் கூறுகின்றன. தொண்டை நாடும் திருமுனைப்பாடி நாடும் இராஷ்டிரகூடர் வசமானது. சோழப் பேரரசு சுருங்கிய நிலையடைந்தது. ஆனாலும் தன் உயர் நிலையிலிருந்து சிறிதும் வீழ்ச்சியடையவில்லை

முதலாம் பராந்தகன் மக்களுக்கு தன் ஆட்சிக் காலத்தில் செய்க நன்மைகளை பல கல்வெட்டுக் குறிப்புகளால் அறிகிறோம். ஊராட்சி முறைையைத் திருத்தியமைத்து அதனுடைய நடைமுறை விதிகளையும் அறுதியிட்டார் என்று உத்திரமேரூர் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இவர் பாசனக் கால்வாய்கள் பல வெட்டி . விவசாய வளர்ச்சியை ஏற்படுத்தினார். இவர் இரணியகருப்பம், துலாபாரம் பல புரிந்தார். பிராமணருக்கு பல பிரமதேயங்கள் வழங்கினான்.

தில்லையம்பலத்துக்கு பொன்கூரை வேய்ந்தார். தனது தந்தை ஆதித்தனைப் போல பராந்தகனும் சிவபெருமானுக்கெனப் பல கோவில்களைக் கட்டினார். இவ்வாறு பல துறைகளிலும் பராந்தகனின் செங்கோல் சிறப்புற்று விளங்கியது

முதலாம் பராந்தகன் இறந்த பின்பு அவரது இரண்டாம் புதல்வன் கண்டராதித்தன் முடி சூட்டப்பட்டு சோழ நாட்டிற்கு மன்னரானார்.

**கண்டராதித்திய சோழர்: 953-957**

முதலாம் பராந்தக சோழருடைய மூத்த மகன் இராஜாதித்தன் தக்கோலப் போரில் இறந்து விட்டதால், அவரது இரண்டாவது மகன் கண்டராதித்தன் ராஜகேசரி என்ற பட்டம் புனைந்து பதவி ஏற்றார். இந்த கண்டராதித்த சோழரும், அவருடைய மனைவியாகிய செம்பியன் மாதேவியும் அரசியல் வரலாற்றை விட சைவ சமய வரலாற்றில் சிறந்த இடம் வகிக்கின்றனர். கண்டராதித்தரின் ஆட்சி சோழ மண்டலத்தில் மட்டும் நிலைத்திருந்தது. பாண்டிய மன்னர்கள் தங்களுடைய நாட்டில் மீண்டும் தன்னுரிமை பெற்று ஆளத் தொடங்கினர். பல சதுர்வேதி மங்கலங்களும், நீர்ப்பாசன நீர் நிலைகளும் கண்டராதித்தர் ஆட்சியில் அமைக்கப்பட்டன.

கண்டராதித்தர் சிவபக்தியும், தமிழ் புலமையும் ஒருங்கே அமையப் பெற்றவர் ஆவார். சிதம்பரம் தாலுகா உடையார் குடியில் கிடைத்த கல்வெட்டு ஒன்று கண்டராதித்தரை மேற்கெழுந்தருளிய தேவர் என்று கூறுகிறது. பெங்களூர் மாவட்டத்தில் காணப்படும் கல்வெட்டு ஒன்று இவரை சிவஞான. கண்டராதித்தர் என்ன குறிப்பிடுகிறது. இவரது தேவியார் செம்பியன் மாதேவி எல்லையற்ற

.சிவபக்தி கொண்டவர். இந்த அரசி செங்கற் கோவில்களை கற்றளிகளாக எடுப்பித்தும், பல கோவில்களுக்கு நிவந்தங்கள் செய்தும், அணிகலன்கள் அளித்தும் பல அறச் செயல்கள் புரிந்துள்ளார். இவற்றில் குறிப்பிடத்தக்கது தஞ்சை மாவட்டம் திருநல்லம் என்ற கோனேரி ராஜபுரத்து சிவாலயத்தைக் கற்றளியாக எடுப்பித்து அதற்கு - வழிபாட்டிற்கும், விழாக்களுக்கும் நிவந்தமாக இறையிலி நிலங்களை அளித்தது ஆகும். சைவ சமயத்தில் ஆழ்ந்த பற்றுள்ள கண்டராதித்தர் பிற சமயங்களிடம் சமயப் பொறையுடன் நடந்து கொண்டார்.

**அரிஞ்சய சோழன்: 956-957**

கண்டராதித்த சோழர் இறந்த பிறகு அவரது தம்பி அரிஞ்சய சோழன் ஓராண்டு காலம் மட்டுமே சோழ மன்னராக ஆட்சி புரிந்தார். இவர் ஆற்றூர் துஞ்சிய தேவர் என்று அழைக்கப்படுகிறார். சோழர் களுக்கும் வாணர்களுக்கும் திருமண உறவு மூலம் நட்பை வளர்த்து வாணர்களை இராஷ்டிரக்கூடர்களிடமிருந்து - பிரித்தார். இராஷ்டிரகூடர் களிடமிருந்து தன் தந்தை இழந்த திருமுனைப்பாடி நாட்டையும், தொண்டை நாட்டையும் மீண்டும் கைப்பற்ற எடுத்த முயற்சியில் தோல்வி யடைந்தார். முதலாம் இராஜராஜசோழன் இவர் நினைவாக மேல்பாடி என்ற இடத்தில் சிவாலயம் எழுப்பி அதற்கு அரிஞ்சயேச்வரம் என்று பெயரிட்டார்.

**இரண்டாம் பராந்தக சோழன் : 957-970**

அரிஞ்சய சோழருக்குப் பிறகு அவரது மகன் இரண்டாம் பராந்தகர் சோழ மன்னரானார். இவர் நல்ல உடலமைப்புடன் அழகான தோற்றம் கொண்டவராக விளங்கியதால் சுந்தர சோழர் என்றும் அழைக்கப்பட்டார். இவரது கல்வெட்டுகளில் பரகேசரி என்றும், பாண்டியனை சுரம் , இறக்கிய பெருமாள் என்றும் போற்றப்படுகிறார்.

இரண்டாம் பராந்தக சோழர் கிபி962-ல் சேவூர் என்ற இடத்தில் நடந்த போரில் பாண்டிய மன்னர் வீரபாண்டியனைத் தோற்கடித்தார் என்று ஆனை மங்கலச் செப்பேடுகள் தெரிவிக்கின்றன. ஆனால் பாண்டியர் வலிமை முழுமையாக ஒடுக்கப்படவில்லை. எனவே மறுபடியும் இளவரசர் ஆதித்த கரிகாலன் தலைமையில் ஒரு படையை அனுப்பி வீரபாண்டியனை வென்று அடக்கினார். ஆனாலும் பாண்டிய நாடு முழுவதிலும் சோழர் அதிகாரத்தை நிலைப்படுத்த முடியவில்லை. ஆனால் தொண்டை மண்டலத்தை இவர்இராஷ்டிரக்கூடர்களிடமிருந்து கைப்பற்றிக் கொண்டனர்.

இரண்டாம் பராந்தகனின் மூத்த மகன் ஆதித்த கரிகாலன் சில விரோதிகளால் வஞ்சகமாக கொலை செய்யப்பட்டான். இந்தத் துயரம் பொறுக்கமாட்டாமல் சில நாட்களில் பராந்தகன் இறந்து விட்டார். இவர் இறந்த போது இவரது மனைவி வானவன் மாதேவி உடன்கட்டை ஏறி உயிர் நீத்தாள் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகள் தெரிவிக்கின்றன.

பராந்தக சோழரின் ஆட்சிக் காலத்தில் சுந்தர சோழபுரங்கள் என்ற பிரமதேய கிராமங்களும், சுந்தரசோழப் பேரேரி என்ற நீர்நிலைகளும் அமைக்கப்பட்டன. வீரசோழியம் என்ற தமிழ் இலக்கண நூலில் இரண்டு பாடல்கள் இந்த அரசரின் சமயப் பொறை, தமிழ்ப் புலவர்களை ஆதரித்தது ஆகியவை பற்றிக் கூறுகின்றன. பராந்தக சோழரின் ஆட்சிக் காலத்தில் பழைய தலைநகரமான பழையாறை பல சிற்றூர்களைத் தன்னகத்தே கொண்ட பெரிய தலைநகரமாக விளங்கியது. இந்த பழையாறை நகரம் நந்திபுரம் என்றும் முடிகொண்ட சோழபுரம் என்றும் அழைக்கப்பட்டது.

**உத்தம சோழன் : 970-985**

கண்டராதித்த சோழரின் மகனான உத்தம சோழர் பராந்தக சோழருக்குப் பின் அரியணை ஏறினார். இவர் ஆதித்த கரிகாலரை கொலை செய்தவர் என்று கருதுகின்றனர். ஆனால் இது ஏற்புடையதாக இல்லை. இவர் பரகேசரி என்ற பட்டம் புனைந்திருந்தார். -

இவரது ஆட்சி அமைதியாகவே கழிந்தது. . போர்கள் படையெடுப்புகள் எதுவும் நடைபெறவில்லை. இவரது கல்வெட்டுகள் தொண்டை நாட்டிலுள்ள திருமுல்லை வாயில், காஞ்சிபுரம், திருவொற்றியூர், திருவடந்தை, பழங்கோவில், திருமால்புரம் முதலிய இடங்களில் காணப்படுகின்றன. இவை இவர் காலத்தில் நிலவிய சமுதாய பொருளாதார நிலையைத் தெரிவிக்கின்றன. இவரது தாய் செம்பியன் மாதேவியும், இவரது மனைவிமார்களும் பல .அறச் செயல்கள் செய்தனர். உத்தம சோழர் திருச்சி மாவட்டத்திலுள்ள கோவிந்தபுத்தூரில் உள்ள சிவன் கோவிலுக்கு பல நிவந்தங்கள் செய்துள்ளார். நடுவில் புலி உருவத்தோடு வடமொழியில் உத்தமசோழர் என்ற பெயர் பொறிக்கப் பட்ட இவரது தங்க நாணயம் கிடைத்துள்ளது. சோழ மன்னரின் நாணயங்களில் இதுவே பழமையானது என்று சர்வால்டர் எலியட் என்பவர் கருதுகிறார். உத்தமசோழர் ஆட்சிக் காலத்தில் நாட்டில் அமைதி நிலவியது. மக்கள் நல்வாழ்வு வாழ்ந்தனர்.

## முதலாம் இராஜராஜசோழன்

**(கி.பி.985-1014)**

**(RAJA RAJA CHOLA 1)**

சோழ மன்னர்களில் புகழ் பெற்றவர் ராஜராஜ சோழன் ஆவார். இராஜராஜ சோழனின் இயற்பெயர் அருள்மொழி வர்மன். இவர் இரண்டாம் பராந்தகன் சுந்தர சோழனுடைய இரண்டாவது - மகனாவார். இவர் காலத்தில் சோழப் பேரரசு தென்னிந்தியா முழுவதையும் தன்னகத்தே கொண்ட பேரரசாக விளங்கியது. இவர் பல போர்களில் பங்கு கொண்டு சோழப் பேரரசை விரிவுபடுத்தினார். இவர் காலத்தில் சிற்பம், ஓவியம், இசை ஆகியவை வளர்ந்தது. ஒப்பற்ற வீரமும், ஆற்றலும், நுண்ணறிவும் படைத்த இராஜராஜன் காலத்தில் - தமிழகம் மேன்மை பெற்று விளங்கியது.

இராஜராஜ சோழன் தனது ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளைத் தொகுத்து இனிய தமிழ் மொழியில் கல்வெட்டுகளில் பொறிக்கும் பழக்கத்தை ஆரம்பித்தார். இதுவே மெய்கீர்த்தி எனப்படும். இந்த மெய்க்கீர்த்திகளின் துணை கொண்டு இவரது ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளை அறிய முடியும்.

## இராஜராஜ சோழனின் வெற்றிகள்

### 1) சேர நாட்டின் மீது படையெடுப்பு

இராஜராஜன் பதவி ஏற்றபின் சோழ நாட்டின் எல்லையை விரிவு படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். கி.பி.988-ல் சேர நாட்டின் மீது படையெடுத்தார். அப்போது சேர நாட்டில் ஆட்சி புரிந்தவர் பாஸ்கர இரவிவர்மன். இராஜராஜன் தனது ஆட்சியின் துவக்கத்தில் அனுப்பிய தூதுவன் ஒருவனை, பாஸ்கரவர்மன் உதகை என்ற இடத்தில் சிறையிட்டு, அவமதித்ததாக மூவருலா என்ற நூலை எழுதிய ஒட்டக்கூத்தர் கூறுகிறார். அந்தத் தூதனை மீட்பதற்காகவே இப்படையெடுப்பு நடந்ததாகவும், போர் திருவனந்தபுரத்துக்கு அருகே உள்ள கந்தளூர்ச் சாலையில் நடைபெற்றது. அங்கிருந்த சேரரின் 1. கடற்படைத்தளம் அழிக்கப்பட்டது, தோற்கடிக்கப் பட்டது. உதகை என்னுமிடத்தைக் கைப்பற்றி, சிறையிலிருந்த தூதுவரை மீட்ட பிறகு - மீண்டும் சேரர் படையை விழிஞம் என்ற இடத்தில் தோற்கடித்தார்.

### 2) பாண்டியருடன் போர்

சேர நாட்டின் மீது படையெடுத்த போது இராஜராஜனின் படைகள் பாண்டிய நாட்டின் வழியாகச் சென்றது. அப்போதுபாண்டிய நாட்டு

மன்னராக இருந்த அமரபுயங்கன் சேரமன்னன் பாஸ்கரவர்மனின் நண்பனாக இருந்ததால், சோழப் படைகள் தன் நாட்டின் வழியாகச் சென்ற போது தடங்கல் செய்தான். இதனால் தான் இராஜராஜன் அமரபுயங்கன் மீது கோபம் கொண்டு பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தார். போரில் அமரபுயங்கன் தோற்கடிக்கப்பட்டு பாண்டிய நாடு சோழ நாட்டுடன் இணைக்கப்பட்டது. அதன் பிறகு இரண்டாம் முறையாக சேர நாட்டின் மீது படையெடுத்து கொல்லம், கொடுங்களூர் ஆகிய இடங்களைக் கைப்பற்றினார். . அதன் பின்னர் இராஜராஜ சோழன் குடகு நாட்டின் மீது படையெடுத்து அந்த நாட்டு அரசனைப் பனசோகை என்னுமிடத்தில் தோற்கடித்தார். குடகு நாடு சோழப் பேரரசுடன் சேர்க்கப்பட்டது. பின்னர் மேலைக் கங்கர் நாடாகிய கங்கவாடியையும் வென்று சோழப் பேரரசுடன் இணைத்தார். இந்தப் போர்களில் இராஜராஜ சோழனின் மகன் இராஜேந்திரன் தலைமை வகித்து வெற்றி பெற்றார்.

### 3) இலங்கை படையெடுப்பு

இராஜராஜ சோழனின் மெய்க்கீர்த்திகளிலிருந்து, அவர் ஈழ நாட்டையும் வென்றார் என்று அறியப்படுகிறது. இலங்கையை வென்று சோழப் பேரரசுடன் இணைத்துக் கொள்ளும் பொருட்டே இப்படையெடுப்பு நிகழ்ந்தது. அப்போது இலங்கையை ஐந்தாம் மகிபன் என்பவர் ஆண்டு வந்தார். இராஜராஜ சோழனின் படை வலிமையைக் கண்ட மாத்திரத்திலேயே அஞ்சிய மகிபன் தன் தலைநகரை விட்டு தென் பகுதியிலுள்ள ரோகண நாட்டிற்கு ஓடிவிட்டான். இராஜராஜ சோழன் இலங்கையின் வடபகுதியைக் கைப்பற்றி தனது ஆட்சிக்கு உட்படுத்தினார். அதற்கு மும்முடி சோழ மண்டலம் என்று பெயரிட்டு பொலன்னருவா என்ற நகரத்தைத் தலை நகராக்கினார். அங்கே கருங்கல்லினாலும் சலவைக் கல்லினாலும் ஆன வானவன் மாதேவீச்சுரம் என்ற சிவன் கோவிலைக் கட்டினார்.

### 4) மேலைச் சாளுக்கியருடன் போர்

மேலைச் சாளுக்கிய சத்தயாசிராயனுக்கும் இராஜராஜனுக்கும் இடையே துங்கபத்திரா நதிக்கரையில் நடை பெற்ற பெரும் போரில் தோல்வியுற்ற சத்தியாசிராயன் போர்களத்தை விட்டே ஓடினான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன. சாளுக்கியப் படைத் தளபதி கேசவன் சிறைபிடிக்கப்பட்டான். அதன்பின் சாளுக்கிய நாடு

சூறையாடப்பட்டதாகச் சாளுக்கிய கல்வெட்டு தெரிவிக்கிறது.

### 5) வெங்கிச் சாளுக்கியருடன் போர்

வெங்கிச் சாளுக்கிய நாட்டைப் பிடிக்க சத்தியாசிராயன் தகுந்த சந்தர்ப்பத்தை எதிர் நோக்கியிருந்ததால், இராஜராஜன் வெங்கியில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்ட தீவிரமாக ஈடுபட்டான். அங்கு நிலவிய குழப்பமான சூழ்நிலையில் படையெடுத்து, அந்த நாட்டை ஆண்டு வந்த ஜடா சோழவீமனை வென்று, அரியணைக்குரிய சக்திவர்மனை வெங்கி நாட்டிற்கு வேந்தனாக முடிசூட்டினார். சக்திவர்மனின் தம்பியான விமலாதித்தியனுக்கு தனது மகள் குந்தவையை மணமுடித்துக் கொடுத்தார். இதனால் வெங்கி நாட்டில் இராஜராஜனின் செல்வாக்குப் பரவியது. பின்னர் இந்த மண உறவு இரண்டு நாடுகளும் ஒன்று சேர வழி வகுத்தது. இவை தவிர கலிங்கத்தையும், மால் தீவுகளையும் இராஜராஜன் வென்றார்.

இராஜராஜ சோழன் ஆட்சியில் சோழ சாம்ராஜ்யம் மிக உன்னதமான நிலையில் இருந்தது. பாண்டி மண்டலமும், சேர மண்டலமும், கொங்கு மண்டலமும், நுளம்பப்பாடி நாடு, ஈழமாகிய மும்முடி சோழ மண்டலமும் இவரது ஆட்சிக்குட்பட்டிருந்தது.

இராஜராஜ சோழனுக்கு மும்முடி சோழன், சிவபாத சேகரன், நித்திய வினோதன், ஜெயங்கொண்டான், கீர்த்தி பராக்கிரமன் போன்ற பல சிறப்புப் பெயர்கள் வழக்கத்தில் இருந்தன. இராஜராஜன் உயர்ந்த பண்புகளைக் கொண்டிருந்தார். இவர் பல நாடுகளைக் கைப்பற்றிய ஒரு ஏகாதிபத்தியவாதிதான். ஆனால் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டே ஆட்சி புரிந்தார். எனவே தான் மக்கள் தங்கள் உடல், பொருள், ஆவி அத்தனையையும் இராஜராஜனுக்காகத் தர முன் வந்தனர்.

இராஜராஜன் தன்னுடைய தலைநகரான. தஞ்சாவூரில் மாபெரும் கோயில் ஒன்றை எடுப்பித்து அதற்கு இராஜராஜேசுவரம் . என்று பெயரிட்டார். இந்தக் கோயில் பிற்கால சோழர் காலத்து சிற்பக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இராஜராஜன் தலைசிறந்த நிர்வாகியாக விளங்கினார், இவருடைய ஆட்சிக் காலத்தில் தான் சோழ நாடு முழுவதும் முதன் முதலாக அளக்கப்பட்டது. சோழ அரசர்களில் மட்டும் அல்லாது தமிழ் மூவேந்தர்களிலும் தலைசிறந்த மன்னராக ' விளங்கினார் இராஜராஜசோழன்,

# முதலாம் இராஜேந்திர சோழன்

**(1014 - 1044) |**

**(RAJENDRA CHOLAI)**

கி.பி.1014-ல் இராஜராஜன் இறந்தவுடன் அவரது மகனான முதலாம் இராஜேந்திரன் சோழப் பேரரசராக முடிசூட்டப்பட்டார். இவர் தனது தந்தையின் கொள்கைகளைப் பின்பற்றினார். அவரைப் போலவே தனது சாதனைகளையும், கல்வெட்டுகளின் மூலமாக வெளியிட்டார்.இராஜேந்திரனைப் பற்றிய செய்திகளை திருவாலங்காட்டு செப்பேடுகள் விரிவாகத் தெரிவிக்கின்றன. முதலாம் இராஜேந்திர சோழனின் படையெடுப்புகள்

முதலாம் இராஜேந்திர சோழன் தனது தந்தையின் ஆட்சிக் காலத்திலேயே பல போர்களில் நேரடியாகப் பங்கு கொண்டு வெற்றி அடைந்தார். இவரது மெய்க்கீர்த்தி இவரடைந்த வெற்றிகளை பறைசாற்றுகிறது. இவர் தனது மூன்றாவது ஆட்சி ஆண்டுக்குள் சோழ நாட்டின் வடமேற்கில் உள்ள இடைதுறை நாடு, வனவாசி, கொள்ளிப் பாக்கை; மண்ணைக்கடக்கம் போன்ற நாடுகளைத் தாக்கிக் கைப்பற்றினார்.

### 1) இலங்கை படையெடுப்பு

இவருடைய ஈழ நாட்டு படையெடுப்பைப் பற்றி, இவருடைய மெய்க்கீர்த்தி விரிவாகத் தெரிவிக்கிறது. இராஜராஜன் காலத்தில் இழந்த வடபகுதியைக் கைப்பற்ற சிங்கள அரசன் ஐந்தாம் மகிந்தன் சோழர்கள் மீது போர் தொடுத்தான். எனவே இராஜேந்திர சோழன் இலங்கையின் மீது படையெடுத்தார். போரில் வெற்றி பெற்று இலங்கை முழுவதும் சோழர்களின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது.

2) சேரர்களையும் பாண்டியர்களையும் வெல்லுதல் -

இராஜேந்திரன் சேர நாட்டின் மீது படையெடுத்து தனது ஆதிக்கத்தை ஏற்படுத்தினார். சேர நாட்டை சோழ அரச பிரதிநிதியின் ஆதிக்கத்தின் கீழ் வைத்தார். பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் சென்று, அங்கே தனது மகன் இராஜாதிராஜனை சோழப் பாண்டியன் என்ற பட்டத்துடன் பாண்டிய நாட்டை ஆட புரியும்படி ஏற்பாடு செய்தார்.

### 3) சாளுக்கியருடன் போர்

இராஜேந்திர சோழர் மேலைச் சாளுக்கியர் மீதும் வெங்கி சாளுக்கியர் மீதும் போர் தொடுத்தார். மேலைச் சாளுக்கிய மன்னரான ஜெயசிம்மனை போரில் தோற்கடித்தார். இவர் இரட்டைப்பாடி ஏழரை இலக்கத்தை கைப்பற்றினார் என்று இவரது மெய்க்கீர்த்தி கூறுகிறது. வெங்கி நாட்டில் தனது தங்கை குந்தவையின் கணவன் விமலாதித்தன் இறந்த பிறகு, விமலாதித்தனுக்கும் குந்தவைக்கும் பிறந்த மகனான, இராஜ இராஜ நரேந்தனை வெங்கியின் அரசராக்க அங்கு தலையிட்டார். குழப்பம் விளைவித்த ஜெயசிம்மன் தோற்கடிக்கப்பட்டு விரட்டப் பட்டார்.

### 4) கங்கைப் படையெடுப்பு -

வெங்கியில் அமைதியை ஏற்படுத்தச் சென்ற இராஜேந்திரனின் படைகள் வட நாட்டின் மீது படையெடுத்துச் சென்றன. சக்கரக் கோட்டம், மன்னனைக் கோணம், பஞ்சப்பள்ளி, கோசலநாடு ஆகியவை சோழப் படையால் கைப்பற்றப்பட்டன. பின்னர் வங்காளத்தின் அரசனான மகிபாலன் தோற்கடிக்கப்பட்டார். கங்கை ஆற்றின் நீரை எடுத்துக் கொண்டு சோழப் படைகள் நாடு திரும்பின. இந்த வெற்றிகளால்' இராஜேந்திரன் கங்கை கொண்ட சோழன் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார். இந்தப் படையெடுப்பின் விளைவாக தமிழர் நாகரிகம் வங்கத்தில் புகுந்ததாகக் கூறப்படுகிறது.

### 5) கடாரப் படையெடுப்பு

இராஜேந்திர சோழனின் கடாரப் படையெடுப்பைப் பற்றி அவருடைய மெய்க்கீர்த்தியும், திருவேலங்காடு செப்பேடுகளும் தெரிவிக்கின்றன. இவர் தென் கிழக்காசியாவில் உள்ள கடாரம் எனப்படும் ஸ்ரீவிஜய நகரப் பேரரசு மீது படையெடுத்துச் சென்றார். ஸ்ரீவிஜயப் பேரரசு என்பது மலேசியா, சுமத்ரா, ஜாவா ஆகியவற்றை தன்னகத்தே கொண்டது ஆகும். இராஜேந்திரனின் இந்தப் படையெடுப்புக்கான காரணம் என்ன வென்று தெளிவாகத் தெரியவில்லை. கடாரத்தின் மீது இராஜேந்திரன் பெற்ற வெற்றிக்கு - சிறந்த கப்பற்படையே காரணம். இவ்வெற்றியினால் கடாரம் கொண்டான் என்ற பெயரைப் பெற்றார் இராஜேந்திரன். இராஜேந்திர சோழர் பல சிறப்புப் பெயர்களைப் பெற்றிருந்தார். * அவை உத்தமசோழன், விக்கிரம சோழன், முடிகொண்ட சோழன், - கடாரம்

கொண்டான், பண்டித தோழன், கங்கை கொண்ட சோழன் ஆகியவையாகும், இராஜேந்திர சோழன், கங்கை கொண்ட சோழபுரம் - என்ற புதிய நகரை அமைத்தார். இந்த நகரில் கங்கை கொண்ட

சோழேச்சுரம் என்ற திருக்கோவிலைக் கட்டினார். சிற்பத்திறனில் இக்கோயில் தஞ்சை பெரிய கோவிலுக்கு ஒப்பானதாகும். இவர் சைவ சமயத்தில் பெரிதும் ஈடுபாடு உடையவராக இருந்து வந்தாலும், பிற சமயங்களை மதித்தும் ஆதரித்தும் வந்தார். இவருடைய காலத்தில் சோழப் பேரரசு மிகப் பெரியதாகவும், பெருமைமிக்கதாகவும் விளங்கியது.

## மூன்றாம் குலோத்துங்க சோழன்

**(1178-1216)**

**(KULOTHUNGA CHOLAII)**

இரண்டாம் இராஜாதிராஜ சோழனுக்குப் பிறகு மூன்றாம் குலோத்துங்க சோழன் சோழ நாட்டின் சக்கரவர்த்தியாக முடிசூட்டப் பட்டார். இவர் சோழப் பேரரசர்களின் முறையான பரம்பரையில் வந்தவர் அல்ல. இவருக்கும் இரண்டாம் இராஜாதிராஜனுக்கும் எந்த வகையான உறவு என்பது தெரியவில்லை. இவர் பாரகேசரி என்ற பட்டம் புனைந்து ஆட்சி புரிய ஆரம்பித்தார். மூன்றாம் குலோத்துங்க சோழன் நாற்பது ஆண்டுகள் அரசாண்டார். எனவே இவரது கல்வெட்டுகள் தமிழ்நாடு முழுவதும் அதிகமாகக் கிடைத்துள்ளன. இக்கல்வெட்டுகளில் இவரது ஆற்றல், வீரம் ஆகியவற்றை விளக்கும் மெய்க்கீர்த்திகள் உள்ளன. '

### 1) பாண்டிய மன்னருடன் போர்

மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் பாண்டிய நாட்டை வீரபாண்டியன் ஆட்சி செய்து வந்தான். இந்த வீரபாண்டியன் இலங்கை மன்னனோடு சேர்ந்து கொண்டு அரசியல் சூழ்ச்சியில் இறங்கினான்.

சோழ நாட்டிற்குப் பகைவனாயினான். எனவே குலோத்துங்கன் வீர பாண்டியனுடன் போர்புரிவது மிகவும் அவசியமானதாக இருந்த்து. குலோத்துங்கன் வீரபாண்டியனுடன் போர் புரிந்தான். இப்போரின் போது இலங்கை மன்னர் பராக்கிரமபாகு பாண்டியனுக்குப் படை உதவி செய்தான். ஆனால் பாண்டியப் படைகளும், சிங்களப் படைகளும் தோற்கடிக்கப்பட்டன குலோத்துங்கன் பெரு வெற்றி பெற்றார். குலசேகரப் பாண்டியனின் உறவினர் விக்கிர பாண்டியனுக்கு பட்டம் சூட்டுவிக்கப்பட்டது வீரபாண்டியன் நாட்டை இழந்து ஓடிவிட்டான்..

நாட்டை இழந்து ஓடிய வீரபாண்டியன் சேர மன்னன் உதவி பெற்று அதனை மீட்க முயன்றான். சேர நாட்டுப் நடை உதவியுடன் வீரபாண்டியன் மதுரை நகர் மீது போர் தொடுத்தான். போர் மதுரைக்குக் கிழக்கே உள்ள நெட்டூரில் நடைபெற்றது. இப்போரில் பாண்டிய நாட்டுப் படையும், சேர நாட்டுப் படையும் குலோத்துங்கனால் முற்றிலும் அழிக்கப்பட்டன. வீரபாண்டியன் தனது உறவினர்களுடன் சேர மன்னரிடம் அடைக்கலம் புகுந்தான்.

### 2) ஈழ நாட்டுடன் போர்

சிங்கள மன்னருக்கும், சோழ மன்னருக்கும் நெடுங்காலமாகவே பகைமை இருந்து வந்தது. குலோத்துங்கன் வீரபாண்டியனுடன் போர் செய்த போது சிங்கள மன்னர் பாண்டியனுக்கு படை உதவி செய்தான். இதனால் ஈழ நாட்டின் மீது படையெடுத்து அந்த மன்னரை அடக்க குலோத்துங்கன் முடிவு செய்தார். குலோத்துங்கனின் சிங்களப் போர் அவரது பத்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. . இப்போரில் சிங்கள மன்னர் சோழர் படைக்கு அடி பணிய வேண்டிய தாயிற்று. ஆனாலும் சிங்கள மன்னர் நசங்கமல்லன் 'இருமுறை பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து இராமேஸ்வரத்தைக் கைப்பற்றினான் என்று சிங்களத்து வரலாறு தெரிவிக்கிறது.

### 3) கொங்கு நாட்டின் மீது போர்

மூன்றாம் குலோத்துங்கன் ஈழ நாட்டு மன்னனை வென்ற பின் கொங்கு நாட்டின் மீது படையெடுத்தார். கொங்கு நாட்டு மன்னர் சோழருக்கு திறை செலுத்துவதை நிறுத்திவிட்டார். எனவே தான் குலோத்துங்கன் கொங்கு நாட்டின் மீது படையெடுத்து அந்நாட்டு மன்னனை போரில் வென்று அதன் தலைநகர் கருவூரைக் கைப்பற்றினார். தோல்வியடைந்த கொங்கு நாட்டு மன்னன்

குலோத்துங்கனிடம் அடைக்கலம் புகுந்தான். எனவே குலோத்துங்கன் அவனுக்குரிய நாட்டை வழங்கி தனக்குட்பட்ட சிற்றரசனாக ஆட்சி செய்து வருமாறு செய்தான்.

### 4) வடநாட்டில் நிகழ்த்திய போர்

குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில் சித்தூர், நெல்லூர், கடப்பை மாவட்டங்களில் தெலுங்கு மன்னர்கள் ஆட்சி செய்து வந்தனர். அவர்கள் தெலுங்குச் சோடர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் சோழ மன்னருக்கு திறை செலுத்தி குறுநில மன்னராகவே இருந்து வந்தனர். ஆனால் கடப்பை மாவட்டத்தில் ஆட்சி செய்து வந்த நல்லசித்தன தேவ சோழ மகராசன் என்ற தெலுங்கு சோடன் காஞ்சியைக் கைப்பற்றிக் கொண்டு சோழ மன்னருக்கு கப்பம் செலுத்துவதை நிறுத்தினான். எனவே மூன்றாம் குலோத்துங்கன் அவன் நாட்டு மீது படையெடுத்துச் சென்று நல்ல சித்தன தேவனை வென்று அவனை குறுநில மன்னனாக்கினார். மேலும் கப்பம் பெற்: கொண்டு காஞ்சியைக் கைப்பற்றி வெற்றி மாலை சூடினார் குலோத்துங்கன்.

### 5) பாண்டிய மன்னருடன் மறுபடியும் போர்

குலோத்துங்கன் உதவியினால் பாண்டி நாட்டில் பட்டம் பெற்ற விக்கிரம பாண்டியன் இறந்த பின்பு அவனது மகன் சடையவர்மன் குலசேகரப் பாண்டியன் மதுரையில் அரியணை ஏறினான். இவன் தன் ஆட்சித் தொடக்கத்தில் சில ஆண்டுகள் வரையில் குலோத்துங்கனுக்கு உட்பட்டிருந்தான். பின்னர் நன்றி மறந்து குலோத்துங்கனின் மேலாட்சியை எதிர்த்துக் கிளர்ச்சியில் ஈடுபட்டான். சோழர்களின் ஆதரவுடன் நாடும் அரசும் பெற்ற பாண்டியர் இவ்வாறு சோழர்களின் பகைவர்களுடன் சேர்ந்து கொண்டு சோழ நாட்டிற்குத் தீங்கிழைத்ததால் குலோத்துங்கன் பெரும் சினம் கொண்டார். எனவே ஒரு பெரும் படையுடன் புறப்பட்டார். போர் மட்டியூர், கழிக்கோட்டை ஆகிய இடங்களில் நடைபெற்றது. பாண்டியப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. புறமுதுகிட்டு ஓடின. குலோத்துங்கன் மதுரை நகரினுள் புகுந்து பல இடங்களை அழித்தார். இந்த வெற்றிக்குப் பிறகு சோழ பாண்டியன் என்ற பட்டம் புனைந்து கொண்டார் குலோத்துங்கன்.

இவ்வாறு சேர நாடு, பாண்டிய நாடு ஆகிய இரண்டையும் வென்று ஒப்பற்ற வீரனாகத் திகழ்ந்ததால் திரிபுவன வீரதேவன் என்ற சிறப்புப் பட்டம் பெற்றார் மூன்றாம் குலோத்துங்கன்.

**சோழ ராஜ்யத்தின் பரப்பு**

மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் சேர நாடு, பாண்டி நாடு கொங்கு நாடு, கங்க நாடு, தெலுங்கு நாடு போன்ற புற நாடுகள் எல்லாம் சோழ ராஜ்யத்திற்கு உட்பட்டிருந்தன. இந்தப் பெரிய ராஜ்யத்தில் ஆட்சி அமைதியாக நடைபெற்றது. சோழப் பெருவேந்தர்களுள் ஒருவனாக வைத்து பாராட்டத்தக்க குணங்கள் படைத்த பெரு வீரன் மூன்றாம் குலோத்துங்கன் ஆவார். அ. மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலும் கங்கை கொண்ட சோழபுரமே தலைநகரமாக தொடர்ந்து செயல்பட்டு வந்தது பழையாறை இரண்டாம் தலைநகரமாக விளங்கியது. விக பசாழபுரம் இவர் ஆட்சியில் அரசன் தங்கி இருக்க கூடிய - நகரமாக இருந்தது என்று தெரிகிறது.

**சோழப் பேரரசின் வீழ்ச்சி**

மூன்றாம் குலோத்துங்கனின் காலத்திற்குப் பிறகு சோழப் பேரரசு நிலை தளர்ந்து வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. பேரரசின் தெற்குப் பகுதியிலிருந்து பாண்டியர்களுடைய படையெடுப்பும், மேற்கிலிருந்து ஹொய்சள வம்ச அரசர்களுடைய வெற்றிகளும், பேரரசுக்கு முன்பு அடங்கியிருந்த பல சிற்றரசர்கள் செய்த கலகங்களும் சோழப் பேரரசின் வீழ்ச்சிக்கு முக்கியக் காரணங்களாயின. சோழப் பேரரசின் இறுதிக் காலத்தில் மூன்றாம் இராஜராஜன், மூன்றாம் இராஜேந்திரன் ஆகிய இருவரும் ஆட்சி செய்தனர்.

**a) மூன்றாம் இராஜராஜன் : 1218 - 1256**

மூன்றாம் குலோத்துங்க சோழருக்குப் பிறகு மூன்றாம் இராஜராஜன் அரியணை ஏறினார். அப்போது பாண்டிய மன்னராக இருந்தவர் மாறவர்மன் சுந்தரபாண்டியன் என்பவராவார். இதுவரை சோழர்கள் பாண்டிய நாட்டில் செய்த தீச்செயல்களுக்கு பழி தீர்க்க

நினைத்தார் இவர். எனவே 1219-ல் சுந்தரபாண்டியர் சோழ நாட்டின் மீது படையெடுத்தார். தஞ்சை, உறையூர் ஆகிய ஊர்களைக் கைப்பற்றி தீக்கரை யாக்கினார். ஆனால் மூன்றாம் இராஜராஜனை தனக்குக் கப்பம் கட்டும்படி செய்து விட்டு, சோழ நாட்டை மீண்டும் அவரிடமே ஒப்படைத்துவிட்டு மதுரை திரும்பினார்.

இதற்கிடையில் சோழருக்கு அடங்கியிருந்த சிற்றரசர்களும் தொல்லை கொடுக்க ஆரம்பித்தனர். மகத நாட்டு வாணகோவரையர், திருமுனைப்பாடி நாட்டு காடவராயர், தெலுங்குச் சோழர் போன்றவர்கள் சோழ அரசருக்கு கப்பம் கட்ட மறுத்தனர். இதனால் சோழப் பேரரசுக்குப் பல இன்னல்கள் ஏற்பட்டன. ஏனென்றால் இந்த சிற்றரசர்கள் கப்பம் செலுத்த மறுத்ததால், மூன்றாம் இராஜராஜன் மாறவர்ம சுந்தர பாண்டியனுக்கு செலுத்துவதாக ஒப்புக் கொண்ட கப்பத்தைச் செலுத்த முடியவில்லை.

எனவே 1219-ல் மாறவர்மன் சுந்தரபாண்டியர் மீண்டும் சோழ நாட்டின் மீது படையெடுத்தார். முடிகொண்ட சோழபுரரம் கைப்பற்றப் பட்டது. மூன்றாம் இராஜராஜன் பேரரசு இல்லாத பேரரசனானான். ஆனால் இவரைக் காடவர் குலத்து கோப்பெருஞ் சிங்கன் கைது செய்து சிறையிலடைத்தான். வீரசிம்மன் என்ற ஹொய்சாள அரசனின் உதவியால் 1231-ல் விடுதலை செய்யப்பட்டு, 1256-ல் தான் இறக்கும் வரை பெயரளவில் அரசனாக இருந்தார்.

**b) மூன்றாம் இராஜேந்திரன் : 1256-1279**

சாளுக்கிய சோழ வம்சத்தின் கடைசி அரசன் மூன்றாம் இராஜேந்திரன் ஆவார். இவர் ஆட்சியிலும், சூழ்ச்சித் திறனிலும் ஒப்பற்று விளங்கினார். பாண்டிய நாட்டின் மீது போர் தொடுத்து, மாறவர்மன் சுந்தர பாண்டியனை வென்று, தன் தகப்பன் காலத்தில், ஏற்பட்ட தோல்வியின் இழிவுகளை நீக்கிக் கொண்டான். ஆனால் மாறவர்மன் சுந்தர பாண்டியனுக்குப் பிறகு 1251-ல் பதவி ஏற்ற சடையவர்மன் சுந்தர பாண்டியன் 1257-ல் மூன்றாம் இராஜேந்திரனை தோற்கடித்தார். சோழ நாடு பாண்டியப் பேரரசின் ஒரு பகுதியாக மாறியது. மூன்றாம் இராஜேந்திரனுக்குப் பிறகு சோழவம்சமே அழிந்து

விட்ட து.

## சோழர் கால கலை, இலக்கிய வளர்ச்சி

**(CHOLAARTAND LITERATURE)**

சோழ மன்னர்கள் கலை வளர்ச்சிக்கு ஊக்கமளித்தார்கள். கட்டிடக் கலை, சிற்பக்கலை, ஓவியம், நாட்டியம் ஆகியவை வளர்ச்சியடைந்தன. முக்கியமாக சோழ மன்னர்கள் தங்களது வருவாயின் பெரும்பகுதியை ஆலயங்கள், அரண்மனைகள் மற்றும் பெரிய கட்டிடங்கள் கட்டுவதற்குச் செலவு செய்தனர். இவர்களது கட்டிடக்கலை பல்லவர்களின் கட்டிடக் கலை அடிப்படையில் அமைந்திருந்தாலும் தங்களுக்கெனத் தனித் தன்மையையும் வகுத்துக் கொண்டார்கள். இவர்கள் காலத்தில் ஏராளமான ஆலயங்கள், அரண்மனைகள் கட்டப்பட்டன.

### கட்டிடக் கலை வளர்ச்சி

சோழ மன்னர்கள் கட்டிய கோவில்கள் அவர்களது கட்டிடக் கலை வளர்ச்சிக்கு சிறந்த சான்றுகளாகும். சோழர்களின் கோவில்களை அதன் அமைப்பு, காலம், தன்மை ஆகியவைகளின் அடிப்படையில் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

### 1) முற்காலச் சோழர் கோவில்கள் -

கி.பி.850-க்கும் கி.பி.985க்கும் இடைப்பட்ட காலத்தில் கட்டப் பட்டவை முற்கால கோவில்கள் ஆகும். இந்தக் காலத்தில் கட்டப்பட்ட ஆலயங்கள் அளவில் சிறியவை. ஆனால் ஒரு - திட்டவட்டமான வடிவத்தைப் பெற்றிருந்தன. அவைகளில் முக்கியமானவை வருமாறு:

1) நார்த்த மலையில் கட்டப்பட்ட விஜயாலய சோழேஸ்வரம். இந்த ஆலயம் சோழ சாம்ராஜ்யத்தை நிறுவிய சோழனால் கட்டப்பட்டது. இந்த ஆலயத்தின் முன்பகுதியில் காணப்படும் தூண்கள் பல்லவர் கால பாணியைச் சார்ந்தது ஆகும். கர்ப்ப கிரகத்தின் மேல் அடுக்கு விமானங்கள் அமைக்கப்பட்டிருந்தது.

'2) கண்ணனூர் என்ற இடத்தில் கட்டப்பட்ட பாலசுப்பிரமணிய ஆலயம், கும்பகோணத்தில் கட்டப்பட்ட நாகேஸ்வர ஆலயமும் குறிப்பிடத் தகுந்தவை. இந்த ஆலயங்களில் சோழ அரசர், அரசி உருவங்கள்

காணப்படுகின்றன. முதலாம் ஆதித்தன் காலத்தில் கட்டப் பட்ட திருக்காட்டுத் தலையிலுள்ள சுந்தரேஸ்வரர் ஆலயமும், திருசெந்துரையில் உள்ள மகாதேவர் ஆலயமும் குறிப்பிடத்தக்கவை.

3) கொரங்கநாதர் ஆலயம்: இதனைக் கட்டியவர் முதலாம் பராந்தக சோழன் ஆவார். இது திருச்சி மாவட்டத்தில் ஸ்ரீனிவாசநல்லூரில் அமைந்துள்ளது. இது மிகவும் அழகான ஆலயமாகும். ஐம்பது அடி நீளமுள்ள இந்தக் கோவிலில் ஆண், பெண் தெய்வங்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன. சரஸ்வதி, லட்சுமியின் சிற்பங்கள் புகழ் பெற்றவை. முற்கால சோழர்களின் கட்டிக் கலைக்கு இந்தக் கோயில் சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

4) இவை தவிர தஞ்சாவூர் மாவட்டத்தில் புள்ளமங்கை என்ற ஊரில் முதலாம் பராந்தகனால் கட்டப்பட்ட பிரம்மபுரீஸ்வரர் ஆலயம் புகழ் பெற்றது ஆகும். திருவிடைமருதூரில் கட்டப்பட்ட மகாலிங்க சுவாமி ஆலயம், கொடும்பாலூரில் உள்ள முக்குண்டேஸ்வரர் ஆலயம் ஆகியவை முற்கால சேசாழர்கால கட்டிடக் கலை வளர்ச்சியைப் பறைசாற்றுகின்றன

**சோழர் கால ஓவியங்கள்**

சோழர்களின் ஆட்சிக் காலம் ஒரு கோவில் சகாப்தமாகும். இந்த சகாப்தத்தில் எழுந்த கோவில்களில் வண்ண ஓவியங்களை சோழர்கள் தீட்டி மகிழ்ந்தனர். பாரிபாடலில் சோழரின் கோநகரமான காவிரிப்பூம் பட்டிணத்திலிருந்த கோவில் சுவர்களில் ஓவியங்கள் இருந்தன என்ற குறிப்பு காணப்படுகிறது.

a) சோழர்கால ஓவியங்களில் மிகவும் பழமையானவை நார்த்தா மலைக் குன்றிலுள்ள விஜயாலயச் சோழேச்சுவரம் கோவிலில் உள்ளவை யாகும். இந்தக் கோவிலின் அகநாளிகைச் சுவர்களிலுள்ள காளியின் நடன ஓவியம்; கோவிலின் பக்க அறைக் கூறைகளில் காந்தர்களின் ஓவியம் ஆகியவை சிறப்புடையது ஆகும். இவை தவிர முதலாம் ஆதித்தன் காலத்திய கண்ணனூர் பாலசுப்ரமணியர் கோவிலிலும் ஓவியச் சின்னங்கள் காணப்படுகின்றன. இவை தொடக்க காலச் சோழரின் ஓவியங்களாகும்.

b) தஞ்சை பெரிய கோவிலில் குறிப்பிடத்தக்க சோழர் கால ஓவியங்களைக் காணலாம். இந்த ஓவியங்களை முதன் முதலாக

வெளி உலகிற்கு அறியச் செய்தவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் எஸ்.கே.கோவிந்தசாமி ஆவார். 1930-ல் இவர் சோழரின் ஓவியத் தொகுப்புகளைக் கண்டுபிடித்தார்.

பெரிய கோவிலின் மேற்குச் சுவரில் சுந்தரமூர்த்தி நாயனாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. சிவபெருமான் ஒரு திருமண மண்டபத்தில் வயோதிக உருவத்தில் உள்ளார். அவரது ஒரு கையில் தாழங்குடையும், மற்றொரு கையில் பனையோலையும் உள்ளன. அருகில் பலர் காணப்படுகின்றனர்.

அவர்களின் முகத்தில் வியப்பு, ஐயம், கோபம் முதலிய மாறுபட்ட ' உணர்ச்சிகள் காணப்படுகின்றன. மணமகன் சுந்தரர் தனது திருமணத்தைத் தடுக்க வந்த கிழவரை வியப்போடு பார்க்கிறார். இவ்வாறு தடுத்தாட் கொண்ட வரலாறு ஓவியமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

c) சுந்தரர் கயிலைக்குச் செல்லும் காட்சியும் சித்தரிக்கப்பட்டுள்ளது. சுந்தரர் வெள்ளை யானை மீது அமர்ந்துள்ளார். சேரமான் பெருமாள் சோடிக்கப்பட்ட குதிரை மீது முன் செல்கிறார். பின்னால் யானை மீது அமர்ந்து வரும் சுந்தரரைத் திரும்பிப் பார்க்கிறார். மேலே வான வீதியில் தேவர்கள் ஆடியும் பாடியும் இவர்களை வரவேற்கின்றனர். கீழே மீன்கள் நிரம்பிய அலைகடல் காட்சியளிக்கிறது. இந்தக் காட்சிகள் அற்புதமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன.

d) மற்றொரு ஓவியமும் சிறப்பாக உள்ளது. சிவபெருமான் தட்சிணாமூர்த்தியாக புலித்தோல் மீது அமர்ந்துள்ளார். அருகில் பூத கணங்கள் அமர்ந்துள்ளன. நந்தி ஒன்று படுத்துள்ளது. தேவமாதர் இருவர் நடனமாடுகின்றனர். இந்தக் காட்சியும் அழகாக வரையப்பட்டுள்ளது.

e) எல்லாவற்றிற்கும் மேலாக முப்புரத்தை எரிக்கச் சிவபெருமான் நிற்கும் காட்சி சிறப்பானதாகும். மூன்று கண்களும் எட்டு தோள்களும், கைகளிலேந்திய பல படைகளும், வில்லை - வளைத்து அம்பை எய்யாமலேயே தன் புன்முறுவலால் முப்புரத்தை எரிக்கும் காட்சியும், எரிந்த பின் வெற்றி கண்ட அவர் பெருமிதமும் அழகாக வரையப் பட்டுள்ளன. அசுரர்கள் எதிர்த்துத் தாக்கும் முகபாவனைகள், துர்க்கை , முருகன் ஆகியோரின் ஓவியங்களும் வரையப்பட்டுள்ளன.

1) இறுதியாக, சோழர்கால ஓவியங்களில் குறிப்பிடத்தக்கவை நடனப் பெண்களின் ஓவியமாகும். பெரிய கோவிலில் பல்வேறு கோணங்களில் நடனப் பெண்களின் உருவங்கள் வரையப்பட்டுள்ளன. இந்தப் பெண்களின் பெரிய வட்டமான கொண்டைகள், சுருள் சுருளாகத் தொங்கும் மயிர்த்திரள்கள், கையிலேந்தியிருக்கும் இசைக்கருவிகள், நடன ஆடை, மற்றும் அணிகலன்கள் ஆகியவை சோழர் காலத்தில் நடனக் கலை பெற்றிருந்த மேம்பாட்டை அறிய உதவுகின்றன.

சுருக்கமாகக் கூறினால், சோழர் காலப் பண்பாட்டு வரலாற்றை அறிய சோழரின் ஓவியங்கள் தலை சிறந்த சான்றுகளாக உள்ளன. பெரும்பான்மையான ஓவியங்கள் யாவும் இராஜராஜ சோழர் காலத்தில் வரையப்பட்டதாகும்.

-

# UNIT IV

# இரண்டாம் பாண்டியப் பேரரசு

**(SECOND PANDYAN EMPIRE)**

மூன்றாம் குலோத்துங்க சோழன் கி.பி.1218-ல் இறக்கும் வரை பாண்டியர்கள் ஆட்சி சோழர்களின் ஆட்சிக்கு உட்பட்டே இருந்தன. ஆனால் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்துக்குப் பிறகு சோழப் பேரர்சு வலிமையிழந்த போது இரண்டாம் பாண்டியப் பேரரசு எழுச்சி அடைந்தது. பாண்டியர்கள் சோழர்கள் ஆதிக்கத்திலிருந்து. விடுபட்டனர். பாண்டிய நாடு ஒரு சுதந்திர நாடாக எழுச்சியடைந்தது. முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்திலிருந்து இரண்டாம் பாண்டியப் பேரரசு எழுச்சியடைந்தது.

**முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் : கி.பி.1216-1238**

இவர் திறமையும் அதே நேரம் பேராசையும் கொண்ட மன்னர். கி.பி.1219-ல் சோழ நாட்டின் மீது படையெடுத்து அதன் மன்னர் மூன்றாம் - இராஜராஜனைத் தோற்கடித்தார். எனவே இவர் பாண்டியர்களுக்கு திரை செலுத்தும் சிற்றரசர் ஆனார். இவரது ஆட்சிக் காலத்தில் கொய்சாளர்கள் வலிமை பெற்று - விளங்கினர். அவர்களுடன் சோழர்கள் மண உறவை ஏற்படுத்திக் கொண்டு பாண்டியர்களுக்கெதிராகச் செயல்பட்டனர். இதனால் உறையூர், தஞ்சை போன்ற நகரங்கள் கொளுத்தப்பட்டன.

**இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்: கி.பி.1239-1251**

இவருடைய ஆட்சிக் காலத்தில் சோழ நாட்டை மூன்றாம் - இராஜேந்திரன் ஆட்சி புரிந்து வந்தார். இவர் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து சில வெற்றிகளையும் பெற்றார். ஆனால் சுந்தரபாண்டியன், கொய்சாள மன்னர் வீரசோமேஸ்வரனுடன் உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டார். இதன் மூலம் சோழர்கள் விரட்டியடிக்கப்பட்டனர்.

**முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன்: கி.பி.1257-12681/**

இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்குப் பிறகு பாண்டிய நாட்டை முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சி 1, புரிந்தார். இவரது காலத்தில் தான் பாண்டிய நாடு புகழ் பெற்று விளங்கியது. பேரரசின் எல்லை விரிவடைந்தது. ஒரு பேரரசாக வளர்ச்சியடைந்தது. வடக்கில் நெல்லூர், கடப்பா ஆகிய மாவட்டங்கள் வரை பாண்டிய நாடு

விரிவடைந்தது. .

## இவரது வெற்றிகள்

1) சேர, சோழ மன்னர்கள் தோற்கடிக்கப்பட்டனர். அவர்கள் பாண்டியரின் ஆதிக்கத்தை ஏற்று கப்பம் செலுத்தி வந்தனர்

2) கொய்சாளர்கள் தோற்கடிக்கப்பட்டனர் அவர்களுக்கு சொந்தமான கண்ணனூர் கோப்பம் என்ற கோட்டை பிடிக்கப்பட்டது. அவர்களது படைத் தளபதியான சிங்கணர் என்பவர் கொல்லப்பட்டார்.

3) இலங்கை மீது படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. இலங்கை மன்னர் தோற்கடிக்கப்பட்டார். அங்கிருந்து ஏராளமான குதிரைகள், யானைகள், முத்துக்கள் ஆகியவற்றைக் கைப்பற்றி வந்தார் சடையவர்மன் சுந்தரபாண்டியன்.

4) கடவ கோப்பெருஞ்சிங்கன் என்ற மன்னர் தோற்கடிக்கப் பட்டார். அவரது சேத்தமங்கலம் என்ற கோட்டையைக் - கைப்பற்றினார் சுந்தரபாண்டியன்.

5) மேலும் பாணர்களையும், கொங்கு நாட்டையும் வென்று பாண்டியப் பேரரசுடன் இணைத்தனர். .

6) தெலுங்குப் பகுதியைச் சேர்ந்த சோழ குறுநில மன்னரான கந்த கோபாலனைத் தோற்கடித்துக் கொன்றார். காஞ்சியும் கைப்பற்றப் பட்டது. காஞ்சி பாண்டியப் பேரரசின் இரண்டாம் தலைநகராக்கப் பட்ட து.

7) வாரங்கல் நாட்டைச் சேர்ந்த காகத்திய மரபு மன்னர் கணபதி என்பவர் தோற்கடிக்கப்பட்டார். அவரது நாட்டின் ஒரு பகுதி பாண்டிய நாட்டுடன் இணைக்கப்பட்டது.

## சடையவர்மன் சுந்தரபாண்டியனின் பெருமை

இவர் இந்து மதத்தை பெரிதும் ஆதரித்தார். சிதம்பரம் ஸ்ரீரங்கம் ஆலயங்களுக்கு அதிக அளவில் நன்கொடை அளித்தார் இந்த கோவில்களின் மேற்கூரையை பொன் தகட்டால் வேய்ந்தார் என்று கூறப்படுகிறது. இதனால் பொன் வேய்ந்த பெருமாள் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார். பல சமணப் பள்ளிகளுக்கும் தாராளமாக நன்கொடை வழங்கினார். இவரது ஆட்சியின் தெற்கு எல்லையாக குமரி விளங்கியது. இவரது ஆட்சிக் காலத்தை இரண்டாம் பாண்டியப்

பேரரசின் பொற்காலம் என்று கூறலாம்.

**முதலாம் மாறவர்மன் குலசேகரபாண்டியன் : கி.பி.1268-1311**

இவர் பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்த கடைசி சிறந்த அரசன் ஆவார். இவர் சிறந்த வெற்றி வீரர் ஆவார். இவர் சேரர்களைத் தோற்கடித்து கொல்லத்தைக் கைப்பற்றினார். இதனால் கொல்லம் கொண்டான் என்று அழைக்கப்பட்டார்.

இலங்கை மீது படையெடுத்தார் குலசேகரபாண்டியன். அந்த நாட்டின் மீது பெரும் அழிவை ஏற்படுத்தினார். அங்கிருந்து புத்த பெருமானின் பல நினைவுச் சின்னங்களைக் கவர்ந்து பார்த்தார்.

இவர் காலத்தில் தான் உலகப் புகழ் பெற்ற வெனிஸ் நகரப் பயணியான மார்க்கோபோலோவும், முஸ்லீம் வரலாற்று ஆசிரியரான வாசப் என்பவரும் பாண்டிய நாட்டிற்கு வருகை புரிந்தனர். இவர்களது பயணக் குறிப்புகள் மூலம் அக்காலப் பொருளாதார, சமூக, சமய நிலை பற்றி நாம் அறிந்து கொள்ள முடிகிறது. பேரரசின் வீழ்ச்சி

இரண்டாம் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் இறுதிக் காலம் அமைதி நிறைந்ததாகக் காணப்படவில்லை. இவரது இரண்டு மகன்களான வீரபாண்டியரும், சுந்தரபாண்டியனும் வாரிசுரிமைப் போரில் ஈடுபட்டனர். இதுபற்றி வாசப் என்ற வரலாற்றாசிரியர் விளக்கிக் கூறுகிறார். இளைய மகனான வீரபாண்டியர் ஆற்றலும், கூர்மையான மதியும் பெற்ற போர் வீரராகத் திகழ்ந்ததால், தனக்குப் பிறகு நாடாளும் உரிமையை இவருக்கே குலசேகர பாண்டியன் வழங்கினார். ஆனால் தனது உரிமையைப் புறக்கணித்த சுந்தர பாண்டியன் வெகுண்டெழுந்து கி.பி.1310-ல் தனது தந்தையைக் கொன்றான்.

இதனைக் கண்ட வீரபாண்டி, தனது தந்தையின் இறப்புக்குப் பழிவாங்கத் துடித்தான். படை ஒன்று திரட்டி சுந்தரபாண்டியனை எதிர்த்தான். ஆனால அந்தப் போரில் வீரபாண்டி காயமடைந்தான். பின்னர் மறுபடியும் பெரும் படை ஒன்றைத் திரட்டிக் கொண்டு சுந்தர பாண்டியனை ஒழித்துக் கட்டச் சென்றான். சுந்தரபாண்டியனைத் தோற்கடித்து, மதுரையை விட்டு விரட்டினான். துர்த்தப்பட்ட சுந்தரபாண்டியன் அப்போது வெற்றிகரமாக தென்னிந்தியாவில் *

படையெழுச்சியினை நடத்திக் கொண்டிருந்த மாலிக்காபூரிடம் முறையிட்டான்.. இதனைனயேய நல்ல வாய்ப்பாகக் கொண்டு மதுரையின் மீது மாலிக்கர்பூர் படையெடுத்தார் என்ற வாசப் விவரிக்கிறார். 1311 ஏப்ரல் மாதம் மாலிக்காபூர் மதுரையின் மீது படையெடுத்தார். மதுரை தோற்கடிக்கப்பட்டு, தீக்கிரையாக்கப் பட்டது. சொக்கநாதர் ஆலயம் கொளுத்தப்பட்டது. மதுரையில் முகமதிய ஆளுநர் ஒருவர் நியமிக்கப் பட்டார். பாண்டிய நாட்டில் மின்னலெனத் தோன்றி அழிவுகளை நிகழ்த்தி விட்டு மின்னல் போல் மறைந்தார். இவர் பாண்டியரை அடக்கி அடிமை கொள்ளாமல் திரும்பி விட்டான்.

மாலிக்காபூரின் படையெழுச்சி பாண்டிய நாட்டின் படை பலத்தையும், நாட்டின் வளத்தையும், பொருளாதார நிலையையும் சீர்குலைத்தது. இந்த படையெழுச்சிக்குப் பின்பு பாண்டியரது பேரரசு வீழ்ச்சியினை நோக்கி விரைந்து சென்றது. காலம் செல்லச் செல்ல தனது மேலாண்மையை இழந்து, திருநெல்வேலி மாவட்டத்தின் சில பகுதிகளில் மட்டுமே ஆட்சி உரிமை பெற்ற அரசாகச் சுருங்கியது. கி.பி.பதினோறாம் நூற்றாண்டில் பாண்டியர் அரசு தமிழக அரசியல் வட்டத்திலிருந்து மறைந்து ஒழிந்தது.

## மார்க்கோபோலோவின் பயணக் குறிப்புகள்

மத்திய காலத்தில் மிகப் புகழ் பெற்ற பயணி மார்க்கோபோலோ என்பவராவார். இவர் வெனிஸ் நகரைச் சேர்ந்தவர். இவரும் இவரது தந்தையும் கி.பி.1271-ல் பயணம் புறப்பட்டனர். முதலில் பெர்சியா, ஆப்கானிஸ்தானம் சென்றனர். உலகின் கூரையாக விளங்கும் பாமிர் பீடபூமி வழியாகப் பயணத்தைத் தொடர்ந்தனர். பின்னர் சீனா சென்று சீன அரசர் குப்ளேகான் அவையில் அமைச்சராகப் பணிபுரிந்தார். 1291ல் சீனாவிலிருந்து புறப்பட்டு இலங்கை வழியாக தமிழகம் வந்தார் மார்க்கோபோலோ. அப்போது பாண்டிய மன்னராக இருந்தவர் மாறவர்மன் குலசேகரப் பாண்டியன் என்பவராவார். மார்க்கோபோலோ தான் எழுதிய பயணக் குறிப்புகளில் பாண்டியப் பேரரசில் நிலவிய, சமுதாயப், பொருளாதார நிலை பற்றி எழுதியுள்ளார். இடைக்காலப் பயணிகளின் இளவரசர் என்று அழைக்கப்பட்டவா மார்க்கோபோலோ ஆவார்.

## முத்துக் குளித்தல்

முத்துக் குளித்தல் பாண்டிய நாட்டிலுள்ள முக்கியமா தொழில்

ஆகும். மார்க்கோபோலோ முத்துக் குளித்தலைப் பற்றி தனது குறிப்புகளில் விவரமாகக் குறிப்பிட்டுள்ளார். முத்துக் குளித்து மூலம் கிடைத்த முத்துக்களில் பத்தில் ஒரு பகுதி மன்னரும் அளிக்கப்பட்டது. விலை உயர்ந்த முத்துக்களை அரசரே ஆர்வத்துடன் வாங்கினார். பாண்டிய நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட முத்து உலகம் பல்வேறு பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இதனால் பாண்டிய. நாட்டின் செல்வம் அதிகரித்தது. .

**குதிரை வர்த்தகம் -**

பாண்டிய நாட்டு மக்களுக்கு குதிரையை வளர்ப்பதற்குரிய அறிவு போதுமானதாக இல்லை. எனவே அரேபியாவிலிருந்து குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. குதிரைகள் காயல்துறை முகத்தில் வந்து இறங்கியது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் இரண்டாயிரம் குதிரைகளைப் பாண்டிய அரசர்கள் இறக்குதி செய்தனர். ஆனால் பராமரிப்பு முறை தெரியாததால் ஆண்டுதோறும் ஏராளமான குதிரைகள் இறந்தன. நாட்டின் வருவாயில் பெரும் பகுதி இப்படி குதிரை வாங்குவதிலேயே வீணடிக்கப் பட்டது. பாண்டியப் படையில் குதிரைப்படை முக்கியத்துவம் பெற்றிருந்தது.

**ஆடை ஆபரணங்கள்**

மக்கள் தங்கள் உடம்பை மறைப்பதற்கு ஒரு துணியை மட்டுமே பயன்படுத்தி இடையே மறைத்திருந்தனர். எனவே நாட்டில் தையல் காரர்களே கிடையாது. போர் வீரர்கள் கேடயம், வில், ஈட்டி போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தினர். ஆண்களும், பெண்களும் அணிகலன் களால் தங்களை அழகுபடுத்திக் கொண்டனர். அரசனும் அரச குடும்பத்தினரும் தங்கம், முத்து, பவளம் ஆகியவற்றால் செய்த விலை உயர்ந்த அணிகலன்களை அணிந்தனர். சாதாரண மக்கள் செம்பு, இரும்பு, உடைந்த கண்ணாடிகளால் ஆன அணிகலன்கள் அணிந்து கொண்டனர். மன்னர் பாண்டிய மன்னர் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தார். அவரது கருவூலத்தில் விலை உயர்ந்த முத்துக்களும், வைரங்களும் இருந்தன. நாட்டில் காணப்படும் அழகான பெண்களையெல்லாம் மனைவியாக்கிக் கொள்வது அக்காலப் பெண்களிடையே காணப்பட்டது. பாண்டிய மன்னருக்கு ஐநூறு மனைவிகள் இருந்தனர். இந்த மனைவிமார்கள் அரசன் இறந்த போது சதி என்ற உடன்கட்டை ஏறி தங்கள் உயிரைப் போக்கிக் கொண்டனர். -

பாண்டிய நாட்டில் செல்வம்

பாண்டிய நாடு செல்வச் செழிப்புடன் காணப்பட்டது. ஆலயங்களில் ஏராளமான செல்வம் குவித்து வைக்கப்பட்டிருந்தது. அயல் நாட்டு வாணிபத்தின் மூலம் செல்வம் பெருகியது. ஆண்கள் பதிமூன்று வயது நிரம்பிய உடனேயே சுயமாகச் சம்பாதிக்கத் தொடங்கினர். இந்த செல்வத்தை கவர்வதற்காகவே பிற்காலத்தில் அன்னியர்கள் தமிழகத்தின் மீது படையெடுத்தனர் என்பதை அறியலாம். நீதிமுறை

நீதி வழங்குவதில் நேர்மை பின்பற்றப்பட்டது. குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனைகள் அளிக்கப்பட்டன. கொலைத் தண்டனை பெற்றவர்கள் தங்கள் உயிரை ஏதாவது ஒரு தெய்வத்திற்கு அர்ப்பணிக்க அரசரால் அனுமதிக்கப்பட்டனர். அப்படி அனுமதி பெற்றவர்கள் தாங்களாகவே தங்கள் உடம்பில் குத்திக் காயம் ஏற்படுத்தி உயிரை மாய்த்துக் கொண்டனர். அப்படி இறந்தவர்களின் மனைவிமார்களும் உடன்கட்டை ஏறி உயிரைப் போக்கிக் கொண்டனர். உடன்கட்டை ஏறியவர்களை சமுதாயம் பாராட்டியது.

**சில சமூகப் பழக்கவழக்கங்கள்**

1) 'பாண்டிய நாட்டில் அரசன் உட்பட அனைத்து மக்களும் தரையில் உட்காரும் பழக்கமுடையவர்கள். வீட்டில் தரை சாணத்தினால் நன்றாக மெழுகப்பட்டிருந்தது.

2) மக்கள் உருவங்களை வழிபட்டனர். சிலர் எருதுகளை வழிபட்டனர். அதன் மாமிசத்தை உண்பதில்லை.

3) மக்கள் நெல், கோதுமை ஆகியவற்றைப் பயிர் செய்தனர்.

4) மக்கள் நல்ல காரியங்களுக்குத் தங்கள் வலது கையை மட்டுமே பயன்படுத்தினர். உணவு உண்ணும் போது எக்காரணத்தைக் கொண்டும் வலது கையைத் தவிர இடது கையைப் பயன்படுத்துவதே இல்லை. தண்ணீர் குடிக்கும் போது வாய் வைத்து குடிப்பதில்லை. பாத்திரத்தை வாயில்படாமல் உயர்த்தியே தண்ணீர் குடித்தனர். அன்னியர் யாரும் தண்ணீர் கேட்டால் அவர்களது கையில் ஊற்றும் பழக்கம் இருந்தது.

6) கள் குடித்தவர்கள் மக்களால் மதிக்கப்படுவது இல்லை . பிடி

பெண்களுடன் தகாத உறவு கொள்வது பாவச் செயலாக கருதப்பட்டது.

### ஜோதிட முறை

மக்கள் ஜோதிடத்தில் அதிக நம்பிக்கை வைத்திருந்தனர். சரித்திரகா லட்சணம் பற்றி அறிந்து வைத்திருந்தனர். உடம் அமைப்பை வைத்து ஒருவரின் குணத்தையும் செயல்பாடுகளை, அறிந்து கொண்டனர். சகுணங்களில் மக்கள் அதிக நம்பிக்கை வைத்தனர். குழந்தை பிறந்தவுடன் ஜாதகம் பார்க்கும் பழக்கம் மக்களிடையே காணப்பட்டது. காலைநிலை

தமிழ்நாடு உஷ்ண மண்டலத்தில் காணப்பட்டதால் இங்கு சூடு அதிகம். ஜூன், ஆகஸ்ட் ஆகிய மாதங்களில் பாண்டிய நாட்டில் மழை பெய்தது.

### .கோவில்கள்

கோவில்கள் மக்களின் வாழ்க்கையில் முக்கிய இடத்தைப் பெற்றன. அது மக்கள் வாழ்க்கை முறையின் ஒரு அங்கமாகவே காணப் பட்டது. நாட்டுப் பண்பாட்டின் புகலிடமாகத் திகழ்ந்தது. கட்டிடக் கலை, சிற்பக்கலை நுட்பங்களை நாம் கோவில்களில் காண முடிகிறது. கோவில் களில் நூலகம் அமைக்கப்பட்டிருந்தது. சமயக்கல்வி அங்கு போதிக்கப் பட்டது. கிராமப் பொருளாதார மையமாக விளங்கியது கோவில்கள்.

### தேவதாசிகள்

கோவில்களில் ஏராளமான தேவதாசிகள் காணப்பட்டனர். இவர்கள் பெற்றோரால் ஆலயங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள் ஆவர். கோவில்களில் தெய்வங்கள் முன்னால் நடனமாடி மகிழ்வித்தனர்.

இவ்வாறு பாண்டிய நாட்டு மக்களிடையே காணப்பட்ட பல்வேறு பழக்க வழக்கங்களை மார்க்கோபோலோ தனது குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். இவரது பயணக் குறிப்புகள் அக்கால மக்களின் சமுதாயப் பொருளாதார நிலை பற்றி நாம் அறிந்து கொள்ளப் பெரிதும் பயன்படுகிறது.

### வாசப் குறிப்புகள்

வாசப் என்ற இஸ்லாமிய வரலாற்றாசிரியர் பாண்டிய நாட்டிற்கு

வருகை புரிந்தார். இவரும் பாண்டிய நாட்டைப் பற்றிய பல செய்திகளைத் தனது குறிப்புகளில் கொடுத்துள்ளார். .

குலசேகரபாண்டியன் காலத்தில் அரசுக் கருவூலத்தில் 1200 கோடிப் பொன் இருந்தது. காயல்பட்டிணம் முக்கியத் துறைமுகமாகத் திகழ்ந்தது. மலைகள் போன்ற மிகப் பெரிய கப்பல்கள், கடல்மேல் காற்றெனும் சிறகுகளை விரித்து பாண்டிய நாட்டுக்கு வந்து கொண்டே உள்ளன. ஏடன் மற்றும் அரேபியாவிலிருந்து பல குதிரைகளையும் ' மற்றப் பொருட்களையும் சுமந்து வந்தன. அரசன் செல்வச் செழிப்புடன் திகழ்ந்தான்.

இந்த மன்னரின் ஆட்சியும் நாட்டு வளமும் நாற்பது ஆண்டுகளுக்கு மேல் வளர்ந்து வந்துள்ளது. இந்த மன்னர் ஆட்சியில் நீதி தவறவில்லை . . அந்நியப் படையெடுப்புகள் எதுவும் நடைபெறவில்லை. மன்னர் ஒருமுறையேனும் நோய்வாய்ப்படவில்லை. மன்னரின் கருவூலத்தில் முத்து, மாணிக்கம், நீலம், பச்சை போன்ற இரத்தினங்கள் குவிந்து கிடக்கின்றன. பாண்டிய மன்னரின் செல்வச் சிறப்பை விளக்குவதற்கு வார்த்தைகள் இல்லை.

இவ்வாறு வாசப் தனது குறிப்புகளில் பாண்டிய நாட்டைப் பற்றித் தெரிவித்துள்ளார்.

## மதுரை சுல்தானியத்தின் தோற்றம்

முகமது பின் துக்ளக் ஆட்சிக்காலத்தில் மதுரை டில்லி சல்தானியத்தின் ஒரு மாநிலமாக மாறியது. அதன் ஆளுநராக ஜலாலுதீன் அசன்ஷா என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால் முகமது பின் துக்ளக் ஆட்சிக் காலத்தில் டில்லி சுல்தானியத்தின் பல்வேறு பகுதிகளில் கலகங்கள் ஏற்பட்டன. சுல்தானியத்திற்கு எதிராகக் கிளர்ச்சிகள் தோன்றின. எனவே இந்த உள்நாட்டுக் குழப்பங்களை அடக்குவதில் கவனம் செலுத்தினார் முகமது பின் துக்ளக்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தன்னை மதுரை சுல்தானாகப் பிரகடனப்படுத்திக் கொண்டார் ஜலாலுதீன் அசன்ஷா. . டில்லி சுல்தானியத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டார். இவ்வாறு 1335-ல் மதுரை சுல்தானியம் தோன்றியது. ஜலாலுதீன் அசன்ஷா தனது பெயரில் நாணயங்களை வெளியிட்டார். மதுரை

சுல்தானின் துரோகச் செயலைக் கேள்விப்பட்ட முகமதுபின் துக்ளக், அசன்ஷாவைத் தோற்கடிக்க ஒரு படையை அனுப்பினார். . ஆனால், அந்தப் படையினர் நோயினால் பாதிக்கப்பட்டு திரும்பிச் செல்ல வேண்டியதாயிற்று. இந்த மதுரை சுல்தானியம் 46 ஆண்டுகள் நீடித்தது. மதுரை சுல்தானியத்தின் சுல்தான்கள்

**a) சுல்தான் ஜலாலுதீன் அசன்ஷா : 1335-1340**

இவர் மதுரை சுல்தானியத்தின் முதல் சுல்தான் ஆவார். 1335-ல் சுல்தானாகப் பதவி ஏற்ற இவன் தனது பெயரில் நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டார். இவரது பிரபுக்களில் ஒருவரான அலாவுதீன் உதாஜி என்பவரால் கொலை செய்யப்பட்டார் என்று பெரிஷ்டா குறிப்பிடுகிறார்.

**b) அலாவுதீன் உதாஜி: 1340**

இவன் ஒரு ரத்த வெறி பிடித்தவன். , முஸ்லீம் மதக் கோட்பாட்டின் படி இந்துக்களின் மீது புனிதப் போர் செய்வதை தமது கடமையாகக் கருதிக் கொண்டிருந்தான். அதன்படி போசள நாட்டு மன்னரான மூன்றாம் வீர வல்லாளனை தோற்கடிக்க திருவாண்ணாமலை நோக்கிப் புறப்பட்டான். 1340-ல் நடைபெற்ற போரில் உதாஜி வெற்றியடைந்தான். ஆனால் தலைக் கவசத்தை கழற்றி விட்டு நீர் அருந்திய போது யாரோ ஒருவன் எய்த அம்பு தலையில் ஏறி - அந்த இடத்திலேயே இறந்தான். இதற்குப் பிறகு பதவி ஏற்ற இவனது மருமகன் குத்புதீன் நாற்பது நாட்களே ஆட்சி புரிந்தார். இவர் தனது பெயரில் சில நாணயங்களை வெளியிட்டார். மக்களின் நல்லெண்ணத்தை இழந்த இவன் கொல்லப்பட்டான்.

**c) கியாசுதீன் தாமகன்ஷா : 1341-42**

குத்புதீன் கொல்லப்பட்ட பிறகு பதவி ஏற்ற கியாசுதீன் ரக் வெறி பிடித்தவன். இந்துக்களிடம் கடுமையாக நடந்து கொண்டால் அவர்களை இரக்கமில்லாமல் நாயினும் கேவலமாக நடத்தினார் அவர்களைக் கழுகேற்றி ஈவிரக்கமில்லாமல் கொன்று குவித்தான் என்று இபின் பதூதா குறிப்பிடுகிறார். இவனது ஆட்சிக் காலத்தில் பெண்கள், குழந்தைகள் கழுத்து அறுக்கப்பட்டு கொல்லப்பட்டனர். இந்துக்களின் தலைகளை மாலைகளாகக் கட்டி சூலங்களுக்குச் சூட்டி மகிழ்ந்தான்.

மத வெறியால் மயக்கமுற்ற கியாசுதீன் பக்கத்திலிருந்த இந்து அரசுகளை அழிக்கத் திட்டமிட்டான். குரானின் கட்டளைக்கிணங்க முஸ்லீம் அல்லாதோர் மீது புனிதப் போர் தொடுத்தான். எனவே பக்கத்திலிருந்த ஹொய்சள மன்னர் மூன்றாம் பல்லாள தேவன் மீது போர் தொடுத்தார். ஆனால் ஹொய்சாள மன்னரின் தாக்குதலைச் சமாளிக்க முடியாத முஸ்லீம் படை நிலை குலைந்தது. கண்ணனூர் கொப்பத்தில் முகமதியப் படை முற்றுகையிடப்பட்டது. தோல்வி நிச்சயம் என்று உணர்ந்த முஸ்லீம் படை சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தது. கோட்டையைத் தன்னிடம் விட்டுவிடுவதானால் முஸ்லீம் படையை திரும்ப அனுமதிப்பதாக வீரபல்லாளன் கூறினான்.

இதனைக் கேள்விப்பட்ட மதுரை சுல்தான் கியாசுதின் கோட்டையை பல்லாளனிடம் ஒப்படைக்கக் கூடாது என்று கருதினான். எனவே சமாதனாப் பேச்சுநடத்திக் கொண்டே , ரகசியமாக நான்காயிரம் படைவீரர்களைத் திரட்டிக் கொண்டு கண்ணனு" சென்றான். கூடாரத்தில் தங்கியிருந்த வீரபல்லாளனின் படைகள் குழப்பத்தில் நிலை குலைந்து ஓடின. குதிரை மீது தப்பிச் செல்ல முயன் வீர பல்லாளன் கைது செய்யப்பட்டு மதுரை கொண்டு வரப்பட்ட கருணையற்ற முறையில் கொல்லப்பட்டான், அவன் " உரிக்கப்பட்டு அதில் வைக்கோல் அடைக்கப்பட்டு மதுரை சுவரில் தொங்கவிடப்பட்டது. அதனை தானும் 1342-ல் பார்த்த இபின் பதூதா குறிப்பிடுகிறார். இதன் பிறகு ஹொய்சி", பெருமையும் குன்றியது.

பல்லாள தேவனை கருணையில்லாமல் கொன்ற கியா அதிக நள் உயிர் வாழ முடியவில்லை . அப்போது மதுரையில் - காலரா நோயினால் அவனது ஒரே மகன் மனைவி, தாய் ஆகியோர் பறி கொடுத்தான். அடுத்த பதினைந்து நாளில் அவனும் இறந்தான். இவ்வாறு கொடுமையின் பிறப்பிடமாக விளங்கிய கியாசுதீன் இறந்தான். கியாசுதீன் காமன்ஷா தனது பெயரில் நாணயங்கள் வெளியிட்டார். இவரது நாணயங்கள் டாக்டர் ஷில்பாய் சேகரித்தார். அதில் தாமன்ஷா என்ற பெயரும் ஹிஜிரா ஆண்டான 741-ம் குறிக்கப்பட்டுள்ளது.

**d) சுல்தான் நசிருதீன் : 1334 ।**

கியாசுதீன் கொள்ளை நோயால் கொண்டு செல்லப்பட்ட பின்பு, அவனது சகோதரன் மகனான நசுருதீன் மதுரை சுல்தானாகப்

பதவியேற்றான். இவன் பிரபுக்களுக்கு பெரும் பொருள் செலவிட்டே பதவியைப் பெற்றான். அப்போது இபின் பதூதா சீனாவை நோக்கிப் பயணம் செய்யத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் இவன் செய்து கொடுத்தான். இவன் தனது ஆட்சியின் நினைவாக நாணயத்தை வெளியிட்டான். அதில் 745 என்று பொறிக்கப்பட்டுள்ளது. இது 1334-ம் ஆண்டைக் குறிக்கிறது. 1334-லிருந்து 1356-ம் ஆண்டு வரை மதுரை சுல்தானிய வரலாற்றில் ஒரு முறிவு ஏற்பட்டுள்ளது. இதனைப் பற்றி வரலாற்றாசிரியர்கள் பலவிதமான கருத்துக்களைக் கொண்டுள்ளார்கள்.

e) சுல்தான் அடில்ஷா : 1356-61

அடில் ஷா என்பவன் 1356-ல் மதுரை சுல்தானாகப் பதவி ஏற்றான். இவன் 1364 வரை ஆட்சி புரிந்தான் என்று கருதப்படுகிறது. -

**f) பக்ருதீன் முபாரக் ஷா : 1361-1370**

அடில் ஷாவுக்குப் பிறகு முபாரக் ஷா மதுரை சுல்தான் ஆனார். இவன் வெளியிட்ட நாணயங்கள் துணையுடன் இவனது ஆட்சிக் காலத்தை கணிக்க முடிகிறது. இவனது ஆட்சிக் காலத்தில் தான் விஜய நகர வீரன் 'குமார கம்பணா மதுரை மீது படையெடுத்து வென்றான்.

**g) குமாரகம்பணின் மதுரை படையெடுப்பு**

மதுரையில் நிலைபெற்றிருந்த காலத்தில் இந்துக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன. அவர்களது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்துக் கோவில்கள் இடிக்கப்பட்டன. எங்கு நோக்கினும் அனுமதியின்மை, அட்டூழியம், அநியாயம் தாண்டவமாடியது. மதுரை சுல்தானியத்தில் இந்துக்களின் இந்த நிலை பற்றி கங்காதேவி தனது மதுரா விஜயம் என்ற நூலில் கூறியுள்ளார். இதபோன்ற அநியாயத்தை அழிக்கவும், உலகத்தின் எதிரியாக இருந்த சுல்தானை ஒழிக்கவும் புதிதாகத் தோன்றிய பெண் ஒருத்தி புனித வாள் ஒன்றை குமார கம்பணாவிடம் கொடுத்து அனுப்பினாள் என்று மதுரா விஜயம் குறிப்பிடுகிறது.

இவ்வாறு முஸ்லீம்களின் அட்டூழியத்தை ஒழிக்கவே விஜய நகர பேரரசர் முதலாம் புக்கரின் மகன் குமாரகம்பணா மதுரை மீது படையெடுத்தார். குமாரகம்பணரின் மதுரை படையெடுப்பு தமிழக வரலாற்றில் சிறப்பான அத்தியாயமாகும். முஸ்லீம் ஆட்சியை

வேரொடு ஒழிக்க உறுதி பூண்டு படையெடுத்து வந்தார். 1371 ஏப்ரல் மாதம் மதுரையை வென்றார். முபாரக்ஷா கொல்லப்பட்டார். மதுரை சுல்தானியத்திற்கு மரண அடி கொடுக்கப்பட்டது.

**விளைவுகள்**

குமார்கம்பணரின் படையெடுப்பின் விளைவாக தமிழகத்தில் இந்துக் கோவில்களை இடித்துத் தள்ளி, தரைமட்டமாக்கி, பொன்னையும் மணியையும் கொள்ளையிட்டு இந்துக்களுக்கு தொல்லை தந்த முஸ்லீம்களின் ஆட்சி மதுரையிலிருந்து அகற்றப்பட்டது. மதுரை கம்பணரின் கைக்கு மாறியது. முஸ்லீம்களின் அட்டூழியத்திற்கு அஞ்சி மறைத்து வைக்கப்பட்டிருந்த அரங்கநாதரின் படிமம் மீண்டும் திருவரங்கக் கோவிலில் வழிபாட்டுக்கு வைக்கப்பட்டது. இந்து தர்மமும் மதக் கோட்பாடுகளும் மீண்டும் நிலைநாட்டப்பட்டது. இந்துக் கோவில்கள் அழிவிலிருந்து தடுக்கப்பட்டது. விஜய நகரப் பேரரசின் புகழ் தென்னிந்தியாவில் பாதுகாக்கப்பட்டது.

இவ்வாறு குமாரகம்பணரது மதுரை வெற்றி இந்து மத வரலாற்றிலும் தமிழக வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தமிழர் பண்பாடு காக்கப்பட்டது. தமிழகத்தில் மீண்டும் ஆன்மீகம் வளர்ச்சியடைய ஆரம்பித்தது. நாட்டில் அமைதி நிலவியது. முபாரக ஷா இறந்த பிறகு அலாவுதீன் சிக்கந்தர்ஷா என்பவன் மதுரையின் ஒரு பகுதியில் 1378 வரை ஆட்சி புரிந்தார். 1378-ல் சுல்தானியர் ஆட்சிக்கு சாவு மணி அடிக்கப்பட்டது. மதுரை விஜய நகர அரசர நிர்வகிக்கப்பட்டு வந்தது.

## விஜய நகர ஆட்சியின் கீழ் தமிழகம்

### (TAMIL NADU UNDER VIJAYA NAGAR)

விஜய நகரப் பேரரசின் எழுச்சி இடைக்கால இந்திய வரலாற்றில் மிகச் சிறப்பிடம் வகிக்கும் நிகழ்ச்சியாகும். இப்பேரரசு சுமார் மூன்று நூற்றாண்டுகளாக நாட்டின் பழைய மதத்தையும், பண்பாட்டையும் பாதுகாப்பதற்காகவும், புதிய கருத்துக்களும் சக்திகளும் வேகமாக உட்புகுந்து இவற்றை விழுங்கிவிடாமல் பாதுகாப்பதற்காகவும் நிறுவப்பட்டது என்பது தெளிவாகத் தெரிகிறது. பாமினி ராஜ்யங்கள் தங்கள் செல்வாக்கைப் பரப்புவதை மறைமுகமாகத் தடுத்து வந்தது. டில்லி சுல்தானியர் ஆட்சியின் சீர்குலைவின் போது தோன்றிய சுதந்திரப் பேரரசே விஜய நகரப் பேரரசு ஆகும். -

இந்தப் பேரரசு 'அந்தக் காலத்து அரசியல் நிலைமைக்குத் திறவு கோலைக் கொண்டிருந்தது' - என்று கூறப்படுகிறது. வட இந்தியாவிலிருந்து பாய்ந்து வந்த முஸ்லீம் பிரளயம் தென்னிந்திய இந்து அரசுகளை அடித்துச் சென்ற பின் மீண்டும் இந்துப் பாண்பாடு அரசியல் வடிவில் புத்துயிர் பெற்று விஜய நகரப் பேரரசாக உருப்பெற்றது. இப்பேரரசு சுமார் மூன்று நூற்றாண்டுகள் தென்னிந்திய அரசியல், பண்பாட்டுத் துறைகளில் முழு ஆதிக்கம் செலுத்தியது. வடக்கேயிருந்து வரும் முஸ்லீம் ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்தவும், இந்து சமயப் பண்பாடுகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் நோக்கத்துடனும் இப்பேரரசு தோற்றுவிக்கப்பட்டது என்றாலும், இந்த நோக்கங்களை நிறைவேற்ற விஜயநகர் பல போராட்டங்களை நிகழ்த்த வேண்டியிருந்தது. எனவே விஜய நகரப் பேரரசின் தோற்றத்தை இந்து அரசியல் சமய இயக்கங்களின் மறுமலர்ச்சி என்று கூறலாம். விஜய நகரம் தோன்ற ஆசீர்வதித்த பெரியவர் வித்யாரண்யர் என்று சொல்லப்படுகிறது.

### தோற்றம் பற்றிய பலவகையான கருத்துக்கள்

விஜய நகரப் பேரர்சின் தோற்றத்தைப் பற்றி வரலாற்றறிஞா களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றது. அதன் ஆரம்ப கால வரலாறு இன்னும் இருளில் மூழ்கிக் கிடக்கிறது. ப அறிஞர்களின் கருத்துக்களை இனி காணலாம். ,

a) ஹிராஸ் பாதிரியாரின் (Rev.Father Hens) கருத்துப்படி விஜய நகரப் பேரரசை வளர்த்த 'ஆனகுண்டீ நகரத்திற்குக் கால்கோள

செய்தவர்கள் ஹொய்சாள அரசரான மூன்றாம் வீர பல்லாளரும், ஹொய்சாள ஆளும் குடும்பத்தின் நெருங்கிய உறவினரும், அங்கே தம் இருப்பிடத்தைக் கொண்ட எல்லைப்புற அதிகாரியுமானன ஹரிஹரர் என்பவருமாவார்.

b) மற்றொரு ஆசிரியரின் கருத்துப்படி, பிற்காலத்தில் விஜயநகரம் என்றழைக்கப்பட்ட நகரைக் கட்டிப் பலப்படுத்தியது மாபெரும் ஹொய்சாள அரசரான மூன்றாம் வீர பல்லாளரின் வீரச் செயலாகவேக் கருதப்பட வேண்டும்.

c) ராபர் சீவல் (Rober Sewell) என்ற வரலாற்று ஆசிரியர் தனது 'மறைந்து

போன பேரரசு' (Forgotten Empire) என்ற நூலில் விஜய நகரப் பேரரசின் தொடக்கத்தைப் பற்றி நியாயமான விளக்கம் ஒன்றைக் கொடுத்துள்ளார். அவர் கூறுவதாவது:

"சங்கமா என்பவரின் ஐந்து புதல்வர்களில் மிகச் சிறந்த இருவரான ஹரிஹரர், புக்கர் ஆகிய இரு சகோதரர்கள் வாரங்கல் காகத்திய மன்னர் இரண்டாம் பிரதாப ரூத்ரனிடம் கருவூலக் காப்பாளர்களாக பணியாற்றினர். கிபி.1323-ல் அந்த நகர் சுல்தானியப் படையெடுப்பிற்கு உள்ளான போது இருவரும் கர்நாடகப் பகுதியிலுள்ள கம்பிலிக்கு ஓடி அங்குள்ள குறுநில மன்னரிடம் பணியாற்றினர். கி.பி.1332-ல் இந்த நகரமும் தாக்குதலுக்குள்ளான போது

இந்த இரு சகோதரர்களும் கைதியாக்கப் பட்டு டில்லி கொண்டு - செல்லப்பட்டனர். அங்கு கட்டாயப்படுத்தி முஸ்லீமாக்கப்பட்டனர்".

"கர்நாடக முஸ்லீம் ஆளுநர் மாலிக் நாயீப் நிர்வாகத்தைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்ட போது முஸ்லீம்களாக மதமாற்றம் செய்யப்பட்ட ஹரிஹரரும், புக்கரும் ஆட்சிப் பொறுப்பை ஏற்க அங்கு அனுப்பப்பட்டனர். பிறந்த மண்ணை அடைந்தவுடன் அங்கு பரவியிருந்த உரிமைப் போராட்டம் அவர்கள் உள்ளத்தில் அடங்கிக் கிடந்த சமய உணர்வைத் தட்டி எழுப்பியது. அந்தக் காலத்தில் சிறப்புற்றிருந்த பிராமண முனிவரும் அறிஞருமான 'மாதவவித்யாரண்யர்' அவரது சகோதரரும் வேதத்திற்குப் புகழ்பெற்ற உரை எழுதியவருமான 'சாயனர்', ஆகியோருடன் தொடர்பு கொண்டதின் விளைவாக மீண்டும் இந்து சமயத்தைத் தழுவினர்".

. "புதிய ஊக்கம் பெற்ற ஹரிஹரரும், புக்கரும் துங்கபத்திராவின் வடகரையிலுள்ள ஆனகுண்டீ என்ற கோட்டைக்கு எதிர்ப்புறத்தில் அந்நதியின் தென்கரையில் விஜயநகரப் பேரரசினை நிறுவினர்". சீவலின் இந்தக் கருத்து நியாயமானதாகவும், பொதுவான மரபை ஒப்புக் கொள்வதாகும் அமைந்துள்ளது. .

c) மரபுவழிச் செய்தியின்படி ஹரிஹரரும் புக்கரும் துங்கபத்திரை நதிக்கரையில் வேட்டையாடச் சென்ற போது 'முயல்கள் வேட்டை நாயைத் துரத்திய' விந்தை நிகழ்ச்சியைக் கண்டனர். அதுபற்றி வித்யாரண்யருடன் கலந்தாலோசித்தனர். அந்த இடம் வீரம் விளைவுமிடமாகக் கருதி அதில் ஓர் நகரை நிர்மாணிக்க முடிவு செய்தனர். அதன்படி நிர்மாணிக்கப்பட்ட நகரே விஜய நகர் ஆகும்.

விஜய நகரை நான்கு அரச மரபுகள் ஆட்சி செய்தன.

விஜய நகரப் பேரரசு 1336-ம் வருடத்திலிருந்து 1562-ம் ஆண்டு வரை தென்னாட்டிலேயே தன்னிகரில்லாத வல்லரசாக விளங்கியது. இந்தக் காலம் முழுவதும் தமிழகம் விஜய நகரப் பேரரசுக்கு உட்பட்டே இருந்தது. 1565-க்குப் பிறகும் தமிழகத்தில் ஆண்ட அரசர்கள் முன்பு விஜய நகரப் பேரரசின் அரசப் பிரதிநிதிகளாக இருந்த நாயக்க மன்னர்களே ஆவர். இக்கால வரலாற்றை அறிந்து கொள்ள இலக்கியங்களும், கல்வெட்டு களும் உதவுகின்றன. குமாரகம்பணனின் மனைவி கங்காதேவி எழுதிய காவியமான மதுராவிஜயம், ராஜநாததிண்டிமர் எழுதிய சாளுவாப்யுதம் ஆகிய நூல்கள் பெரிதும் பயன்படுகின்றன. மேலும் பேராசிரியர் எஸ்.கிருஷ்ணசாமி, நீலகண்ட சாஸ்திரியார், வெங்கடரமணய்யா ஆகியோரும் விஜய நகர வரலாற்றுக்குத் தேவையான ஆதாரங்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளனர்.

## தமிழகத்தில் விஜய நகரப் பேரரசு விரிவடைதல்

விஜய நகரின் முதல் அரச மரபு சங்கமரின் பெயரால் சங்கம வமிசம் என்று அழைக்கப்படுகிறது. இந்த வம்சத்தைச் சேர்ந்த அரசர்களில் ஹரிஹரர் முதல் அரசர் ஆவார். விஜய நகரில் ஹரிஹரரின் ஆட்சி ஏற்படுத்தப்பட்ட நேரத்தில் தமிழகத்தில் இரு அரசுகள் ஏற்படலாயின. அவற்றில் ஒன்று சம்புவராயப் பேரரசு மற்றொன்று மதுரை -சுல்தானியம் ஆகும். சம்புவராயர் ஆட்சிப் பகுதியில் சித்தூரி மாவட்டத்தின் சில பகுதிகள், செங்கல்பட்டு, வட, தென் ஆற்காடு மாவட்டங்கள் அடங்கும். கொள்ளிடம் நதிக்கரையிலிருந்து - இராமேஸ்வரம் வரை உள்ள பகுதிகள் மதுரை சுல்தானின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. '

## முதலாம் ஹரிஹரரின் கீழ் தமிழகம்

பேராசிரியர் S.கிருஷ்ணசாமியின் கருத்துப்படி விஜய நகர அரசு 1344-1356ம் ஆண்டுகளுக்கிடையே முதன் முதலாக தமிழகத்தில் படையெடுத்திருக்க வேண்டும். முதலாம் ஹரிஹரர் காலத்திலேயே விஜய நகர அரசனின் ஆதிக்கம் தமிழகத்தில் ஏற்பட்டது. ஹரிஹரரின் தம்பி புக்கர் மதுரை மீது படையெடுத்து வெற்றி கண்டார். இந்த வெற்றிக்குப் பிறகு ஹரிஹரர் கோமல்சாசனத்தை வெளியிட்டார். இந்த சாசனம் மாயூரம் தாலுகாவில் கிடைத்தது. ஹரிஹரர் வெற்றி

பெற்றதும் நிர்வாகத்தில் கவனம் செலுத்தியதாகவும், கிராம நிர்வாகப் பொறுப்பிலிருந்து வேளாண் குடியினரையும், பொற்கொல்லர் களையும் அகற்றிவிட்டு அந்த இடங்களில் பிராமணர்களை அமர்த்தியதாகவும் நீலகண்ட சாஸ்திரி கூறுகிறார். போசாள அரசன் மூன்றாம் வல்லாளன் 1341-ல் இறந்ததும் அவரது பகுதிகளையும் ஹரிஹரர் கைப்பற்றினார்.

**குமாரகம்பணரின் தென்னிந்தியப் படையெடுப்பு -**

ஹரிஹரர் தம்பி முதலாம் புக்கர் விஜய நகர் அரசரானதும் தனது மகன் குமாரகம்பணரை அனுப்பி தென்னகத்தைக் கைப்பற்ற நினைத்தார். எனவே மதுரை சுல்தானியத்தை அழித்து தமிழகத்தைக் கைப்பற்றும்படி ஆணையிட்டார். குமாரகம்பணர் சம்புவராயரது நாட்டைக் கைப்பற்றி விட்டு மதுரை சுல்தானியத்தையும் வீழ்த்தினார். குமாரகம்பணரின் இந்த தென்னிந்தியப் படையெடுப்பைப் பற்றி அவரது மனைவி கங்காதேவி எழுதிய மதுராவிஜயம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

**- a) ராஜகம்பீர ராஜ்யத்தின் மீது படையெடுப்பு**

ராஜகம்பீர ராஜ்யம் என்பது செங்கல்பட்டு, வட, தென் ஆற்காடு, சித்தூரின் சில பகுதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும். இந்த ராஜ கம்பீர ராஜ்யத்தை அண்ட சம்புவராயர்கள் முதலில் சோழர்களின் கீழ்ப்பகுதியில் இருந்தார்கள். முஸ்லீம்கள் தமிழகத்தைத் தாக்கிய போது இந்த சம்புவராயர்கள் தங்கள் பகுதியை சுதந்திர நாடாக அறிவித்துக் கொண்டனர். குமாரகம்பணர் படையெடுத்த போது இப்பகுதியை ராஜநாராயண சம்புவராயர் ஆட்சி செய்து வந்தார்.

தனது விசுவாசமிக்க தளபதிகளான கோப்னா, சளுவமாங்கு ஆகியோருடன் குமாரகம்பணர் முதலில் காஞ்சியில் புகுந்து தாக்கினார். சம்புவராயரின் படைகள் 1363-64ல் தோற்கடிக்கப்பட்டன. மதுரா விஜயத்தில் இப்போரில் ராஜநாராயண சம்புவராயர் கொலை செய்யப் பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இவர் கொலை செய்யப்பட வில்லை என்றும் குமாரகம்பணரின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டார் என்றும் கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம். இந்தப் போரின் போது குமாரகம்பணருக்கு மாரப்ப நாயக்கர் பெரிதும் உதவி செய்தார். இந்த வெற்றிக்குப் பிறகு தொண்டை மண்டலம் விஜய நகர ஆட்சியின் கீழ் வந்தது. இதற்குப் பிறகு கொங்கு தேசமும், திருவண்ணாமலையைச் சுற்றியுள்ள பகுதிகளும் விஜயநகரத்துடன்

இணைக்கப்பட்டது.

### b) குமாரகம்பணரின் மதுரைப் படையெடுப்பு: 1871-73

தொண்டை மண்டலத்தை வென்ற பிறகு எட்டு ஆண்டுகள் கழித்து குமாரகம்பணர் மதுரையைத் தாக்கினார். மதுரையை மீட்பதற்காக பெண் தேவதை ஒன்று அகஸ்தியரிடமிருந்து பெற்ற வாள் ஒன்றை குமாரகம்பணருக்கு அளித்ததாகக் கூறப்படுகிறது. மதுரை சுல்தானியம் 1338-ல் முகமதுபின் துக்ளக் காலத்தில் ஜலாலுதீன் அச்ன்ஷாவினால் அமைக்கப்பட்டது. மதுரை சுல்தான் ஆட்சியில் இந்துக்கள் பெரிதும் துன்பப்பட்டனர். பல இந்துக் கோயில்கள் அழிக்கப்பட்டு மசூதிகள் கட்டப்பட்டன. இந்துக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதனை சகிக்க முடியாத விஜய நகர் அரசர் புக்கர் தனது மகன் குமாரகம்பணரை மதுரையைக் கைப்பற்ற ஆணையிட்டார். அப்போது மதுரையை முபாரக்ஷா என்ற சுல்தான் ஆட்சி செய்து வந்தார்.

குமாரகம்பணர் தனது தளபதிகளான கோபனா, சளுவமாங்கு ஆகியோருடன் 1370-ல் தென் ஆற்காட்டிலுள்ள செஞ்சியிலிருந்து புறப்பட்டார். திருவரங்கம் அருகிலுள்ள சமயபுரம் என்ற இடத்தில் சுல்தானின் படைகள் தோற்கடிக்கப்பட்டன. பின்னர் சுல்தானின் கட்டுப்பாட்டில் இருந்த கண்ணனூர் குப்பம் கைப்பற்றப்பட்டது. அதன் பிறகு திருச்சிக்கும் மதுரைக்கும் இடையில் நடைபெற்ற கடுமையான போரில் முபாரக்ஷாகொல்லப்பட்டார். ஆனாலும் போர் தொடர்ந்து நடந்தது. குமாரகம்பணர் மதுரையை முற்றுகையிட்டு அதனைக் கைப்பற்றினார். முபாரக்ஷாவின் உறவினர் சிக்கந்தர்ஷா மதுரையை விட்டு ஓடிவிட்டார்.

மதுரை கைப்பற்றப்பட்ட பிறகு விஜய நகரப் பேரரசு தமிழகத்தில் இராமேஸ்வரம் வரையுள்ள தென்னகம் முழுவதையும் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தது. குமாரகம்பணர் மதுரையின் ஆளுநராகப் பதவி ஏற்றார். . .

### c) தமிழகத்தில் குமாரகம்பணரின் ஆட்சி

குமாரகம்பணரின் ஆட்சிக் காலம் தமிழகத்தில் சிறந்த காலமாகக் கருதப்படுகிறது. குமாரகம்பணர் பெரும் வெற்றி வீரா, மட்டுமல்லாது விஜயநகரின் லட்சியங்களை தமிழகத்தில் சிறப்பாக நிறைவேற்றினார்.

குமாரகம்பணர் தமிழகம் உள்ளிட்ட தென் மண்டலத்தில் விஜய் நகரத்தின் மகா மண்டலேசுவரனாக விளங்கினார். காஞ்சி துணை இருக்கையாக ஆக்கப்பட்டது. சுல்தானிய ஆட்சிக்குப் பிறகு பதவியில் அமர்ந்த கம்பணர் இந்து ஆலயங்களை வழிபாட்டுக்கு மீட்பதில் கவனம் செலுத்தினார். புதிய இந்து ஆலயங்கள் கட்டப்பட்டன. பழைய ஆலயங்கள் சீரமைக்கப்பட்டன. கோவில் பணியாளர்களுக்கும், பிராமணர்களுக்கும் உணவும், உறைவிடமும் வழங்கினார். தனது சொந்த சார்பில் ஆலயங்களுக்கு நிலம், ஆபரணங்கள் போன்ற கொடைகளை வழங்கினார் என்று சாசனங்கள் மூலம் அறிகிறோம். பழைய பணியாளர்கள் அகற்றப்பட்டு புதிய ஆலயப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். கைகோலர்கள் என்பவர்கள் ஆலயத்தில் கட்டயாப் பணியாளர்களாக நியமிக்கப் பட்ட னர்.

இவ்வளவு பெருமையும், சிறப்பும் வாய்ந்த புகழ் பெற்ற இளவரசர் குமாரகம்பணர் தனது தந்தையின் வாழ்நாளிலேயே 1374-ல் இறந்து விட்டார். எனவே அவரது புகழ்மிக்க ஆட்சியும் இடையிலேயே முடிவுர நேர்ந்தது. கி.பி.1363 முதல் 1463 வரை ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலம் விஜய நகர ஆட்சி தமிழகத்தில் சிறப்பாக நடைபெற்றது. முக்கியமாக இரண்டாம் ஹரிஹரர், முதலாம் தேவராயர், இரண்டாம் தேவராயர் போன்றோர்களால் தமிழகத்தில் வேரூன்றியது. ஆனால் மாலிக் அர்ஜுன், விருப்பாஷா போன்ற திறமையற்றவர்கள் காலத்தில் விஜய நகரின் பிடி தமிழகத்தில் தளரலானது.

## இரண்டாம் ஹரிஹரர் காலத்தில் தமிழகம்

குமாரகம்பணருக்குப் பிறகு 1378-ல் இரண்டாம் புக்கர் மதுரையின் மீது படையெடுத்து அதன் சுல்தான் அலாவுதீன் சிக்கந்தரை வென்று மதுரையில் முஸ்லீம்களின் ஆட்சியை இறுதியாக ஒழித்தார். பின்னர் 1377 முதல் 1404 வரை ஆட்சி புரிந்த இரண்டாம் ஹரிஹரர் ஆட்சிக் காலத்தில் விஜய நகரம் தமிழகத்தில் விரிவடைந்தது. அந்தப் பகுதிகள் எல்லாம் சேர்த்து முக்கியமாக வேலூர், செஞ்சி, தஞ்சை மற்றும் மதுரை போன்ற நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. அங்கே விருப்பாட்சி உடையார் மகா மண்டலாதிபதியாக நியமிக்கப்பட்டார். அவர் இராமேஸ்வரத்தில் துலாபார விழா ! எடுத்தார் என்று அறியப்படுகிறது. .

## இரண்டாம் தேவராயர் காலத்தில் தமிழகம் -

இரண்டாம் தேவராயர் காலத்திலும் தமிழகத்தின் மீது விரிவான உடயெடுப்பு நடைபெற்றது. தமிழகத்திலும், இலங்கையிலும், மகரளத்திலும், வடக்கிலும் அவர் வெற்றி கண்டார் என்று நூனிஸ் - (Nunis) என்ற ஆசிரியர் கூறுகிறார். இரண்டாம் தேவராயர் ஆட்சிக் கால்த்தில் மதுரையில் லக்கண நாயக்கரும், தஞ்சையில் மாடன நாயக்கரும், 1402 முதல் 1448 வரை ஆளுநர்களாக இருந்தனர். இரண்டாம் தேவராயர் கேரளா மீது படையெடுத்து கொல்லத்தை வசப்படுத்தினார். இவரது இலங்கைப் படையடுப்பு மதுரையில் இருந்த லக்கண நாயக்கரின் உதவியுடன் நடைபெற்றதாக அப்துல் ரசாக் கூறுகிறார். தென்னிந்தியா முழுவதும் தேவராயரின் தலைமையை ஏற்றுக் கொண்டது. இவரது ஆட்சிப் பகுதி இலங்கை முதல் குல்பர்கா வரையிலும், வங்காளம் முதல் மலபார் வரையிலும் பரவியிருந்தது..

## தஞ்சை மராட்டிய மன்னர்கள்

### 1) வெங்காஜி : 1676-1684

வெங்காஜி, ஏக்கோஜி என்றும் அழைக்கப்பட்டார். இவர் ஷாஜி போன்ஸ்லே என்பவருக்கும் அவரது மனைவியான துக்காபாய்க்கும் பிறந்தவர். தனது இளமைக் காலத்தின் பெரும் பகுதியை கர்நாடகத்தில் செலவிட்டார். வெங்காஜி சிவாஜியைப் போலவே தானும் தக்காண சுல்தான்களின் பிடியிலிருந்து விலகி சுதந்திர அரசை அமைக்க விரும்பினார். அப்போது தஞ்சையில் நிலவிய கேவலமான அரசியல் குழப்பத்தின் விளைவாக தஞ்சை நாயக்கர் அரசைக் கைப்பற்றி மராட்டிய ஆட்சியை நிறுவினார்.

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் திருச்சிராப்பள்ளி, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களின் பகுதிகளை உள்ளடக்கிய புதிதாகக் கைப்பற்றப் பட்ட பகுதிகளில் வெங்காஜி தனது ஆட்சியை உறுதிப்படுத்தினார். பல அரசியல் குழப்பங்களுக்கிடையே வெங்காஜியின் ஆட்சி செயல்படத் தொடங்கியது. அருகாமையிலுள்ள நாடுகளின் விரோதப் போக்கினால் தனது நிலை அபாயகரமானது என்று உணர்ந்தார். சொக்கநாத நாயக்கருடன் அவர் மேற்கொண்ட ஒரு போரில் தோல்வியடைந்தார். வடக்கிலுள்ள ஆதிக்கங்கள் அடிக்கடி ' படையெடுப்புகளை கொண்டன. எனவே தூரத்திலுள்ள நிலப்பகுதிகளைக் கொடுத்து டெல்டாப் பகுதிகளை மட்டும் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட வெங்காஜி முடிவு செய்தார்.

மைசூர் சிக்கதேவராயருடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டு தனது பெங்களூர் ஜாகிரை மூன்று லட்சம் ரூபாய்க்கு விற்றார். தனது நிலையை வலுப்படுத்த எண்ணிய வெங்காஜி வடக்கிலுள்ள மராட்டியர் களையும், அந்தணர்களையும் பதவியில் அமர்த்தி நிர்வாகத்தை மாற்றியமைத்தார். விவசாயிகளின் நிலங்கள் பிடுங்கப்பட்டன. இப்புதிய எஜமானர்கள் நல்ல நிலங்களைத் தங்களுக்கு வைத்துக் கொண்டு தமிழ் விவசாயிகளை குத்தகையாளர் நிலைக்கு மாற்றினர். பிரிட்டோ பாதிரியாரின் கூற்றுப்படி வெங்காஜி விளைச்சலில் நான்கில் மூன்று பகுதியை வரியாக வசூலித்தார். வரிகளை அதிகரிக்கப் பொருட்களின் விலையை தன்னிச்சைப்படி உயர்த்தி தனக்கென பொக்கிஷங்களை கோவில்களில் ஒதுக்கி வைத்தார். பேராசைமிக்கவரான வெங்காஜி நாட்டின் நலனைப் பற்றிச் சிறிதளவும் கவலைப்பட்டவராகத் தெரியவில்லை.

பீஜப்பூர் சுல்தானிடம் சாதாரணப் பணியாளராகச் சேர்ந்த வெங்காஜி படிப்படியாக உயர்ந்து மராட்டிய ஆட்சியை தஞ்சையில் நிறுவியவர் என்று புகழப்படும் அளவுக்கு உயர்நிலையடைந்தார். யாருடைய உதவியும் இல்லாமல் தனித்திருந்து தீரமுடன் செயல்பட்டார். 1684-ல் வெங்காஜி தனது மூத்த மகன் சாஜியிடம் தஞ்சைப் பகுதியை ஒப்படைத்து விட்டு இறந்தார்.

**சிவாஜியின் தென்னிந்தியப் படையெடுப்பு -**

தென்னிந்தியாவில் மராட்டியர் வலிமைமிக்க இராணுவ ஆதிக்கமாக எழுச்சி பெற்ற காலம் இது ஆகும். மேற்குக் கடற்கரையில் சதாராவிலும், கோல்காப்பூரிலும் வளர்ந்தோங்கும் பெரும் ஆதிக்கமாக தங்களை நிலைநாட்டிய பின்னர் தமிழ்நாட்டின் கிழக்கு கடற்கரை ஓரங்களில் அரசியல் வெற்றிகளைப் பெற அவர்கள் முற்பட்டனர். 1676-ம் ஆண்டின் இறுதியில் சிவாஜி பெரும்படை ஒன்றைத் திரட்டிக் கொண்டு தமிழ் நாட்டின் மீது படையெடுத்து வந்தார்.

எவ்விதக் கடினமும் இல்லாமல் செஞ்சியைக் கைப்பற்றினார். ஞ்சிக் கோட்டையைப் பழுதுபார்த்து அங்கு தனது சொந்த ராணுவ நிர்வாக முறையை ஏற்படுத்தினார். செஞ்சியிலிருந்து ஒரு டையை வேலூருக்கு அனுப்பினார். ஆனால் அதனை பீஜப்பூர் தளபதி அப்துல்லாகான் திறம்படப் பாதுகாத்தார். எனவே சிவார் தஞ்சாவூர் நோக்கி முன்னேறினார். பரங்கிப்பேட்டை, திருவடி தேவனாம்

பட்டிணம், புவனகிரி ஆகியவற்றைக் கைப்பற்றிக் கொண்டு 1677 ஜூலை மாதம் கொள்ளிடம் நதிக்கரையில் திருவாடியில் முகாமிட்டார். தனது ஒன்றுவிட்ட சகோதரன் வெங்காஜியை வரவழைத்து தங்கள் தஞ்சையின் ஜாகீர்களைப் பகிர்ந்து கொள்வாள் பற்றி விவாதித்தனர். ஆனால் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதால் எவ்வித முடிவும் ஏற்படவில்லை .

எனவே சிவாஜி தனது வெற்றி உலாவைத் தொடர்ந்தார். வெங்காஜிக்கு சொந்தமான கொள்ளிடத்தின் வடக்குப் பகுதியைக் கைப்பற்றினார். தமிழ் நாட்டில் பத்து மாதங்கள் தங்கிய சிவாஜி தான் வெற்றி பெற்ற பகுதிகளை நிர்வகிக்கும் பொறுப்பை சாந்தாஜியிடம் ஒப்படைத்து விட்டுத் திரும்பினார். தெற்கிலிருந்து சிவாஜி திரும்பியதும் வெங்காஜி தான் இழந்த பகுதிகளை மீட்கும் பணியில் ஈடுபட்டார். வெங்காஜிக்கும், சாந்தாஜிக்கும் இடையே ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி தஞ்சையையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் மட்டும் பெற்று வெங்காஜி ஆண்டார். 1680-ல் சிவாஜி இறந்த பின்னர் வெங்காஜி தஞ்சாவூரின் சுதந்திர மன்னரானார்.

**2) சாஜி : 1684-1712**

'வெங்காஜிக்குப் பிறகு அவரது மூத்த மகன் சாஜி தஞ்சையின் அரசராக முடிசூட்டிக் கொண்டார். இவரது காலத்தில் தமிழகத்தில் அரசியல் நிலை சிக்கல் நிறைந்ததாகக் காணப்பட்டது. மதுரை நாயக்கர் அரசின் பலவீனத்தைப் பயன்படுத்தி அதற்குச் சொந்தமான பல பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டார். தக்காணத்தில் சிவாஜிக்குப் பிறகு முகலாயர்கள் மராட்டிய அரசர் ராஜாராமை துரத்தினார்கள். ராஜாராம் செஞ்சியில் தஞ்சம் புகுந்தார். எனவே ராஜாராமுக்கு உதவுவதற்காக சாஜி ஒரு படையை செஞ்சிக்கு அனுப்பினார். இதனை கண்ட முகலாயத் தளபதி சுல்பிகர்கான் தஞ்சையை கொள்ளையிட்டார். எனவே சாஜி சுல்பிகர்கானுடன் உடன்படிக் செய்து கொண்டு கப்பம் பட்ட ஆரம்பித்தார்.

இராமநாதபுரத்தில் கிழவன் சேதுபதிக்கும். மது நாயக்கருக்கும் இடையே நடந்த போரில் சாஜி சேதுபதிக்கு உதவியது மதுரை தளவாய் நரசப்பையன் தஞ்சை மீது போர் தொடுதி ஆனால் தஞ்சையின் தளபதி பாலாஜி தளவாய் நரசப்பையன் ஏராளமான

கையூட்டுக் கொடுத்து தஞ்சையைக் காப்பாற்றின் சேதுபதியை மங்கம்மாள் தண்டிக்க முயன்ற போது சாஜி சேதுபதிக்கு எதிராக நின்றதால் 1709-ல் சேதுபதி தஞ்சை மீது படையெடுத்து அறந்தாங்கியைக் கைப்பற்றினார்.

இவ்வளவு தொல்லைகளுக்கு மத்தியிலும் தஞ்சையில் ஆட்சி - மறை செவ்வனே நடைபெற்றது. தஞ்சையில் அழகிய அரண்மனைகள் கட்டப்பட்டன. தஞ்சையில் சாஜி ஒரு மருத்துவமனையை அமைத்தார். அதற்கு ஐதராபாத்திலும், அரேபியாவிலிருந்தும் மருத்துவர்களை வரவழைத்தார். சிவில் கிரிமினல் நீதிமன்றங்களை அமைத்து நீதி நிர்வாகத்தை சீர்படுத்தினார். சாஜி சிறந்த கல்விமான். தக்காரை ஆதரித்தார். பல கவிகளும் ஞானிகளும் அவர் காலத்தில் வாழ்ந்தனர். வடமொழி, தெலுங்கு முதலிய மொழி வல்லுநர்கள் தமிழறிஞர்களை விட அதிக ஆதரவு பெற்றனர். சாஜி கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினார். அவர்களது ஆலயங்கள் நொறுக்கப்பட்டன. பல - கிறிஸ்தவத் துறவிகள் சிறையிலடைக்கப்பட்டனர். சாஜி 1712-ல் தனது 40-ம் வயதில் இறந்தார்.

### 3) முதலாம் சரபோஜி : 1712-1728 -

சாஜிக்கு வாரிசு இல்லாததால் அவரது தம்பி முதலாம் சரபோஜி தஞ்சை மன்னரானார். இவர் வெங்காஜியின் இரண்டாவது மகன் ஆவார். இவரது காலத்தில் சாஜி காலத்தைப் போலவே நாடு கலாச்சார மேம்பாடு அடைந்திருந்தது. சரபோஜி பற்றி பல கல்வெட்டுகள் உயர்வாகக் கூறுகின்றன.

இராமநாதபுரத்தில் விஜயரகுநாதத் தேவருக்குப் பிறகு சேதுபதி ஸ்தானத்திற்குப் போட்டி ஏற்பட்டது. தண்டத் தேவரும், பவானி சங்கரரும் வாரிசுரிமைப் போட்டியில் ஈடுபட்டனர். தண்டத் தேவருக்கு புதுக்கோட்டைத் தொண்டைமானும், பவானி சங்கரருக்கு சரபோஜியும் ஆதரவளித்தனர். சரபோஜி ஒரு பெரும்படையை ஆனந்தராவ் தலைமையில் அனுப்பிவைத்தார். அவர் புதுக்கோட்டைப் படையைத் தோற்கடித்து தண்டத்தேவர் குடும்பம் முழுவதையும் சிறைப்பிடித்து கொன்று விட்டார். வெற்றி பெற்ற பவானி சங்கர் சேதுபதியானார். இவர் சரபோஜிக்கு கொடுப்பதாக வாக்களித்த பாம்பாற்றுக்கு வடப்பக்கம் உள்ள பகுதிகளைக் கொடுக்கவில்லை. எனவே தஞ்சைப்

படைகள் மறுபடியும் இராமநாதபுரத்துக்கு அனுப்பப்பட்டது. பவானி சங்கரர் தோற்கடிக்கப்பட்டு சிறையில் உடைக்கப்பட்டார். சிறையிலேயே உயிர் நீத்தார். இந்த நிலையில் தான் கங்கை ஜமீன் தோன்றியது. முதலாம் சரபோஜி வாரிசில்லாமல் 1728-ல் இறந்தார்

**4) துக்காஜி : 1728-1736**

முதலாம் சரபோஜி வாரிசில்லாமல் இறந்ததால் வெங்காஜியின் மூன்றாவதும் கடைசி மகனுமான துக்காஜி தஞ்சை மன்னரானார். இவர் தகுதி வாய்ந்தவராகவோ அமைதியை விரும்புபவராகவோ இருக்கவில்லை. பிரச்சனைகளை அணுகுவதில் கொடூரத்தன்மையும் கிளர்ச்சி எண்ணமும் இவரிடம் குடிகொண்டிருந்தன. எதிலும் பேராசை கொண்டவராகக் காட்சியளித்தார். தெற்கே முகலாயப் பேரரசு வளர்ச்சியடைவதைக் கண்ட பின்பும் கவனமற்று இருந்தார். சுதந்திரம் பறிபோய்க் கொண்டிருந்தது. 1732-ல் சப்தல் அலியும், சந்தா சாகிப்பும் தஞ்சை மீது படையெடுத்துச் சென்று சுற்றுப்புறக் கிராமங்களை அழித்தனர். கொள்ளையிட்டனர். பலரைக் கொன்று குவித்தனர். பயமடைந்த துக்காஜி ஏராளமான பணத்தைக் கொடுத்து அமைதியை விலைக்கு வாங்கினார். .

இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் துக்காஜி. இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை அரசுகளுக்கெதிராகப் படை நடத்திச் சென்றார். ராமநாதபுரம் சேதுபதியாக இருந்த கட்டையத் தேவருக்கு எதிராக படை நடத்தினார். ஆனால் இப்போரில் தோல்வியடைந்து பின்வாங்க நேரிட்டது. இப்போரின் மூலம் துக்காஜிக்கு ஏராளமான நஷ்டமும் ஏற்பட்டது.

துக்காஜி திருச்சியிலிருந்து மதுரை நாயக்கத்தை ஆண்டு வந்த மீனாட்சியை அவளது தலைநகரத்தை மீண்டும் மதுரைக்கே மாற்றிக் கொள்ளுமாறு வற்புறுத்தினார். ஆனால் மீனாட்சி அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. சிறிது காலத்திற்குப் பிறகு தஞ்சை மற்றும் மதுரைப் படைகள் ஆனந்தராவின் தலைமையில் புதுக்கோட்டை மீது படையெடுத்தன. திருமயம் தவிர ஏனைய கோட்டைகளும் பிரதேசங்களும் அவர்கள் வசமாயின. இந்நிலையில் மறவர் படைகள் தொண்டைமானுக்குத் துணை நின்றன. அவர்களுடைய தாக்குதலைத் தாங்க மாட்டாமல் ஆனந்தராவ் தஞ்சைக்குத் திரும்பிவிட்டார்.

இவ்வாறு பலவாறாகவும் ஆக்கிரமிப்பு நடத்தி வந்த துக்காஜியைப்

பற்றி தொண்டைமானும் சேதுபதியும் ஆற்காட்டு நவாபிடம் முறையிட்டனர். தஞ்சை விவகாரங்களில் தலையிட்டு - கர்நாடகத்தை காப்பாற்றும்படி வேண்டினர். இந்த வேண்டுகோளும் கிணங்க சப்தர் அலியும், சந்தாசாகிப்பும் தஞ்சை முற்றுகையிட்டனர். மராட்டியப் படைகளுக்கு தலைமை தாங்கிய ஆனந்தராவ் ஆவார். போரில் ஆனந்தராவ் இறந்து போனார். ஆனா துக்காஜி ஏராளமான லஞ்சம் கொடுத்து அமைதி ஏற்படுத்தினார்.

**5) பிரதாப்சிங் : 1739-1763**

துக்காஜியின் இரண்டாவது மனைவியின் மகன் பிரதாப் சிங் 1739-ல் தஞ்சை மன்னரானார். இவரது ஆட்சிக் காலம் தஞ்சை அரசின் நேரடி வீழ்ச்சிக்கு வித்திட்டது. இவர் ஆங்கிலேயரிடம் செல்வாக்குப் பெற்றவராகவோ அல்லது பிரான்சின் தலையீட்டுக்கு எதிரியாகவோ இல்லை. ஆனால் இவர் எல்லாப் பக்கங்களிலும் எதிரிகளால் சூழப்பட்டு விட்டார். ஆனால் தனது முன்னோரைப் போல எதிரிகளுக்கு லஞ்சம் கொடுத்து காத்துக் கொண்டார். பிரதாப் சிங் திறமையும், அரசியல் நுட்பம் உடையவராகவும், மக்கள் ஆதரவைப் பெற்றவராகவும் விளங்கினார். தஞ்சையை தனது காலத்தில் அழியாமல் பார்த்துக் கொண்டார்.

1732-ல் தஞ்சை மன்னர் ஆற்காட்டு நவாபுக்கு கொடுப்பதாக வாக்குறுதி அளித்த கப்பத்தை பிரதாப் சிங் கொடுக்கவில்லை. இதனால் தஞ்சை அரசியலில் ஆற்காட்டு நவாபின் தலையீடு அதிகரித்தது. எனவே திருச்சியிலிருந்த சந்தாசாகிப் தஞ்சையை எதிர்த்தார். இதனால் பிரதாப் சிங் மராட்டியரின் உதவியை நாடினார். 1739-ல் ராகூஜிபான்ஸ்லே கர்நாடகப் பகுதியில் நடத்திய படையெடுப்பு தற்காலிகமாக பிரதாப் சிங்கை அழிவிலிருந்து காத்தது. 1742-ல் நிஜாம் உல் முல்க்கினால் தஞ்சை மறுபடியும் பயமுறுத்தப்பட்டது. ஆனால் கலக்கமுற்ற பிரதாப் சிங் ஏழு லட்சம் ரூபாய் கையூட்டு கொடுத்து அமைதியை விலைக்கு வாங்கினார்.

1749-50ல் சந்தாசாகிபும், முசபர்ஜங்கும் பிரெஞ்சுக்காரர். உதவியுடன் தஞ்சையை முற்றுகையிட்டனர்: முற்றுகையாளர்கள் நாற்பது லட்சம் ரூபாய் கேட்டனர். ஆனால் இதைக் கொடுக்க விரும்பாத பிரதாப் சிங் ஆங்கிலேயருடன் ரகசியப் பேச்சுவார்த்தை நடத்தினார். இதற்கிடையில் முகமது அலியும் முராரிராவும்

தஞ்சைக்குப் படையுடன் வந்து முஸ்லீம் பிரெஞ்சு முற்றுகையிலிருந்து தஞ்சையை விடுவித்தனர். சந்தாசாகியும் பிரெஞ்சுக்காரரும் ஏமாந்து. திரும்பினர்.

காட்டுராஜா என்பவன் மறுபடியும் ஆதிக்கத்தைக் கைப்பற்ற முயன்று 1749-ல் பிரெஞ்சுக்காரர்கள் உதவியை நாடினான். அவர்கள் உதவ முன்வராததால் ஆங்கிலேயர்களை அணுகினான். இதை ஏற்றுக் கொண்ட ஆங்கிலேயர்கள் லாரன்ஸ், கிளைவ் ஆகியோர் தலைமையில் ஒரு படையை அனுப்பி தேவகோட்டையைக் கைப்பற்றிக் காண்டனர். மராட்டியப் படைத் தலைவரான மானாஜி எவ்வளவோ மன்றும் தேவகோட்டையைக் காக்க முடியவில்லை. எனவே பிரதாப் தேவகோட்டையை ஆங்கிலேயர்களுக்கு விட்டுக் கொடுத்து, காட்டு ராஜாவுக்கு ஆண்டு தோறும் நாற்பதாயிரம் ரூபாய் கொடுப்பதாகவும் ஒப்புக் கொண்டார். ஆங்கிலேயரின் உதவி வேண்டிப் பெற்றுக் கொள்ளத் தக்கது என்பதை பிரதாப்சிங் உணர்ந்தார்.

இச்சூழ்நிலையில் சந்தாசாகிப் பிரெஞ்சு முசபர்ஜங் கூட்டுக்கு எதிராக ஆங்கிலேயர் கூட்டில் சேர்ந்தார் பிரதாப் சிங். ஆங்கிலேயரின் நட்பைப் பெற்றார். பிரதாப் சிங் தொடர்ந்து ஆக்கிரமிப்பு செயல்களில் ஈடுபட்டார். அறந்தாங்கிப் பிரதேசத்தை மறவர்களிடமிருந்து கைப்பற்ற இரண்டுமுறை முயற்சி செய்தார். முடியாததால் ஆற்காட்டு நவாபின் உதவியை நாடினார். ஆனால் ஆங்கிலேயர் பிரதாப் சிங்கிடம் இராமநாதபும், புதுக்கோட்டை அரசுகளுடன் சமாதானமாகப் போய்விடும்படி அறிவுறுத்தினர். ஆங்கிலேயரின் அறிவுரையைப் புறக்கணித்த பிரதாப் சிங் தொண்டைமான் நாட்டின் மீது படையெடுக்க தளபதி மானாஜிக்கு உத்தரவிட்டார். ஆனால் ஆங்கிலேயர் ராணுவத் தலையீடு செய்வதாக பயமுறுத்தவே தஞ்சைப் படைகள் பின்வாங்கின்.

பிரதாப் சிங் தன் ஆட்சிக் காலம் முழுவதும் ஒரு ஆக்கிரமிப் பாளராகவே காணப்பட்டார். அவரை ஒருவராலும் அடக்க முடியவில்லை. கர்நாடகக் கொந்தளிப்பு. ஓரளவு தணிந்த பின்னர் தஞ்சை ஆங்கிலேயர் அரவணைப்புக்குள்ளிருந்தது. 1763-ல் அவர் இறக்கும் வரை தஞ்சையில் ஒருமைப்பாடும் விடுதலையும் பேணிக் காக்கப்பட்டிருந்தன:

**6) துல்ஜாஜி : 1763-1787**

பிரதாப் சிங்கைத் தொடர்ந்து அவரது மகன் துல்ஜாஜி - மன்னரானார். இவர் ஆட்சிக் காலத்தில் தஞ்சை மராட்டியர் ஆட்சியின் இறுதி வீழ்ச்சிக்கு அடிகோலப்பட்டது. இவரது ஆட்சி தொடங்கியதுமே ஹைதர் அலியின் கர்நாடகத் தாக்குதல்கள் ஆரம்பித்தன. 1769-ல் ஹைதர் அலி தனக்கு நாற்பது லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று துல்ஜாஜிக்கு ஆணையிட்டார் ஏனெனில் கரூரைக் கைப்பற்றுவதற்கு ஆங்கிலேயர்களுக்கு துல்ஜாக உதவி செய்ததேயாகும். அப்படி நஷ்ட ஈடு கொடுக்காவிட்டால் நாடு முழுவதையும் நாசமாக்கி எல்லாக் குடிமக்கயுைம் அழித்து விடுவதால் எச்சரித்தார். இதனால் பயந்த துல்ஜாஜி நான்கு லட்சம் ரூபாயும் நான் யானைகளையும் கொடுத்து ஐதர் அலியை ஓரளவு சமாதானம் செய்தா. இராமநாதபுரத்தைச் சேர்ந்த தளவாய் தாமோதரன்பிள்ளை சிவகங்கைப் படையின் துணையுடன் முன்பு சேதுபதி கீழ் இருந்த நாடு திரும்பக் கைப்பற்றிக் கொண்டார். இதனால் பகைமை 1771-ல் துல்ஜாஜி மறவர் நாட்டின் மீது படையெடுத்தார். நாகபரத்தில் புகுந்து பல பகுதிகளைக் கைப்பற்றியதுடன் வெற்றி வாகை சூடி பொன்னும் பொருளும் கவர்ந்து வந்தது. நவாபின் யை நாடிய சேதுபதிக்கு உதவி செய்யவில்லை. கர்நாடகத்தில் போபக்கும் ஆங்கிலேயருக்கும் எதிரான கூட்டமைப்பு ஒன்றை ஐதர் அலி ஏற்படுத்த முயன்றார். அச்சமடைந்த துல்ஜாஜி ஐதரோடு நட்புக் கொண்டார். இதனால் நவாபும் ஆங்கிலேயரும் துல்ஜாஜியை வெறுத்தனர். -

இச்சூழ்நிலையில் கர்நாடக நவாப் துல்ஜாஜியிடம் 25 லட்சம் ரூபாய் தருமாறு நிர்பந்தம் செய்தார். துல்ஜாஜி மறுக்கவே நவாப் முகமது அலி தனது மகன் உல்தத் உல் உம்ரா தலைமையில் தஞ்சைக்கு ஒரு படையை அனுப்பினார். ஆங்கிலப் படையும் தளபதி ஸ்மித் தலைமையில் உடன் சென்றது. 1771-ல் தஞ்சை முற்றுகையிடப்பட்டது. துல்ஜாஜி பணிந்தார். துல்ஜாஜி 325 லட்சம் இழப்பீடு செலுத்துமாறும், சேதுபதியிடமிருந்து பறித்த பிரதேசங்களையெல்லாம் அவருக்கு திருப்பிக் கொடுக்க வேண்டும் என்றும் கட்டாயப்படுத்தப்பட்டார். இழப்பீட்டுத் தொகை செலுத்தும் வரை மாயவரம், கும்பகோணம் பகுதிகள் நவாபின் அதிக்கத்திலிருக்க வேண்டும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. தஞ்சையில் வசிக்கும் ஆங்கில வணிகர்களை மரியாதையுடன் நடத்தவும் துல்ஜாஜி ஒப்புக்

கொண்டார். .

ஆனால் மறுபடியும் நவாப் தஞ்சையைத் தாக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. துல்ஜாஜி மறுபடியும் சிவகங்கை, இராமநாபுரம் விவகாரங்களில் தலையிடலானார். கும்பகோணத்தை டச்சுக்காரர்களுக்கு அடகு வைத்துவிட்டார். 1771-ம் வருட உடன்படிக்கைப்படி இழப்பீட்டுத் தொகை கொடுக்கவில்லை. இக்காரணங்களால் மறுபடியும் ஆங்கிலேயர் உதவியுடன் 1773-ல் தஞ்சையைத் தாக்கிக் கைப்பற்றினார் நவாப். துல்ஜாஜியும் அவர் குடும்பத்தினரும் சிறை வைக்கப்பட்டனர். தஞ்சை ஆட்சியை நவாபே மேற்கொண்டார். 1776 வரை தஞ்சையில் கொடுங்கோலாட்சி நடத்தினார். 'நாட்டை சீர்குலைத்தார். அளவற்ற செல்வங்களை தஞ்சையிலிருந்து அள்ளிச் சென்றார்.

இதனை அறிந்த ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி பக்குநர்கள் விசாரணை செய்து துல்ஜாஜியை மீண்டும் பதவியில் சாத்தும்படி கேட்டுக் கொண்டனர். அதற்காக பிகாட் என்ற புதிய "ரை சென்னையில் நியமித்தனர். அதன்படி நவாப் மீண்டும் "ஜிக்கு அரசைக் கொடுக்கும்படி கட்டாயப்படுத்தினர் ஆங்கிலேயர். 1776-ல் துல்ஜாஜி மீண்டும் தஞ்சை மன்னரானார். ஆனால் அதிகாரத்தை இழந்து கம்பெனிக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியவர் ஆனார். தஞ்சையைப் பாதுகாக்கும் பொறுப்பை ஆங்கிலேயர் ஏற்றுக் கொண்டனர். ஆங்கிலக் கம்பெனிக்கு துல்ஜாஜி 277 கிராமங்களை எழுதி வைத்தார். தஞ்சையில் ஆங்கிலப் படை ஒன்று வைக்கப்பட்டது. அதன் செலவை தஞ்சை மன்னரே ஏற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு தஞ்சை மன்னர் ஆங்கிலேயரின் கைப்பாவை ஆனார்.

துல்ஜாஜி தம் குடும்பத்தைச் சேர்ந்த சரபோஜி என்ற பையனை தத்து எடுத்துக் கொண்டார். அந்தப் பையனை தக்க வயது வந்து மன்னராகும் வரை ஷிவார்ட்ஸ் என்ற பாதிரியாரிடம் ஒப்படைத்தார். அதுவரை அரசாங்கத்தைக் கவனிக்க அமர்சிங் என்பவரை நியமித்தார். வாழ்நாள் முழுவதும் பல சோதனைகளால் வேதனைப்பட்ட துல்ஜாஜி 1787-ல் இறந்தார். -

**7) அமர்சிங் : 1787-1798 -**

துல்ஜாஜியின் ஏற்பு மகன் சிறுவனாக இருந்தபடியால் அமர்சிங் என்பவர் பகர ஆட்சியாளராக நியமிக்கப்பட்டார். இவருடன் ஆங்கிலேயர் ஒரு உடன்படிக்கையை செய்து கொண்டு மேலும் பல உரிமைகளையும், சலுகைகளையும் பெற்றனர். கம்பெனிக்கு ஆண்டுதோறும் நான்கு லட்சம் கோடாக்கள் கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டதால் அமர்சிங் கொடுங்கோல் முறைகளைக் கையாண்டு வரி வசூலிக்கத் தொடங்கினார். ஆங்கிலேயரின் ஆதரவைப் பெற்ற அமர்சிங் அரச பதவி. மீது. ஆசை கொண்டார். எனவே சரபோஜி மீது பல குற்றச்சாட்டுகள். சுமத்தி தன்னையே மன்னராக நியமிக்கும்படி கம்பெனியைக் கேட்டுக் கொண்டார். அப்போது சென்னை கவர்னராக இருந்த ஆர்ச்பால்ட் காம்பெல் என்பவர் விசாரணை செய்து அமர்சிங்கிற்கு அரச பதவியை அளித்தார்.

ஆனால் சரபோஜியின் பாதுகாவலர் ஷிவார்ட்ஸ் பாதிரியார் இந்த தீர்ப்பை எதிர்த்து மறுபரிசீலனை செய்யும்படி கார்ன்வாலிசிடம் முறையிட்டார், நடைமுறையை ஆராய்ந்த கவர்னர் ஜென் அமர்சிங்கிற்கு உபகாரச் சம்பளம் கொடுத்து விட்டு 173 சரபோஜியை மன்னராக்கினார். 8) இரண்டாம் சரபோஜி : 1798-1833

இரண்டாம் சரபோஜி 1798 ஜூன் மாதம் முதல் ஆட்க தொடங்கினார். அரச பதவியைப் பெற்ற இவர் அதிகாரம் பெறவில்லை. 1799-ல் ஒப்பந்தம் ஒன்றை செய்து தஞ்சைக் கோட்டைக்குள் ஒதுங்கினார். 1799 அக்டோபரில் காஞ்சைக் கோட்டையையும், வல்லத்தையும் வைத்துக் கொண்டு தஞ்சை நாட்டின் ஆட்சியை ஆங்கிலேயர்களிடம் ஒப்படைத்தார். தஞ்சை சென்னை மாகாணத்துடன் இணைந்தது. சரபோஜியும், அமர்சிங்கும் மற்றும் குடும்பத்தாரும் ஓய்வூதியம் பெற்றனர். சரபோஜி தான் விரும்பும் வரை படையை வைத்துக் கொள்ள உரிமை பெற்றார். சர்போஜியும் அவரது புதல்வர் சிவாஜியும் மன்னர் என்ற பெயரை மட்டும் வைத்துக் கொண்டு தஞ்சைக் கோட்டைக்குள் இருந்தனர்.

அதிகாரத்தையும் நாட்டையும் இழந்த பின் சரபோஜி கோட்டையில் பொம்மையாக இருக்கவில்லை. அந்தப்புர சுகத்தில் ஆடித் திளைக்கவில்லை. அதற்கு மாறாக கலையையும், இலக்கியத்தையும் போற்றுவதற்கான அவகாசமும் வாய்ப்பும் பெற்றார். ஷிவார்ட்ஸ் பாதிரியாரின் மேற்பார்வையால் ஆங்கிலத்திலும் நன்கு

தேர்ச்சி பெற்றிருந்தார். பாதிரியாரின் அன்பு மாணவரான சரபோஜி அறிவுத் தாகம் கொண்டு அருமையான நூலகம் ஒன்றை ஆரம்பித்தார். அதுதான் சரஸ்வதி மகால் நூலகம் ஆகும். வடமொழி, தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளில் எழுதப்பட்ட இலக்கணம், இலக்கியம், மருத்துவம். தத்துவம், வானியல், உயிரியல், நுண்கலைகள், கட்டிடக்கலை போன்ற பல துறைகளைச் சார்ந்த அரிய நூல்களை சேகரித்து வைத்தார். மேலும் பழங்காலத்தைச் சேர்ந்த 2,200 ஓலைச் சுவடிகளையும் சேகரித்து வைத்தார். இதில் நாயக்கர் காலத்திலும், மராட்டியர் ஆட்சிக் காலத்திலும் எழுதப்பட்ட ஓலைச் சுவடிகள் அடங்கும். இந்த சரஸ்வதி மகால் ஒரு பல்துறை ஆய்வுக் கூடமாக மாறியது. மருத்துவத் துறையில் அதிக கவனம் செலுத்தி பல அரிய மருத்துவ நூல்கள் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டது. எல்லா சமயத்தினரும் இந்த நூலகத்திற்குச் சென்று ஆய்வு நடத்தும் வகையில் நூல்கள் சேகரிக்கப் பட்டு வைக்கப்பட்டன.

இவை தவிர வண்ண ஓவியங்கள், தந்த எலும்புக்கூடு, "னஇயல் ஆராய்ச்சிக்கான கருவிகள், பழங்காலத்து நாணயங்கள் "ன்றவைகளும் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டன. தஞ்சை சரஸ்வதி மகால் சரபோஜியின் மன்னரின் சாதனைக்கு ஒரு விளக்கமாகும். இந்த அறிஞனின் புகழை சரஸ்வதி மகால் இறவாப் புகழாக்குகின்றது. "வைப் பரப்பிடும் பணிக்கு 1805-ல் தஞ்சையில் அச்சுக்கூடம் மறயும் நிறுவினார் சரபோஜி. தேவநாகரி எழுத்தில் அச்சிடும் தாழில் நடைபெற்றது. -

இசையைப் போற்றி வளர்த்த சரபோஜி தஞ்சையை கர்நாடக யின் மையமாக்கினார். இசைக் கலைஞர்களைப் பெரிதும் போற்றினார். இவர் காலத்தில் தான் சங்கீத மும்மணிகள் என்று புகழ் பெற்ற தியாகராயர், முத்துச்சாமி தீட்சிதர், சாமா சாஸ்திரியார் போன்றோர் வாழ்ந்தனர். கர்நாடக சங்கீதத்தின் கருவூலமாகத் திகழ்ந்தது தஞ்சாவூர். சரபோஜி ஆங்கில இலக்கியத்தில் தேர்ச்சி பெற்று விளங்கினார். அவருடைய அன்பிற்குரிய ஆசான் ஷிவார்ட்ஸ் பாதிரியார் உயிர் துறந்ததும், சரபோஜி எழுதிய ஆங்கிலக் கவிதை பாதிரியாரின் கல்லறையில் பொறிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் சரபோஜி 1833-ல் இறந்தார். '

**9) இரண்டாம் சிவாஜி : 1833-1855**

இரண்டாம் சரபோஜிக்குப் பிறகு அவரது மகன் இரண்டாம் சிவாஜி

மன்னரானார். இவர் தாய்க்கு செல்லப் பிள்ளையாக தஞ்சைக்கு பொல்லாப் பிள்ளையாக வளர்ந்தார். அந்தப்புற சுகத்தில் திளைத்தார். இருபது மனைவியர் இருந்தும் ஆண் பிள்ளையில்லாமல், 1855, அக்டோபர் 27-ல் இறந்தார். அப்போது கவர்னர் ஜெனராக இருந்த டல்ஹௌசி பிரபு வார்சிலிக் கொள்கையைப் பின்பற்றி வாரிசில்லாத தஞ்சை ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தார். ஆங்கில அரசு தஞ்சை ஆட்சியை நேரடியாக எடுத்துக் கொண்டது. இத்துடன் தஞ்சை மராட்டியர் ஆட்சி முடிவடைந்தது.

சுமார் இரண்டு நூற்றாண்டுகள் தஞ்சையில் ஆட்சி செய்த மராட்டிய மன்னர்கள் கொடுங்கோலர்களாகவே திகழ்ந்தனர். சரபோஜி மட்டும் இதற்கு விதிவிலக்காக இருந்தார். மராட்டியர்கள் வடமொழி சார்புடையவர்கள். எனவே தமிழகத்திற்கும் தமிழுக்கும் நாயக்கர்கள் செய்ததைப் போன்ற அழியாத கலைப் பணிகளை செய்யத் தவறி விட்டார்கள். இவர்கள் காலத்தில் மன்னர்களுக்கும் மக்களுக்கும் நெருக்கமான தொடர்பு ஏற்படவில்லை. அதிகாரிகளின் அதிகாரமும் கெடுபிடியும் எல்லை மீறி காணப்பட்டன. இடைவிடாத 'போர்களினால் மக்கள் பெருந்துன்பத்திற்கு உள்ளானார்கள். தமிழகத்தைப் பொருத்த வரையில் மராட்டியர் ஆட்சியால் நன்மை ஏதும் விளையவில்ல.

# UNIT V
# தமிழகத்தில் ஐரோப்பியர்

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவிற்குப் புதிய கடல் வழி போர்ச்சுக்கீசிய மாலுமியான வாஸ்கோடகாமாவினால் கண்டுபிடிக்கப்பட்டது. அவர் 1498-ம் ஆண்டு மே மாதம் 27-ம் தேதி புகழ் பெற்ற கள்ளிக்கோட்டை அருகே வந்து இறங்கினார். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு ஐரோப்பிய வாணிபக் கப்பல்கள் தொடந்து இந்திய துறைமுகங்களுக்கு வந்தன. போர்ச்சுக்கீசியரைத் தொடர்ந்து டச்சுக்காரர்கள், டென்மார்க்காரர்கள், ஆங்கிலேயர்கள்,

பிரெஞ்சுக்காரர்கள் வந்தனர். இவர்கள் அனைவரும் இந்தியாவில் பண்டக சாலைகளை அமைத்து வாணிபம் செய்தனர். '

ஐரோப்பியர்கள் தமிழ் நாட்டில் கிழக்கு கடற்கரைப் பகுதியில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். சிறிது சிறிதாக தமிழக அரசியலில் தலையிட்டனர். அதன் விளைவாக முக்கியமாக ஆங்கிலேயர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் தமிழகத்தில் ஆதிக்கப் போட்டி ஏற்பட்டது. அதன் இறுதியில் ஆங்கிலேயர் பிற ஐரோப்பியர்களை விரட்டியடித்து இந்தியாவில் தங்கள் ஆட்சியை நிலைநாட்டினர். ஐரோப்பியர்களின் வருகை தமிழ் நாட்டு வரலாற்றில் முக்கிய இடம் பெற்றுள்ளது.

### 1) தமிழகத்தில் போச்சுக்கீசியர்கள்

இந்தியாவிற்கு முதன் முதலாக வந்தவர்கள் போச்சுக்கீசியர் களேயாவர். முதலாவது வந்த வாஸ்கோடகாமவை சாமரின் என்ற பட்டத்தையுடைய இந்து அரசர் வரவேற்றார். ' அரசரின் நல்லெண்ணத்தைச் சம்பாதித்து அவருடன் நட்புறவு ஏற்படுத்தி விட்டு நாடு திரும்பினார். அவருக்குப் பின்பு கேப்ரால் என்பவர் தலைமையில் 1200 பேரைக் கொண்ட குழு ஒன்று 1500-ல் வந்தது. இந்தக் குழு கண்ண னூரில் காப்புத்தளம் ஒன்றை நிறுவியது. பின்னர் 1505-ல் வந்த அல்மைடா நீல நீர்க் கொள்கையை வகுத்து இந்தியாவில் போர்ச்சுக்கீசியர்களின் ஆதிக்கத்திற்கு அடிகோலினார்.

1509-ல் இந்தியா வந்த போர்ச்சுக்கீசிய வைசிராய் அல்புகர்க் கோவாவை போர்ச்சுக்கீசியர்களின் வர்த்தக மையமாக ஆக்கினார். பின்னர் பஸ்ஸின், டையு, டாமன் ஆகியவை போர்ச்சுக்கீசியர் வசமானது. விஜய நகரப் பேரரசு காலத்தில் போர்ச்சுக்கீசியர்கள் அந்த அரசுடன் நல்லுறவு வைத்திருந்தனர். இவர்களே விஜய நகரப் பேரரசருக்குத் தேவையான குதிரைகளை இறக்குமதி செய்தனர். விஜய நகரப் பேரரசின் வீழ்ச்சியின் போது போர்ச்சுக்கீசியர்களின் வர்த்தகமும் வீழ்ச்சியடைந்தது.

போர்ச்சுக்கீசியப் பாதிரியார்கள் மேற்கு கடற்கரை ஓரத்திலுள்ள பகுதிகளில் உள்ள மக்களை கிறிஸ்தவர்கள் ஆக்கினர். அதன் பின்னர் கோரமண்டலக் கடற்கரையில தங்கள் மதப் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். தூத்துக்குடிப் பகுதியில் பலரை சமய மாற்றம் செய்தனர். முக்கியமாக பரதவர்களை அதிக அளவில் கிறிஸ்தவ களாக்கினர். 1592-ல் இயேசு சங்கத்தைச் சார்ந்தவர்கள் மதுரா மிஷனை

நிறுவி தங்கள் சமயப் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். போர்ச்சுக் இசியர்களை இந்தியர்கள் கொடூரமானவர்கள், ஐயத்திற்குரியவர்கள் என்று கருதி பரங்கியர்கள் என்று அழைத்தனர்.

நாயக்கர் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் சமயப் பிரச்சாரம் செய்ய வீரப்ப நாயக்கர், திருமலை நாயக்கர் போன்றோர் அனுமதியளித்தனர். இதனால் மதுரை, தஞ்சை, திருச்சி, சத்தியமங்கலம் பகுதியில் ஏராளமான தமிழர்கள் கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றினர்.

**2) தமிழ்நாட்டில் டச்சுக்காரர்கள்**

ஐரோப்பாவில் ஆலந்து நாட்டுக்காரர்களே டச்சுக்காரர்கள் என்று அழைக்கப்பட்டனர். டச்சு அரசாங்கம் 1602-ல் நெதர்லாந்தின் ஐக்கிய கிழக்கிந்தியக் கம்பெனிக்கு கீழை நாடுகளுடன் வியாபாரம் செய்யும் சாசனம் ஒன்றை அளித்தது. அதன்பின் டச்சுக்காரர்கள் ஜகார்த்தா, மலேயாவிலுள்ள அம்பாயினா, மலாக்கா ஆகிய பகுதிகளில் ஆதிக்கத்தை ஏற்படுத்தினார்கள். இந்தியாவில் மசூலிப்பட்டிணத்தில் தங்கள் வர்த்தக மையத்தை அமைத்தனர். பின்னர் புலிகாட், சிஞ்சூரா, பாரர்நாகூர், பாலாசூர், கொச்சி ஆகிய பகுதிகளில் தங்கள் பண்டக சாலைகளை நிறுவினர். -----

டச்சுக்காரர்கள் தமிழகத்தில் பழவேற்காடு, தரங்கம்பாடி ஆகிய இடங்களில் வர்த்தக மையங்களை அமைத்துக் கொண்டனர். 1658-ல் தூத்துக்குடியையும், 1659-ல் நாகப்பட்டிணத்தையும் கைப்பற்றிக் கொண்டனர். பின்னர் கொல்லம், கொடுங்களூர் ஆகிய இடங்களில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தினர்.

டச்சுக்காரர்கள் இந்திய வாணிபத்தில் பெருமளவு அக்கறை கொண்டிருந்தனர். பட்டுத் துணிகள், வெடி உப்பு, அரிசி, கஞ்சா, கருநீலம் ஆகிய பொருட்களை ஏற்றுமதி செய்தனர். வாசனைப் பொருட்களையும் ஏற்றுமதி செய்தனர். இச்சமயத்தில் ஐரோப்பாவில் டச்சுக்காரர்களுக்கும், ஆங்கிலேயருக்குமிடையே கடும் போட்டி நிலவியது. அதில் ஆங்கிலேயர்களுடன் போட்டியிட முடியாமல் டச்சுக்காரர்கள் ஒதுங்கிக் கொண்டனர்.

**3) தமிழ் நாட்டில் டென்மார்க்கியர்**

டென்மார்க்கியர் தமிழகத்திற்கு வர முக்கியமான காரணம்

சமயமும் வர்த்தகமும் ஆகும். சமயப் பிரச்சாரத்திற்காகவே டேனிஷ் அதரன் சபையை நிறுவினர். தரங்கம்பாடியின் டேனிஷ் லூதரன்சபை கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டது. கிறிஸ்தவ சமய வளர்ச்சிக்கு பெரிதும் உழைத்தது. இங்கு சமயப் பணியாற்ற வந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் பர்த்தலோமியோ சீகன்பால்க் என்பவராவார். இவர்தான் முதன் முதலில் தமிழில் நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். இதற்காக பொறையாறில் அச்சுக்கூடம் நிறுவப்பட்டது. குறைந்த விலையில் உயர்தரமான நூல்கள் வெளியிடப்பட்டன. இவ்வாறு டென்மார்க்கியர் தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும் பெரும் சேவை செய்துள்ளனர். -டென்மார்க்கியர்கள் இந்தியாவில் நிலையாகக் காலூன்ற முடியவில்லை. 1845-ல் கல்கத்தாவிலிருந்த ஷெராம்பூரையும், தமிழகத்திலுள்ள தரங்கம்பாடி குடியேற்றத்தையும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு விற்று விட்டனர்.

### 4) தமிழகத்தில் ஆங்கிலேயர்கள்

போர்ச்சுக்கல், ஹாலந்து, டென்மார்க் போன்ற ஐரோப்பிய நாட்டினர் இந்தியாவுடன் வியாபாரம் செய்து பொருளீட்டுவதைக் கண்ட ஆங்கிலேயர்களும் இந்தியாவுடன் வியாபாரம் செய்ய ஆர்வம் கொண்டனர். 1599-ல் மேயோ பிரபுவின் தலைமையில் லண்டன் வணிகர்கள் ஒன்று கூடி கிழக்கில் வாணிபம் செய்யும் உரிமையைத் தரும்படி எலிசபெத் அரசியிடம் விண்ணப்பம் செய்தனர். அதைப் பரிசீலித்த அரசி, 1600, டிசம்பர் 31-ம் தேதி கிழக்கில் வியாபாரம் செய்யும் உரிமையை கிழக்கிந்தியக் கம்பெனிக்கு கொடுக்கும் ஒரு பட்டயத்தை வழங்கினார். 1609-ல் முதலாம் ஜேம்ஸ் மன்னர் அந்தப் பட்டயத்தை நிரந்தரமாக்கி ஆணை பிறப்பித்தார். அதன்பின் ஆங்கில வணிகர்கள் இந்தியாவுடன் வியாபாரத் தொடர்பு கொண்டனர்.

18-ம் வருடம் தான் இந்தியாவில் பண்டக சாலைகளை ஏற்படுத்துவதற்கான முதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1609-ல் கேப்டன் ஹாக்கின்ஸ் என்பவர் இந்தியாவுக்கு வந்தார். இவர் அப்போது முகலாயப் பேரரசராக இருந்த ஜஹாங்கீரைச் சந்தித்து சூரத்தில் ஒரு வாணிகக் கிடங்கை அமைக்க அனுமதி பெற்றார். மேலும் வணிக சலுகைகளைப் பெறும் பொருட்டு முதலாம் ஜேம்ஸ் மன்னர் 1615-ல் சர் தாமஸ் ரோ' என்பவரை ஜஹாங்கீரின் அரசவைக்கு தூதராக

அனுப்பினார். 'சர்தாமஸ் ரோ போர்ச்சுக்கீசியர்களின் சதிகளை முறியடித்து, இந்தியாவில் ஆங்கிலேயர்களின் புகழை உயர்த்தினார். 1619-ல் அவர் இந்தியாவை விட்டுச் செல்லும் முன்பு, புரோச், ஆகரா அகமதாபாத் ஆகிய இடங்களில் ஆங்கிலேயர்கள் பண்டம் சாலைகளை நிறுவினர்.

இங்கிலாந்து அரசர் இரண்டாம் சார்லஸ் போர்ச்சுக்கிச் இளவரசியான காதரீனைத் திருமணம் செய்து கொண்டதால், பம்பா அவருக்கு சீதனமாகக் கிடைத்தது. அதனை அவர் கிழக்கிந்திய கம்பெனிக்கு வாடகைக்குக் கொடுத்தார். படிப்படியாக வளர்ச்சியடைந்த பம்பாய், மேற்கு கரையிலேயே முதல் தரமான துறைமுகமாகவும், ஆங்கிலேயரின் குடியேற்றமாகவும் திகழ்ந்தது.

இந்தியாவில் தென்கிழக்கு கடற்கரையில் கோல்கொண்டா அரசின் முக்கியத் துறைமுகமான மசூலிப்பட்டிணத்தில் 1611-ல் ஆங்கிலேயர் 'ஒரு பண்டகசாலையை நிறுவினர். ஆனால் டச்சுக்காரர்களின் எதிர்ப்பால் அது சிறந்து விளங்கவில்லை.

மசூலிப்பட்டிணத்தில் தொடர்ந்து தொல்லை இருந்து வந்ததால், ஆங்கிலேயர் அதற்கு அருகிலுள்ள சென்னைக்குப் போக விரும்பினார்கள். விஜய நகரப் பேரரசின் பிரதிநிதியான சந்திரகிரி அரசரிடமிருந்து 1639-ல் பிரான்சிஸ்டே என்பவர் சென்னையை குத்தகைக்கு எடுத்தார். அங்கு செயின்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டினார். இந்தக் கோட்டையைச் சுற்றி சென்னை நகரம் உருவானது. விரைவிலேயே அது ஆங்கிலேயர்களுக்கு வசதியான துறைமுகம் ஆனது. ஆங்கிலேயரின் தலைமையிடம் மசூலிப் பட்டிணத்திலிருந்து செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு மாறியது. 1633-ல் ஹரிஹர்பூரிலும், பாலாசூரிலும் பண்டடகசாலை அமைக்கப்பட்டது.

### 5) தமிழகத்தில் பிரெஞ்சுக்காரர்கள்

இந்தியாவிற்கு வந்த ஐரோப்பியர்களில் கடைசியாக வந்தவர்கள் பிரெஞ்சுக்காரர்கள் ஆவர். 1604-ம் வருடத்திலிருந்து இந்தியாவிற்கு வர் பல முயற்சிகள் எடுத்தாலும், அது வெற்றியடையவில்லை . 1664-ல் 14 ம் லூயி மன்னரின் காலத்தில் மந்திரி கால்பர்ட்டின் முயற்சியினால் தான் 'பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி' நிறுவப்பட்டது. இக்கம்பெனி - அரசாங்கத்தால் ஆதரிக்கப்பட்டாலும், வளர்ச்சியடையவில்லை. இந்தியாவில் பிரெஞ்சு பண்டகசாலை

இந்தியாவில் முதலாவது பிரெஞ்சு பண்டகசாலை 1668-ல் கரோன் என்பவரால் சூரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 1672-ல் சான்தோம் படிக்கப் பட்டது. 1669-ல் மசூலிப்பட்டிணத்திலும், சந்திரநாகூர் என்ற இடத்திலும் பண்டக சாலைகளை அமைத்தனர். 1672-ல் கரோன் திரும்ப அழைத்துக் கொள்ளப்பட்டு மார்டின் என்பவர் அனுப்பப்பட்டார். அவர் பீஜப்பூர் சுல்தானான ஷெர்கான் "லாடியிடமிருந்து பாண்டிச்சேரியைப் பெற்றார். பிரெஞ்சு அரசிடமிருந்து போதுமான ஆதரவு கிடைக்காவிட்டாலும், நனனுடைய திறமையால் பாண்டிச்சேரியை பிரெஞ்சுக்காரரின் தலைமை இடமாக்கினார். மேற்குக் கடற்கரைப் பகுதியில் மாஹியும்,

கிழக்குக் கடற்கரைப் பகுதியில் காரைக்காலும் பிரெஞ்சுக்காரர்கள் வசமாயின. சந்திரநாகூர், பாலசூர், காஸிம்பஜார் போன்ற இடங்களில் பண்டகசாலை களை ஏற்படுத்தினர். 1735-ல் டூமா என்பவர் இந்தியாவிலிருந்து பிரெஞ்சு நாணயத்தை வெளியிட டெல்லி அரசிடம் அனுமதி பெற்றார். 1740 முதல் ஆங்கில வியாபாரக் கம்பெனிக்கும், பிரெஞ்சு வியாபாரக் கம்பெனிக்கும் இடையே இந்தியாவில் போர் ஏற்பட்டது. இதற்கு கர்நாடகப் போர்கள் என்று பெயர். கர்நாடகப் போர்களின் இறுதியில் இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கம் முடிவடைந்தது.

## கர்நாடகப் போர்கள்

**(CARNATIC WARS) –**

கிழக்குக் கடற்கரைக்கும் அதனைச் சார்ந்த பின்னிலத்திற்கும் ஐரோப்பியர் கர்நாடகம் என்று பெயரிட்டு அழைத்தார்கள். இந்தப் பகுதிகளில் ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும் பல வாணிப ஸ்தலங்களை ஏற்படுத்தியிருந்தார்கள். தங்கள் வாணிப வளர்ச்சியை விரும்பிய இருவருமே கர்நாடக சுதேச அரசர்களின் நட்பை நாடினர். இதனால் சுதேச அரசர்களின் அரசியலிலும், போர்களிலும் தலையிட வேண்டியதாயிற்று. அப்படித் தலையிட்டதின் விளைவாக பிரெஞ்சுக் காரர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் இடையே போர் ஏற்பட்டது.

ஐரோப்பாவில் இந்த இருநாடுகளுக்குமிடையே போரோ அல்லது சமாதான உறவோ ஏற்பட்டால் அது இந்தியாவிலும் பிரதிபலித்தது. இப்போர்கள் சென்னை மற்றும் பாண்டிச்சேரியைச் சார்ந்த பகுதிகளில் நடைபெற்றதால், அவை கர்நாடகப் போர்கள் என்று அழைக்கப்பட்டன. மொத்தம் நடைபெற்ற மூன்று போர்களின் முடிவில் பிரெஞ்சுக்காரர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். இந்தியாவில் ஆட்சி செலுத்த பிரெஞ்சுக்காரர் களைவிட ஆங்கிலேயர்களே தகுதியுடையவர்கள் என்பது தெளிவாகியது. கர்நாடகப் போர்கள் இந்திய வரலாற்றில் புகழ் பெற்றவையாகும். 18-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முகலாயப் பேரரசு தென்னிந்தியாவில் ஆதிக்கத்தை இழந்தது. அச்சமயத்தில் கர்நாடகம் தக்காண கவர்னரின் அதிகாரத்தின் கீழ் இருந்தது. 1724-ல் தக்காண கவர்னராக (சுபேதார்) இருந்த ஆசப்ஷா டில்லியின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு சுதந்திர அரசனாகப் பிரகடனம் செய்து கொண்டார். அப்போது கர்நாடகம் தக்காண கவர்னரின் அதிகாரத்தின் கீழ் இருந்து வந்தது. கர்நாடகத்தின் தலைநகர் ஆற்காடு. அற்காட்டைத் தலைநகராகக் கொண்டு கர்நாடகம் நவாப் என்ற ஆட்சித் தலைவரால் ஆளப்பட்டு வந்தது. அப்போது ஆற்காட்டு நவாபாக இருந்தவர் அன்வாருத்தீன் என்பவராவார். சுதந்திரமாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்ட ஆசப்ஷா, ஆற்காட்டு நவாப் தனக்குப் பணிந்து நடக்க வேண்டும் என்று கூறியதால் அரசியல் குழப்பம் ஏற்பட்டது. இவை தவிர வாரிசுரிமைப் போராட்டமும், மராட்டியர்களின் படையெடுப்பும் தெற்கே ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்த சாதகமாக இருந்தது. இச்சூழ்நிலையில் தான் முதலாவது கர்நாடகப் போர் நடைபெற்றது.

**காரணங்கள்**

**1) ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் : (1740-48)**

முதல் கர்நாடகப் போரைப் பொறுத்த அளவில், இது ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரின் பிரதிபலிப்பேயாகும். 1740-ம் ஆண்டில் ஆஸ்திரிய பேரரசர். ஆறாம் சார்லஸ் இறந்தவுடன் பிரஷ்யாவின் அரசரான மகாபிரடரிக் "பேரரசரின் தனிக் கட்டளையை" மீறி ஆஸ்திரிய அரசியான மரியதரசாவுடன் போர் தொடுத்தார். இப்போரில் இங்கிலாந்து ஆஸ்திரியாவுக்கு ஆதரவாகவும், பிரான்ஸ் பிரஷ்யா பக்கமும் நின்று போர் புரிந்தன. இப்போர் சுமார் எட்டு ஆண்டு காலம்

நீடித்தது. இப்போர் இந்தியாவில் இரு கம்பெனிகளுக்கிடையேயும் பகைமையை வளர்த்தது. ஒருவரை ஒருவர் துரத்த நேரம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இது குறித்து பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வால்டர் என்பவர் “நமது நாட்டில் முதலாவது வெடித்த பீரங்கிக் குண்டு அமெரிக்காவிலும் ஆசியாவிலுமிருந்த குண்டுகளுக்கெல்லாம் தீ வைத்தது” என்று கூறினார்.

**2) வியாபாரப் போட்டி**

இந்தியாவில் இங்கிலாந்தும் பிரான்ஸ் நாடும் ஒருவரை ஒருவர் வன்று வியாபாரத்தை விருத்தியடையச் செய்ய நினைத்தன. இந்தியாவில் இருந்த இரண்டு நாடுகளின் கம்பெனி அதிகாரிகள் சமாதானமாகச் செல்ல நினைத்தாலும் இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்த மேலதிகாரிகள் இதை ஒப்புக் கொள்ளவில்லை. கம்பெனி நிர்வாகிகள் இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்தனர்.

**3) கர்நாடகாவில் நவாபின் சூழ்ச்சி**

கர்நாடக நவாபின் நடுநிலையும், அரசியல் தந்திரமும் போருக்குக் காரணமானது. அவர் இருசாராரையும் இந்தியாவில் போரிட்டுத் தமது நாட்டின் அமைதியைக் குலைத்துவிடாதபடி கேட்டுக் கொண்டார். ஆனாலும் தந்திரமாக பிரான்சுடன் மறைமுக உறவு வைத்துக் கொண்டார்.

**4) டியூப்ளே**

1742-ல் டியூப்ளே பாண்டிச்சேரியின் கவர்னரானார். அவர் கர்நாடக அரசியல் நிலையைக் கூர்ந்து கவனித்து வந்தார். பிரெஞ்சு நாட்டின் பெருமையை இந்தியாவில் நிறுவிப் புகழ் பெற வேண்டுமென்று நினைத்தார். ஆங்கிலேயரை அடியோடு விரட்டி விட்டு பிரெஞ்சு ஆதிக்கத்தைப் பரப்ப நினைத்தார். இந்திய அரசுகள் வேரற்ற மரங்களாக பாழ்பட்டு விழும் நிலையில் இருப்பதைப் பயன்படுத்தி, புதிய பொலிவுடன் பிரெஞ்சு ஆதிக்கத்தை ஏற்படுத்த நினைத்தார். ஆனாலும் இவர் ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் இந்தியாவில் பரவுவதை விரும்பவில்லை. போர் ஆரம்பித்தது.

**போரின் போக்கு**

ஆங்கில அரசாங்கம் பர்னட் (Burmett) என்பவரின் கீழ் ஒரு கப்பற்

படையை பிரெஞ்சுக்க டற்படையைக் கைப்பற்றவும், பாண்டிச்சேரியை எதிர்ப்பதில் சென்னைக்கு உதவவும் அனுப்பியது. பிரெஞ்சுக் கவர்னர் டியூப்ளே கர்நாடக நவாபின் உதவியை நாடினார். அன்வாருத்தீனும் தன்னுடைய ஆட்சிப் பகுதியில் ஒருவர் மற்றவரைத் தாக்கக் கூடாது என்று. அறிக்கையிட்டார். எனவே பர்னட் பாண்டிச்சேரியைத் தாக்காமல் திரும்பச் சென்று விட்டார்.

இவ்வாறிருக்க, தன்னிடத்தில் போதிய படை இல்லாததால் மொரிஷியஸ் தீவின் பிரெஞ்சு கவர்னரான லாபர்தோனேயின் (Labourdonnais) உதவியை நாடினார் டியூப்ளே . அவர் எட்டு கப்பல்களுடன் வந்து சென்னையை முற்றுகையிட்டார். இப்போது ஆங்கிலேயர் அன்வாருத்தீனின் உதவியை நாடவே, அன்வாருத்தீன் இந்த சென்னை முற்றுகையை எதிர்த்தார். ஆனால் டியூப்ளே தனது ராஜதந்திரத்தினால் அவரை சமாதானப்படுத்த முயன்றார். நவாபிடம் ஒப்படைப்பதற்காகவே தாம் சென்னையைக் கைப்பற்றுவதாகக் கூறி 1742-ல் சென்னையை முற்றுகையிட்டு கைப்பற்றினார். இந்த வெற்றியைப் பயன்படுத்திக் கொள்வதில் டியூப்ளேக்கும். லாபர்தோனேக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டு, அதன் விளைவாக லாபர்தோனே பிரான்ஸ் சென்றுவிட்டார். செயின்ட் தாமஸ் போர் : 1746 (அடையாறு போர்) தன் ஆணைக்குக் கீழ்ப்படியாமல் தன்னை அவமதித்த டியூப்ளேயிடம் அன்வாருத்தீன் கோபம் கொண்டார். உடனடியாக, கைப்பற்றிய சென்னையை விட்டுவிடுமாறு ஆணையிட்டார். டியூப்ளே மறுத்துவிட்டார். எனவே தனது மகன் மாபூஸ்கான் தலைமையில் 10,000 வீரர்கள் அடங்கிய ஒரு படையை அனுப்பி, சென்னையை முற்றுகையிட்டார். பிரெஞ்சுப் படையோ 1,000 படை வீரர்களை மட்டுமே பெற்றிருந்தது. அடையாறுக்கு அருகிலுள்ள சான்தோமில் போர் ஏற்பட்டது. திறமையும், நல்ல பயிற்சியும் பெற்ற பிரெஞ்சுப்படை நவாபின் படைகளை மிக எளிதில் தோற்கடித்தது. -

சென்னையைக் கைப்பற்றியபின் செயின்ட் டேவிட் கோட்டையைக் கைப்பற்ற முற்றுகையிட்டார் டியூப்ளே. முற்றுகை பதினெட்டு மாதங்கள் நீடித்தது. பயனில்லை. அதேநேரம் பாண்டிச்சேரியைக் கைப்பற்ற பாஸ்காவென் (Boscawan) என்ற ஆங்கில தளபதி தலைமையில் ஒரு கப்பற்படை வந்தது. பாண்டிச்சேரி முற்றுகையிடப்பட்டாலும், படையில் போர் திறமையில்லாததால்

பாண்டிச்சேரியைப் பிடிக்க முடியவில்லை. இதற்கிடையில் ஐரோப்பாவில் ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் 1648-ல் ஏலாசாப்பேல் உடன்படிக்கையின்படி முடிவடைந்தது. அதன்படி சென்னை மீண்டும் ஆங்கிலேயர்களுக்கே கிடைத்தது முதல் கர்நாடகப் போரின் விளைவுகள் - -

1) சென்னை ஆங்கிலேயர்கட்கு கொடுக்கப்பட்ட போதிலும், பிரெஞ்சுக்காரர்களின் புகழும் பெருமையும் உயர்ந்தது. வியாபாரப் போட்டியில் பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கு பெருகி வியாபாரம் பெருகியது.

2) பிரெஞ்சுக்காரர்களின் கடல் வலிமையை இந்தியர் புகழலாயினர். -

3) இப்போரினால், 'போரிடுவதில் முகமதியரே சிறந்தவர்கள்' என்ற கருத்து மாற்றப்பட்டுவிட்டது. நவாப் அடைந்த தோல்வி அவரின் ஆற்றலின்மையை வெளிப்படுத்தின. இந்திய தரைப் படையினால் மாத்திரம் ஐரோப்பியரை வெல்ல முடியாது என்பதைக் காட்டியது. போரில் வெற்றி பெற திரளான வீரர்களைவிட மேலான கட்டுப்பாடும், நவீன போர் ஆயுதங்களும் தேவை என்பதை உணர்த்தியது.

4) கப்பற் படையின் சிறப்பை யாவரும் உணரத் தொடங்கினர்.

S) டி.யூப்ளே தமது வாக்கைக் காப்பாற்றாததால், பிரான்ஸ் இந்திய அரசர்களின் நம்பிக்கையை இழக்க வேண்டியதாயிற்று. நவாபின் ஆதரவு இனி ஆங்கிலேயர்களுக்கே என்பது தெளிவாகியது.

6) அன்வாருத்தீனைத் தோல்வியுறச் செய்த நிகழ்ச்சி, டியூப்ளேயின் மனதில் ஆழமான முத்திரையைப் பதித்து, புதிய வழியில் ஏராளமான வெற்றி பெறும் வாய்ப்புகளை எடுத்துக் காட்டியது.

## இரண்டாவது கர்நாடகப் போர் (1748-54)

இரண்டாவது கர்நாடகப் போர் இந்தியாவில் ஏற்பட்ட பிரச்சினை களின் அடிப்படையில் ஏற்பட்டது. இந்தியாவில் ஏற்பட்ட உள்நாட்டுப் பிரச்சனைகளில் இரு கம்பெனிகளும் தலையிட்டன. முதல் கர்நாடகப் போரில் சென்னை அருகே நடந்த போரில் அன்வாருத்தீனைத் தோல்வியுறச் செய்த நிகழ்ச்சி டியூப்ளேக்கு ஏராளமான வெற்றிகளைப் பெறும் வாய்ப்பை அளித்தது. அதிர்ஷ்டம் அவர் பக்கத்தில் இருந்தது. அது அவர் முன் ஓர் அரிய சந்தர்ப்பத்தை அமைத்து அவரது கொள்கையைச் செயலில் காட்டும்படி செய்தது.

## போருக்கான காரணங்கள்

- 1) தக்காண கவர்னரான நிஜாம் உல்முல்க் (ஆசப்ஷா ) 1748-ல் இறந்தார். அவர் மறைவுக்குப் பின் அவரது இரண்டாம் மகனான

நாஸர்ஜங் நிஜாமானார். ஆனால் நிஜாம் உல்முல்க்கின் பேரனான முஸபர்ஜங் அப்பதவி தமக்கே உரியது என்று போட்டியிட்டார். எனவே இருவருக்குமிடையே அரியணைப் போட்டி ஏற்பட்டது. இச்சமயத்தில் பிரெஞ்சுக்காரர்கள் முஸபர்ஜங்கிற்கு உதவ முன் வந்தனர்.

' 2) 1741-ல் மராட்டியர்களால் கைது செய்யப்பட்டு ஏழு ஆண்டுகள் கழித்து சந்தாசாகிப் விடுதலை பெற்றார். டியூப்ளே இதற்காக மராட்டியர் களுக்கு ஏழு லட்சம் ரூபாய் பணயப் பணம் கொடுத்தார். சந்தா சாகிப் ஆற்காட்டு நவாபான அன்வாருத்தீனைத் தொலைத்துக் கட்டிவிட்டு தானே ஆற்காட்டு நவாபாக விரும்பினார். அதற்காக டியூப்ளேயின் உதவியை நாடினார்.

3) டியூப்ளே இரு வழிகளில் தம் செல்வாக்கை நிலைநாட்ட , விரும்பினார். தக்காணத்தில் முஸபர்ஜங்கை நிஜாமாக்குவது, - ஆற்காட்டில் அன்வாருத்தீனை பதவியிறக்கிவிட்டு சந்தாசாகிபை நவாபாக்குவது ஆகியவையாகும். இப்படிச் செய்தால் அந்த இருவரும் பிரான்சுக்கு நன்றி உள்ளவர்களாக இருப்பர் என்றும், பிரான்சின் - வியாபாரம் இந்தியாவில் வளர இது வழி வகுக்கும் என்றும் டியூப்ளே எண்ணினார். ஆங்கிலேயர்களை இந்தியாவிலிருந்து விரட்ட இது பெரிதும் உதவும் என்று கனவு கண்டார். -

4) எனவே 1749-ல் சந்தாசாகிப், டியூப்ளே , முஸபர்ஜங் ஆகிய் மூவரும் ஆங்கிலேயர்கட்கு எதிராக ஓர் ரகசிய உடன்பாட்டை செய்தனர். கூட்டுப்படை ஒன்றையும் அமைத்தனர். இந்த ஏற்பாட்டை கேள்விப்பட்ட ஆங்கிலேயர்கள் நாஸர்ஜங்கிற்கும், அன்லாருத்தீனுக்கும் உதவ முன்வந்தனர்.

**போரின் போக்கு (Course of the War)**

சந்தாசாகிப், முஸபர்ஜங், டியூப்ளே ஆகியோரின் கூட்டுப் படைகள் ஆற்காட்டைக் கைப்பற்றச் சென்றன. வழியில் தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள வேலூர்க்கருகில் உள்ள ஆம்பூர் (Ambur) என்ற இடத்தில 1749 ஆகஸ்ட் 3-ம் தேதி நடைபெற்ற போரில் அன்வாருத்தீனின் படைகள் தோற்கடிக்கப்பட்டன. அன்வாருத்தீன் போரில் கொல்லப்பட்டார். அவருடைய மகனான முகமது அலி திருச்சிக்கு ஓடிவிட்டார். பிரான்சின் இந்த வெற்றி தங்களுக்கு ஆபத்து என்பதை அறிந்தனர் . ஆங்கிலேயர். ஆனால் அவர்களிடம் டியூப்ளேயின் ஆற்றல் இல்லை. ஆனாலும் திருச்சிக்கு ஓடிய முகமது

அலிக்கு உதவியாக ஒரு படையை அனுப்பினர்.

இதற்கிடையில் சந்தாசாகிப் தஞ்சாவூரை முற்றுகையிட்டு மூன்று மாதங்களாக அங்கு தனது நேரத்தை வீணடித்துக் கொண்டிருந்தார். அதே நேரம் முஸபர் ஜங் ஒரு பெரும் படையுடன் கர்நாடகத்தினுள் நுழைந்தார். முஸபர்ஜங் கைதியானார். நாசிர்ஜங் ஆற்காட்டில் தங்கியிருந்த போது அவருக்கெதிராக் கட்ப்பை , கர்னூல், சாவனூர் ஆகிய இடங்களிலுள்ள நவாபுகளைத் தன்னுடன் சேர்த்துக் . கொண்டார். பிரெஞ்சுத் தளபதி புஸ்ஸி (Bussy) செஞ்சிக் கோட்டையைத் தன்வசமாக்கிக் கொண்டார். அதனை மீட்க முயன்ற நாசிர்ஜங் கொல்லப்பட்டார். கைதியாக இருந்த முசபர்ஜங் விடுதலை செய்யப்பட்டு பிரெஞ்சு ஆதரவில் அரியணையைப் பெற்றார்.

இவ்வாறு டியூப்ளேயின் ஆதரவாளர்களான முசபர்ஜங்கும், சந்தா சாகிபும் முறையே தக்காண கவர்ணராகவும் (ஐதராபாத் நிஜாமாக), ஆற்காட்டு நவாபாகவும் பதவியேற்றனர். நன்றியுள்ள நிஜாம் முஸபர்ஜங் கிருஷ்ணா நதிக்கு தெற்கிலுள்ள வடசர்க்கார் பகுதிகளையும், பாண்டிச்சேரிக்கு அருகிலுள்ள பல இடங்களையும், மசூலிப்பட்டிணம் உட்பட ஒரிசா கடற்கரையில் பல பகுதிகளையும் டியூப்ளேக்கு வெகுமதியாகக் கொடுத்தார். பிரெஞ்சுக் கம்பெனிக்கு ரொக்கப் பரிசும் கொடுத்தார். 10,000 ரூபாய் வருமானம் உள்ள .வழுவாதவூர் ஜாகீரைத் (Valudavur) தானமாக வழங்கினார். புஸ்ஸியின் தலைமையில் ஹைதராபாத்தை நிஜாமின் கீழ் விட்டு வைத்தார் டியூப்ளே. டியூப்ளேயின் நண்பர்கட்கு இவையெல்லாம் 'அற்புதச் செயல்களாகவே பட்டது.

டியூப்ளேயின் இந்த வெற்றி இறுதியானதாக்கச் செய்ய வேண்டுமானால் திருச்சிக் கோட்டையில் தஞ்சம் புகுந்த முகமது அலியுடன் டியூப்ளே ஓர் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். ஆனால் மிக சாதுரியமாக ஆங்கிலேயர் தடுத்து விட்டனர். டேவிட் கோட்டையின் புதிய கவர்னரான சாண்டர்ஸ் பிரான்சுக்கு நிஜாமினால் கொடுக்கப்பட்ட இடங்களை அது அனுபவிக்கக் கூடாது என்றார். முகமது அலிக்கு உதவும் நோக்கத்துடன்' பிரெஞ்சுக்காரர்களிடம் ஆலோசனை நடத்துவது போல் காலம் கடத்தினார். அதேநேரம் தஞ்சை, மைசூர் மராட்டிய மன்னர்களுடன் சேர்த்து கூட்டு ஒன்றை உருவாக்கினார்.

**ஆற்காடு முற்றுகை: 1751**

இந்த நேரத்தில் தான் இந்திய அரசியல் சதுரங்க ஆட்டத்தில் புதிய திருப்பம் ஏற்பட்டது. அச்சமயத்தில் ஆங்கிலக் கம்பெனியில் எழுத்தராகச் சேர்ந்த ராபர்ட் கிளைவ் என்பவர் ராணுவத்தில் சேர்ந்தார். இவர் ஆளுநர் சாண்டர்ஸை அணுகி புதிய போர்த்திட்டம் ஒன்றைக் - கொடுத்தார். திருச்சி முற்றுகையைத் தளர்த்தி ஆற்காட்டை முற்றுகையிட வேண்டும் என்பதே அந்தத் திட்டம் ஆகும். கிளைவிற்கு அனுமதி வழங்கப்பட்டது. கிளைவ் ஒரு பெரும் படையுடன் சென்று மிக எளிதில் ஆற்காட்டைக் கைப்பற்றினார். திருச்சி முற்றுகையிலிருந்த சந்தாசாகிப் ஆங்கிலேயர் எதிர்பார்த்தபடியே தனது தலைநகரை மீண்டும் பிடிப்பதற்காக ஓடி வந்தார். திருச்சி முற்றுகை கைவிடப்பட்டது. சந்தாசாகிப் கைது செய்யப்பட்டார். பிரெஞ்சுப் படைத் தளபதி ஜே.பி.லா ஸ்ரீரங்கத்தில் கைது செய்யப்பட்டார். கைதியான சந்தாசாகிப் தஞ்சை அரசரின் தளபதியால் கொலை செய்யப் பட்டார்.

'லா'வின் தோல்வியைக் கண்டு மனம் தளராத டியூப்ளே திருச்சிக் கோட்டையை முற்றுகையிடத் தீர்மானித்தார். ஆஸ்ட் (Astruc) என்ற பிரெஞ்சுத் தளபதி திருச்சியை முற்றுகையிட்டா ஆனால் ஆங்கிலத் தளபதி லாரன்ஸ் அவரை துரத்தியடித்தா தோல்விக்கு' மேல் தோல்வி ஏற்பட்டது. மிகக் கடினம் சூழ்நிலையில் டியூப்ளே சிக்கித் தவித்தார். திருச்சி டியூப்ளோ புகழுக்கும், திட்டங்களுக்கும் மட்டுமல்லாது, பிரெஞ்சுக்காரர்கள் மதிப்புக்கும், நலன்களுக்கும் கல்லறையாக ஆகிவிட்டது. பிரெடுநன்கள் இந்தியாவில் மிக மோசமான நிலைக்குச் சென்று கொண்டிருந்ததால் டியூப்ளேயை திரும்ப அழைத்துக் கொள்ள பிரெஞ்சு அரசு முடிவு செய்தது.

எனவே கோதயூ (Godchew) என்பவரை பிரெஞ்சு ஆளுநராக அனுப்பியது. இவர் டியூப்ளேயின் கொள்கைகளைக் கைவிட்டார். வங்கிலேயருடன். சமாதானம் செய்து கொள்வதே அப்போதிருந்த கம்நிலைக்குச் சாலச் சிறந்தது என்று உணர்ந்து கொண்ட கோதயூ ஆங்கிலேயருடன் 1754 டிசம்பர் மாதம் தற்காலிக உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டார். இந்த உடன்படிக்கைப்படி, வடசர்க்காரிலும், ஹைதராபாத்திலும் பிரெஞ்சுக்காரர்களின் மதிப்பு காப்பாற்றப்பட்டது. முகமது அலி கர்நாடக நவாபாக ஒப்புக் கொள்ளப்பட்டார். இந்திய சுதேச மன்னர்களின் உள் விவகாரங்களில்

யாரும் தலையிடுவதில்லை என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கை ஏற்பட்ட போது அவரவர்களிடம் இருந்த இடத்தை அப்படியே வைத்துக் கொள்வது என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கையை டியூப்ளே கடுமையாகத் தாக்கினார். 'பிரான்ஸ் நாட்டுக்கே ஒரு அவமானம்' என்றார். 1754-ல் தாய்நாடு திரும்பினார் டியூப்ளே . .

**போரின் விளைவுகள் (Results)**

1) டியூப்ளே பிரெஞ்சுக்காரர்களுக்காகப் பெற்ற எல்லா ஆதாயங்களையும் இழக்க நேரிட்டது:

2) இந்திய சுதேச மன்னர்களின் நல்லெண்ணத்தையும் ஆதரவையும் பிரெஞ்சுக்காரர்கள் இழந்தனர்.

- 3) தங்கள் நாட்டைக் கைப்பற்றி பிரெஞ்சு நாட்டின் செல்வாக்கை வளர்க்க டியூப்ளே திட்டமிட்டதைக் கண்ட மக்களும் வெறுத்தனர்.

4) டியூப்ளேயின் பதவி பறிக்கப்பட்டது. அவர் பின்பற்றிய கொள்கைகள் கைவிடப்பட்டன.

5) ஆங்கிலேயரின் ராஜதந்திரம் பாராட்டப்பட்டது. சுதேச அரசர்கள் ஆங்கிலேயர்களுடன் உறவு கொள்ள, முன்வந்தனர். இங்கிலாந்து வாணிபம் வளர்ந்தது. ஆங்கிலேயரின் படைபலம், பணபலம், கடலாதிக்கம் வளர்ந்தது. -

## டியூப்ளேயின் வரலாறு

**முதற்பகுதி: (1697-1742)**

ஜோசப் பிராங்காய் டியூப்ளே என்பவர் பிரான்சில் ‘லாண்ட் பாஸ்' என்னுமிடத்தில் பிறந்தார். இவர் முதலில் கணிதத் துறையில் ஆர்வம் கொண்டவராக இருந்த போதிலும் அமெரிக்கா, இந்தியா சென்று வந்தபின் வாணிபத்தில் ஊக்கம் ஏற்பட்டது. 1720-ல் பாண்டிச்சேரி ஆலோசனைக் குழுவில் இடம் கிடைத்தது. தனிப்பட்ட முறையில் வாணிபம் செய்து பெரும் செல்வந்தர் ஆனார். பொறாமை கொண்ட சிலரின் குற்றச்சாட்டினால் திரும்ப அழைத்துக் கொள்ளப்பட்டார். பின்னர் மீண்டும் 1731-ல் சந்திரநாகூர் பண்டகசாலையின் இயக்குநராக அமர்த்தப் பட்டார்.

**பாண்டிச்சேரி கவர்னராதல் (1743-1763)**

1742-ல் டியூப்ளே பாண்டிச்சேரி கவர்னராக நியமிக்கப்பட்டார். பதவியேற்றபின் கர்நாடகத்தில் பிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்கை நிலைநாட்ட முடிவு செய்தார். இதனால் முதலில் நிர்வாகத்தை சீர்திருத்தினார். சிக்கனத்தைக் கையாண்டு நிதி நிலையை உயர்த்தினார். பாண்டிச்சேரியின் பாதுகாப்பை வலிமைப்படுத்தினார்.

**டியூப்ளேயின் கொள்கைகள்**

டியூப்ளே, வாணிபத்தில் பிரெஞ்சுக்காரர்கள் முன்னேறு வதையே தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தார். உள் நாட்டு அரசுரிமைப் போட்டிகளில் தலையிடுவதின் மூலம் தனது அதிகாரத்தைப் பெருக்க முடியும் என்று நினைத்தார். தனது அதிகாரம் பெருக வேண்டுமானால் திருச்சி தன் வசம் இருக்க வேண்டுமென நினைத்தார். இந்தியாவிலிருந்து ஆங்கிலேயரின் அதிகாரத்தை ஒழிக்க பேரவா கொண்டார்.

**டியூப்ளேயும் இரண்டாவது கர்நாடகப் போரும்**

இரண்டாவது கர்நாடகப் போரில் டியூப்ளே பங்கு பற்றிய செய்திகளை முந்தைய பக்கங்களில் படித்து இந்த தலைப்பில் எழுதிக் கொள்ளவும்).

**டியூப்ளேயின் இறுதிக்காலம்**

இரண்டாவது கர்நாடகப் போரின் இறுதியில் டியூப்ளே தனது தாய் நாட்டிற்கு திரும்ப அழைத்துக் கொள்ளப்பட்டார். தாய்நாடு திரும்பிய டியூப்ளே மிகவும் துயருற்றார். அவரது வாழ்க்கை இருளிலும், தரித்திரத்திலும், தனிமையிலும் கழிந்தது. ஏழையாக பெருந்துயரத்திற்கு உள்ளாகி டியூப்ளே 1763 நவம்பரில் இறந்தார். இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் அவர் எழுதியது: "நான் என்னுடைய இளமை, வாய்ப்புகள், என் வாழ்க்கை முழுவதையும் தியாகம் செய்தேன், என் பணிகள் யாவற்றையும் கட்டுக்கதைகள் ஆக்கிவிட்டனர். மானிட சமூகத்தில் இழிந்தவனாக மதிக்கப்படுகிறேன. என்னிடமிருந்த சிறிய அளவு செல்வத்தையும் அபகரித்துக் கொண்டனர்".

இந்திய அரசியலில் இணையற்ற வீரத்துடன் அருஞ்செயல் ஆற்றிப் புகழ் பெற்றுத் தமக்கும், தம் நாட்டுக்கும் சிறப்பைத் தேடித் தந்த டியூப்ளேயின் முடிவு அத்தகையதாயிற்று. “இந்தியர்களைக்

கொண்டே இந்தியாவை வெல்லும் நயத்தைத் தொடங்கியவர் டியூப்ளே" என்பது மெக்காலேயின் கருத்து.

**டியூப்ளேயின் தோல்விக்கான காரணங்கள்**

1757-ம் ஆண்டு டியூப்ளே புகழின் உச்சியில் இருந்தார். ஆனால் அவரது சிறப்புகள் 1752-ம் ஆண்டிலிருந்து இறங்குமுகமாயிற்று. அவர் அடைந்த தோல்விக்கு அவரதுகொள்கையிலும், தன்மையிலும் . காணப்பட்ட குறைபாடுகளே காரணமாகும். அவைகள் பின்வருமாறு:

a) டியூப்ளேயின் கொள்கைகளை பிரெஞ்சு அரசாங்கம் புரிந்து கொள்ளவில்லை. எனவே அவரது கொள்கையிலுள்ள திறமையைப் பாராட்டாமலும், தேவையான உதவிகளை அவருக்கு உரிய நேரத்தில் அனுப்பாமல் இருந்ததுமே அவரது தோல்விக்கு முக்கியமான காரணமாகும். இதற்கு டியூப்ளே தான் பொறுப்பாளி. ஏனெனில் டியூப்ளே தனது கொள்கைகளை அரசுக்கு விளக்கவில்லை. மேலதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளத் தவறிவிட்டார். தனது பொருளாதார நெருக்கடிகள் பற்றியும் தாம் அடைந்த தோல்விகளைப் பற்றியும் அவர்களுக்குத் தெரிவிக்கவில்லை. எனவேதான் பிரான்ஸ் நாட்டிலிருந்து வந்த ஆணைகள் டியூப்ளேயின் கொள்கைக்கு முன்னுக்குப்பின் முரணாக இருந்தன.

b) தனது நிலையைக் கடந்த அளவுக்குப் பேராசையைப் பெருக்கி வந்தார். வியாபார விருத்தியைக் குறித்தே எண்ணிய அவர் கம்பெனியின் நிதி நெருக்கடியை அறியார். ஏனெனில் பிரெஞ்சுக் கம்பெனி, இங்கிலாந்து கிழக்கிந்தியக் கம்பெனியைப் போல தனிக் குழுவாக இல்லாமல், பிரான்சு நாட்டின் பரந்த அரசியல் கொள்கைகள் மீது எழுப்பப்பட்டது ஆகும். எனவே பிரெஞ்சு அரசுக்கு இருந்த பணமுடைகள் நேரடியாக கம்பெனியைப் பாதித்தன. இதனை டியூப்ளே உணரவில்லை . -

c) தக்காணமும், கர்நாடகமும் செழிப்பற்ற இடங்களாகும். தக்காணத்தில் டியூப்ளேயின் திட்டங்கள் அதிக செலவிற்கு வழிவகுத்தன.

d) டியூப்ளே அதிக ஆசைப்பட்டு 'தனது படையைத் தக்காணத்திலும் கர்நாடகத்திலும் பிரித்து வைத்தது மாபெரும் கவா ஆகும். பிரெஞ்சுப் படைத் தலைவர் புஸ்ஸி ஐதராபாத்தில் இருந்ததால் கர்நாடகத்தில் கிளைவுக்குச் சமமான ஆற்றல் மிக்க படைத்தளபதி இல்லாமல் போய்

விட்டது.

e) தக்காணத்திலுள்ள முகலாயப் பகுதிகளுக்கு கவர்னராக இருக்க டியூப்ளே சம்மதித்ததே தவறு ஆகும்..

f) இந்தியாவில் பிரான்சுக்கும், பிரிட்டினுக்கும் ஏற்பட்ட போட்டியும், பகைமையும், ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் அந்த நாடுகளுக்கிடையே காணப்பட்ட உறவின் அடிப்படையில் அமைந்தவை என்பதை டியூப்ளே அறியவில்ல.

g) தனது திட்டங்களை மறைக்காமல் வெளிப்படையாக அறிவித்து வந்ததால் அரசியலில் அதிகமான பயிற்சி இல்லாதவர் கூட அதன் விளைவுகளை உணர்ந்து தற்காப்புக்கான முன்னேற்பாடுகளைச் செய்ய முடியும். ஏனெனில் டியூப்ளே பயிற்சி பெற்ற ஒரு படைத் தலைவர் இல்லை . அவர் ஓர் அரசியல்வாதியாவார். படைகளைப் போரில் ஈடுபடுத்தும் ஆற்றல் அற்றவர்.

h) டியூப்ளேயின் குணங்களில் காணப்பட்ட குறைபாடுகளும் அவரது தோல்விக்குக் காரணமாகும். தன்னடக்கம் இவரிடம் கிடையாது. தனக்கு கீழ்ப்பட்ட அதிகாரிகளிடம் சாமர்த்தியமாகப் பழகி வேலை வாங்காமல் அடிக்கடி சண்டையிடுவார். ஒற்றுமை கிடையாது. பின்னால் நடக்கப் போகும் காரியங்களை முன் ஆலோசிக்கும் ஆற்றல் அற்றவராக இருந்தார். தான் நினைத்தது சரி என்று நினைத்ததால் ஏராளமான பகைவர்களைச் சம்பாதித்துக் கொண்டார்.

எனவே 'அருஞ் செயலாற்றிய பெரியார் வரிசையில் அவருக்கு இடமில்லை'. டியூப்ளே தவறிழைத்த போதிலும், இறுதியில் வீழ்ச்சியடைந்த போதிலும் பிரிட்டிஷ் இந்திய வரலாற்றின் முன்னுரைப் பகுதியில் அவருக்கு சிறப்பானதோர் இடமுண்டு என்பதில் ஐயமில்லை ! -

**மூன்றாம் கர்நாடகப் போர் (1756-63) காரணங்கள் |**

1) டியூப்ளேக்குப் பின்வந்த கோதயூ கர்நாடகத்தில் அமைதிக கொள்கையைப் பின்பற்றினார். ஆங்கிலேயர்களுடன் தற்காலிக உடன்பாடு ஒன்றைச் செய்து கொண்டார். ஆனால் இந்த அமைதி ஐரோப்பாவில் ஆரம்பித்த ஏழாண்டுப் போரினால் குலைக்கப்பட்டது. 1

2) ஐரோப்பாவில் ஏழாண்டுப் போர் ஆரம்பித்து விட்டாலும் இந்தியாவிலிருந்த' ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும்

விருப்பமின்றியே போரில் ஈடுபட ஆரம்பித்தனர். தஞ்சாவூரைக் கைப்பற்ற பிரெஞ்சு அதிகாரிகள் முயன்றனர்.

3) வங்காளத்தில் பிரெஞ்சுக்காரர்கட்குச் சொந்தமாக இருந்த *, சந்திரநாகூரை கிளைவும், வாட்சனும் கைப்பற்றினர். இது போருக்கு முக்கியக் காரணம் ஆகும்.

4) பிரெஞ்சுக்காரர்களுக்கு உதவியாக தாய் நாட்டிலிருந்து புதிய உதவிகள் கிடைத்தன. கவுன்ட்டிலாலி (Coun-dc-Lally) என்பவர் .. இந்தியாவில் போரை நடத்துவதற்காக அனுப்பப்பட்டார். சிவில் ராணுவ சம்பந்தமான அதிகாரங்கள் இவரிடம் கொடுக்கப்பட்டது. டி ஆச் (d' Ache) என்பவரின் கீழ் ஓர் கப்பற்படையும் அனுப்பப்பட்டது. 'லாலியின் நோக்கம் ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்து விரட்டுவதேயாகும்:

## போரின் போக்கு

லாலி சுறுசுறுப்பாக தனது பணியைத் தொடங்கினார். 1758 மே 2-ம் தேதி செயின்ட் டேவிட் கோட்டையைக் கைப்பற்றினார். தனது பணமுடையைத் தீர்க்க தஞ்சாவூரைத் தாக்கினார். ஆனால் உணவு மற்றும் வெடிமருந்து பற்றாக் குறையால் முற்றுகை கைவிடப்பட்டது. இதனால் அவரது புகழ் குறைந்தது. போகாக் (Pocock) என்பவரின் *தலைமையில் ஒரு ஆங்கிலக் கப்பற்படை வங்காளத்திலிருந்து கர்நாடகத்திற்கு அனுப்பப்பட்டது.

லாலி தனது அடுத்த செயலாக சென்னையைக் கைப்பற்ற முயற்சி செய்தார். 1758 டிசம்பர் 14-ம் தேதி முற்றுகை ஆரம்பமானது. ஹைதராபாத்தில் பிரெஞ்சுத் தளபதியாக இருந்த புஸ்ஸி என்பவரையும் தனது உதவிக்காக அழைத்தார். புஸ்ஸி ஐதராபாத்தை விட்டு வெளியேறியவுடன் அப்போது நிஜாமாக இருந்த ஜலபத்ஜங் பிரெஞ்சுக்காரர்களிடம் - வைத்த 'நம்பிக்கையைட். இழந்து ஆங்கிலேயருடன் அமைதி உடன்பாடு செய்து கொண்டார். அதன்படி வடசர்க்கார் பகுதிகளை ஆங்கிலேயர்களுக்குக் கொடுத்தார். உடனே வங்காளத்திலிருந்த கிளைவ் காவல்போர்டு என்ற படைத் தலைவரை அனுப்பி வடசர்க்கார் பகுதியிலிருந்த பிரெஞ்சுக்காரரை வெளியேற்றினார். பிரெஞ்சுக் கப்பற்படைத் தளபதியான டி ஆச் ஆங்கிலக் கப்பற் படைத் தளபதியான போகாக்கிடம் மூன்று முறை தோற்று இந்தியாவை விட்டே ஓடிவிட்டார். 1760 ஜனவரி 22-ல் சர் அயர்கூட் என்ற தளபதியால் லாலி - 'வந்தவாசி' என்ற இடத்தில்

தோற்கடிக்கப்பட்டார். புஸ்ஸி கைதியானார். 1750-ல் பாண்டிச்சேரி, செஞ்சி,மாஹி, காரைக்கால் ஆகிய பகுதிகள் மட்டுமே பிரெஞ்சுக்காரர் வசமிருந்தன.

**பாண்டிச்சேரி வீழ்ச்சி**

நம்பிக்கையற்ற இறுதியான முடிவுக்குத் தள்ளப்பட்ட லாலி, பிரெஞ்சுக்காரர்களின் நிலையை உயர்த்த எண்ணி மைசூர் அர்சரான ஹைதர் அலியுடன் ஓர் நட்பு உடன்படிக்கையை செய்து கொண்டார். அதன்படி பிரெஞ்சுக்காரருக்கு உதவியாக ஒரு சிறுபடையை அனுப்பினார் ஹைதர் அலி. ஆனால் அந்தப் படை ஆங்கிலேயருக்கு முன் நிற்கமுடியாமல் மைசூருக்கே திரும்பிவிட்டது. பாண்டிச்சேரி ஆங்கிலேயர்களால் 1760 மே மாதம் தரை வழியாகவும், கடல் வழியாகவும் முற்றுகையிடப்பட்டது. படையைப் பராமரிப்பதற்கான பணம் லாலியிடம் இல்லை . இறுதியில் 1761 ஜனவரி 16-ல் பாண்டிச்சேரி பணிந்தது. நிபந்தனையில்லாமல் சரணடைந்தது.

. பாண்டிச்சேரி ஆங்கிலேயப் படைகளால் சூறையாடப்பட்டது. ஒரு காலத்தில் அழகும் செழுமையும் கொண்டு விளங்கிய இந்த நகரம், ஒரு சில மாதங்களுக்குள் ஒரு கூரையைப் பார்க்க இயலாத அளவுக்கு அழிக்கப்பட்டது என்று ஓர்ம் (Orme) என்பவர் வருத்தத்துடன் கூறுகிறார். 1761 ஏப்ரலுக்குள் செஞ்சியும், மாஹியும் வீழ்ந்தன. பிரெஞ்சுக்காரர்களுக்கு இந்தியாவில் ஒரு இடம் கூட இல்லாது போய்விட்டது. ஐரோப்பாவில் 1763-ல் ஏழாண்டுப் போரை முடித்த பாரிசு உடன்படிக்கைப்படி மூன்றாவது கர்நாடகப் போர் முடிவடைந்தது.

**பிரெஞ்சுக்காரர்களின் வீழ்ச்சிக்குக் காரணங்கள்**

ஆரம்பத்தில் சிறப்பாக வளர்ந்து வந்த பிரான்சின் ஆதிக்கம் இந்தியாவில் நிலைபெறாமல் அதி சீக்கிரமாக வீழ்ச்சியடைந்தது. பாண்டிச்சேரியில் மாத்திரமே அதன் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டது. பாண்டிச்சேரி என்பது மாஹி, ஏனாம், காரைக்கால் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது ஆகும். இந்தியாவிற்கு சுதந்திரம் அளிக்கப்பட்ட பின்னரும் இவை பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழேயே இருந்தன. 195தான் இப்பகுதிகள் இந்தியாவிற்கு அளிக்கப்பட்டன. 1962 ஆகஸ்ட்" ல் இந்தியாவின் பகுதியாக அதிகாரப்பூர்வமாக இணைந்த அரசியலமைப்பின் ஏழாவது திருத்தத்தின் மூலம் 1963-ல் மத்திய ஆட்சி பகுதியானது. பிரான்சின் ஆதிக்க வீழ்ச்சிக்கு அநேக காரணங்கள்

உள்ளன.

**1) ஐரோப்பாவில் இருந்த இக்கட்டான நிலை**

ஐரோப்பா முழுவதையும் தன் ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்து பிரான்ஸ் நாட்டைத் தலைசிறந்த ஐரோப்பிய நாடாக்க வேண்டுமென்ற ஆசை அக்கால பிரெஞ்சு அரசர்களைப் பிடித்து ஆட்டுவித்தது. இதனால் 'நாடு சேர்க்கும் கொள்கையில்' தீவிரமாக பிரான்ஸ் ஈடுபட்டது. இக்கொள்கையால் ஐரோப்பிய அரசியல் சகதிக்குள் சிக்கித் தவித்தது. ஓயாத போர்களில் ஈடுபட்டது. எனவே பிரான்சால் இந்திய ஆதிக்கத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க முடியவில்லை.

**2) தூரக்குடியேற்ற நாடுகளில் ஆசை**

"கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை" என்பதைப் போல ஐரோப்பாவில் ஏற்பட்ட தொல்லைகளுடன் இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் குடியேற்றம் ஏற்படுத்தும் ஆசையும் சேர்ந்து கொண்டது. இதனால் இந்தியாவில் ஒருமுகமாக காரியத்தைச் சாதிக்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

**3) மோசமான நிதி நிலைமை**

ஆங்கிலப் பிரெஞ்சப் போராட்டம் இந்தியாவில் தொடங்கிய காலத்திலேயே பிரெஞ்சுக் கம்பெனியின் நிதி நிலைமை மோசமாகவே இருந்தது. ஆங்கிலக் கம்பெனிக்கு கிடைத்தது போன்று பிரெஞ்சுக் கம்பெனிக்கு வணிகப் பெருஞ்செல்வந்தரின் உதவி கிடைக்கவில்லை. மேலும் டியூப்ளே ஆரம்பத்திலே கர்நாடகத்தில் அரசியல் ஆதிக்கத்தை ஏற்படுத்த முனைந்தார். எனவே பிரெஞ்சுக்காரர்களின் வாணிபம் செழிக்கவில்லை. ஒரு வணிகக் குழு பேரரசை அமைக்க விரும்பினால் முதலில் அடிப்படைக் குறிக்கோளான வாணிகத்தில் வெற்றி பெற்றிருக்க வேண்டும். ஆனால் பிரெஞ்சுக்காரர்களோ பண வலிமை இல்லாமல் போரில் ஈடுபட்டுவிட்டனர்.

**4) வலிமையற்ற பிரெஞ்சுக் கப்பற்படை**

வாணிபப் பெருக்கத்திற்கு கடலாதிக்கம் தேவை. கடலாதிக்கம் கொள்ள வேண்டுமானால் வலிமையான கப்பற்படை அவசியம். ஆனால் பிரெஞ்சுக்காரர்களுக்கோ வலிமையான கப்பற்படை இல்லை. . இருந்த படையையும், ஐரோப்பாவில் நடைபெற்ற ஆஸ்திரிய வாரிசுரிமை போரில் இழந்தது. எனவே இந்தியாவில் தனது

ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்குத் தேவையான கடற்படை பலம் - இல்லாமல் போய்விட்டது. எனவே கடற்படை வலிமை கொண்ட ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுக்காரர்களை எளிதில் தோற்கடித்தார்கள்.

**5) தரைப்படை வலிமையின்மை**

வான். தரைப்படையில் இருசாராரும் ஒரே வலிமையில் இருந்தாலும், பிரெஞ்சுப் படையின் வலிமை ஆங்கிலப் படையின் வலிமையை விட ஒருபடி குறைவாகவே காட்சியளித்தது. அத்துடன் படைத் திட்டங்கள் சீரானதாக இல்லை. கர்நாடகத்தில் போர் நடந்து கொண்டிருக்கும் போது சிறந்த பிரெஞ்சுப் படைத் தலைவரான புஸ்ஸி ஐதராபாத்தில் இருக்க வேண்டியதாயிற்று. மேலும் அவருக்கும் லாலிக்கும மனக்கசப்பு வேறு. மூன்று கர்நாடகப் போர்களிலும் பங்கு கொண்ட பிரெஞ்சுப் படைத் தலைவர்களிடம் ஒற்றுமை என்பதே கிடையாது, எனவே பிரெஞ்சு ராணுவம் திறமையாகவும், வலிமையாகவும் போரிட முடியவில்லை .

**6) கம்பெனி ஆட்சி முறை அமைப்பில் காணப்பட்ட முறைகள்**

பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனி அரசாங்கத்தின் ஒரு தனி இலாக்காவாகவே செயல்பட்டு வந்தது. மொத்தப் பங்குத் தொகையான 55 லட்சம் லிவர்களில் 35 லட்சம் அரசாங்கத்தினுடையது. எனவே தனியார் நிறுவனத்தில் காணப்படும் ஆற்றலும் ஊக்கமும் கம்பெனியிடத்தில் இல்லை. அரசரே கம்பெனியின் நிர்வாக அங்கத்தினர்களை நியமித்தார். அரசாங்கமே பங்குதாரர்களுக்கு குறிப்பிட்ட சதவீதம் லாபப் பங்கீடு கொடுத்தது. 15 ஆம் லூயியின் அரசாங்கம் இந்திய அலுவலல்களை ஒழுங்காக கவனிக்கவில்லை. மேலும், குடியேற்ற முறையை எதிர்த்த அரசியல் கட்சியும், தலைவர்களும் தோன்றினர். முக்கியமாக வால்டர் மிகவும் குறை கூறினார். “பாரிசில் உள்ள ஒரு சிலருக்காக காப்பி, வாசனைப் பொருட்கள், மூக்குப் பொடி போன்றவற்றைப் பெறுவதற்காகப் போரிடுவதும் இரத்தம் சிந்துவதும் முட்டாள் தனமானது” என்ற கருத்து நிலவியது. எனவே தான் பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனி, அரசாங்கத்தின் முழு ஆதரவைப் பெற முடியவில்லை.

**7) வங்காளத்தில் ஆங்கியேலர்களின் வெற்றி**

பிளாசிப் போரே உண்மையில் - இந்தியாவிலிருந்த

பிரெஞ்சுக்காரர் களின் தலைவிதியை நிர்ணயித்தது என்று கூறலாம். கர்நாடகப் போர்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஆங்கிலேயர்கள் வங்காளத்தில் , பிளாசிப் போரில் வெற்றியடைந்தார்கள். இது நெருக்கடி காலத்தில் வங்காளத்திலிருந்து ஆங்கிலேயர்கட்கு உதவி கிடைக்க ஏதுவாயிற்று. மீர்காசிமிடமிருந்து பெற்ற பணம் பாண்டிச்சேரி முற்றுகைக்குப் பயன்படுத்தப்பட்டது.

“வங்காளத்தைப் பெற்று கடலாதிக்கம் செலுத்தும் ஓர் அரசுடன் பாண்டிச்சேரியைத் தளமாகக் கொண்டு, இந்தியப் பேரரசை ஏற்படுத்துவற்கு மகா அலெக்சாந்தர், மாவீரன் நெப்போலியன் ஆகியவர்களால் கூட இயலாது".

*"Neither Alexander, the great nor Nepoleon Bonaparte could have won the empire of India by starting from Pondicherry as a base and contending with the power which held Bengal and command at the sea”.*

**ஆங்கிலேயரின் வெற்றிக்கான காரணங்கள்**

1) ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி இங்கிலாந்து அரசின் அனுமதியைப் பெற்ற ஒரு தனியார் குழு. இக்கம்பெனியில் இருந்த அனைவரும் சுயநன்மையைக் கருதி உழைத்தனர். கம்பெனியின் வாணிப வளர்ச்சியும் பெருமையும் தங்களுக்கு அதிக லாபத்தைக் கொடுக்கும் என்று எண்ணி கம்பெனியின் நிர்வாகக் குழு அங்கத்தினர்களும் இதர பணியாட்களும் தங்கள் வேலைகளில் தீவிரமாகவும் உண்மையாகவும் ஈடுபட்டனர்.

, 2) கம்பெனி நல்ல முறையில் இயங்கி நல்ல லாபம் அடைந்து அரசாங்கத்திற்கே கடன் கொடுக்கக் கூடிய திறமை பெற்றிருந்தது. எனவே போதிய நிதி வசதியிருந்ததால் போரைத் திறமையாக நடத்த முடிந்தது.

- 3) கர்நாடகப் போர்களில் ஆங்கிலேயரின் வெற்றிக்கு அவர்களின் கடலாதிக்கம் முக்கியக் காரணமாகும். வழி நெடுகிலும் ஆங்கிலேயரின் கடற்படைகள் இருந்தன. எனவே தடையின்றி அவர்களின் படைகள் வர முடிந்தது. மத்திய தரைக்கடலின் முக்கியத் துறைமுகங்கள் ஆங்கிலேயர் வசமிருந்தது.

4) மேலும் இந்தியாவின் வாயில் எனப்படும் பம்பாய் ஆங்கிலேயரின் கடற்படைத் தளமாக' இருந்தது, அங்கிருந்து வேண்டிய இடங்களுக்குப் படை அனுப்பவும், கப்பல்களை அங்கேயே பழுது

பார்க்கவும் வசதி இருந்தது, உடனடி நடவடிக்கைகளுக்கு இது உதவியது. இதுதவிர இந்தியாவின் முக்கோணங்களிலுள்ள சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய முக்கிய இடங்கள் ஆங்கிலேயர் வசமாயின. இதனால் ஆங்கிலேயர் ஓர் இடத்தில் தோல்வியடைந்தாலும் மற்ற இடங்களிலிருந்து போருக்கு ஆயத்தம் செய்யவும் உதவி அனுப்பவும் வாய்ப்பு இருந்தது. ஆம்

- 5) ஆங்கிலக் கம்பெனியின் நிர்வாகக் குழுவினர் வியாபார வருத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள். தேவையான போது

மாத்திரம் சுதேச அரசர்களின் உதவியை நாடினார்கள். ஆங்கில அரசும் கம்பெனிக்கு இடையூறு செய்யவில்லை. நாட்டின் நலனுக்கான காரியங்களைச் செய்யும் தலைவர்கள் தோன்றி குடியேற்றங்களை அமைப்பதில் உற்சாகமூட்டினர். கிழக்கே சென்ற தம் நாட்டினருக்கு துன்பம் நேராமல் காப்பாற்ற வேண்டுமென உறுதியுடன் இருந்தனர்.

6) தந்திரமும், திறமையும் படைத்த தலைவர்கள் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியில் பணியாற்றினர். சர் அயர்கூட், லாரன்ஸ், ஸாண்டர்ஸ், போகாக், பர்னட், பஸ்கோவென், ராபர்ட் கிளைவ் போன்றோர் திறமைசாலிகள். போர் தந்திரம் நிறைந்தவர்கள். பிரெஞ்சுப் படைகளின் தோல்விக்கு இவர்களின் திறமையே காரணம்.

7) ஐரோப்பாவில் ஆதிக்கம் இழந்த எந்த நாடும் கீழ்த் திசையில் உயர்நிலை பெற முடியாது என்று கூறலாம். எனவே ஐரோப்பாவில் வலிமையர்க விளங்கிய இங்கிலாந்து வலிமையற்ற மற்ற நாடுகளின் மீது வெற்றி கண்டது.

8) எல்லாவற்றிற்கும் மேலாக இந்திய அரசர்களின் ஒற்றுமை யின்மையும், போட்டியும் ஆங்கிலேயர் வெற்றியடைய முக்கியக் காரணமானது. இந்திய மக்களிடம் காணப்பட்ட அதிருப்தியும், தங்கள் ஆட்சியாளர்கள் மீது கொண்ட வெறுப்பும் ஆங்கிலேயர்களின் வெற்றிக்கு வழி வகுத்தது.

## வீரபாண்டிய கட்டபொம்மன்

### (VIRAPANDIA KATTABOMMAN) *

ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் பாளையக்காரர்களை ஒன்று திரட்டி பாளையக்காரர் கிளர்ச்சிக்கு வித்திட்டவர் வீரபாண்டிய கட்டபொம்மன் ஆவார். பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரரான இவர்

சுதந்திர வேட்டை அதிகமாகக் கொண்டிருந்தார். 1792-ம் வருட கர்நாடக உடன்படிக்கைப்படி பாளையக்காரர்கள் மீது நிர்வாக ஆதிக்கம் செலுத்தும் உரிமை பெற்றனர் ஆங்கிலேயர். எனவே பாளையக்காரர்கள் மீது அடிக்கடி படையெடுத்தோ அல்லது தாக்குதல் நடத்தியோ பெருந்தொகையை வசூலித்தனர். ராணுவ வலிமையையும், கோட்டைகளையும் கொண்டிருந்த இந்தப் பாளையக்காரர்கள் தங்கள் உரிமைகள் ஆக்கிரமிக்கப்படுவதை எதிர்த்தனர். இதன் விளைவாகவே 1798-ல் திருநெல்வேலிப் பாளையக்காரர்களை ஒன்றிணைத்து ஆங்கிலேயரை எதிர்த்து கிளர்ச்சி செய்தார் வீரபாண்டிய கட்டபொம்மன். ஆனால் இறுதியில் கட்டபொம்மன் ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.

**வீரபாண்டிய கட்டபொம்மனின் வாழ்க்கைக் குறிப்பு**

வீரபாண்டிய கட்டபொம்மன் 1761-ல் ஜெகவீரபாண்டிய கட்டபொம்முவிற்கும், ஷண்முகக்கனியம்மாளுக்கும் மூத்த மகனாகப் பிறந்தார். இவர் தெலுங்கு பரம்பரையைச் சேர்ந்தவர். வீரபாண்டிய கட்டபொம்மனின் இயற்பெயர் கருத்தையா ஆகும். இவர் தனது தந்தையின் மரணத்திற்குப் பிறகு முப்பதாம் வயதில் 1791-ல் பாஞ்சாலம் குறிச்சி பாளையக்காரன் ஆனார். இவருக்குப் பிறவியிலேயே திக்குவாயாக இருந்த குமாரசாமி என்ற ஊமைத்துரையும், துறைசிங்கம் என்பவரும் சகோதரர்கள் ஆவர். ஈசுவரவடிவு, துரைக்கண்ணு ஆகிய சகோதரிகளும் இருந்தனர். வெள்ளையத்தேவர், சிவத்தையா ஆகியோர் கட்டபொம்மளின் முக்கிய தளபதி ஆவர். சிவசுப்ரமணியம் பிள்ளை என்பவர் அமைச்சராக இருந்தார்.

**ஆங்கிலேயருக்கெதிரான கிளர்ச்சி**

ஆரம்பத்தில் வீரபாண்டிய கட்டபொம்மன் ஆங்கிலேயர்களுக் கெதிராக எத்தகைய விரோத எண்ணத்தையும் கொண்டிருக்கவில்லை. திறைப்பணத்தை ஒழுங்காக செலுத்தியே வந்தார். 1792-ம் வருட கர்நாடக உடன்படிக்கைப்படி நவாப் கப்பம் வசூலிக்கும் உரிமையை ஆங்கிலேயர் களுக்கு அளித்தார். கம்பெனி கலெக்டர்களை நியமித்து இந்த வரிகளை வசூலித்து வந்தது : இந்தக் கலெக்டர்கள் பாளையக்காரர்களை ஏளனம் செய்ததுடன், கொடிய முறையில் வரி வசூலித்தனர். பல பாளையங்கள் கம்பெனிக்கு அடிபணிந்து இயங்கின.

இவ்வாறு வரி வாங்கும் முறையில் இரு தரப்பினருக்கும் இடையே மனக்கசப்பு ஏற்பட்டது. இதுவே கிளர்ச்சிக்கு வித்திட்டது.

**கலெக்டர் ஜாக்சனின் அடக்குமுறை நடவடிக்கை**

1798-ம் ஆண்டு செப்டம்பர் முதல் பாஞ்சாலம் குறிச்சியிலிருந்து வரும் திறை ஒழுங்காக வரவில்லை. எனவே இறுமாப்புடனும், மூர்க்கத் தனத்துடனும், கண்டித்தும், எச்சரித்தும் வீரபாண்டிய கட்டபொம்மனுக்குக் கடிதங்கள் எழுதினார். 'வானம் பொழிகிறது, பூமி விளைகிறது உனக்கேன் நாங்கள் தரவேண்டும் வரி, வட்டி, கிஸ்தி' என்று கட்டபொம்மன். பதிலுக்கு கர்ஜித்தார். எனவே கட்டபொம்மனைத் தண்டிக்க ஒரு படையை அனுப்ப ஜாக்சன் விரும்பினார். இதற்கு இணங்காத, சென்னை நிர்வாகம் கட்டபொம்மனை ராமநாதபுரத்தில் இருந்த கம்பெனி கலெக்டரைப் பார்க்கும்படி கேட்டுக் கொண்டது.

- இரண்டு வாரத்திற்குள் தன்னை வந்து பார்க்கும்படி 1798, ஆகஸ்ட் 18-ல் ஜாக்சன் கட்டபொம்மனுக்கு கடிதம் எழுதினார். இக்கடிதத்தை அனுப்பிய பிறகு கலெக்டர் திருநெல்வேலிக்குப் பயணமானார். குற்றாலம் சென்ற போதும் கட்டபொம்மனை பார்க்க மறுத்துவிட்டார். பின்னர் திறைப் பணத்துடன் கலெக்டர் சென்ற சொக்கம்பட்டி, சிவகிரி, சேத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய

பர்களுக்கும் கட்டபொம்மன் பின் தொடர்ந்து சென்றார், ஆனால் - இராமநாதபுரத்தில் தான் ஜாக்சனை சந்திக்க முடியும் என்று கூறப்பட்டது. அவமானத்தைத் தாங்கிக் கொண்ட கட்டபொம்மன் 23 நாட்கள் பயணம் செய்து 1798, செப்டம்பர் 19-ம் தேதி இராமநாதபுரத்தை அடைந்தார்.

கட்டபொம்மனும், அமைச்சர் சிவசுப்ரமணிய பிள்ளையும் கலெக்டரைச் சந்திக்க அனுமதி பெற்றனர். ஆனால் ஜாக்சன் இவர்களை நாணயமற்ற முறைகளில் நடத்தினார். சந்திப்பின் இறுதியில் இருவரையும் கைது செய்யத் திட்டமிட்டார். இதனை 'மறைவில் இருந்து கவனித்த ஊமைத் துரையின் உதவியுடன் கட்டபொம்மன் தப்பித்தார். அமைச்சர் மட்டும் கைதானார். நடைபெற்ற மோதலில் பல காவலர்கள் வெட்டி வீழ்த்தப் பட்டனர். பலர் காயமுற்றனர். இதனைக் கண்டித்து கட்டபொம்மன் செனை கவுன்சிலுக்கு கடிதம் எழுதினார். விசாரித்த சென்னை கவுன்சில் ஜாக்சனை பதவி நீக்கம் செய்து லூஷிங்டன் என்பவரை நியமித்தது.

## ஆங்கிலேயருக்கெதிரான கட்டபொம்மனின் நடவடிக்கைகள்

தனது. சுயமதிப்புக்கும், நாட்டுக்கும், மக்களுக்கும் அவமானம் ஏற்பட்டதால் கட்டபொம்மன் ஆங்கிலேயரை எதிர்க்கத் துணிந்தார். அப்போது நிலவிய அரசியல் சூழ்நிலை கட்டபொம்மனுக்கு சாதகமாக அமைந்தது. இச்சமயம் சிவகங்கை மருதுபாண்டியனும், திண்டுக்கல்லின் கோபால நாயக்கரும், ஆனைமலை யாதுல் நாயக்கரும் சேர்ந்து ஆங்கிலேயர்களுக்கெதிராக தென்னிந்தியக் கூட்டணியை அமைக்கப் பாடுபட்டனர். மக்கள் அனைவரும் இணைந்து ஆங்கிலேயரை வெளியேற்றுவோம் என்ற மருதுபாண்டியனுக்கு கட்டபொம்மன் ஆதரவளித்தார். இருவரும் சந்தித்து ஒருவருக் கொருவர் ஆலோசனை நடத்தினர்.

அப்போது மைசூருக்கு எதிராக ஆங்கிலேயர் போரில் ஈடுபட்டனர். தனது செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ள கட்டபொம்மனுக்கு இது தேவையான வாய்ப்பை அளித்தது. நாகலாபுரம், மன்னார்கோட்டை, பௌவாலி, கோலார்பட்டி' சென்னல்குடி பாளையக்காரர்கள் தங்களுக்குள் ஒரு கூட்டை அமைத்துக் கொண்டனர். இந்தக் கூட்டை வலிமைப்படுத்த முற்பட்டார் கட்டபொம்மன், இதனுடன் சாப்டூர், ஏழாயிரம்பண்ணை காடல்குடி, குளத்தூர் ஆகிய பாளையக்காரர்களையும் சேரும்ப வேண்டினார். இந்தக் கிளர்ச்சியாளர்களின் கூட்டமைப்பில் சிவகம் பாளையக்காரர் சேர மறுத்துளவிட்டார். எனவே அவரது மகனி உதவியுடன் சிவகிரியில் தனது செல்வாக்கை நிலை நாட்ட முயன்ற கட்டபொம்மன்.

சிவகிரி பாளையக்காரர் கம்பெனிக்கு ஒழுங்காக திறை செலுத்தக் கூடியவராக இருந்தார். எனவே சிவகிரி கோட்டையில் பதிக்கம் கொள்ள முற்பட்ட கட்டபொம்மனின் நடவடிக்கைகளை கம்பெனி தனது அதிகாரத் திற்கெதிரான சவால் என்று கருதியது. கட்டபொம்மன் ஆங்கிலேயர் களுக்கு எவ்விதத் தீங்கிழைக்காத போதும் கம்பெனி அவர் மீது பழி வாங்கத் துடித்தது. கட்டபொம்மனின் இராணுவ வலிமையை ஒடுக்கப் படைகளை அணி வகுத்துச் செல்ல கம்பெனி ஆணையிட்டது.

## பாஞ்சாலம்குறிச்சி மீது பானர்மேனின் தாக்குதல்

அப்போதைய கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லி பிரபு கட்டபொம்மனுக்கெதிரான இராணுவ நடவடிக்கைகளை

மேற்கொள்ளுமாறு தளபதி மேஜர் பானர்மேன் என்பவருக்கு உத்தரவிட்டார். இது ஏற்கனவே பாளையக்காரர் முறையை ஒழிக்க வேண்டும் என்று உருவாக்கப்பட்டிருந்த கொள்கையை நடைமுறைப் படுத்த மேற்கொள்ளப்பட்ட திட்டவட்டமான முயற்சியாகவே இதனைக் கருதலாம். 1799, மே மாதம் மைசூர் போரில் ஆங்கிலேயர் பெற்ற வெற்றியினால் அதிகப் படைகளை கட்டபொம்மனுக்கு எதிராக அனுப்ப முடிந்தது.ம் பாஞ்சாலங்குறிச்சிக்கு எதிரான படையெடுப்பில் பானர்மேன் தலைமை வகித்தார். இராமநாதபுரம் வழியாக முன்னேறிச்சென்ற படை திருநெல்வேலியில் முகாமிட்டது. 1799, செப்டம்பர் முதல் தேதி தன்னை பாளையங்கோட்டையில் வந்து பார்க்கும்படி . கட்டபொம்மனுக்கு செய்தி அனுப்பினார் பானர்மேன். கட்டபொம்மனின் பதில் ஏற்புடையதாக இல்லாததால் செப்டம்பர் 5-ம் தேதி பாஞ்சாலம் குறிச்சி மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டார். பாஞ்சாலங்குறிச்சி கோட்டை முற்றுகையிடப் பட்டது. . . .

கட்டபொம்மனின் கோட்டை ஐநூறு அடி நீளமும், முன்னூறு அடி அகலமும் கொண்ட மண்ணால் கட்டப்பட்ட வலிமையான கோட்டை யாகும். கோட்டையை வந்தடைந்த ஆங்கிலப் படைகள் முதலில் கோட்டைக்கும் வெளியிலுமுள்ள செய்தித் தொடர்பைத் துண்டித்தன. கோட்டையைக் காப்பாற்ற கிராமங்களிலிருந்து வந்த வீரர்கள் விரட்டியடிக்கப்பட்டனர், கம்பெனியிடம் சரணடையுமாறு கூறுவதற்கு இராமலிங்க முதலியார் என்பவரை' பானர்மேன் கட்டபொம்மனிடம் அனுப்பினார். கட்டபொம்மன் இந்த "வண்டுகோளை நிராகரிக்கவே கோட்டையின் வலிமையற்ற பகுதி - பற்றிய ரகசியங்களை இராமலிங்க முதலியார் - சேகரித்து. ஆங்கிலேயர்களிடம் தெரிவித்தார்.

ஆங்கிலப் படைகள் பீரங்கித் தாக்குதல்களை ஆரம்பித்தன. ஆனால் கோட்டைக்குள் இருந்த கிளர்ச்சியாளர்கள் பெரும் வீரத்துடன் போராடியதால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டன. கூரிய ஈட்டிகளினால் எதிரிகளைச் சேதப்படுத்தினர். எனவே பெருமளவு வீரர்களின் வருகைக்கு ஏற்பாடு செய்தார் பானர்மேன். செப்டம்பர் 16-ம் தேதி அதிகமான வீரர்கள் பாளையங்கோட்டையிலிருந்து வந்து இறங்கினர். பகைவர்களின் குண்டு வீச்சால் கோட்டை தகர்க்கப்பட்டது. கோட்டையைக் காலி செய்து விட்டு கட்டபொம்மனும், படையினரும் தப்பி ஓடினர்.

காளார்பட்டியில் நடந்த மோதலில் சிவசுப்பிரமணியபிள்ளை கைது செய்யப்பட்டார். . இதன் பிறகு 'நாகலாபுரம் கோட்டை பிடிக்கப்பட்டது.. பிரிட்டிஷ் படையினர் தொடர்ந்து வெற்றி பெற்றனர். இதற்குப் பிறகு மேற்குப் பகுதி பாளையக்காரர்களும் , அடிபணிந்தனர். வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்படுதல் தப்பி ஓடிய கட்டபொம்மனை புதுக்கோட்டை ராஜா விஜயரகுநாத தொண்டைமான் களப்பூர் காடுகளிலிருந்து பிடித்து ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தார். ஊமைத்துரையும் மற்றவர்களும் சிவகங்கை எல்லையில் பிடிபட்டனர். கைது செய்யப்பட்ட கட்டபொம்மன், 1799 அக்டோபர் 16-ம் தேதி விசாரனைக்கு உட்படுத்தப் பட்டார். விசாரித்த பானர்மேன் கட்டபொம்மனுக்கு மரண தண்டனை விதித்தார். அக்டோபர் 17- தேதி கயத்தாறு பழைய கோட்டைக்கு அருகில் ஒரு முக்கிய இடத்தில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார். ஒரு பெருமை மிக்க விடுதலை வீரராக மரணமடைந்தார் கட்டபொம்மன். இதன் பிறகு கிளர்ச்சியாளர்களின் பாளையங்கள் பறிமுதல் செய்யப்பட்டு கம்பெனியின் நேரடி ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டது. '